அனுபோக வைத்திய நவநீதம்

ஏழாம் பாகம்

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு
1975

வெளியீட்டுத்தொடர் எண்: 7.

அனுபோக வைத்திய நவநீதம்

ஏழாம் பாகம்

ஆசிரியர்:

ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழுவினரால்
பதிப்பிக்கப்பட்டு
தமிழ்நாடு அரசுக்கு
நன்கொடையாக அளிக்கப்பட்டது

கி. பி. 1975 விலை ரூ.

முதற் பதிப்பு—1905

இரண்டாம் பதிப்பு :

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

சி. ம. நூ. வெ. குழு—1975ஆம் ஆண்டு

உரிமை :

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு,

இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்,

சென்னை-600029.

அச்சிட்டோர் :

திரிபுரம் அச்சகம்,

55, ஸ்டிராஹன்ஸ் சாலை,

சென்னை-600012.

அருள்மிகு

பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

அறங்காவலர் குழு

திரு. பு. மனோகரன், அறங்காவலர் குழுத் தலைவர்.

திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி பி. எஸ்ஸி., அறங்காவலர்.

திரு. என். நாச்சிமுத்து எம். எல். ஏ., „

திரு. புலவர் சி. பழனிச்சாமி எம். எல். ஏ., „

திரு. ஏ. பச்சையப்ப கவுண்டர் „

வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்ஸி., பி. எல்.,
துணை ஆசிரியர்—நிர்வாக அதிகாரி

அருள்மிகு

பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு

டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்.,
பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600010. ... தலைவர்

டாக்டர் ஆ. ஆனந்தகுமார் ஜி. சி. ஐ. எம்.,
தலைவர், தமிழ்நாடு அரசு இந்திய மருத்துவ
மத்தியக் கழகம், சென்னை-600005. ... பொருளாளர்

திரு. பு. மனோகரன், தலைவர், அறங்காவலர் குழு,
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில். ... உறுப்பினர்

டாக்டர் ப. சிற்சபை, காஞ்சி,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக் கழகம். ... உறுப்பினர்

திரு. வி. எஸ். கோதண்டபாணி பி.எஸ்ஸி., பி. எல்.,
நிர்வாக அதிகாரி, அருள்மிகு பழநி
தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில். ... உறுப்பினர்

டாக்டர் பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ. எம்.,
இயக்குநர், இந்திய மருத்துவத்துறை
சென்னை-600029. ... சிறப்பு அழைப்பினர்

சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு

உறுப்பினர்கள்

1. டாக்டர் இரா. தியாகராசன் எல்.ஐ.எம்.,
பொறுப்பலுவலர், சித்த மருத்துவ
மைய ஆராய்ச்சி நிலையம், சென்னை-600010. தலைவர்

2. டாக்டர் பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ. எம்.,
இயக்குநர், இந்திய மருத்துவத்துறை,
சென்னை-600029. செயலர், உறுப்பினர்

3. டாக்டர் சி. எஸ். உத்தமராயன் எச். பி. ஐ எம்.,
முன்னாள் இயக்குநர், இந்திய மருத்துவத்துறை,
சென்னை-600005. உறுப்பினர்

4. டாக்டர் எம். சண்முகவேலு எச். பி ஐ. எம்.,
முன்னாள் மருத்துவப் பேராசிரியர்,
இராமநாதபுரம்.

5. டாக்டர் கே. இராதாகிருஷ்ணன் எல். ஐ. எம்.,
மருத்துவ அலுவலர், ஊராட்சி ஒன்றிய மருந்தகம்,
காவேரிப்பாக்கம், வட ஆற்காடு.

6. டாக்டர் எ. சிறில் ஹென்றி எல். ஐ. எம்.,
ஓய்வுபெற்ற மருத்துவ அலுவலர்,
நகராட்சி மருந்தகம், திருச்சி.

7. டாக்டர் ஆ. ஆனந்தகுமார் ஜி. சி. ஐ. எம்.,
தலைவர், தமிழக அரசு இந்திய மருத்துவ
மத்தியக் கழகம், சென்னை-600005.

8. டாக்டர் ப. சிற்சபை ஆர். ஐ. எம். பி.,
துணைத்தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக் கழகம்,
சென்னை-600005.

9. பண்டிட் பெ. முத்துகருப்பப் பிள்ளை ஆர். ஐ. எம். பி.,
தலைவர், சித்த மருத்துவ சங்கம், மதுரை.

10. டாக்டர் டி. வி. கல்யாணசுந்தரம் ஆர். ஐ. எம். பி.,
தலைவர், சென்டிரல் சித்தா மெடிக்கல் கவுன்சில்,
சென்னை-600012.

11. டாக்டர் என். சேது ரகுநாதன், தமிழ்ப் பேராசிரியர்,
விருதுநகர்.

12. திரு. நீ. கந்தசாமிப் பிள்ளை
முன்னாள் செயலர், சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சை.

சிறப்பு அழைப்பாளர்கள்

1. டாக்டர் பொன். குருசிரோன்மணி, பி. ஏ., ஜி.சி.ஐ.எம்.,
முதல்வர், அரிசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

2. டாக்டர் மு. வே. ரமணன் எஸ். ஐ. எம்.,
பேராசிரியர், மேல் பட்டப்படிப்பு,
அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி,
பாளையங்கோட்டை.

3. டாக்டர் டி. வி. சுப்பாரெட்டி, கௌரவ இயக்குநர்,
இந்திய மருத்துவ வரலாற்று ஆராய்ச்சி நிலையம்,
ஐதராபாத்.

4. டாக்டர் டி. வி. இரத்தினவேலுசுப்பிரமணியம் பி. எஸ்ஸி.
எம். டி., எம். ஆர். சி. பி. (லண்டன்), சென்னை–600010.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

மாண்புமிகு

பேராசிரியர் **க. அன்பழகன்** எம். ஏ., அவர்கள்

அளித்த

அணிந்துரை

முன்தோன்றிய—மூவா முதன்மொழியாம் தமிழுடனும் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த—சித்த மருத்துவத்தின் நன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்து விடாது காப்பது நம் கடன். தமிழகத்திலும் பிற தென் மாநிலங்களான திராவிடத்திலும் சித்த மருத்துவம் இன்றும் பலரால் — வழிவழியாகவும் கற்றறிந்தும் — கையாளப்பட்டு வரினும் அதன் சிறப்பும் புகழும் நிலை பெறுவதற்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பலவாகும். தமிழக அரசின் ஆதரவாலும்—இத் துறை வல்லுநர்களின் முயற்சியாலும்—மருத்துவ முறைகளுள் சித்த மருத்துவமும் இடம் பெற்று வளருகிறது. எனினும், அதன் தனிச் சிறப்புகள் அறிவியல் ஆய்வாளர்கள் ஒப்புக் கொள்ளுமாறு ஆய்வுகள்மூலம் நிலை நிறுத்தப்பட்டாக வேண்டும் என்பதை நாம் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அந்த நிலை உருவாவதற்கு—ஓலைச் சுவடிகளாகவும்—ஒரு காலத்தில் அச்சேறியும் இன்று கிடைத்தற்கரிதாகவும் உள்ள நூற்றுக்கணக்கான சித்த மருத்துவ நூல்கள்—உடனடியாகப் பதிப்பிக்கப்பட வேண்டும். இவை வெளிவந்தால்தான், இன்று சித்த மருத்துவம் பயிலும்

மாணவரும் இளம் மருத்துவரும், அவற்றைப் பயின்று பயன் பெற இயலும். மருந்து செய்முறைகளை ஒப்புநோக்கி உண்மை தெளியவும், மருந்துகளின் தரத்தை உறுதிப் படுத்தவும், அரிய மூலப் பொருள்கள் கிடைக்காத விடத்து மாற்று மூலப் பொருள்களைக் கொண்டு மருந்து செய்திடவும், மருந்து உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்யவும் வாய்ப்பாகும்; பரவலாக எங்கும் எளிதில் கிடைப்பதால் செல்வாக்குப் பெற்றுள்ள அலோபதி மருந்துகட்கு ஈடு கொடுத்து மக்களிடம் செல்வாக்குப் பெறவும் முடியும்.

எனவே, சித்த மருத்துவ நூல்கள் வெளியிடும் முயற்சிக்குத் தகுந்த நிதி உதவி வேண்டும் என்னும். எனது வேண்டுகோளை இசைவுடன் ஏற்று அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங் காவல் குழுவினரும்— அதன் தலைவர் திரு. பு. மனோகரன் அவர்களும்— இதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்க முன்வந்ததுடன் சித்த மருத்துவ நூல் வெளி யீட்டுக்கென டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்., அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவையும் அமைத்துச் செயல்படுத்தலாயினர்.

இக் குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் ஆர்வத் துடன் ஈடுபட்டு ஆற்றிவரும் நற்பணியும்— பல்வேறு வகையிலும் அவர்கட்குத் துணை நிற்போர் ஆற்றும் பணியும்—இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் பு. மு. வேணுகோபால் அவர்களின் இயக்குவித்திடும் திறனும் எனது பாராட்டுக்குரியனவாகும்.

பழநி திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக்கும்— அக்குழுவின் தலைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியவாகும்.

இந்த நூல் வெளியீட்டுக் குழுவினரால் தேர்ந் தெடுக்கப்பெற்று முதலில் வெளியிடப்படும் நூல் வரிசையே அனுபோக வைத்திய நவநீதம்-ஒன்று முதல் பத்து பாகங்களும்—அவற்றின் திறவுகோலும்—ஆகும். இன்று கிடைக்காத பதிப்பாக உள்ள இந்த மருத்துவக் களஞ்சியம் மிகுந்த பயன் தர வல்லதாம்.

இந்நூல்களின் ஆசிரியர்—சித்த மருத்துவ வல்லுநர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்—இளமை முதலே—தமது முன்னோர்தம் மருத்துவக் கலையைப் பொன்னே போல் போற்றிப் பயின்று, தொடர்ந்து பல ஆண்டுகள் பாடுபட்டுப் பயன்படுத்தித் தேர்ந்து தெளிந்து—உலகோர்க்குப் பயன்படவேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் அரிய சித்த மருத்துவ நூல்கள் பலவற்றை இயற்றி வெளியிட்டுள்ளார். இச் செயல்களின் பெருமை அவரையே சாரும்.

மறைபொருளாய்ப் பேணப்பட்டு அதனாலேயே உருவழிந்து மறைந்து போர்வதற்கு ஆளாகிவிட்ட சித்த மருத்துவ உண்மைகள்—இருட்டறையிலிருந்து வெளிக் கொணரப்பட்டு ஒளி காண்பதற்கு வழி கண்ட வல்லுநரில் அவர் தலை சிறந்தவர் என்பது மிகையாகாது.

தெளிவுடனும், துணிவுடனும், அறிவுடனும், ஆற்ற லுடனும், நெறியுடனும். பொறுப்புடனும் எளிய இனிய தமிழில்—இத்தனை நூல்களை இயற்றியமைக்கு, சித்த மருத்துவ உலகம்—ஹக்கீம் அப்துல்லா அவர்கட்கு எந் நாளும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையதாகும்.

அவர் இயற்றிய அனுபோக வைத்திய நவநீதம் முதற் பாகத்தின் முகவுரையே சித்த மருத்துவத்தின் அக்கால நிலைமை விளக்கமாகவும், நம்மவர் கடமையை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளதைக் காண்க.

''மிகக் கொடிய நோய்களையும் அறத் தீர்க்கும் பற்பம் செந்தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பதுபோல மற்ற மருத்துவத்தில் இல்லையென நமது மருத்துவ நூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கின்றார்கள். ஆங்கில மருத்துவம், நாட்டு மருத்துவம் ஆகிய இரண்டிலும் சிறப் புள்ளவர்களான சிறந்த பண்டிதர்களின் தீர்மானமாவது:

''அறுவை செய்தல் முதலிய இரண மருத்துவத் தில் ஆங்கில முறை வைத்தியம் மிகவும் மேலானது மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தி யாகச் செய்வதிலும் ஆங்கில வைத்தியமே அதிகம் சிறந்தது. ஆனால், நாட்பட்ட நோய்களையும் பெரிய நோய்களான குன்மம், நீரிழிவு, சயம், எருவாய்

நோய், பாண்டு, மந்தாக்கினி, மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய்களையும் அறத் தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ முறைகளே மிக மேன்மையானவை. அவற்றுள்ளும் முறைக் கிரமமாகச் செய்யப்பட்ட பற்ப செந்தூரங்களே மிக மேன்மை பெற்றவை" என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியானதெனவும் உத்தமமானதெனவும் அதிகம் வாய்மையானதெனவும், சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழுமனதோடு ஏற்றுக் கொள்வார்கள்.

இக் கூற்று உண்மையாவதை, நவீன கருவிகள் வளர்ச்சியால் ஆலென வளர்ந்து அடர்ந்து நிற்கும் அலோபதி மருத்துவமும் ஏற்கும் வண்ணம் நடைமுறையில் செயல்படுத்தி எண்பிக்கும் வல்லமையும், ஆராய்ச்சி முறையில் சான்றுகளை உருவாக்கும் முயற்சியும் ஓங்க வேண்டும் என்பதே எனது பேரவா.

இந்த உயர்ந்த நோக்கத்துக்கு உறுதுணையாகுமாறு—மருந்து செய்முறைகளை—அரிய நூல் வடிவத்தில் வழங்கிச் சென்ற—ஹக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு அவர்களின் தொண்டு.

'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்'

என்னும் குறள் கூறும் பெரியருக்குச் சிறந்த ஓர் எடுத்துக் காட்டு ஆகும்.

இந்த நூல்களின் வெளியீடு மேலும் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கப்படுத்துவதற்குத் துணை செய்வதாகும் என நம்புகிறேன். அவர்தம் முயற்சி வளர வாழ்த்துகிறேன்.

சென்னை
20—3—1975

க. அன்பழகன்

இரண்டாம்பதிப்பின் முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ்மொழி; அது போல் தமிழ் மருத்துவமுறையும் அத்தகைத்தே. இம் மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர். ஆகையால், இம்மருத்துவத்திற்குச் சித்த மருத்துவமென்று பெயர் அமையலாயிற்று. அச்சான்றோர்கள் தாம் கண்ட உண்மைகளையும் மருத்துவ நுணுக்கங்களையும், மருந்து சரக்குகளின் குணம் முதலானவைகளையும் மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும் ஓதுவித்தும் பற்பல ஏடுகளில் பதிவு செய்தும் உலகோர்க்கு உதவி செய்து தம் மருத்துவமுறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின் — நிலநடுக்கம், கடற்கோள் போன்ற — சீற்றம் காரணமாகவும், வெளிநாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்குதலாலும் பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவைகளில், சில மேலைநாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டனவெனக் கூறப்படுகின்றது. இன்னும், எஞ்சியுள்ள ஏடுகளாலும், அம் மருத்துவக் கலையைத் தொன்றுதொட்டு கையாண்டுவரும் மருத்துவர்கள் வாயிலாகவும், பல நூற்றாண்டுகளாக அதன் அடிப்படை உண்மை, தனித்தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலை பெற்றிருக்கிறது.

தஞ்சையையாண்ட மராட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக் காலத்தில் சித்த, ஆயுள்வேத, யூனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களின் அனுபவங்கள் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன. மருத்துவம் செய்முறையும், பிணித்தீர்வும் அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப்பின் சித்த மருத்துவம் அரசு ஆதரவை இழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவு கொண்டு ஆங்காங்கு வழக்கில் இருந்து வரலாயிற்று.

மிக அண்மையில், வெள்ளையராட்சிக் காலத்தில் நீதிக்கட்சிச் சார்பில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய பானகல் அரசர், 1924 இல் இந்திய மருத்துவப் பள்ளியைத் தோற்றுவித்துப் பல கிராம மருத்துவமனைகளையும் அமைத்து இயங்கச் செய்து சித்த மருத்

துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறுமலர்ச்சிக்கு வித்தூன்றினர். அக்காலத்தில் மேற்படி கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அமைந்த பாடத்திட்டபடி கற்பிக்கப் போதிய பாட புத்தகங்களும் முதல் (மூல) நூல்களும் இல்லாக்குறையை ஓர்ந்து பாட புத்தக ஆக்கக்குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்த மருத்துவத்துறைத் தலைமை ஆசிரியராய் இருந்த பண்டிட் வைத்திய ரத்னம், மருத்துவ சிரோன்மணி காலஞ்சென்ற திரு. க ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும் நூலைத் தன் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும், குழுவினர் அரசு வழி வெளியிட்ட நஞ்சு நூல், பாலவாகடம் என்ற நூல்களைப் பார்வையிட்டும் உதவினர். அக்குழுவினர் நூற்றுக்கும் மேற்பட்ட மருத்துவச் சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் சேகரித்து, ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தினர்.

மேற்படி பள்ளி, கல்லூரியாக மிளிர்ந்தபோது, அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம. ரா. குருசுவாமி முதலியார் ஊக்கம் கொடுத்தமை காரணமாக 1950 இல் சித்த மருத்துவம், மருத்துவாங்கச் சுருக்கம், நோயில்லா நெறி, குணபாடம் (மூலிகை வகுப்பு), தாது சீவ வகுப்பு என்ற நூல்களும் அப்போது பணிபுரிந்து வந்த கல்லூரி விரிவுரையாளர் களைக் கொண்டு எழுதுவித்து அரசுவழி வெளியிடப்பெற்றன.

அக்கல்லூரி நிகழ்ந்த காலத்திலும் பின்னர்ப் பாளையங்கோட் டைக் கல்லூரி தோன்றிய பின்னுங்கூட பாடநூல்களும் துணை நூல் களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்து வருவதாயிற்று.

ஆகவே, பண்டைய சித்த மருத்துவ ஓலைச்சுவடிகளையும் கையேடுகளையும், ஒருமுறை அச்சாகிப்பின் விற்பனைக்குக் கிட்டாத புத்தகங்களையும் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணை தயாரிக்கவும், பாட நூல்கள் வெளியிடவும் ஆகிய பணிகள் செய்ய (pharmacopiea committee 1966 G. O. M. S. 2163 Dt. 23-8-60) ஒரு குழுவும், சித்த மருத்துவக் கல்வி மற்றும் பாடநூற் குழு என்று (G. O. MS. No. 1060 health Dt. 13-6-66) ஒரு குழுவும், திருவருட்பா திருப்புகழ் முதலியவைகளில் உள்ள மருத்துவப் பகுதி களை ஆய்வதற்காக ஒரு குழுவும் எனத் தமிழக அரசு குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அறுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளிவந்தன,

மீண்டும், விரைவில் பயன்காண வேண்டி 1973 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் தமிழக அரசினர் மேற்கூறிய குழுக்களை ஒருங்கிணைத்து சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு

என்னும் ஒரு குழுவைத் (G. O. MS. No. 2571 of 23—10—73) தோற்றுவித்தார்கள். அக் குழுவின் பணிகளாவன : சித்த மருத்துவ அரிய சுவடிகள், கையேடுகள், அச்சாகிய பழைய நூல்கள் ஆகியவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல்; ஓலைச்சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப் படி, தட்டெழுத்துப் படி முதலியவைகளை எடுத்து அச்சியற்றி வெளியிடல்; ஒருமுறை அச்சில் வெளிவந்து விற்பனைக்குக் கிடைக்கப் பெறாத நூல்களை மீண்டும் வெளியிடல்; இதுவரை அச்சிடப் பெறாத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக் குழுவினர் இதுவரை 400 சுவடிகளையும் 100 கையெழுத்துப் பிரதிகளையும், 230 அச்சான பழைய நூல்களையும் சேகரித்துள்ளனர்.

இக்குழுவினர் தாம் மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற, இந்திய மருத்துவத் துறை இயக்குநர் அலுவகத்தில் ஒரு தனி அலுவலரையும் அவர்க்கு உதவியாளர்களையும் நியமித்துள்ளனர், அவர்கள் நூல்களைப் படியெடுத்துத் திருத்தம் செய்து அச்சியற்றத் தக்க வகையில் செய்து வருகின்றனர்.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நிதியி லிருந்து சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாயைக் கொண்டு மேற்படி நூல்களை, நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து வெகு விரைவில் வெளியிட மேற்படி சித்த மருத்துவ அறிவியல்வளர்ச்சிக் குழுவிலுள்ள உறுப்பினர் சிலருடன் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களையும் மேற்படி திருக்கோயில் திருவாக அதிகாரியையும் கொண்டு அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழு முடிவெடுத்தபடி முதல் வெளியீட்டு வரிசையில் அனுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களும் திறவுகோலும் வெளியிடப்படுகின்றன. மேற்படி அனுபோக வைத்திய நவநீதம் என்னும் உரைநடை நூல்களின் ஆசிரியர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு ஆவார். இவர் சென்னை, ஜார்ஜ் டவுன், அப்பு மேஸ்திரி தெருவில், 12 ஆம் எண்ணுள்ள வீட்டில் வாழ்ந்தார். இவர் தஞ்சை மன்னர் சரபோஜி தன்வந்திரி மகாலை அலங்கரித்த மருத்துவர் ஒருவரின் வழித்தோன்றல் ஆவார். இவர் பரம்பரை மருத்துவர். சித்த, யூனானி ஆகிய இருமுறைகளிலும் கைபாகம், செய்பாகம், நோய்த்தீர்வு முதலிய எல்லாக் கலைகளிலும் மிக்கத் தேர்ச்சி பெற்றவர். இவர் தனக்குச் சொந்தமாக மருத்துவமனையும், மருந்து செய்சாலையும், அச்சகமும் நடத்தி வந்தார்.

இவர் கடவுள் நம்பிக்கை, பிறர் நலம் பேணல், கொடை, பரிவு ஆகிய நற்பண்புகள் நிறைந்தவர். சர். உஸ்மான் சாயபு அவர்களின் நெருங்கிய உறவினராவார்.

இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களை உரைநடையில் இயற்றி வெளியிட்டதுடன், தேரையர் யமகம், தேரையர் கரிசல் அகத்தியர் இலக்க சௌமிய சாகரம் போன்ற முதல் (மூல) நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவருக்குப்பின் இவரது நூல்களை மறுமுறை பதிப்பித்து வெளியிடுவோரின்மையால் அவை கிட்டுவது அரிதாயிற்று.

ஆகவே, இவரது அனுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களையும் அவைகளின் திறவுகோலுடன், முன் பதிப்பிலிருந்த தமிழ் இலக்கங்களை நீக்கி ஆங்கில இலக்கங்களாக மாற்றி, பழைய எடுத்தலளவைக்குச் சரியான மெட்ரிக் எடையை இணைத்துப் பிழைகளைத் திருத்தம் செய்து வெளியிடப்படுகிறது. இந்தப் பத்து நூல்களின் பெருமை அவைகளைக் கற்று மருந்துழைச் செல்வார்க்கு மிக நன்ருக விளங்கும். அவ்வந் நூல்களின் பழைய முகவுரைகள் வாயிலாக அவற்றின் மேன்மை தெரியவரும்.

மேற்கண்ட அரிய நூல்களின் வெளியீட்டுப் பணிக்குப் பெருந்தொகை தேவைப்படுவதால், இப்பெரும் பணியை விரைவில் செயல்படுத்த உளங்கொண்ட நம் தமிழக அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் உயர்திரு. க. அன்பழகன் எம். ஏ., அவர்கள் பேரார்வங்கொண்டு மேற்படி பணி முட்டின்றி முடிவதற்கு அரசு நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்தார். மேலும், அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களைக் கொண்டு முதல் தவணையாக மேற்படி திருக்கோயில் கருவூல நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச் செய்தமையும், சித்த மருத்துவ நூல்கள் விரைவில் வெளியாக வாய்ப்புத் தேடித் தந்தமையும், காலஞ்சென்ற திரு. டாக்டர் ஜி. டி. நாயுடு அவர்களைக் கொண்டு காலஞ்சென்ற திரு. டி. வி. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த மருத்துவப் பேரகராதியின் முதல் மூன்று பகுதிகளையும் பிற சித்த மருத்துவ இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளியிடச் செய்தமையும் அமைச்சர் பெருமகனுர் சித்த மருத்துவ மறுமலர்ச்சிக்கு முழுமனதுடன் ஆற்றிவரும் செயற்கரிய ஆக்கச் செயல்களாகக் கூறிப் பெருமிதமடையலாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங் காவலர் குழுத்தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்கள் தமக் குள்ள பற்பல அறப்பணிகட் கிடையேயும் இக் குழுவின் கூட்டங் களில் பங்குகொண்டு, நூல் வெளியீட்டுக்கான பற்பல வழிமுறை களையும் ஆலோசனைகளையும் வழங்கி வெளியீட்டுப்பணி ஊக்கமும் ஆக்கமும் பெற்றுத் தங்குதடையின்றி நூல்கள் வெளிவர, மேற்படி திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர் குழுவினரைக் கொண்டு முதல் தவணையாக இரண்டு இலட்ச ரூபாய் வழங்கச் செய்ததோடு, சித்தமருத்துவக் கல்லூரி ஒன்று பழநியில் தோற்று விக்க உடன்பட்டமைக்கும் சென்னையில் மத்திய சித்த மருத்துவ நூலக மொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன்று வருகின்ற மைக்கும் இக்குழுவினரும், இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்கள்.

மேற்படி அறங்காவலர் குழுத்தலைவர் அவர்களுக்கு உறுதுணை யாக இருந்து ஒத்துழைத்து வரும் மேற்படி திருக்கோயில் நிருவாக அதிகாரியாகிய உயர்திரு. வி. எஸ். கோதண்டபாணி பி, எஸ்ஸி., அவர்களுக்கும் இப்பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்துவரும் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக் குழுத் தலைவர் உயர்திரு. கே. எஸ். நரசிம்மன் ஐ. ஏ. எஸ்., அவர்களுக் கும் இக் குழுவினரின் உளங்கனிந்த நன்றி உரித்தாகும்.

இக் குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும் பிற வசதிகளும் தம் அலுவலகத்தின் ஒரு பகுதியில் கொடுத்து, பணி இடையீடின்றி நடைபெற வேண்டிய ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்துவரும் இந்திய மருத்துவத் துறை இயக்குநர் டாக்டர். பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ. எம்., அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடக்க விலையில், அச்சடிக்கும் தாள்கள் சேஷசாயி பேப்பர் மில்சாரிடமிருந்து மிக விரைவில் கிடைக்கும்படி செய்த முத் தமிழ்க் காவலர் உயர்திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக்குழு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

மற்றும், இந்நூல்களை அச்சியற்ற ஏற்றவண்ணம் மூலப்படிகளைத் திருத்தம் செய்வித்தும், அச்சுப்படிகளைத் திருத்தம் செய்தும் இக் குழுவுக்குத் துணை புரிந்துவரும் தனி அலுவலர் டாக்டர் வி. விசுவநாதன் எல். ஐ. எம்., அவர்களையும் அன்னாருக்குத் துணைபுரிந்து வரும் புலவர்கள் மு. சௌரிராசன், வி. செ. விநாயகம், வை. முரு. முத்துக்குமாரசாமி, வே. வாசுதேவன் ஆகியவர்களையும் இக்குழு மனமுவந்து பாராட்டுகிறது.

மேற்கண்ட பணிக்குத் தேவையான நூல்களைக் கொடுத்துதவிய சித்த மருத்துவர்கள் திரு. ப. சிற்சபை, திரு. கே. சீனிவாசன் திரு. மு. சௌரிராசன் ஆகியோர்க்கும், அந்நூல்களைத் திரட்டித்தர துணைபுரிந்த சித்த மருத்துவர்கள் திரு. டி. வி. கல்யாணசுந்தரம், திரு. மு. பூசலிங்கம் ஆகியோர்க்கும் இக்குழுவின் சார்பில் நன்றி கூறப்படுகிறது.

அச்சுக்கலையில் மிகவும் பட்டறிவு வாய்ந்த திரு. புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் அச்சுக்கோப்புகளின் திருத்தங்களைச் செய்து உதவியமையை இக் குழு பாராட்டுகிறது.

ஒவ்வொரு நூலையும் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சியற்றிய அந்தந்த அச்சகத்தாரின் சேவைக்கு இக்குழு மனமுவந்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சான்றோர் மிகுந்த இவ்வுலகு இந்நூல்களில் காணும் குற்றங் கண்டு முனியாது நனியாதரவு தந்து எம்மை ஊக்குவிக்குமென்ற துணிவுடன் இந் நூல்களை வெளியிடுகின்றனம்.

டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்.,
தலைவர்

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு.

இந்திய மருத்துவத்துறை
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600029.

முதற்பதிப்பின் முகவுரை

நண்பர்களே !

இந்த அனுபோக வைத்திய நவநீத மென்னும் நூலினது அருமை பெருமைகள், இதை வெளிப்படுத்த நேர்ந்த காரணம், ஆகியவைகளெல்லாம் இதன் முதற்பாகத்தின் முகவுரையாலும், மற்ற பாகங்களின் முகவுரைகளாலும் நன்கு விளங்குமாதலின், அவற்றைப்பற்றி மீண்டும் இதில் எழுதின் கூறியதுகூறலாமென விடுத்தனம்.

இதன் ஆரும்பாகம் வெளிப்பட்டு அதிக நாளாகியும் நமக் கேற்பட்ட சில அசந்தர்ப்பங்களால் இப் பாகம் இதுவரை வெளிப் படாமல் சிறிது தாமதப்பட்டிருந்தது. ஆயினும், இதன் முந்தின பாகங்களைப்பார்த்த மருத்துவப் பயிற்சியாளரும், சீர்மிகு நம்நாட்டு மருத்துவ ஆதரவாளர்களும், மற்ற பாகங்களையும் விரைவில் வெளிப் படுத்தி இந்நூலைப் பூர்த்தியாக்க வேண்டுமென்று கடித மூலமாகவும் நேரிலும் வற்புறுத்தி வந்தபடியால், அவர்கள் நோக்கத்தை மறுக்க வாய்ப்பற்று நமது சூழ்நிலைகளையும் பொருட்செலவு உடலுழைப்பு முதலியவற்றையும் எதிர்பாராமல் சில நாள்களுக்கு முன் இவ் வேழாம் பாகத்தை அச்சிடும் வேலையிற் பிரவேசித்து, வெகு சீக்கிர மாக முடித்து இப்போது வெளிப்படுத்தி இருக்கிறோம். இது முந்தின ஆறு பாகங்களைக் காட்டிலும் மிக்க சிறப்புப் பொருந்திய தென்பது, இதனைப் படிப்போர்க்கு எவரும் எடுத்துச் சொல்லாமலே நன்கு விளங்கும்.

இதில், பாடாணத்தின் பிறப்பு, அதன் வகைகள், பெயர்கள், பாடாணத்தின் குணம், பாடாணத் தூய்மைகள், மேற்படி கட்டுக்கள், பாடாணச் சுண்ணங்கள், பாடாண பற்பங்கள், பாடாணப் பதங்கங் கள், பாடாணச் செந்தூரங்கள், பாடாணசூதச் செந்தூரம், பாடாண மெழுகுகள், பாடாண மாத்திரைகள், சுர ராசாங்கம், பாடாண மேற்பூச்சு மாத்திரை, பாடாண குலாந்தகன், பாடாண எண்ணெய் கள், பாடாணப் பிரயோகங்கள், கௌரிக்கட்டுச் சுண்ணம், கௌரி மெழுகு, வெள்ளைப்பாடாண வீறு குறி குணங்கள், கௌரிப் பாடாண வீறு குறி குணங்கள், வெள்ளைப்பாடாண வீறு முறிவு மருத்துவம், கௌரிப்பாடாணம் விடமித்ததற்கு முறிவு மருத்துவம், பாடாண நஞ்சு முறிவு மருத்துவம், பாடாணத்தைப் பயன்படுத்தும் பொதுவிதி, பஞ்சசூதச் செந்தூரங்கள், அயவீரச் செந்தூரம், ஜவகைச் செந்தூரம், பஞ்சமுகச் செந்தூரம், மகா வீரியச் செந்தூரம், மகாவீருடையச் சாந்தச் செந்தூரம், பெரிய பட்டுக் கருப்பு, சூட்சமப்பட்டுக் கருப்பு, சின்னப்பட்டுக் கருப்பு, அஞ்சு கருப்பு, பஞ்சசூதப் பதங்கம், பஞ்சசூத மெழுகுகள், கோரோசனை

மெழுகு, அனுபான இளகம், பச்சைக் கற்பூர மெழுகு, விடமெழுகு, சண்முக மெழுகு, விடாமிர்த மை, இரச மெழுகு, நவரச மெழுகு, பஞ்சசூத மாத்திரைகள், சுரக் குடோரிகள், சண்ட மாருதக் குழம்பு, புசண்டர் ராமபாண மாத்திரை, மேகசஞ்சீவி மாத்திரை, சுவாசகாசக் குடோரி, சிவநாம ரசம், குருசஞ்சீவி மெழுகு நவரசமெழுகு, பேய்ச்சொறிக்கு மருத்துவம், சாதிலிங்கப் புகை, இரச வங்கப் புகை, பார்வைப் புகை, கிரந்திப் புகை, வானமா மெழுகு, இலகுவானமா மெழுகு, மகாவானமா மெழுகு, குடல்வாத மருத்துவம், நீர்க்கட்டு மருத்துவம், கள்ளிப் பற்பம், நீலாஞ்சன யோகம், ஜலமஞ்சரி, பால் பற்பம், நீலகண்டவாலை, நீலகண்டபாலை துணை மருந்துடன் மகா ரசப் பதங்கம், அக்கினி குமாரச் செந்தூரம், குப்பி வைப்புச் செந்தூரம், காளகண்டமேக நாராயண செந்தூரங்கள், திரிபுராதிச் செந்தூரம், பூரணச் சந்திரோதய செந்தூரம்; மகா சுய மக்கினிச் செந்தூரம், சுயமக்கினிச் செந்தூரங்கள், கௌரிசிந்தாமணி ரசசெந்தூரம், பஞ்சபாண ரசம், பூபதி மாத்திரை, அமிர்தசஞ்சீவிக் குளிகை, குப்பிவைப்புச் செந்தூரம், பஞ்சாங்கினி செந்தூரம், இலகு சந்திரோதய செந்தூரம், இரணபைரவி செந்தூரம், உப்புக் குரு, பாலரசப் பதங்கங்கள், குருப் பதங்கம், இலிங்கப் பதங்கம், இலகு இரசப் பதங்கம், பூரப் பதங்கம், சுத்தபூரப் பதங்கம், நவ தாம்பிர பற்பம், குருமுறைப் பதங்கம், சிரோன்மணி பூபதிக் குளிகை சந்தனக் குடிநீர், பாண்டுவீக்க மாத்திரை, கபக் குடோரி, சரபராச மாத்திரை, சஞ்சீவி மாத்திரை ஆகியவைகளும் இவற்றினுட் பிரிவாகப் பல முறைகளும் அடங்கியிருக்கின்றன.

இவைகள் யாவும் நமது பரம்பரையில் வெகுகாலமாக மறைவாக வைக்கப்பட்டிருந்த பல ஆயிரம் முறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவைகள்; இவற்றின் குணங்களைப்பற்றி அளவிட்டுச் சொல்லுதல் அரிதாம். மற்ற பாகங்களிலுள்ள முறைகளைக்காட்டிலும் இதிலுள்ள முறைகள் மிகவும் சிறந்தவைகள். நமது நண்பர்களையுத் தேசித்தே நெடுங்காலமாக மறைத்துவைக்கப்பட்டிருந்த முறைகளை எல்லாம் இதில் பரோபகாரச் சிந்தையுடன் வெளிப்படுத்தியிருக்கிறோம். ஆதலால், மருத்துவப் பயிற்சியுள்ள அறிஞர் பெருமக்கள் இதற்குமுன் நம்மால் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்ட நூல்களை எல்லாம் வாங்கி, எமக்கு இவ்வித நூல்களை வெளிப்படுத்துவதற்கான ஊக்கத்தை மென்மேலும் உண்டாக்கி எம்மைக்கனப் படுத்தியதுபோலவே இதனையும் வாங்கி மேன்மைபடுத்துமாறு விரும்புகிறோம். சுபம்!

அக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு,
12, அப்பு மேஸ்திரி தெரு,
ஜார்ஜ்டவுன், சென்னை.

பொருளடக்கம்

		பக்கம்
அக்கினிகுமார செந்தூரம்	..	102
அஞ்சு கருப்பு	...	52
அமிர்த சஞ்சீவிக் குளிகை	...	115
அயவீரச் செந்தூரம்	...	46
அனுபான இளகம்	...	56
இரச மெழுகு	...	61
இரசவங்கப் புகை	...	81
இரணபைரவி செந்தூரம்	...	119
இலகு இரசப் பதங்கம்	...	126
இலகு சந்திரோதய செந்தூரம்	...	118
இலகு சுயமக்கினிச் செந்தூரம்	...	113
இலகுவானமா மெழுகு	...	83
இலிங்கப் பதங்கம்	...	124
உப்புக் குரு	...	119
ஐவகைச் செந்தூரம்	...	46
கபக் குடோரி	...	133
கள்ளிப் பற்பம்	...	96
காளகண்ட மேகநாராயண செந்தூரம்	...	104-106
கிரந்திப் புகை	...	82
குடல்வாத மருத்துவம்	...	95
குப்பிவைப்புச் செந்தூரம்	...	103-116
குருச்ஞ்சீவி மெழுகு	...	78
குரு பதங்கம்	...	123
குருமுறைப் பதங்கம்	...	130

பொருளடக்கம்		பக்கம்

கோரோசனை மெழுகு	...	55
கௌரிக்கட்டுச் சுண்ணம்	...	40
கௌரிசிந்தாமணி ரச செந்தூரம்	...	112
கௌரிப்பாடாண வீறு குறிகுணங்கள்	...	41
கௌரிப்பாடாண நஞ்சு முறிவு மருத்துவம்	...	41
கௌரி மாத்திரை	...	34
கௌரி மெழுகு	...	40
சஞ்சீவி மாத்திரை	...	140
சண்டமாருதக் குழம்பு	...	72
சண்முக மெழுகு	...	58
சந்தனக் கஷாயம்	...	133
சரபராச மாத்திரை	...	134
சலமஞ்சரி	...	98
சாதிலிங்கப் புகை	...	80, 81
சிரோன்மணி பூபதிக் குளிகை	...	132
சிவநாம ரசம்	...	76
சின்னப்பட்டுக் கருப்பு	...	51
சுத்தபூரப் பதங்கம்	...	128
சுயமக்கினிச் செந்தூரம்	...	110-112
சுரக் குடோரி	...	71, 72
சுரப் பதங்கம்	...	127
சுர ராசாங்கம்	...	35
சுவாசகாசக் குடோரி	...	75
சூட்சும பட்டுக்கருப்பு	...	50
திரிபுராதிச் செந்தூரம்	...	107
நவதாம்பிர பற்பம்	...	129
நவரச மெழுகு	...	62
நவலோக மெழுகு	...	79
நாதகுரு தைலம்	...	84
நீர்க்கட்டு மருத்துவம்	...	95

பொருளடக்கம்		பக்கம்
நீலகண்ட பாலை (கரிசல் முறை)	...	99
நீலகண்ட பாலை துணைமருந்து சூரணம்	...	100
நீலாஞ்சன யோகம்	...	97
பச்சைக்கற்பூர மெழுகு	...	56
பஞ்சசூத மாத்திரை	...	70
பஞ்சசூத மெழுகு	...	54, 55
பஞ்ச பாடாண செந்தூரம்	...	30
பஞ்சபாண ரசம்	...	114
பஞ்சபூதச் செந்தூரம்	...	44, 45
பஞ்சபூதப் பதங்கம்	...	53
பஞ்சமுக செந்தூரம்	...	47
பஞ்சாக்கினிச் செந்தூரம்	...	117
பாடாண எண்ணெய்	...	38
பாடாணக் குலாந்தகன்	...	36
பாடாணக் கட்டு	...	5-11
பாடாணச் சூதச் செந்தூரம்	...	30
பாடாணச் செந்தூரம்	...	29
பாடாணச் சுண்ணம்	...	6,7
பாடாணத்தின் குணம்	...	3
பாடாணத்தின் பெயர்கள்	...	3
பாடாணத்தின் பிறப்பும் அதன்வகைகளும்	...	2
பாடாணத்தைப் பயன்படுத்தும் பொதுவிதி	...	42
பாடாண பற்பம்	..	12-28,33,34
பாடாணப் பதங்கம்	...	28
பாடாணப் பிரயோகம் (குட்டத்துக்கு)	...	39
பாடாணப் பிரயோகம் (வேறு)	...	39
பாடாணப் பற்ப மாத்திரை	...	33
பாடாண மெழுகு	...	31,32,35
பாடாண மேற்பூச்சு மாத்திரை	...	36
பாடாண நஞ்சு முறிவு மருத்துவம்	...	41,42
பாண்டுவீக்க மாத்திரை	...	133
பார்வைப் புகை	...	82
பாலரசப் பதங்கம்	...	120-122
பால் பற்பம்	...	98

பொருளடக்கம்		பக்கம்
புசண்டர் ராமபாண மாத்திரை	...	73
பூபதி மாத்திரை	...	115
பூரணச்சந்திரோதய செந்தூரம்	...	108
பெரியபட்டுக் கருப்பு	...	50
பேய்ச்சொறிச் சிகிச்சை	...	80
மகாசுயமக்கினிச் செந்தூரம்	...	109
மகாரசப் பதங்கம்	...	101
மகாவானமா மெழுகு	...	85
மகாவீரிய சாந்தசெந்தூரம்	...	49
மகாவீரிய செந்தூரம்	...	48
மேகசஞ்சீவி மாத்திரை	...	74
வானமா மெழுகு	...	82
விஷ மெழுகு	...	57
விடாமிர்த மை	...	59
வெள்ளைப்பாடாணத் தூய்மை	...	4,5
வெள்ளைப்பாடாண வீறு குறி குணங்கள்	...	40
வெள்ளைப்பாடாண வீறு முறிவு மருத்துவம்	...	41

அனுபோக வைத்திய நவநீதம்

ஏழாம் பாகம்

காப்பு

மாவா ரனுபோக வைத்ய நவநீதம்
பாவாரு மச்சிற் பதித்திடவே — நாவாரும்
ஆதியே பல்கோடி யண்டமனைத் தும்படைத்தாள்
சோதியே செய்வாய் துணை.

குரு வணக்கம்

திருவும் புகழுந் திகழறிவுஞ் சேரெங்
குருவின் பதம்பணிந்து கொண்டு — வருநலனு
போகமாம் வாகடத்திற் போற்றுநவ நீதமுயர்
வாகவியற் றத்தொடங்கு வாம்.

நூல்

திருவருளினது உதவியினாலும், பெரியோர்களின் வாழ்த்தினாலும் பற்பல மருத்துவ அறிஞர்களின் உதவியினாலும் இதன் முன் ஆறு பாகங்களிலும் அநேக அபூர்வமுறைகள், குருமுறைகள், நுட்பமான முறைகள், மறைவான முறைகள் முதலிய பற்பல அற்புத முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அம்முறைகளெல்லாம் பல தலைமுறைகளாகப் பல தடவைகளிலும் அனுபோக சித்தி பெற்றவைகள், வைத்தியர்களும், வைத்தியரல்லாதவர்களும் இலகுவாகத் தெரிந்து கொள்ளும் விதமாகச் செய்பாகம் முதலியவைகளெல்லாம் வகை விவரமாக எழுதப்பட்டுள்ளன. எந்த நாட்டிலுள்ளவர்களும் எந்தக்காலத்திலும் செய்துகொள்ளும் விதமாக ஒவ்வொரு முறைகளிலும் ஒவ்வொரு வகைகளும் பலமுறைகள் எழுதப்பட்டுள்ளன. அறிவாளிகள் இம்முறைகளை செய்தனுபவித்து இவற்றின் நற்குணங்களை அடங்காமகிழ்ச்சியோடு வெகுவாய்ப் புகழ்ந்து நன்கு மதித்து வருகின்றார்கள். ஆகையால் முன்னிலும் அதிக உற்சாகமுண்டாகி இந்த ஏழாம் பாகத்தில் நமது பரம்பரையோர்களும், நமது நட்புக்குரிய மருத்துவர்களும், நாமும் பல தடவைகளில் செய்து பயன்

படுத்திப் பழக்கத்தில் சித்தி பெற்றவைகளும், கைவல்யமாய் வரப் பட்டவைகளுமான அநேக சித்த யூனானி வைத்திய முறைகள், உயிர்கள் மீதுள்ள அன்பினாலும் உலகோர்க்கு உதவும் நோக்குடனும் வெளிப்படுத்தபட்டிருக்கின்றன. இதிலடங்கியுள்ள முறைகள் முதலி யவைகளெல்லாம் இதுவரையில் அச்சில் வெளிப்படுத்தப் படாத நுணுக்கமானவைகள். கடின நோய்களாகியக் குட்டநோய்கள் மேகநோய்கள், சயநோய், முதலிய நாட்டபட்ட நோய்கள், கடின சாத்திய நோய் முதலிய பெரிய நோய்கள் ஆகியவைகளைத் தீர்க்கும் பற்பல அற்புதமுறைகள் இந்த ஏழாம் பாகத்திற் சொல்லப் பட்டிருக்கின்றன. ஒவ்வொருவரும் சந்தேகமறத் தெரிந்து கொள்ளும் விதமாக இம்முறைகள் மிகவும் தெளிவாகவும் வெளிப் படையாகவும் செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளன. இவற்றின் அருமை பெருமைகளெல்லாம் அங்குச் சொல்லியிருக்கிற படி செய்து நுகரும் அறிவாளிகளுக்கு, உள்ளங்கை நெல்லிக்கனி போல, தெள்ளியதாய் விளங்கும்.

பாடாணத்தின் பிறப்பும் அதன் வகைகளும்

நச்சுத்தன்மையுள்ள கல் வகைகளுக்கெல்லாம் பொதுவாகப் பாடாணமெனப் பெயர் சொல்லப்படுகிறது. பாடாணம் என்பதற்கு வடமொழியில் விஷம் என பொருள் கொள்வதே இதற்குக் காரணம். ஆனால், தமிழ் மருந்தியலில் அறுபத்துநான்கு வகையாகப் பாடாண வகைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவை எல்லாம் பொதுப் பெயர்களாம். இவையன்றி, பாடாணம் எனத் தனியாக ஒருவகைச் சரக்கும் உண்டு. அதைப் பற்றித்தான் இங்கு விவரம் சொல்லப்படுகிறது. பாடாணமானது பிறவிச்சரக்கு; இதில் பலவகை உண்டு. சீமைச் சுண்ணம்பைப் போல் வெண்ணிற முடையதாக வும், பளபளப்பில்லாமலும், ஊட்டமுள்ளதாகவும் இருப்பது பாடாண மெனச் சொல்லப்படுகிறது. இதனை நெருப்பில் போட்டால் புகையாது. இதனுடன் வெடியுப்பைச் சேர்த்துப் பதங்கித்து விற்கப்படும் வகைக்குப்*பளிங்குப்பாடாணம் எனப்பெயர். இதுதான் பெருமளவில் இப்பொழுது கடைகளில் விற்கப்படுகிறது. ஆனால், அதுவும் உரிமம் பெற்றவர்கள் விற்கவேண்டியதே தவிர மற்றவர் கள் விற்கலாகாதென அரசினரால் சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக் கிறது. இந்த வகையில் மஞ்சள் சாயலாயுள்ளதற்கு கௌரிப் பாடாணமென்று பெயர். இன்னும் வெள்ளைப் பாடாணத்தில் பல் போன்றிருப்பது குதிரைப் பற் பாடாணமெனச் சொல்லப்படுகிறது. இந்த வெள்ளைப் பாடாணத்தின் வாசனைப்பட்ட உடன் எலிகள் நாசமாகிப் போவதால் இதற்கு எலிப் பாடாணமெனவும் பெயர் வழங்குகிறது. வெள்ளைப் பாடாணமானது பெரும்பாலும் குராசான்

---

* சங்கு பாடாணம்.

தேசத்திலிருந்து கொண்டு வரப்படுகிறதெனச் சொல்லப்பட்டிருக்கிறது. சில ஆயுள்வேத நூல்களில் இது ஐந்து வகையெனச் சொல்லப்பட்டிருக்கின்றது. அவ்வகைகளாவன.

1. பட்கெட்ஆயா அல்லது. படிகா பாடாணம். இது படிக்காரத்தைப்போலப் பிரகாசமுள்ளதாயிருக்கும் இதனை நெருப்பில் போட்டால் புகையாது

2. அல்தியா பாடாணம்; இது வண்ணத்தில் மஞ்சளைப் போலிருக்கும்.

3. கௌரிப் பாடாணம்; இது மஞ்சள் சாயலான நிறமுள்ளதாயிருக்கும்.

4. தாரியா பாடாணம்; இது மாதுளஞ் சுளைகளைப் போலச் சிவப்பாக இருக்கும்.

5. சங்குப் பாடாணம்; இது நாம் முன் சொன்னதுபோல் வெண்ணிறமாயிருக்கும்.

பாடாணத்தின் பெயர்கள்

இதற்கு அரபியில் 'ஸம்முல்பார்' என்றும் 'துராபுல் ஹாலிக்' என்றும். பெயர், இராஹ் மொழியில் 'பகஜுன்னுர்' என்றும், பார்சி மொழியில் 'மர்ஹ்முஷ்' என்றும், இந்துஸ்தானியில் 'சும்புல் கார் என்றும் பெயர். தமிழில் சஞ்சலம், தவளம், சாங்கம், குவடு, கேரசம், கவனம், புவனம், புனிதன், வானம், அம்பரம். குண்டலம் காயம், குடிலம், புட்கரம், ஆசினி. நபம், கம், கேகயம், பூகம், கெந்தகம், குமரி. இந்து, நீலி எனப் பல பெயர்களுண்டு.

பாடாணத்தின் குணம்

நாட்பட்ட தோல் நோய், கரப்பான், கட்டி, கொப்பளம், குட்டநோய், சீத சுரம், நச்சு சுரம், சதைகளிலுள்ள வேதனை, முக சன்னி, காக்கைவலி, கக்கிருமல், பெருநோய், முதலியத் தொல்லைமிகு நோய்கள் தீரும். நச்சுக்காற்றினால் உண்டாகிற நோய்களைத் தடுக்க மிகவும் உபயோகமானது. இருமல், உடற் பருத்தல் நோய், குன்மம் செரியாமை, பெருங்கழிச்சல், கூத்தாடும் சன்னி, மகளிர் பூப்பெய்துகிற வயதிற்காணும் பாண்டு நோய், இரத்தக்குறைவு நோய், சூதகக்கட்டு, நுரையீரலில் நீடித்த அழலைநோய், மஞ்சள் நோய், மதுமேகம், நாள்பட்ட சந்திக தாபன நோய் ஆகிய இந்த நோய்கள் தீரும். விப்புருதி, முகத்தில் காணுகிற ஒரு வகை விரணம், அம்மை நோய், கண்

மடல் மீது காணுகிற விரணம், மருள் ஆகிய இவைகளுக்கும் உபயோகிக்கலாம். இன்னும் இது பலவகை நோய்களில் மேலுக்கும் உபயோகப் படுத்தப்படும்.

குறிப்பு

இது நச்சுத்தன்மை உள்ளதாகையால் சித்த மருத்துவர்கள் இதனை, பற்பமாகவும், செந்தூரமாகவும் இன்னும் பலவிதமாகவும் செய்து உபயோகிக்கிறார்கள். ஆனால் ஆலோபதி மருத்துவர்கள் பச்சையாக உபயோகித்து வருகின்றார்கள். பச்சையாக உபயோகிப்பதைக்காட்டிலும் கீழ்க்காணும் வகைப்படி பற்பம் முதலியவைகளாகச் செய்து உபயோகிப்பதே உயர்வானதாமென்பது இங்கு நாம் எடுத்துச் சொல்லாமலே விளங்கும். இயற்கையினது அருளினால் அம் முறைகளையெல்லாம் தொடர் முறையாக இனி எழுதுவோம். அவற்றில் சொல்லி இருக்கிறதுபோல் கைபாகப்படி செய்து அனுபவிப்பவர்களுக்கு அவற்றின் சிறந்த குணம் தெரிய வரும். இந்த முறைகளெல்லாம் மிகவும் அனுபவமானவைகளாகும். தீய நோய்களைக் கண்டிப்பதற்குச் சிறந்தவைகளுமாகும் ஆனால், இதை அதிக விழிப்புடன் நோய்களுக்குத் தகுந்தபடி பயன் படுத்துவதால் எவ்விதத் தீய குணமுமில்லாமல் வெற்றி பெறலாம்: ஆகையால் நமது நண்பர்கள் இதில் சொல்லப்பட்டிருக்கும், தூய்மை முறைகள், கைபாகம், செய்பாகம் முதலியவற்றைக் கவனித்துச் செய்து கொள்வார்களாக.

வெள்ளைப்பாடாணத் தூய்மை

சிறுகீரைச் சமூலத்தை இடித்துப் பிழிந்தசாறு 1 படி, இதனை ஒரு புது மண்பாண்டத்தில் விட்டுக்கொள்ளவும். ஒரு பலம் (35 கிராம்), பாடாணத்தைப் பொடித்து இரட்டுத் துணித்துண்டில் வைத்துத் தளரக்கட்டி மேற்படி பாத்திரத்தில் கிழிக்கட்டித் தொங்க விடவேண்டும். அந்த முடிச்சானது பாத்திரத்தினடியில் படாமல் ஒரு அங்குலம் மேலாயிருக்கும் படியாகத் தொங்கவிட வேண்டும். இதனை அடுப்பின் மீதேற்றிச் சிறுக எரித்துச் சாறெல்லாம் சுண்டின பின்பு கொஞ்சம் ஆறவிட்டுக் கழுவி ஈரம் உலரவைத்து எடுத்துக் கொள்ளவும். இவ்விதமே நவபாடாணத்தையும் தூய்மை செய்து கொள்ளலாம். ஆங்கில முறைப்படி தூய்மை செய்யாமல் உபயோகிக்கும் பாடாணத்தைப்பார்க்கிலும் நூறுமடங்கு இது அதிகமான குணத்தைத் தரும். இதில் எவ்வித தீய குணமுமிராது. இதனை மருந்துகளோடு சேர்த்துச் செய்வதால் அதிகப் பயனைத் தரும்.

மேற்படித் தூய்மை (வேறு)

வெள்ளைப் பாடாணம் ஒரே கட்டியாக 5 பலம் (175 கிராம்). ஒரு புது மண் பாத்திரத்தில் ஒரு படி கிளிஞ்சிற் சுண்ணத்தைக் கொட்டி அதன்மீது முன்கட்டியை வைத்து அதன் மேல் ஒரு படி கிளிஞ்சிற் சுண்ணத்தைக் கொட்டி அதன்மீது ஒரு படி காடிநீரை விட்டு அடுப்பின் மீது வைத்துச் சிறு தீயாக எரித்து அந்தக் காடி சுண்டும் பக்குவத்தில் மறுபடியும் முன்போல் ஒரு படி காடியை விட்டுச் சுண்ட வைக்க வேண்டும். இவ்விதம் நாலு படி காடிநீர் சுண்டின பின்புச் சூடாறவிட்டுக் கட்டியை எடுத்து நீரில் கழுவித் தூய்மை செய்து வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவும். எண்ணெய் கக்கிச் சிமைச் சுண்ணும்பைப் போலிருக்கும். இவ் விதமே கௌரி முதலிய பாடாணங்களையும் தூய்மை செய்து கொள்ளலாம்.

மேற்படி (வேறு)

தேவையான வெள்ளைப் பாடாணத்தைக் கல்வத்திற்பொடித்து அந்தத் தூள் கொள்ளுகிற வரையில் எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு அரைத்துக் கெட்டியான பின்பு ஒரே வில்லையாகச் செய்து நிழலில் உலர்த்தி நன்ருயுலர்ந்த பின்பு மறுபடியும் கல்வத்திற் பொடித்து முன்போல் எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு முன்போல் அரைத்து முன்போல் வில்லைசெய்து உலர்த்தவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பதினெரு தடவை செய்து கொண்டால் நல்ல தூய்மையாம். இதனை அளவுப்படி தனியாகவும் உபயோகிக்கலாம்.

மேற்படி (வேறு)

மேற்கண்டபடியே வெள்ளாட்டுப் பாலில் மடக்கி மடக்கிப் பதினெரு தடவை செய்து கொள்வதாலும் வெள்ளைப்பாடாணம் தூய்மையாம்

882. பாடாணக்கட்டு

தூய்மை செய்த பாடாணக் கட்டியை அப்பிரேகத் தகட்டின் மேல் வைத்து வெள்ளை நிறமான பூவுள்ள நீர்முள்ளிச் சாற்ருல் சிறுகச்சிறுகச் சுருக்கிடவும். இப்படியே கை பூரகமாக நான்கு சாமம் சுருக்கிட்டால் பாடாணம் நெருப்பிற் புகையாமல் கட்டிப் போகும். அப்படிக் கொஞ்சம் புகைந்தால் மறுபடியும் முன்போல் இரண்டு சாறும் சுருக்கிடப் புகையடங்கிக் கட்டிப் போம். இதனைப் பொடித்துக் குப்பியில் வைத்துக்கொள்ளவும்.

அளவு :—$\frac{1}{8}$ முதல் $\frac{1}{4}$ அரிசி எடை.

துணைமருந்து :—தேன், நெய் முதலியவைகளாம்.

தீரும் நோய் :—எல்லாவகைச் சுரங்களும் தீரும்.

தாதுஇழப்புத் தீர்ந்து தாது வளமையுண்டாகும். இதனை உடல் வலிமைக்குத் தகுந்தபடி மூன்று ஐந்து ஏழு ஒன்பது நாள் பயன் படுத்தவும். நோய் நாட்பட்டதாயிருந்தால் இடையில் பத்து நாள் விட்டுப் பயன்படுத்தவும்.

குறிப்பு

மேற்கண்ட விதமாகக் கட்டின பாடாணத்தைப் பற்பமாக அல்லது சுண்ணமாகச் செய்து பயன்படுத்தினுல் அதிக மேலான குணத்தைத்தரும்

883 பாடாணச் சுண்ணம்

மேற்கண்ட விதமாகக் கட்டின ஒரு பலம் (35 கிராம்), பாடாணத்திற்கு மேற்படி வெள்ளை நிறப் பூவுடைய நீர் முள்ளியை அரைத்து ஒரு அங்குலம் கவசம் செய்து ஒரு பலம் (35 கிராம்), சுக்கான் கற்பொடியில் தும்பைச் சாற்றைவிட்டு இரண்டு சாமம் வெண்ணெய் போலரைத்து மூசையும் மூடியும் செய்து வெய்யிலி லுலர்த்தி மேற்படிக் கட்டியை வைத்து மேற்படி வில்லையால் மூடி ஏழு சீலை செய்து உலர்த்திக் கவசத்தின் பதினைந்து பங்கு வறட்டி யில் புடமிடவேண்டும். ஆறினபின் எடுத்துப் பனியில் வைக்கக் கட்டி மலர்ந்து போகும். இதனைக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் ஆகியவைகளெல்லாம் மேற்கண்டவைகளே.

முன் கட்டைப் பார்க்கிலும் இந்தச் சுண்ணம் அதிக மேலான தென்பதை அறிவாளிகளே தெரிந்து கொள்வார்கள். தகுந்த துணை மருந்தில் உபயோகிப்பதனுல் குட்டம், புண், குறைநோய், புரை முதலிய அநேக வகை நோய்கள் தீரும். இதன் சிறந்த குணத்தை அனுபவ சாலிகள் தங்கள் அனுபவத்தில் கண்டு கொள்வார்கள்.

884 மேற்படி கட்டு (வேறு)

தூய்மை செய்த பாடாணம் 7$\frac{1}{2}$ வராகனெடை (26$\frac{1}{4}$ கிராம்), கருங்குங்கிலியம் 4 பலம் (140 கிராம்) (இதனைப் பொடித்து வைத்துக் கொள்ளவும்) புது ஓட்டில் 1 அங்குலப் பள்ளமும் $\frac{1}{4}$ அங்குல அகலமு

முள்ள குழி செய்து அதில் கொஞ்சம் முன்தூளைப் போட்டமுத்தி அதன் மீது முன் கட்டியை வைத்து, அதன் மீது தூளைப்போட்டமுத்தி மூடி வேப்பெண்ணெய் ஊற்றி மெல்லிய திரிப்போட்டெரிக்கும் விளக்கின்மேல் ஏற்றி எரித்து வரவேண்டியது. அதில் வீறல் கொடுத்தால் முன் தூளைத்தூவி வீறலை மூடவும். இப்படியே நான்கு சாமம் எரித்து ஆறினபின் கட்டியை எடுக்கச் சிறந்த கட்டாகும். இதனைப் பொடித்துக் குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு:—¼ முதல் ½ அரிசி எடை.

துணைமருந்து :—தேன், நெய், அசுவகெந்திச் சூரணம், கருஞ்சீரக இளகம் முதலியவைகளாம்.

தீரும் நோய் :—நாட்பட்ட சுரங்கள், வாயுகள் முதலிய நோய்கள் தீரும்.

885. மேற்படி கட்டு (வேறு)

தூய்மை செய்த பாடாணம் ஒரே கட்டியாக 10 பலம் (350 கிராம்), கலியாணப் பூசணிக்காய் 1 மேற்படி கலியாணப் பூசணிக்காயை ஒரு பக்கத்தில் வில்லையாகத் தோண்டி அதற்குள் பாடாணக் கட்டியை வைத்து மேற்படி வில்லையால் மூடிச் சீலை மண் செய்து 40 எருவில் புடம் போடவும். இப்படியே வெவ்வேறு காயில் வைத்துப் புடம் ஒன்றுக்கு 10 எருவீதம் அதிகப்படுத்தி ஒன்பது புடம் போட்டெடுக்கச் சண்டிக் கட்டாகும். இந்த ஒன்பதாவது புடத்தில் கெச புடமாகப் போடவேண்டும். இதனைப் பொடித்துக் குப்பியில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு :—¼ முதல் ½ அரிசி எடை.

துணைமருந்து :—தேன், நெய், இளகம் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—குட்டம், தாதுநட்டம், குறைநோய், புண் புரைப்புண், பவுத்திரம் ஆகியவைகள் தீரும். இதனைப்பற்பமாகச் செய்து கொண்டால் சிறப்பான குணத்தைத் தரும்.

886. பாடாணச் சுண்ணம்

மேற்கூறிய பாடாணச் சண்டிக்கட்டு 13 வராகன் எடை (45½ கிராம்), வாலைரசம் 5 வராகன் எடை (17½ கிராம்), நாகம் 3 வராகன் எடை (10½ கிராம்), பொரித்த படிகாரம் 2 வராகன் எடை (7 கிராம்), வெள்ளி அரப்பொடி 1 வராகன் எடை (3½ கிராம்),

சவ்வீரம் ¾ வராகன் எடை, முறைக்கிரமப்படி தூய்மை செய்த வெடியுப்புச்சுண்ணம் ¾ வராகன் எடை, சிற்றண்ட வெண்கருவும், வெள்ளெருக்கம் பாலும் சமனெடை கலந்து கடைந்துண்டாக்கினச் செயநீர் தேவையான அளவு.

செய்முறை :— மேற்கண்ட சரக்குகளையெல்லாம் செயநீரை விட்டு நான்குசாமம் அரைத்து வில்லை செய்து ஒருவாரம்வரையில் ரவியில் உலர்த்தி அதன்மேல் உத்தாமணிச் சாம்பலில் மேற்கண்ட செயநீரை விட்டரைத்து அதனால் வில்லைக்குப் பதின்மூன்று சீலை செய்து நன்றாக உலர்த்தி ஒரு சட்டியில் உத்தாமணிச் சாம்பல் படி 1 போட்டு மத்தியில் வில்லையை வைத்து அதன்மேலும் மேற்படி சாம்பலில் ஒருபடி போட்டுத் தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினியாக ஒருசாதி விறகால் நான்குசாமம் எரித்து ஆறவிட்டெடுத்துப் பார்க்கச் சுண்ணமாகும். இதனைக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—இதில் 1 வராகனெடை (3½ கிராம்), சுண்ணத்தைப் பத்துப்பலம் (350 கிராம்), இளகத்தில் சேர்த்துக் கலந்து வேளை ஒன்றுக்கு ½ முதல் 1 வராகன் எடை சாப்பிடவேண்டும். இதனைத் தனியாக உபயோகிக்கலாகாது.

தீரும் நோய் :— குட்டம், குறைநோய், தாதுஇழப்பு எதனாலும் தீராத சுரங்கள், பக்கவாத நோய்கள், முறைநோய்கள் ஆகியவைகள் தீரும்.

குறிப்பு

இது வெள்வங்க நீரைவாங்கும் தாம்பிரத்திலும் பயன் படுத்தலாம்.

887. மேற்படி கட்டு (வேறு)

தூய்மை செய்த பாடாணம் பலம் 1 (35 கிராம்), இரசசெந்தூரம் 1¼பலம் (43¾ கிராம்), உமிழ்நீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—மேற்படி செந்தூரத்தை உமிழ்நீரால் வெண்ணெய் போலரைத்து மேற்படி கட்டியைக் கவசித்து உலர்த்தி அதன்மீது ஐந்து சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் பத்துப் பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கக் கட்டுப் பட்டிருக்கும். நெருப்பிற் புகையாது. அப்படிப் புகைந்தால் மறுபடியும் முன்போற் செய்து கொள்ளவும். தீ அதிகப்பட்டால் புகைந்தோடிப்போகும். ஆகையால், இதனை விழிப்புடன் புடம் போட

வேண்டும். இவ்விதம் கட்டின பாடாணத்தைப் பற்பமாக அல்லது பதங்கமாகச் செய்து பயன்படுத்தினுல் உத்தமம். இதனைப் பொடித்து உபயோகிக்க வேண்டும்.

அளவு :— ஒரு கசகசா முதல் அரை அரிசி வரையில்.

துணைமருந்து :— தேன், வெண்ணெய் ஆகியவைகளாம்.

தீரும் நோய்கள் :—நாட்பட்ட சுரங்கள், வாதநோய், முறை நோய்கள் ஆகியவை தீரும்.

888. மேற்படி கட்டு (வேறு)

தூய்மை செய்த பாடாணக்கட்டி 1 பலம் (35 கிராம்), சுவர் முள்ளங்கியிலைச்சாறு 1 பலம் (35 கிராம்).

செய்முறை :— மேற்படி சாற்றை ஒரு சிறுகலயத்தில் விட வேண்டும். இந்தச் சாலனது கலயத்தில் முக்கால் வாசியிருக்க வேண்டும். இதற்குள் மேற்படி கட்டியைப் போட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்துலர்த்தி 40 பலம் (1400 கிராம்) வறட்டியில் புடமிடவேண்டும். இந்தக் கட்டியில் கொஞ்சம் நெருப்பில் போட்டுச் சோதித்தால் புகையாமலிருக்கவேண்டும். புகைந்தால் புகையடங்குகிறவரையில் முன்போல் ஒன்றிரண்டு புடம் போட்டுச் சித்தப் படுத்திக் கொள்ளவேண்டும்.

அளவு, துணை மருந்து, தீரும்நோய் ஆகியவை மேற்கண்டவைகளேயாகும்.

889. மேற்படி (வேறு)

தூய்மை செய்த பாடாணம் 1 பலம் (35 கிராம்) பிராந்தி 4 பலம் (140 கிராம்), கழுதை மூத்திரம் 4 பலம் (140 கிராம்).

செய்முறை :— மேற்படி பாடாணக் கட்டியை ஒரு செப்புக் கிண்ணியில் வைத்து ஒரு சிறு அடுப்பின் மீதேற்றித் தீபாக்கினியாக எரித்து முன்சொன்ன இரண்டுதிரவத்தையும் ஒன்ருகக்கலந்து கட்டியின் மீது சிறுகச் சிறுகவிட்டுச் சுருக்கிட வேண்டும். திரவமெல்லாம் சென்றபின்பு கீழே இறக்கி ஆறவைத்துக் கொள்ளவும். பற்பம், மெழுகு ஆகியவைகள்செய்ய இது ஒரு நல்ல முறை இதனைப் பொடித்து உபயோகிக்கவேண்டியது.

அளவு :— ஒரு கடுகுமுதல் அரை அரிசி எடை.

துணை மருந்து :—நெய், தேன், வெண்ணெய் ஆகியவைகள்.

தீரும் நோய்கள் :—நாட்பட்ட சுரங்கள், முறைசுரங்கள், யானைக்கால்சுரம், அண்ட சம்பந்தமான சுரம் ஆகியவைகள் தீரும்.

890. மேற்படி (வேறு)

தூய்மை செய்த பாடாணக்கட்டி 1 பலம் (35 கிராம்) எருமைச் சாணி 50 பலம் (1750 கிராம்).

செய்முறை :— மேற்படி சாணியை இரண்டு பாகமாக்கி ஒரு மண் சட்டிக்குள் வைத்து அதன் மீது கட்டியை வைத்து அதன் மீது மறுபாதிச் சாணத்தை வைத்து அழுத்தி மேற்சட்டி மூடி ஐந்து சீலைமண்செய்து அடுப்பின் மீதேற்றித் தீபாக்கினியாக இரண்டுமணி நேரம் கழித்துக்கீழிறக்கி வைத்துக்குளிர ஆறின பின்புக்கவசத்தை பிரித்துக் கட்டியை எடுத்துக் கொள்ளவேண்டும் இவ்விதம் மடக்கி மடக்கி நூறு தடவைகள் செய்து கொண்டால் நெருப்பிற் புகையாமல் கட்டுப்பட்டுப்போம். ஒரு நாளையில் ஏழெட்டுத் தடவை செய்யலாம். நூறு தடவையென்று மயங்க வேண்டாம், சாணி ஈரமில்லாமல் நன்ருக உலர்ந்து போயிருக்க வேண்டியது. அது தான் எரிப்பின் பதம். தீ அதிகமானல், சாணி எரிந்து கருகித் தீப்பிடித்துப் பாடாணம் ஓடிப் போக நேரிடும். ஆகையால் இதனை விழிப்புடன் செய்து பற்பம், மெழுகு முதலிய பலபாகங்களில் பயன்படுத்தலாம். இதனைப் பொடித்துத் தனியாகவும் உபயோகிக்கலாம்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் ஆகியவைகளெல்லாம் முன்கூறியவைகளேயாகும்.

891. மேற்படி கட்டு (வேறு)

தூய்மை செய்த பாடாணம் 1 பலம் (35 கிராம்), வெண்காரம் $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$கிராம்), வெடியுப்பு $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$கிராம்), நவச்சாரம் 1 பலம் (35 கிராம்), எலுமிச்சம்பழச்சாறு $8\frac{1}{2}$ பலம் ($297\frac{1}{2}$ கிராம்).

செய்முறை:— பாடாணத்தைத் தவிர மற்ற மூன்று சரக்குகளையும் பொடித்துக் கல்வத்திற் போட்டு மேற்படி எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு இரண்டு மணி நேரம் வெய்யிலில் வைத்துப் பிறகு அரைத்து ஈரம் வறண்ட பின்பு மறுபடியும் வெய்யிலில் வைத்துக் கொஞ்சமும் ஈரமில்லாமல் உலர்த்திக் குப்பியில் வைத்துக்கொள்ளவும். இந்தத் தூள் 6 வராகன் எடை (21கிராம்). இதனை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு அகலில் பரப்பி அதன்மீது மேற்

கண்ட பாடாணக்கட்டியை வைத்து அதன்மீது மறுபாதித்தூளைப் போட்டுச் சீலைமண் செய்துலர்த்தி இருபது பலம் (700கிராம்), வறட்டியில் புடமிட்டு ஆறினபின்பு எடுத்து மறுபடியும் முன்போல் (21கிராம்), விராகனெடை மேற்படி தூளை இரண்டு பாகமாக்கி முன்போல் கட்டிக்குக் கீழ் மேலிட்டுச் சீலைமண் செய்து முன் போல் இருபது பலம் (700கிராம்,) வறட்டியில் புடமிடவும் இவ் விதம் மடக்கி மடக்கி ஐந்து புடமிடவும். பாடாணம் கட்டுப் பட்டுப் போகும். இதைப் பற்பம் முதலியவைகளுக்கு உபயோகிக்க லாம் ; இதனைப் பொடித்துத் தனியாகவும் உபயோகிக்கலாம்.

அளவு, துணைமருந்து, தீரும் நோய் ஆகியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

892. மேற்படி கட்டு (வேறு).

தூய்மை செய்த பாடாணம் $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்) இதனை ஒரு அப்பிரேகத்தகட்டின் மீது அல்லது மண் தாலத்தின் மீது வைத்துக் கரி நெருப்பிலேற்றி எலுமிச்சம்பழச் சாற்றை அதன் மீது விட்டு வர வேண்டும். புகையெழும்பும் புகை கண்ணிற் படாமல் அதிக விழிப்பாக இருக்கவேண்டும். புகை அடங்குகிற வரையில் மேற்படி சாற்றை விட்டுக்கொண்டே இருக்க வேண்டும். புகை நின்றவுடன் சாற்றை விடாமல் நிறுத்திக் கொள்ளவும். பின்பு கீழேயிறக்கி வைத்து ஆறினபின்பு எடுத்துக்கொள்ளவும். இது ஒரு வகை நல்லகட்டு. இதனைப் பொடித்துத் தனியாகவும் உபயோகிக் கலாம்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் ஆகியவைகளெல்லாம் முன் சொன்னவைகளேயாம்.

893 மேற்படி கட்டு (வேறு)

தூய்மை செய்த பாடாணக்கட்டி 6 வராகன் எடை (21 கிராம்), வெடியுப்பு 12 வராகன் எடை (42 கிராம்), எருக்கம்பால் 12 வராகன் எடை (42 கிராம்).

செய்முறை :—மேற்படி வெடியுப்பைப் பொடித்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு சிறுகலயத்திற் போட்டு அதன் மீது கட்டியை வைத்து அதன் மீது வெடியுப்பு மறுபாகத்தைப் போட்டு எருக்கம்பாலை விட்டு வாய்க்குச் சில்லிட்டு ஐந்து சீலைமண் செய் துலர்த்தி 24 பலம் (840 கிராம்), எருவில் புடமிடவேண்டும். குளிர

ஆறின பின்பு கட்டியை எடுத்துக் கொள்ளவும். பிறகு முன்போல் வெடியுப்பு 12 வராகன் எடை (42 கிராம்), எருக்கம்பால் 24 வராகன் எடை (84 கிராம்), ஆகியவைகளை முன்செய்தது போல் கலயத்தில் வைத்துப் புடமிடவேண்டும் இவ்விதம் மூன்றுந் தடவையும் செய்து கொள்ளவும்: கட்டுப்பட்டுப் போகும். பற்பம், மெழுகு, மாத்திரை ஆகியவைகளுக்கு இதனை பயன்படுத்தினல் மிகவும் நன்மை இதனைத் தனியாகவும் உபயோகிக்கலாம்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய், ஆகியவைகளெல்லாம் முன் சொன்னவைகளேயாகும்.

894. பாடாணபற்பம்

தூய்மை செய்து கட்டின பாடாணம் 1 பலம் (35 கிராம்), கண்டங்கத்திரிச் சாம்பல் 2 படி.

செய்முறை :— இரண்டுபடி கொள்ளும்படியான ஒரு மண்பானையில் ஒரு படி மேற்படி சாம்பலைப் போட்டமுத்தி அதனடுவில் மேற்படி கட்டியை வைத்து அதன் மேல் மேற்படி சாம்பலைப் போட்டமுத்திப் பானை வாயை மண் தாலத்தால் மூடிச் சீலை மண் செய்து அடுப்பேற்றி மூன்றுசாம நேரம் எரித்து ஆறவிட்டு எடுக்கப் பாடாணமானது கட்டியாய் மலர்ந்து போயிருக்கும். அதை விழிப்புடன் எடுத்துக் குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :—½ முதல் 1 அரிசி எடை.

துணை மருந்து :—வெண்ணெய், வெந்நீர், நெய், முலைப்பால் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள்:—தாது செழிப்புண்டாகும் ; விந்துஒழுக்கு நோய் தீரும் ; புணர்ச்சியில் முழுமை உண்டாகும்; அடங்காப் பசி உண்டாகும்.

குறிப்பு

இதனை அடுப்பில் வைத்தெரிப்பதைப் பார்க்கிலும் கரியை நெருப்பாக்கி அதன்மீது கவசத்தை வைத்து நெருப்பு ஆருமல் மேன்மேலும் கரியைப் போட்டு விசிறிக் கொண்டேயிருந்தால் அதிக நல்ல விதமான பற்பமாகும். அவரவர்கள் விருப்பப்படி செய்து கொள்ளவும்.

895. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்து கட்டின பாடாணம் 1 பலம் (35 கிராம்), வேப்பிலைச்சாறு செல்லத்தக்க அளவு, சோடாமாவு 6 வராகன் எடை (21 கிராம்).

செய்முறை :—பாடாணத்தைக் கல்வத்திற் பொடித்து மேற்படி வேப்பிலைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு மணி நேரம் அரைத்துப் பின்பு சோடாமாவைச் சேர்த்து இரண்டுமணி நேரம் அரைத்துப் வில்லை செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல்மூடி ஐந்து சீலைசெய்துலர்த்தி ஒரு வீசை (1கிலோ 40) கிராம்)காட்டெரு வில் புடமிட்டு ஆறின பின்னெடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு:—ஒரு கசகசாமுதல் ½ அரிசி எடை.

துணைமருந்து:—ஒன்றரைப்பலம் வெண்ணெயுடன் கலந்து வெறும் வயிற்றில் சாப்பிடவும் ; பாலேடு போல், நெய்ப்பசையுள்ள ஆகாரங்கள், நெய் ஆகியவைகளை அதிகமாகச் சேர்க்கவும்.

தீரும் நோய்கள்:—நரம்புகளைப் பற்றின நோய் தீரும். தாது இழப்பு தீர்ந்து உடல்வலிமையுண்டாகும். இரைப்பை வலுப்படும் கை கால் நடுக்கல் தீரும்.

896. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்து கட்டின பாடாணம் ¾ வராகன் எடை, வெள்ளைச் சீமை முள்ளங்கி (டர்னிப்) இதனைக் கீழ்ப் பக்கம் கொஞ்சம் அறுத்து, ஒரு அங்குல சதுரம் பள்ளம் தோண்டி அதற்குள் மேற்படி பாடாணத்தை வைத்து முன் எடுத்த சதையை யே அதிற் போட்டு அழுத்திக் கெட்டியாக மூன்று சீலமண் செய்ய வேண்டும். இதற்காக மண்ணையும் பஞ்சையும் சேர்த்தரைத்துச் சித்தப்படுத்திச் சீலைசெய்யவேண்டியது. ஈரம் உலர்த்தி மூன்று வீசை வறட்டியில் காற்றில்லாத இடத்தில் புடமிட்டு ஆறின பின்னெடுக்கப் பற்பமாகி இருக்கும். இது நல்வாய்ப்புடையோர்க்குக் கைவல்யமே தவிர மற்றவர்களுக்குக் கிடைப்பது அரிது. கைபாக மாக அதிக விழிப்புடன் செய்ய வேண்டியது. இப் பற்பம் அருமை யானவைகளிலொன்று. இதன் குணம் அனுபவத்தில் தெரியவரும்.

அளவு:—ஒரு கசகசாமுதல் ½ அரிசி எடை.

துணைமருந்து :— ஒரு பலம் (35 கிராம்), வெண்ணெய் முதல் ஒன்றரைப் பலம் (52½ கிராம்), வெண்ணெய் வரையில் எடுத்து

அதற்குள் வைத்துச் சாப்பிடலாம். கொழுப்பான பதார்த்தங்கள், நெய்ப்பசையான உணவுப் பண்டங்கள் ஆகிய கொழுப்புச் சத்துள்ள பண்டங்களைச் சாப்பிடவேண்டும்.

தீரும்நோய்கள் :—நரம்புகளுக்கு முறுக்கேற்றி ஆண்மைத் தன்மையை உண்டாக்கும்; தாது செழிப்புண்டாகும்; உணவைச் செரிக்கச் செய்து இரைப்பையைப் பலப்படுத்தும் நடுக்கம் முதலிய நரம்பு வலுக்குறைவைப் போக்கும்.

897. பாடாண பற்பம் (வேறு)

மேலே சொல்லியிருக்கிறபடி கண்டங்கத்திரிச் சாம்பலில் வைத் தெரித்துப் பற்பம் செய்வது போலவே அரசம் பழுப்புச் சாம்பல், முள் முருக்கம் பழுப்புச் சாம்பல் முதலியவைகளிலும் வைத்தெரித்து பற்பம் செய்து கொள்ளலாம்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் ஆகியவைகளெல்லாம் மேலே சொல்லியிருப்பவைகளேயாம்.

898. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்து கட்டின பாடாணம் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), ஒரு வீசை மருதோன்றியிலையை அரைத்த விழுதுக்குள் நடுவில் வைத்து ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி மூன்று வீசை எருவில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு:— $\frac{1}{2}$முதல் 1 அரிசி எடை.

துணைமருந்து :—பாலேடு, வெண்ணெய் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள்:—விரணமேகங்கள், மேக நோய்கள், கிரந்திகள், புண்கள், கண்டமாலை, குட்டநோய் முதலியவைகள் தீரும்.

குறிப்பு :

கூடுமானால், மூன்றுவீசை மருதோன்றியிலையை அரைத்து அதற்குள் வைத்தும் செய்யலாம்.

899. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்து கட்டின பாடாணம் $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்) வெடியுப்பு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) பருமனான வெங்காயம் ஒன்று.

செய்முறை :—வெங்காயத்தை அரையங்குலம் குடைந்து வெடியுப்பைப் பொடித்து இரண்டு பங்காக்கி ஒருபங்கை அடியிற் போட்டு அதன்மீது பாடாணக்கட்டியை வைத்து அதன்மீது மறு பங்கு வெடியுப்புத் தூளைப் போட்டு அதன்மீது முன் எடுத்த வெங்காயத் தூளைப்போட்டமுத்தி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி 24 பலம் (840 கிராம்) வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :— ஒரு கசகசா முதல் ஒரு அரிசிஎடை வரையில்.

துணை மருந்து:—வெண்ணெய் ஒரு பலம் (35 கிராம்), முதல் ஒன்றரைப்பலம் (52½ கிராம்) வரையில், பாலேடு, நெய்ப்பசையான உணவுகள் முதலியவைகளை அதிகமாக உபயோகிக்க வேண்டியது.

தீரும் நோய்கள் :- நரம்பைப்பற்றின நோய்கள் தீரும். தாது வளமையுண்டாகும். பசி அனலை அதிகப் படுத்தும் இரப்பையை வலுப்படுத்தும்.

900. பாடாண பற்பம் (வேறு)

முள்முருக்கம் பழுப்புச்சாம்பல் 3 பலம் (105 கிராம்) வெடியுப்பு 8 பலம் (280 கிராம்), தூய்மை செய்து கட்டின பாடாணம் 1 பலம் (35 கிராம்)

செய்முறை:—ஒரு சிறுபானையில் மேற்படி அரைவாசி சாம்பலைப் பரப்பி, வெடியுப்பைப் பொடித்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை அதன்மீது பரப்பி அதனடுவில் பாடாணக்கட்டியைவைத்து அதன் மீது மறுபாதி வெடியுப்புத் தூளைப் போட்டு அதன்மீது மீதிச் சாம்பலைப் போட்டுப் பக்குவமாக அமுத்தி மேற்சட்டி மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி ஐந்து வீசை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு —ஒரு கசகசா முதல் ½ அரிசி எடை.

துணைமருந்து : வெண்ணெய் ஒரு பலம் (35 கிராம்) முதல் ஒன்றரைப் பலம் (5-½ கிராம்) வரையில் கலந்து சாப்பிடலாம். அல்லது நீரில் கலந்து சாப்பிடலாம்.

தீரும் நோய்ள்க :—புணர்ச்சியில் இன்பமுண்டாகும். விந்து ஒழுக்கு நோய் தீரும். விந்து அழுத்தமுண்டாகும். அடங்காப்பசி உண்டாகும். நரம்பைப் பற்றின நோய்கள் தீரும். இரப்பையைப் பலப்படுத்தும். நடுக்கல், உதறல் ஆகியவைகளைப் போக்கும்.

901. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்து கட்டின பாடாணம் 3 விராகனெடை (10½ கிராம்), இதன் மீது 12 பலம் (420 கிராம்), நூலைச் சுற்றிக் காற்றில்லாத இடத்தில் வைத்துக் கொளுத்திவிட்டு எரிந்தாறின பின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :—½ முதல் 1 அரிசியெடை.

துணைமருந்து :—பாலேடு, வெண்ணெய் ஆகியவைகளாம்.

தீரும் நோய்கள் :—குளிர்ச்சியான எல்லா நோய்களிலும் உபயோகிக்கலாம். கிரந்திப்புண், மேகநோய்கள் ஆகியவைகளும் தீரும்.

902. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்து கட்டின பாடாணம் 2 வராகன் எடை (70 கிராம்), எருக்கின் வேர்ப்பட்டையை அரைத்து அதற்குள் பாடாணத்தை வைத்து மேலே மூன்று சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் நான்கு பங்கெடை வறட்டியில் புடமிடவேண்டும். ஆறின பின்பு பாடாணக்கட்டியை எடுத்து முன் போல் இரண்டு பலம் எருக்கின் வேர்ப்பட்டையை அரைத்து மூன்று சீலைமண் செய்துலர்த்தி முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி நான்கு அல்லது ஐந்து புடமிட்டால் பற்பமாகிவிடும்.

அளவு :—ஒரு கசகசாமுதல் ½ அரிசி எடை.

துணைமருந்து :—வெண்ணெய், பாலேடு ஆகியவைகளாம்.

தீரும் நோய்கள் :—தாது இழப்பைப் போக்குவதில் அதிகம் சிறந்தவைகளுள் இதுவும் ஒன்று.

903. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்து கட்டின பாடாணம் ½ பலம் (17½ கிராம்), கற்கண்டுப்பாகு செல்லத்தக்க அளவு, நாயுருவிச் சாம்பல் 3 பலம் (105 கிராம்).

செய்முறை :—பாடாணத்தை கல்வற்திற் போட்டுப் பொடித்துக் கற்கண்டுப் பாகைச் சிறுகச் சிறுக விட்டு மூன்று நாள் அரைத்துப்வில்லைசெய்து மேற்படி சாம்பலை இரண்டுபாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு அகலில் வைத்துப் பரப்பி அதன் மீது வில்லையை

வைத்து அதன் மீது மறுபாதிச் சாம்பலைப் போட்டு மேல்கல் மூடி மூன்று சீலை மண் செய்துலர்த்தி இரண்டு வீசை (2800 கிராம்) எருவில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :—1 அரிசி எடை.

துணைமருந்து :— வெண்ணெய், பாலேடு ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :—கிரந்திப் புண்கள், மேகநோய்கள் குட்டங்கள் ஆகியவை தீரும். இந்த நோய்கள் நாட்பட்டவைகளாயின் இம்மருந்தை விடாமல் நாற்பது நாள் உபயோகிக்கவும்.

904. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்து கட்டின பாடாணம் 1 பலம் (35 கிராம்) எள் செடி சமூலத்தையும் எரித்த சாம்பல் 2 படி.

செய்முறை :—இரண்டு படி கொள்ளும்படியான ஒரு பானையில் ஒரு படி சாம்பலைப்போட்டு அழுத்தி அதன்மீது பாடாணக் கட்டியை வைத்து அதன்மீது மற்ற சாம்பலையும் போட்டமுத்திப் பானை வாயை மண்தாலத்தால் மூடிச்சீலை செய்து அடுப்பேற்றி நான்கு சாமம் (12 மணி) எரித்து ஆறவிட்டெடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :—அரிசி எடை 1.

துணைமருந்து :—பாலேடு, வெண்ணெய், தண்ணீர் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :—கப சம்பந்தமான நோய்கள், குளிர்ச்சி சம்பந்தமான நோய்கள், கிரந்தி நோய்கள், ஆகியவைகள் தீரும். தாதுச் செழிப்பு, புணர்ச்சிச்சத்தி, விந்து இறுகல், பசி அனல் ஆகியவைகளுண்டாகும்.

905. பாடாண பற்பம் (வேறு)

தூய்மைசெய்த பாடாணக்கட்டி 3வராகன் எடை (10½ கிராம்), சேவல் கொண்டைப் பூச்செடி சமூலச்சாறு 10 பலம் (350 கிராம்), எள்செடி சமூலச்சாம்பல் 1 படி.

செய்முறை :—மேற்படி பாடாணத்தைப் பொடித்து, மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்துச் சாறெல்லாம் சென்றபின்பு வில்லை செய்துலர்த்தி, ஒரு சட்டியில் அரைப்பாகம் சாம்பலை வைத்தழுத்தி அதில் மேற்படி வில்லையை வைத்து, அதன் மேலும் மறுபாதிச் சாம்பலைப் போட்டமுத்தி மேற்சட்டி மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி, அடுப்பேற்றி மூன்று சாமம் தீபாக்கினி கமலாக்கினியாக எரித்து ஆறவிட்டெடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு :—1 அரிசி எடை

துணைமருந்து :—பாலேடு, வெண்ணெய், வெற்றிலை ஆகியவை களாம்.

தீரும்நோய்:—புணர்ச்சிச் சத்தியை உண்டாக்கும், பசி அனலை அதிகப்படுத்தும்.

மருந்துணவு :—புளி, புணர்ச்சி ஆகியவைகளை நாற்பது நாள் வரை நீக்கி வைக்க வேண்டியது. நெய் பால் வறுத்த பதார்த் தங்களை அதிகமாக உபயோகிக்க வேண்டியது. இவ்விதம் நாற்பது நாள் சாப்பிட்டால் முதுமைத் தன்மை வராமல் இளைஞனைப் போலவே இருக்க ஏதுவாகும்.

906. பாடாண பற்பம் (வேறு)

தூய்மைசெய்து கட்டின பாடாணம் $\frac{1}{4}$பலம் ($8\frac{3}{4}$ கிராம்), இரண்டு பலம் (70 கிராம்), கஞ்சா இலையை அரைத்து அதற்குள் வைத்து மூன்று சீலைமண் செய்து பத்துப் பலம் (350 கிராம்), வறட்டியை அடுக்கி நெருப்பிட்டு எரித்துப் புகையடங்கினவுடன் அதற்குள் மேற்படி கவசத்தை வைத்து மூடிவிட வேண்டும். ஆறின பின்பு கட்டியை எடுத்து முன்போல் இரண்டு பலம் (70 கிராம்), கஞ்சா இலையை அரைத்துக் கவசித்து முன்போற் சீலைமண் செய்து முன் போற் புடமிடவும், இவ்விதம் மடக்கி மடக்கி நாலைந்து தடவை புடமிட்டால் பற்பமாகிவிடும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் ஆகியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

907. பாடாண பற்பம் (வேறு)

தூய்மைசெய்து கட்டின பாடாணம் பலம் $\frac{1}{2}$ ($17\frac{1}{2}$ கிராம்,) விளகாய்ப்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—மேற்படி பாடாணத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து, மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம மரைத்துச் சிறு பில்லைகளாகச் செய்து உலர்த்திக்கொள்ள வேண்டும். பின்பு ஐந்துபலம் (175 கிராம்), ஆமணக்கிலையை அரைத்த விழுதுக் குள் வைத்து மூன்று சீலைமண் செய்து ஒரு வீசை (1400 கிராம்), வறட்டியில் புடமிட்டு ஆறின பின்னெடுக்கப் பற்பமாம்.

அளவு:— 1 அரிசியெடை.

துணைமருந்து:—தேன், நெய் ஆகியவைகளாம்.

தீரும்நோய் :—பக்கவாதம், முக வாதம், முடக்கு வாதப் முதலிய வாதநோய்கள் தீரும்.

908. பாடாண பற்பம் (வேறு)

தூய்மைசெய்து கட்டின பாடாணம் வராகன் எடை 6 (21 கிராம்), மருதோன்றி இலை 7 வீசை (9800 கிராம்).

செய்முறை:—மேற்படி இலையை உரலிலிட்டு இடித்துப் பிறகு அம்மியில் வைத்தரைத்து வெண்ணெய் போலானபின்பு, இரண்டு பாகமாக்கி ஒருபாகத்தை ஒரு சட்டியில் வைத்துத் தட்டையாகச் செய்து அதனடுவில் மேற்படி பாடாணத்தை வைத்து, மறுபாதி விழுதையும் அதன்மேல் வைத்துச் சமமாக அழுத்திவிட்டு மேற் சட்டி மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி 18 வீசை (25 கிலோ 200 கிராம்) வறட்டியில் புடமிட்டு, ஆறினபின் எடுத்து முன் போலவே இரண்டாந் தடவையும் ஒரு புடமிட்டெடுக்கப் பற்பமா யிருக்கும். எடுத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—ஒரு அரிசி எடை முதல் இரண்டு அரிசி எடை வரையில்.

துணைமருந்தும், தீரும்நோயும்:—பனப்சா* குடிநீர் $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), தேன் $1\frac{1}{4}$ பலம் ($43\frac{3}{4}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ணக் குருதியிலுள்ள மாசுகள் நீங்கி நல்ல குருதி, குருதித்தூய்மை ஆகியவைகளுண்டாகும்.

கடுக்காய்ப் பிஞ்சுத்தூள் குன்றிமணியெடை 6, அரசம் பட்டைச் சாம்பல் குன்றிமணியெடை 1, தேன் வராகன் எடை 3 ($10\frac{1}{2}$ கிராம்), இவையெல்லாவற்றையுங் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ளக் கபம் வெளிப் படும், இருமல் நோய் தீரும்.

காவுஜுபான் கியாழம் வராகன் எடை 3 ($10\frac{1}{2}$ கிராம்), மூங் கிலுப்புத் தூள் வராகன் எடை 4 (14 கிராம்), ஏலரிசித்தூள் வராகன் எடை 4 (14 கிராம்), இவற்றைக் கலந்து முறைப்படி உண்ண வறட்டிருமல் தீரும்.

வெற்றிலைச்சாறு வராகன் எடை $1\frac{1}{2}$ ($5\frac{1}{4}$ கிராம்), தேன் வராகன் எடை 3 ($10\frac{1}{2}$ கிராம்), இவற்றைக் கலந்து மருந்துடன் உட்கொள்ளக் கப சம்பந்தமான எல்லா நோய்களுந் தீரும்.

நான்கு திராட்சைப் பழத்தை அரைத்து அதில் வைத்து நாற் பது நாள் உட்கொள்ளக் கிரந்தி (நோய்கள்,) கை கால் முடக்கு, பீனிசநோய்கள் ஆகியவைகள் தீரும்.

---

* பனப்சா = பனப்ஃஷா — ஓர் யூனானி மருந்து சரக்கு.

துளசிச்சாறு வராகன் எடை 3 (10½ கிராம்), தேன் வராகன் எடை 3 (10½ கிராம்), இவ்விரண்டையுங் கலந்து மருந்துடனுட்கொள்ள நடுக்கு சுரம், மூன்றுமுறைச்சுரம், நான்காமுறைச்சுரம் ஆகியவைகள் தீரும்.

வெண்ணெய் 3 வராகன் எடை (10½ கிராம்) தேன் வராகன் எடை 3 (10½ கிராம்), இவ்விரண்டையுங் கலந்து மருந்துடனுட்கொள்ள இரைப்பிருமல், இருமல், மூச்சுமுட்டல் ஆகியவைகள் தீரும்.

ஓமத்தூள் வராகன் எடை 1½ (5¼ கிராம்), தேன் வராகன் எடை 3 (10½ கிராம்), இவ்விரண்டையுங் கலந்து மருந்துடன் சேர்த்துண்ண அர்த்தாங்க வாயு தீரும்.

909. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்து கட்டின பாடாணக்கட்டி ஒரு பங்கு இதற்கு எட்டு பங்கெடையுள்ளப் பருமனுள வெங்காயம் 1 மேற்படி பாடாண எடை கம்பி வெடியுப்பு.

செய்முறை :—வெங்காயத்தைக் குடைந்து, வெடியுப்பைப் பொடி செய்து இரண்டு பங்காக்கி ஒரு பங்கை வெங்காயத்திற்குட் பரப்பி, அதன் மேல் பாடாணக் கட்டியை வைத்து, அதன் மீது மறுபங்கு வெடியுப்புத்தூளைப் போட்டு, முன் வெங்காயத்தூளையே போட்டமுத்தி மூன்று சீலைமண் செய்துலர்த்தி ஒரு வீசை (1400 கிராம்), வறட்டியில் புடமிட்டாறின பின் எடுக்கப் பற்பமாயிருக்கும். அனுபவத்தால் இதன் புடத்திட்டத்தை நிதானித்தறிந்து கொள்ள வேண்டும்.

அளவு :—ஒரு அரிசி எடை முதல் இரண்டு அரிசி எடை வரை.

துணைமருந்தும், தீரும்நோயும் :—தூய்மை செய்த மைசாட்சித் தூள் குன்றிமணியெடை நான்கு, கற்றாழைச் சோறு வராகன் எடை 3 (10½ கிராம்), தேன் வராகன் எடை 6 (21 கிராம்), இவை எல்லாவற்றையுங் கலந்து மேற்படி பற்பத்தை அளவுப்படி மருந்துடனுட்கொள்ளக் கீல்வாதங்கள், கனுவாதம், சந்துவாதம் முதலிய எல்லாவகை வாயு நோய்களுந் தீரும்.

சீந்திற் கொடிச்சாறு வராகன் எடை 3 (10½ கிராம்), தேன் வராகன் எடை 3 (10½ கிராம்), இவ் விரண்டையுங் கலந்து மருந்துடன் உட்கொள்ள பலவகைக் கபநோய்கள், இரைப்பிருமல், மேல் மூச்சு ஆகியவைகள் தீரும்.

ஓமச்சூரணம் வராகன்எடை ¼ (⁷/₈ கிராம்), தேன் வராகன் எடை 3 (10½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மருந்துடன் உட்கொள்ள மந்தாக்கினி நோய் தீரும்; பசி அனல் அதிகப்படும்

பாலேடு வராகன் எடை 3 (10½ கிராம்),தேன் வராகன் எடை 3 (10½ கிராம்), இவ்விரண்டையுங் கலந்து மருந்துடன் உட்கொள்ள புணர்ச்சிசத்து, விந்தழுத்தம், உடற்சத்து, முக்கக்களை ஆகியவை களுண்டாகும்.

வெற்றிலைச் சாறு வராகன் எடை மூன்று (10½ கிராம்), தேன் வராகன் எடை 6 (21 கிராம்), இவற்றைக் கலந்து மருந்துடன் உட்கொள்ள இரைப்பிருமல் தீரும். புணர்ச்சிசத்து, விந்தழுத்தம் ஆகியவைகளுண்டாகும்.

வேப்பிலைச்சாறு வராகன் எடை மூன்று (10½ கிராம்), மிளகுத்தூள் குன்றிமணி எடை 4, இவற்றைக் கலந்து மருந்துடன் உட்கொள்ள எதனுலுந் தீராத நான்காம்முறைசுரந் தீரும்.

ஆற்றுத் தும்மட்டி வேர்ப்பட்டைச் சாறு, சீந்திற் கொடிச்சாறு, தேன் இவை வகைக்கு வராகன் எடை மூன்று (10½ கிராம்), இவற்றைக் கலந்து மருந்துடனுட்கொள்ள, கிரந்தி நோய்கள் பறங்கிப் புண், சூலை நோய், எல்லாவகை வாத நோய்கள், எல்லா வகைக் கப நோய்கள் தீரும்.

திரிபலைத்தூள், கருஞ்சீரகத்தூள், இளவறுப்பாக வறுத்திடித்த வெந்தயத்தூள் இவை வகை 1, வராகன் எடை ¾க்கு (2⁵/₈ கிராம்) தேன் வராகன் எடை 6 (21 கிராம்), இவற்றைக் கலந்து மருந்துடன் உட்கொள்ள சந்துவாதம், இடுப்புவலி, மார்புவலி, ஆகியவைகள் தீரும்.

கொத்துமல்லிக் கீரைச்சாறு வராகன் எடை 6 (21 கிராம்), மூங்கிலுப்புத்தூள் குன்றிமணியெடை 4, கெந்தகத்தூள் வராகன் எடை ½ (1¾ கிராம்) தேன், வராகன் எடை மூன்று (10½ கிராம்), இவைகளைக் கலந்து மருந்துடன் உட்கொள்ளக் குளிர்ச்சியினு லுண்டான தலைநோய், பீனிசநோய், கிறுகிறுப்பு, மந்தாக்கினி நோய் ஆகியவைகள் தீரும்.

குறிப்பு : மேற்கண்ட துணைமருந்து வகைகள் பெரும் பான்மையும் எல்லாவகைப் பாடாண பற்பங்களுக்குமேற்கும், ஆனல்,உடல் தன்மை, உடல் வலிமை, நோய் வலிமை ஆகியவை களையுங் கவனித்துச், செய்வது காலநேரம் நிலைக்கேற்றவாறு கடமையாகும்.

910. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்து கட்டின பாடாணம் மூன்று வராகன் எடை (10½ கிராம்), வட்டக் கிலுகிலுப்பைச் சாறு செல்லத்தக்க அளவு, எருக்கம்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—பாடாணத்தைப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்து உருண்டையாகச் செய்துக் காயவைத்து எருக்கம்பாலை அதில்விட்டுப் புரட்டிவரப் பிசின் போல் மேலே பிடித்துக் கொள்ளும். சுமார் ஒலைக் கனம் ஒட்டிக்கொண்ட பின்பு அகலில் வைத்து மேல்கல்மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி இருபத்து நான்கு பலம் (1272 கிராம்) வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :—½ முதல் 1 அரிசி எடை.

துணைமருந்து :—தேன், வெண்ணெய், நெய் ஆகியவைகளாம்.

தீரும்நோய் :—மகோதரம், சூலை, கிரந்தி ஆகியவை தீரும்.

911. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்து கட்டின பாடாணம் வராகன் எடை 2 (7 கிராம்) தூய்மைசெய்த இரசம் வராகன் எடை 2 (7 கிராம்), கருநாபி, லவங்கம், அரிசித் திப்பிலி, சாதிப் பத்திரி இவை வகை 1-க்கு வராகனெடை 2 (7 கிராம்), சாதிக்காய் வராகனெடை 1½ (5¼ கிராம்).

செய்முறை :—பழஞ்செங்கல் இரண்டை ஒன்றோடொன்றைத் தேய்த்துச் சந்தில்லாமல் பொருந்தும் படியாகச் செய்து ஒரு கல்லின் நடுவில் அரைஅங்குல ஆழமும் ஒரு அங்குல சதுரமுமுள்ள குழி தோண்டிச் சுத்தப் படுத்திக் கொள்ளவேண்டும். பாடாணத்தையும் இரசத்தையும் சேர்த்தரைத்து இரசம் சனிக்காமல் மடிந்துபோன பின்பு தனியே எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். மற்றச் சரக்குகளை எல்லாம் ஒன்றாகச் சேர்த்திடித்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற செங்கல் குழியில் போட்டுப் பரப்பி அதன் மீது பாடாணம் இரசம் ஆகியவைகளை அரைத்த தூளைப் போட்டு அதன் மீது மறுபாதி போட்டு மறுசெங்கல்லை வைத்துமூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பின் மீது வைத்து தீபாக்கினி கமலாக்கினியாக நான்கு சாமம் எரித்து ஆறவிட்டெடுக்கப் பற்பமாகி இருக்கும்.

அளவு :—அரை அரிசி எடை.

துணைமருந்து :—தேன், பாலேடு, வெண்ணெய் ஆகியவைகளாம்.

தீரும்நோய்:—இரைப்பிருமல், மேன் மூச்சு ஆகியவைகள் தீரும். எல்லாவகை வலுக்குறைவையும் நீக்கி உடல் வலிமையை விருத்தி செய்யும்.

912. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்த பாடாணம் பலம் 1 (35 கிராம்), எலுமிச்சம் பழச்சாறு தேவையான அளவு, ஊமத்தம் இலைச்சாறு தேவையான அளவு, முன்பரிசியை எரித்த சாம்பல் படி 2.

செய்முறை :—மேற்படி எலுமிச்சம்பழ சாற்றில் கட்டியைப் போட்டு ஐந்துநாள் ஊற வைக்க வேண்டும். ஆனால், கட்டியானது சாற்றில் ஒரு அங்குலம் ஆழ்ந்து கிடக்க வேண்டும். ஆறும் நாள் எடுத்து அதை நீக்கிவிட்டு ஊமத்தஞ்சாற்றில் மேற்கண்டவாறு ஐந்துநாள் ஊற வைக்கவேண்டும். பிறகு ஒரு படி சாம்பலை ஒரு மண் சிறுபானையில் போட்டமுத்தி அதன் மீது பக்குவப்படுத்தின பாடாணக் கட்டியை வைத்து மற்றொருபடி மேற்படி சாம்பலை அதன் மீது போட்டமுத்திப் பானை வாயை மூடிச் சீலைமண் செய்து அடுப்பின் மீதேற்றித் தீபாக்கினி கமலாகினியாக நான்கு சாமமெரித்து ஆற விட்டெடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய், ஆகியவைகள் மேற்சொன்னவைகளேயாம்.

9 3. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்த பாடாணம் பலம் 1 (35 கிராம்), இதனை மேற்கண்டபடி பக்குவப்படுத்தி நறுவிலிப்பட்டைச் சாம்பலில் வைத்து முன்போல் எரித்து எடுத்துக் கொள்ள பற்பமாயிருக்கும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் ஆகியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

914. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்த பாடாணம் வராகன் எடை மூன்று (10½ கிராம்), திறமான பிராந்தி 3பலம்.

செய்முறை :— பாடாணத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி பிராந்தியைச் சிறுகச்சிறுக வார்த்துப் பிராந்தியெல்லாம் சென்ற பின்பு சிறு வில்லையாகச் செய்து அகலில் வைத்து மேலகல் மூடி ஐந்து சீலைமண் செய்து பத்துப் பங்கெடை வறட்டியில் புடமிட்டாறினபின் எடுக்கப் பற்பமாயிருக்கும்.

அளவு :— ½ முதல் 1 அரிசி எடை.

துணைமருந்து :—வெண்ணெய், பாலேடு ஆகியவைகளாம்.

தீரும்நோய் :—கிரந்தி நோய்கள் ஏழுநாள் உபயோகிக்கத் தீரும். குட்டத்திற்கு இருபத்தோருநாள் உபயோகிக்கத் தீரும்.

915. பாடாண பற்பம் (வேறு)

யானைத்தந்தத்தூள், வெண் சந்தனத்தூள், கம்பி வெடியுப்புத் தூள், மாதுளம் பட்டைத் தூள் இவை வகை 1 க்கு 3 பலம் (105 கிராம்), சேராங்கொட்டை எண் 5, இவற்றுள் சேராங்கொட்டையை ஒரு சட்டியில் வைத்து மற்ற சரக்குகளையெல்லாம் ஒன்றுகச் சேர்த்து இடித்து அதன் மீது வைத்து அடுப்பேற்றி எரிக்க வேண்டும். இதிலிருந்து புகையெழும்பும். தன் உடல், முகம் ஆகியவைகளிற்படாமல் விழிப்பாகத். தூரத்தில் ஒதுங்கி இருக்க வேண்டும். எல்லாம் எரிந்து சாம்பலான பின்பு வைத்துக் கொள்ளவேண்டும். இந்தச் சாம்பலில் 3 வராகன் எடை (10½ கிராம்), பாடாணத்துக்கு 15 வராகன் எடை (52½ கிராம்), சாம்பல் போதுமானது இந்தக் கணக்கின் படி 6 வராகன் எடை (21 கிராம்), பாடாணமானல் 30 வராகன் எடை (45 கிராம்), சாம்பலை எடுத்துக் கொள்ளவேண்டும்.

மேற்கண்ட கணக்கின்படி தேவையான தூய்மை செய்த பாடாணத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். மேற்கண்ட கணக்கின் படி இதற்குத் தகுந்த சாம்பலையும் எடுத்து இதை இரண்டு பாக மாக்கி ஒரு பாகத்தை ஒரு அகலிலிட்டு அதன் மீது பாடாணத்தை வைத்து, அதன் மீது மறுபங்கு சாம்பலைப் போட்டு மேலகல் மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி அரைமுதல் ஒரு படி வரையில் உள்ள உமியில் புடமிட வேண்டும். பாடாணம் 3 வராகன் எடை (10½ கிராம்), ஆனல் அரைப்படி உமி போதுமானது. பாடாணம் ஆறு வராகன் எடையானல் (21 கிராம்), முக்காற்படி உமி போது மானது. இவ்விதம் பாடாணத்திற்குத் தகுந்தபடி கால்படி உமியை அதிகப்படுத்திக் கொள்ளவும். புடமெரிந்து ஆறினபின்பு எடுக்கப் பற்பமாகியிருக்கும்.

அளவு :—1 கசகசா எடை.

துணைமருந்து :—பாலேடு, வெண்ணெய், தேன், ஆகியவைகளாம்.

தீரும்நோய் :—இரைப்பிருமல், மந்தார காசம் ஆகியவைகள் தீரும்; உடற்சத்து, புணர்ச்சித்திறம், ஆகியவைகள் உண்டாகும்.

916. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்த பாடாணம் 3 வராகன் எடை (10½ கிராம்), எண்ணெய்ப் பசையுள்ள வெண்காரம் 6 வராகன் எடை (21கிராம்).

செய்முறை :—இவ்விரண்டையுங் கல்வத்திலிட்டு இரண்டுசாம (6 மணி)நேரமரைத்துப் புது ஓட்டில் வைத்து அடுப்பின் மீதேற்றிச் சிறு தீயாக எரித்து வரவும். அப்படி எரிக்கும் போது அதில் சிடு சிடுப்பும் புகையும் உண்டாகும். இந்தச் சிடுசிடுப்பும் புகையும் அடங்குகிற வரையில் எரிக்க வேண்டியது. அப்படி இவை அடங்கி விடுவதே அது பற்பமானதற்கு அறிகுறியாம். இதனை எடுத்துப் பொடித்துப் பளிங்குக் குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :—½ முதல் 1 அரிசி எடை.

துணைமருந்து :—பாலேடு, வெண்ணெய் ஆகியவைகளாம்.

தீரும்நோய் :—இணைவிழைச்சுச் சத்தி உண்டாகும். குடல் முறுக்குநோய், கீல் வாய்வு முதல் எல்லா வகை வாயுநோய்கள், இரணங்கள் ஆகியவை தீரும்.

917. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்த சங்குப்பாடாணம் 1 பலம் (35கிராம்), திறமானப் பூநீறு படி 2.

செய்முறை :—பூநீற்றை இடித்துத் தூள்செய்து இரண்டுபாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு பானையிற் போட்டமுத்தி அதன் மீது முன் பாடாணக் கட்டியை வைத்து அதன் மீது மறுபாதிப் பூநீற்றைப் போட்டமுத்திப் பானை வாயை மூடிச் சீலைமண் செய்து அடுப்பின் மீதேற்றி நான்கு சாமம் (12 மணி) எரிக்கப் பற்பமாய் இருக்கும்.

அளவு :—ஒரு கசகசா எடை முதல் அரை அரிசியெடை வரையில்.

துணைமருந்தும், தீரும்நோயும் :—ஆறு குன்றிமணி எடை, மூங்கிலுப்புத் தூள் ஆறு குன்றிமணி எடை, ஏலரிசித் தூள் இவ்விரண்டையுங் கலந்து மேற்படி பற்பத்தை அளவுப்படி மருந்துடன் சேர்த்துட்கொண்டு, பன்னிரண்டு பலம் (420 கிராம்) பாலைக் குடிக்க வேண்டும். அரை அல்லது ஒரு மணி நேரம் சென்றபின்பு பசியைப் போன்ற உணர்ச்சி உண்டானுல் காற்படி அல்லது காலே யரைக்கால் படி பாலைக் குடிக்க வேண்டும். அதிக அனலாகத் தெரிந்தால் கஸ்தூரிப் பிரம்புத் தீ நீர் வராகன் எடை 6 (21 கிராம்), தாழம்பூத் தீ நீர் வராகன் எடை 6 (21 கிராம்), சந்தன சர்பத் 3 பலம் (105 கிராம்), எல்லாவற்றிற்கும் சரிபங்கு எடை நீரைச் சேர்த்து குடிக்கச் செய்யவேண்டும். இவ்வாறு செய்வதனுல் எல்லாவகைச் சுரங்களும் தீரும்.

சீமைத் தண்ணீர் விட்டான் கிழங்குத் தூள் 1 வராகன் எடை (3½ கிராம்). இதில் மேற்படி பற்பத்தைக் கலந்துட்கொண்டு அதன் மீது காய்ச்சி கற்கண்டிட்ட பசுவின்பாலைச் செரித்தல் திறனுக்குத் தகுந்தபடி ஒன்றிரண்டு ஆழாக்குக் குடிக்கச் செய்ய வேண்டும் இவ்விதம் செய்வதால் தாதுச்செழிப்பு உண்டாகும்.

இன்னும் கப சம்பந்த நோய்கள், வாத நோய்கள் ஆகியவைகளுக்கு வெற்றிலையில் சேர்த்துக் கொடுக்கத் தீரும்.

இதனை இன்னும் அநேக நோய்களில் உபயோகிக்கலாம். ஆகையால் நேரத்திற்குத் தகுந்தாற்போல் தகுந்த துணைமருந்துகளில் உபயோகிக்க அந் நோய்கள் தீரும்.

918. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்த பாடாணம் 1 பலம் (35 கிராம்), கழுதை மூத்திரம் செல்லத்தக்க அளவு, எள்செடி சமூலத்தை எரித்த சாம்பல் 1 படி.

செய்முறை :—மேற்படி பாடாணத்தைக் கழுதை மூத்திரத்தில் மூன்று நாள் ஊறவைத்து எடுத்துக் கொள்ளவும். மேற்படி சாம்பலில் கழுதை மூத்திரம் புதிதாகவிட்டுப் பிசைந்து இரண்டு அடையாகச் செய்து, ஒரு அடையின் நடுவில் முன்சுத்தப்படுத்தின பாடாணக் கட்டியை வைத்து, மறு அடையால் மூடிச் சமமாக அழுத்தி ஒரு மண் தாலத்தில் வைத்து, மறு மண் தாலத்தால் மூடி ஏழு சீலை மண் செய்துலர்த்தி 50 பலம் (1750 கிராம்), வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கப் பற்பமாக இருக்கும்.

அளவு :—½ முதல் 1 அரிசி எடை.

துணைமருந்து :—பாலேடு, வெண்ணெய், தேன் ஆகியவை களாம்.

தீரும்நோய்கள் :—கிரந்தி நோய்கள், வாயு நோய்கள், முறைச் சுரங்கள், சுரங்கள் ஆகியவை தீரும்.

919. பாடாணக் கட்டுப் பற்பம் (வேறு)

பாடாணம் 1 பலம் (35 கிராம்), இதனை ஒரு துணியில் முடிந்து கொள்ளவும். ஒரு பெரிய பானையில் ஒரு படி சிறு நீரைவிட்டு, அதில் வெந்த சுண்ணும்புக் கல்லைப்போட்டு, அதில் முன்முடிந்து வைத்திருக்கின்ற பாடாண முடிச்சையும் போட்டு, அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து மூத்திரம் சுண்டின பின்பு முடிச்சை எடுத்து வெந்நீர் வார்த்துக் கழுவி வைத்துக் கொள்ளவும்.

நாயுருவிச் சாம்பல் 2 படி, இரண்டு படி கொள்ளும் படியான மண்பானையின் அடியில் நாலங்குலச் சாம்பலைப் பரப்பி, முன் தூய்மை செய்த பாடாணத்தை அதனடுவில் வைத்து, மீதிச் சாம்பலைப் பானைவாய் மட்டம் போட்டுப் பானை வாயை மண் தாலத்தால் மூடி மூன்று சீலை செய்துலர்த்தி விரல் கனமுள்ள மூன்று விறகால் நான்கு சாம (12 மணி)நேரம் எரித்து, ஆறவிட்டு எடுக்கப் பாடாணம் பற்பமாகிக் கட்டியாகவேயிருக்கும். இதனைப் பொடித்து உபயோகிக்க வேண்டும்.

அளவு :—1 முதல் 2 கசகசா எடை.

துணைமருந்து :—பாலேடு, வெண்ணெய், தேன் ஆகியவை களாம்.

தீரும்நோய்கள் :—எல்லாவகை மேக நோய்களும் தீரும்.

920. பாடாண பற்பம் (வேறு)

பாடாணம் 1 பலம் (35 கிராம்), இதனை வண்ணான் வெள்ளாவியில் ஐந்து தரம் வைத்துத் தூய்மை செய்து கொள்ளவேண்டியது. அல்லது உழ மண்ணைக் கரைத்து, அதில் துலாந்திரமாகக் கட்டி மூன்றுதரம் மடக்கி மடக்கி எரித்துத் தூய்மை செய்து கொள்ள வேண்டியது. அல்லது, முன் சொல்லியிருக்கின்ற தூய்மை வகைகளில் விருப்பமான ஒரு வகையாகவுஞ் செய்துகொள்ளலாம்.

தூய்மை செய்த பாடாணக்கட்டி 1 பலம் (35 கிராம்), இதனை மண் தோசைக் கல்லினடுவில் வைத்து, அதன் மீது மண் கலயத்தால் மூடிச் சாணத்தால் சந்துபந்தனஞ் செய்து, ஓலையால் அல்லது

இலந்தை விறகால் தீயெரிக்க வேண்டும். காற்படி பிரம தண்டின் சாற்றை ஒரு பாத்திரத்தில் வைத்துக் கொண்டு, துணித் துண்டால் நனைத்து, மேற்படி கல்யத்தின் மீது சுண்டச் சுண்டப் பூசி வர வேண்டும். சாறெல்லாம் சுண்டின பின்பு தீயை நிறுத்திவிடவும். இந்தச் சாறு சுண்டச் சுமார் நான்கு சாமம் (12 மணி நேரம்) செல்லும். குளிர ஆறின பின்பு எடுக்கக் கட்டிமலர்ந்து பற்பமாயிருக்கும்.

அளவு :—½ அரிசி எடை.

துணைமருந்து :—பாலேடு, வெண்ணெய் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள்:—சுரநோய்கள், மேக நோய்கள் ஆகியவைகள் தீரும்.

921. பாடாண பற்பம் (வேறு)

தூய்மை செய்த பாடாணம் 1 பலம் (35 கிராம்), பேரண்டத்தைப் புடம் போட்டுப் பொடித்தத் தூள் 3 பலம் (105 கிராம்), வெள்ளெருக்கம் பால் 3 பலம் (105 கிராம்).

செய்முறை :—பேரண்டத் தூளைக் கல்வத்திலிட்டு எருக்கம் பாலைச் சிறுகவிட்டு வெண்ணெய் போலரைத்து, மேற்படி கட்டிக்குக் கவசஞ் செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி மூன்று சீலை மண் செய்துலர்த்தி, 30 பலம் (1050 கிராம்), வறட்டியில் புடமிட்டு அகலைப் பிரித்து உள்ளிருக்கின்ற பேரண்டக் கவசத்தைப் பிரித்துத் தனியே வைத்துக் கொள்ளவும். பாடாண பற்பத்தைத் தனியே வைத்துக் கொள்ளவும்.

அளவு :—½ அரிசி எடை.

துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்டவைகளேயாம்.

குறிப்பு: மேற்படி பேரண்டக் கவசத்தைப் பொடித்து நல்லெண்ணெயிற் குழைத்துப் படர்தாமரையின் மீது பூசிவர அது உதிர்ந்து போகும்.

922. பாடாணப் பதங்கம்

பாடாணம் 1 பலம் (35 கிராம்), இதனைச் சுமார் கடலை அளவு துண்டுகள் செய்து உரத்த சீலைத் துண்டில் தளர முடிந்து வைத்துக் கொள்ளவேண்டும். ஒரு குறுகிய மண் பாண்டத்தில் ஏாகலிலைச் சாறு ½ படியை, அதன் உதடுவரையில் இருக்கும் படியாகவிட்டு

அதில், ஒரு பலம் மிளகுத் தூளைப் போட்டுக் கரைத்து, முன் சித்தப் படுத்தி வைத்திருக்கின்ற முடிச்சைக் கீழ்க் கட்டித் தொங்கவிட வேண்டும். இந்த முடிச்சானது பானையின் அடியிற்படாமல் இரண்டொரு அங்குலம் உயரமாகத் தொங்கவேண்டியது. பின்பு மீதேற்றிச் சிறுதீயாக எரித்துச் சாறெல்லாம் சுண்டினபின்பு, ஆற விட்டு முடிச்சை அவிழ்த்து வெந்நீரில் கழுவி, ஈரமுலர வைத்து எடுத்து வைத்துக் கொள்ளத் தூய்மையாம்.

இரண்டு கலயத்தை வாய்ப்பொருந்தும் படியாகத் தேய்த்துச் சித்தப் படுத்திக் கொள்ளவேண்டும். மேற்கலயத்தின் உட்பாகம் முழுவதிலும் காற்படிப் பசுவின் பாலைச் சிறுகச்சிறுகப் பூசிச் சுவறச் சுவறக் காயவைத்துச் சித்தப்படுத்திக் கொள்ளவேண்டும். பிறகு, கீழ்க்கலயத்தில் முன் சித்தப்படுத்தின பாடாணத் துண்டுகளைப் பரவலாகப் பரப்பி, அதற்குச் சமமாக இருக்கும்படி எருக்கம்பாலை விட்டு, முன் சித்தப்படுத்தின மேற்கலயத்தை மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பின் மீதேற்றி மெதுவாக எரிக்கவேண்டும். கலயத்தினடி வெளுத்துப் போனால், அதுவே பதமென எரிப்பை நிறுத்தி மெதுவாக இறக்கித் தூரமாகப் படுத்தாட்டி வைக்க வேண்டும். குளிர ஆறின பின்புக் கவசத்தைப் பிரித்துப் பதங்கத்தைச் சுரண்டி பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—½ முதல் 1 அரிசி எடை.

துணைமருந்து :— தேன், இஞ்சிச் சாறு, தயிர், மோர், ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :—மாறல் சுரங்கள், முறைச்சுரங்கள், சுரங்கள், சூலைநோய், வாயுநோய் ஆகியவைகள் தீரும்.

923. பாடாண செந்தூரம்

தூய்மை செய்த வெள்ளைப் பாடாணம் 1 பலம் (35 கிராம்), ஐந்தாங் காய்ச்சல் வெடியுப்பு 1 பலம் (35 கிராம்).

செய்முறை :—மேற்படி இரண்டையுந் தூள் செய்து, ஏழு சீலைமண் செய்துலர்த்திக் காசிக்குப்பியில் போட்டு, வாய்க்கு மாக் கல்லடைத்துச் சீலைமண் செய்து உலர்த்தி எடுத்துக் கொண்டு, ஒரு வட்டோட்டில் நாலங்குலம் மணலிட்டு நடுவில் மேற்படிக் குப்பியை வைத்து, அக்குப்பிக்கு அரைவாசி மட்டம் மணலிட்டு உலையில் ஓடு சிவக்குவரை ஊதியெடுத்து மேற்படி மருந்தைக் பொடித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு பொடித்ததை முன் போல் வேறு காசிக்குப்பியிலிட்டு ஊதியெடுக்கச் செந்தூரமாம்.

அளவு :—½ முதல் 1 அரிசி எடை.

துணைமருந்து :—இஞ்சிச் சாறு, தேன், சுக்குக் குடிநீர் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :—எல்லாவகை முறை, சுரங்கள், சுரங்கள், சன்னிகள், வாயு நோய்கள் ஆகியவை தீரும்.

924. பாடாண சூத செந்தூரம்

தூய்மை செய்த பாடாணம் 2 வராகன் எடை; (7 கிராம்) தூய்மை செய்த இரசச் செந்தூரம் 2 வராகன் எடை (7 கிராம்) கற்பூரவல்லி இலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—மேற்படி இரண்டு சரக்கையுங் கல்வத்திலிட்டுப் பொடித்து, இரசம் மடிந்த பின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து 2 சாம மரைத்துப் வில்லை செய்து சிறு அகலிலிட்டு மேலகல் மூடி மூன்று சீலை மண் செய்துலர்த்திச் சமமான பூமியில் நாலங்குல ஆழமும், ஒரு சாண் சதுரமுமுள்ளக் குழி தோண்டி அதில் ஒரு அங்குலம் மணல் பரப்பி, அதன் மீது முன் சித்தப் படுத்தின கவசத்தை வைத்துக் குழிநிறைய மணலைப் பரப்பி, அதன் மீது இருபத்தைந்து பலம் (875 கிராம்) வறட்டியை அடுக்கி நெருப்பிட்டு, நன்ருகக் குளிர ஆறின பின்பு கவசத்தைப் பிரித்தால் செந்தூரமாகி இருக்கும். அப்படியாகா திருந்தால் அதிலிருக்கின்ற மருந்திற்குச் சம எடை இரசத்தைச் சேர்த்து முன் போல அரைத்து முன்போற் புடமிடச் செந்தூரமாகி விடும்.

அளவு :—½ முதல் 1 அரிசி எடை.

துணைமருந்து :—இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர், வெல்லம், இளகங்கள் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :— தாது இழப்பு தீரும்; நரம்புகள் வலுப்படும்; சுரங்கள், முறைச் சுரங்கள், வாத நோய்கள், சூலை நோய்கள் ஆகியவை தீரும்.

925. பஞ்ச பாடாண செந்தூரம்

தூய்மை செய்த பாடாணம், தூய்மை செய்த இலிங்கம், தூய்மை செய்த மனோசிலை, தூய்மை செய்த கெந்தகம், தூய்மை செய்த இரசக்கற்பூரம் இவை வகை 1-க்கு 1 பலம் (35 கிராம்). வெற்றிலைச் சாறு பருத்தியிலைச் சாறு, வெள்ளறுகு 1 (35 கிராம்), சமூலச்சாறு, துளசி சமூலச்சாறு, வேலிப்பருத்தி சமூலச்சாறு, பொடுதலை சமூலச்சாறு இவை வகை 1-க்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—மேற்படி ஐந்து சரக்குகளையுந் தனித்தனி *அஞ்சனம் போல் பொடித்தும் பிறகு எல்லாவற்றையும் ஒன்றுகக் கலந்து மறுபடியும் ஒரு சாம (3 மணி) நேரமரைத்து மேற்படி முறையே ஒவ்வொன்றுகச் சிறுகச் சிறுகவிட்டு நந்நான்கு சாம மரைத்து ஒரே வில்லையாகச் செய்து நான்குநாள் வெய்யிலில் உலர்த்தி இரண்டு சட்டியை வாய் பொருந்தத் தேய்த்துக் கீழ்ச் சட்டியில் வெற்றிலையைப் பரப்பி அதன்மீது மேற்படி வில்லையை வைத்து மேலும் வெற்றிலையைப் போட்டு மூடி மேற் சட்டி மூடி ஏழு சீலை மண் செய்துலர்த்தி அடுப்பின் மீதேற்றித் தீபாக்கினியாக நான்கு சாம நேரம் (12 மணி) எரித்துக் குளிர ஆறின பின்புக் கவசத்தைப் பிரித்து மேற்சட்டியிலிருப்பதை சுரண்டி யெடுத்துக் கொள்ளவும். இது சிவந்து செந்தூரமாகி இருக்கும்.

அளவு :—1 முதல் 2 அரிசி எடை.

துணைமருந்து:—தேன், இஞ்சிச்சாறு, நெய், விளக்கெண்ணெய், இளகங்கள் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள்:—சன்னி, சுரம், வெண்குட்டம், சூலை, வாயு, வாதம், மேகம், குன்மம், பெருங்கழிச்சல், கை கால் முடக்கு, பிளவை, கண்டமாலை, அரிகரப்பான், பெருநோய், தேமல், வண்டு கடி, கழல்வாதம், அண்டவாதம், குழிவாதம், வலிப்பு, கன்னப் புற்று, கபாலகுட்டம், பவுத்திரம், மூளை மூலம், மேகரணங்கள், முடிச்சுநோய், அரையாப்பு, கபாலசூலை முதலியவை தீரும்.

குறிப்பு :—இது சிலசமயம் வெண்ணிறமான பதங்கமாகவும் இருக்கும். வண்ணம் எப்படியிருந்த போதிலும் குணம் செய்வதில் சந்தேகமில்லை.

926 பாடாண மெழுகு

பாடாணம் $1\frac{1}{2}$பலம் ($52\frac{1}{2}$கிராம்), பசுவின் பால் படி 3 பருத்திக் கொட்டை 9 பலம் (315 கிராம்), ஆமணக்குக்கொட்டை 9 பலம் (315 கிராம்), நல்லெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—ஈயம்பூசினப் பாத்திரத்தில் பாலைவிட்டுப் பாடாணக் கட்டியை அதிற்போட்டு அடுப்பின் மீதேற்றிப் பாலைத் துழாவிக் கொண்டிருக்கவேண்டும். பால்சுண்டிக் கெட்டியானவுடன் பாடா ணக் கட்டியை எடுத்து மெல்லிய துணியினுல் துடைத்து தூய்மை செய்துகொள்ள வேண்டும். கெட்டியான பால்கட்டியை பூமியில்

* அஞ்சனம் — கண் மை

புதைத்து விடவேண்டும். இது நஞ்சின் இயல்புடையதாகையால் ஒருவரும் சாப்பிடாமல் விழிப்பாகப் புதைத்துவிட வேண்டியது.

மேற்கண்ட இரண்டு கொட்டைகளையும் இடித்துத் தூளாக்கி ஒரு துணியில் வைத்துப் பரப்பி மேற்படி கட்டியை நடுவில் வைத்துப் பந்தைப்போல் சுருட்டி ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஆறு பங்கெடை குதிரை லத்தியிற் புடமிடவேண்டும். புடம் குளிர ஆறினபின்பு கட்டியை எடுத்து முன்போல் ஒன்பது பலம் (315 கிராம்) பருத்திக்கொட்டையையும், ஒன்பது பலம் (315 கிராம்), ஆமணக்குக்கொட்டையையும் சேர்த்திடித்து முன்போல் துணியில் வைத்துப் பந்தைபோல் சுருட்டி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி முன்போல் ஆறு பங்கெடை குதிரை லத்தியில் புடமிட்டு எடுத்துக் கொள்ளவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்து தடவைகள் செய்துக் கொள்ள வேண்டியது. ஒவ்வொரு தடவையும் பருத்திக் கொட்டையையும் ஆமணக்குக் கொட்டையையும் மேற்கண்ட அளவே சேர்த்துக் கொள்ள வேண்டியது. பிறகு கட்டியை எடுத்து இந்தக்கட்டி அமிழ்ந்து கிடக்கும்படியாக ஒரு மண்பாத்திரத்தில் நல்லெண்ணெய் விட்டுக் கட்டியைப்போட்டு அடுப்பேற்றித் தீயை மெதுவாயெரித்து வரவேண்டியது. ஒரு சாமம் சென்றபின்பு கட்டியை ஊசியால் குத்திப் பார்த்துக் கொண்டுவர வேண்டியது. கட்டியில் ஊசி ஊடுருவிச் சென்றால் கட்டி மெதுவாகி விட்டதென இறக்கி எடுத்துக் கொள்ள வேண்டியது.

அளவு:—1 முதல் 2 கசகசா எடை.

துணைமருந்து :—இஞ்சிச்சாறு, தேன், வெல்லம், சர்க்கரை ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள்:—சுரம், சன்னி, மாறல்சுரம், முறைச்சுரம் ஆகியவைகள் தீரும்.

927 பாடாண மெழுகு (வேறு)

முன்னே கட்டுவகைகளில் கூறி இருக்கின்றபடிப் பூநீற்றில் கட்டின பாடாணத்தை ஒரு துணித் துண்டில் தளரமுடிந்து ஒரு கயிற்றில் கட்டிக்கொள்ள வேண்டும். ஒரு மண் பானையில் சுமார் ஒருபடி ஒன்றேகால்படி சோற்றுக்கற்றாழைச் சாற்றை விட்டு மண் தாலத்தின் நடுவில் ஐந்தாறு சன்னத்துவாரங்கள் செய்து முன் சித்தம்படுத்தின முடிச்சைச் சோற்றுக் கற்றாழைச் சாற்றின் நடுவில் தொங்கவிட்டு அந்த முடிச்சுக் கயிற்றின் நுனியை மண் தாலத்தின் நடுவிலுள்ள துவாரத்தின் உட்பக்கத்திலிருந்து மேற்பக்கம் வாங்கி ஒரு சிறு குச்சியில் முடிந்து விடவேண்டும். பொட்டலமானது

பானையின் அடியிற்படாமல் தொங்கவிடவேண்டும். இந்தத் தாலத்தால் மூடிச் சந்தில்லாமல் ஏழு சீலைமண் செய்து அடுப்பின் மீதேற்றித் தீபாக்கினியாக எரித்து வரவேண்டியது. இந்தத் துவாரங்களின் மூலமாக புகை வந்து கொண்டிருக்கும். புகை நின்றுவிட்டால் எரிப்பை நிறுத்திக் குளிர ஆறினபின்பு, கட்டியை எடுத்தால் அது மிருதுவாகி மெழுகைப் போலிருக்கும். இதனைப் பீங்கான் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— ஒரு கசகசாமுதல் இரண்டு கசகசா வரையில்.

துணைமருந்து:—தேன், இஞ்சிச்சாறு, இளகம் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள்:—முறைசுரங்கள், மாறல்சுரங்கள், சூலைநோய், வாயுநோய் ஆகியவைகள் தீரும்.

குறிப்பு:—இது நெருப்புக்கு ஓடாமல் இருக்கின்றபடியால் பிரியமானவர்கள் இரசவாத முறைகளில் உபயோகித்துப் பார்க்கலாம்.

928. பாடாண பற்பம்

பாடாணம் 1 பலம் (35 கிராம்). இதனை ஒரு சீலைத்துண்டில் கட்டி ஒருபடி பசுவின் பாலில் கிழிக்கட்டித் தொங்கவிட்டுப் பால் சுண்டினவுடன் எடுத்து, அதிலுள்ள அழுக்குகளை நீக்கி, மறு துணித்துண்டில் முடிந்து முன்போல் ஒருபடி பசுவின் பாலில் கிழிக் கட்டித் தொங்கவிட்டு முன்போல் எரித்துக்கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பசுவின் பாலில் ஐந்து தடவையும், சிறுகீரைச்சாற்றில் ஒரு தடவையும், பொன்னுங்காணிச் சாற்றில் ஒரு தடவையும், முன்போல் கிழிக்கட்டித் தொங்கவிட்டு எரித்து எடுத்துக்கொள்ள நல்ல தூய்மையாம்.

மேற்படி தூய்மைசெய்த பாடாணம் பலம் $\frac{1}{2}$ ($17\frac{1}{2}$ கிராம்), காய்ச்சுக்கட்டி $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் தனித்தனிக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பிறகு இரண்டையும் சேர்த்துத் தண்ணீரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரம் அரைத்துச் சிறு உளுந்து அளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப் பளிங்குக் குப்பியில் பததிரப்படுத்தவும்.

அளவு :—$\frac{1}{2}$ முதல் 1 மாத்திரை.

துணைமருந்து :—தேன், இஞ்சிச்சாறு, சுக்கு ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :— மேகசூலை, மேகவாயு, முடிச்சுவகை, சூலை வகை பதினெட்டும் தீரும். எப்பேர்ப்பட்ட சூலையும் தீரும்.

929. பாடாண பற்பம் (வேறு)

பாடாணம் 1 பலம் (35 கிராம்), கொம்புப்பாகற்காய் 1, சிலா சத்து 1 பலம் (35 கிராம்).

செய்முறை :— கொம்புப்பாகற்காயை நடுவிற் பிளந்து அதற்குள் பாடாணத்தைச் செலுத்தி நூலினுல் கட்டி அதன் மீது ஒரு சீலைமண் செய்து குறட்டினுல் பிடித்துக் கொண்டு கரி நெருப்பில் புரட்டிப் புரட்டி வாட்ட வேண்டும். பாகற்காயானது கருகினபதத்தில் நிறுத்திக் குளிர ஆறின பின்பு, கட்டியை எடுத்துப் பொடித்துக் கொள்ளவும்.

சிலாசத்தைப் பொடித்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு சிறியசட்டியின் நடுவில் வைத்துப் பரப்பி அதன் மீது மறுபாதிச் சிலாசத்துத் தூளைக் கொட்டி மேற்சட்டி மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி ஐம்பது பலம் (1750 கிராம்) எருவில் புடமிட்டு ஆறின பின் இரண்டையும் எடுத்து மிளகுக்குடிநீரைச் சிறுகச்சிறுக விட்டு ஒரு சாம (3 மணி) நேரமரைத்துச் சிறு பயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

அளவு :— ½ முதல் 1 மாத்திரை.

துணைமருந்து :— இஞ்சிச் சாறு, தேன், மிளகுக்குடிநீர் ஆகிய வைகளாம்.

தீரும்நோய்கள் :— எல்லா வகை சுரம், புண், முடிச்சு நோய் ஆகியவைகள் தீரும்.

930. கௌரி மாத்திரை

கௌரி தேவையான அளவு. இதனைச் சிறு துண்டுகளாகச் செய்து முலைப்பாலில் ஊறவைக்க வேண்டும். இருபத்து நான்கு மணிநேரம் சென்ற பின்பு, அந்தப் பாலை இறுத்துவிட்டு மறுபடியும் முன்போல் முலைப்பாலை விடவேண்டும். இருபத்துநான்கு மணி நேரம் சென்ற பின்பு இதனையும் இறுத்துவிடவேண்டும். இவ்விதம் இருபத்து நான்கு மணிக்கொரு தடவை புதிய பாலை விடவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் செய்யின் கௌரி தூய்மையாம்.

இவ்விதமே லிங்கத்தையும் முலைப்பாலில் ஏழு தடவை ஊற வைத்துத் தூய்மை செய்துக் கொள்ளவேண்டும்.

மேற்படி தூய்மைசெய்த கௌரி 10 வராகன் எடை (35 கிராம்), மேற்படி தூய்மை செய்த லிங்கம் 6 வராகன் எடை (21 கிராம்), இவ்விரண்டையும் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து, மறுநாள் முலைப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்துக் கேழ்வரகு அளவுள்ள மாத்திரைகள் செய்து, நிழலில் உலர்த்தி பளிங்குக்குப்பியில் வைத்துக் கொள்க.

அளவு :—1 முதல் 2 மாத்திரை.

துணைமருந்து :—இஞ்சிச்சாறு, தேன், முலைப்பால், எலுமிச்சம் பழச்சாறு ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :—மலைச்சுரம், கடப்பைச்சுரம், முறைச்சுரம் முதலிய எல்லா சுரங்களும் தீரும்.

குறிப்பு :—இந்த மாத்திரையை மூன்று நாளைக்கு உபயோகித்து நாலாம் நாள் அவுரி வேர், மிளகு, சிறுகீரை வேர் ஆகியவற்றைக் குடிநீர் செய்து இரண்டு மூன்று நாள் சாப்பிடவும்.

931. சுர ராசாங்கம்

மிளகுத் தூள் 8 பங்கு, தூய்மை செய்த லிங்கம் 8 பங்கு, தூய்மை செய்த பாடாணம் அல்லது பாடாணப் பதங்கம் 1 பங்கு.

செய்முறை :—மேற்கண்டவற்றை முலைப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரமரைத்துச் சிறு பயறளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்க.

அளவு :—½ முதல் 1 மாத்திரை.

துணைமருந்து :—இஞ்சிச்சாறு, தேன், முலைப்பால், எலுமிச்சம் பழச்சாறு ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :— எல்லாவகை சுரங்களும் தீரும். முக்கியமாய் வாதசுரம், குளிர்சுரம், சன்னி ஆகியவை தீரும்.

932. பாடாண மெழுகு

தூய்மை செய்த பாடாணம் 10 வராகன் எடை (35 கிராம்), தூய்மை செய்த இரசகற்பூரம் 4 வராகன் எடை (14 கிராம்),

குங்குமப்பூ 2 வராகன் எடை (7 கிராம்), பனங்கற்கண்டு 2 பலம் (70 கிராம்), கருங்கொள் இலைச்சாறு அல்லது சங்கங்குப்பிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—முன்னர் எல்லாவற்றையும் தனித் தனியாகப் பொடித்துப் பிறகு எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்தரைத்து, மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாமநேரமரைத்து, மெழுகுப் பதத்தில் வழித்துப் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :—$\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து :—சர்க்கரை, இஞ்சிச்சாறு, வெண்ணெய் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :—கள்ளிப்பூக்கிரந்தி, கண்டமாலை, புண்கள், கிரந்தி பதினெட்டு ஆகியவைகள் தீரும்.

933. பாடாண மேற்பூச்சு மாத்திரை

தூய்மை செய்த பாடாணம் 2 பலம் (70 கிராம்), கற்களடு நீக்கின கற்சுண்ணும்பு 5 பலம் (175 கிராம்), காசுக்கட்டித்தூள் 5 பலம் (175 கிராம்), இஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—சுண்ணும்பில் நீரைவிட்டு வெண்ணெய் போலானபின்பு, வழித்து மேற்படி பாடாணக் கட்டியின்மேல் எங்கும் சமமாகப் பூசி உலர்த்தி அவிபுடம் போட்டெடுத்துப் பொடித்துக் கொள்ளவும். இந்தத் தூளையும் காசுக்கட்டித் தூளையும் சேர்த்துக் கல்வத்திலிட்டு இஞ்சிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்துச் சுண்டைக்காய் அளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

தீரும்நோய்கள் :—இதில் ஒன்றிரண்டு மாத்திரைகளை நீரில் இழைத்து அழிரணம் முதலியவற்றிற்கு மேலே தடவித் துணி போட்டுக் கட்டிவைக்க நச்சுநீர் வடிந்து புண் அசடு நீங்கி விடும். பின்பு பிளாஸ்திரி போட்டால் ஆறிவிடும்.

934. பாடாண குலாந்தகன்

பாடாணம் 2 வராகன் (7 கிராம்) எடை, பொன்னுங்காணிச்சாறு $\frac{1}{4}$ படி. பாடாணத்தை ஒரு துணியில் கிழிக்கட்டி, மேற்படி சாற்றை ஒரு சிறு கலயத்தில் விட்டு மேற்படி முடிச்சை அதில் தொங்க விட்டு, அடுப்பேற்றி எரித்துக் கட்டியைக் கழுவி எடுத்துக்கொள்ள

வேண்டும். மறுபடியும் முன்போல் மேற்படி சாற்றில் கிழிக்கட்டிச் சாறுசுண்ட எரித்தெடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதமே இன்னும் மடக்கி மடக்கி மூன்று தடவை செய்து கொள்ளவும். ஆகக்கூடிய ஐந்து தடவையும் செய்தால் பாடாணம் தூய்மையாம். மேற்கண்டபடி தூய்மை செய்த பாடாணம் 1 வராகன் எடை.

மேற்கண்டவாறே தூய்மை செய்த கௌரி 1 வராகன் எடை (3½ கிராம்).

மேற்கண்டவாறே தூய்மை செய்த லிங்கம் 1 வராகன் எடை (3½ கிராம்).

மேற்கண்டவாறே தூய்மை செய்த காந்தம் 1 வராகன் எடை (3½ கிராம்).

கீழ்க்கண்டபடி தூய்மை செய்த இரசம் 1 வராகன் எடை (3½ கிராம்).

செய்முறை:—இரசத்தையும் பாடாணத்தையும் சேர்த்தரைத்து இரசம் மடிந்தபின்பு, மற்ற சரக்குகளையும் சேர்த்துப் பொன்னுங் காணிச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாம நேரம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஒரு சீலைத்துண்டைக் கையாந்த கரைச்சாற்றில் நனைத்து முன்சித்தப்படுத்தின வில்லையின் மீது சுற்றி ஒன்றரைப்படி கொள்ளும்படியான ஒரு சட்டியில் அரைப்படி உப்பைக் கொட்டி அதன்மீது முன் கவசத்தை வைத்து, அதன் மீது ஒருபடி உப்பைக் கொட்டி மேற்சட்டி மூடிச் சீலைமண் செய்து காய்ந்த பின்பு, அடுப்பேற்றி 2 சாமம் எரித்துக் குளிர ஆறின பின்பு, மருந்தைத் தனியே எடுத்துக்கொள்ளவும். உப்பையும் தனியே எடுத்துப் பொடித்து வைத்துக்கொள்ளவும்.

அளவு :—மருந்தாயிருந்தால் ½ முதல் 1 வரை அரிசியெடை, உப்பாயிருந்தால் 3 முதல் 4 குன்றிமணியெடை.

துணைமருந்து :—தேன், இஞ்சிச்சாறு, மோர், வெண்ணெய் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :—கிரந்தி, குழிவாழை, வாய்வுச்சூலை, வெடி சூலை, புண், விப்புருதி, கண்டமாலை, கரப்பான், சிரங்கு, அணைத் துறுப்புவாதம் ஆகியவை தீரும்.

இதில் சேர்க்கவேண்டிய இரசத் தூய்மையாவது

தேவையான இரசத்தைக் கல்வத்திற்போட்டு அது முழுகும் படியாகப் பொன்னுங்காணிச் சாற்றை விட்டு அரைக்கவேண்டியது. சாறுனது காய்ந்து போய்விட்டால் அதனை வாயால் அல்லது ஊது

குழாயால் ஊதி நீக்கிவிட்டு முன்போல் பொன்னாங்காணிச் சாற்றை விட்டு அரைக்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி இருபத் தொருதடவை செய்தால் தூய்மையாம். இவ்விதம் தூய்மை செய்த இரசத்தையே மேற்கண்ட முறையில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

935. பாடாண எண்ணெய்

தூய்மை செய்த பாடாணம் 3 வராகன் எடை (10½ கிராம்), கோழிமுட்டை மஞ்சட்கரு 1½ பலம் (52½ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து ஒருசாம நேரமரைத்து ஒரு சட்டியில் வைத்து அடுப்பேற்றி எரித்து வந்து நீர் சுண்டி எண்ணெய் கக்கும் பக்குவத்தில் சட்டியைக் கொஞ்சம் சாய்த்து வைத்தால் எண்ணெயெல்லாம் சட்டியின் கீழே வந்துவிடும். அதனை வழித்து வேறே பளிங்கு குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

தீரும்நோய்கள் :—இதனை மேலுக்குப் பூசுவதினால் நாட்பட்ட மேகவாயு, கீல்வாயு, எலும்புக்குள் நோகிற வாயு ஆகியவைகள் தீரும்.

936. பாடாண எண்ணெய் (வேறு)

கட்டின பாடாணத்தைப் பீங்கானில் வைத்துப் பனியில் வைத்துவர அது தானே எண்ணெயாகி விடும்.

தீரும்நோய்கள் :— இதனை மேலுக்குப் பூசுவதினால் மேற்கண்ட நோய்கள் தீரும். இதனை நல்லெண்ணெய் (ஆலிவ் ஆயில்) ஜய்த் தூண் எண்ணெய் ஆகியவைகளிலும் கலந்து பூசலாம்.

937. பாடாண எண்ணெய் (வேறு)

தூய்மை செய்த பாடாணக் கட்டி 1 பலம் (35 கிராம்), இதனை ஒரு சிறு இரும்புச் சட்டியில் வைத்துச் சிறு தீயாக எரித்துப் பூ நீற்றுத் தெளிவைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்குக் கொடுத்துக் கொண்டு வந்தால் அது இளகி மெழுகாகிப் போம். இந்த மெழுகை முன்போல் பனியில் வைத்துவர எண்ணெயாகிவிடும்.

தீரும்நோய்கள் :—இதனை மேற்பூசி வருவதினால் மேற்கண்ட நோய்கள் தீரும்.

938. பாடாண எண்ணெய் (வேறு)

மேற் சொல்லியிருக்கிற பூநீற்றுத் தெளிநீருக்குப் பதிலாகக் கண்டங்கத்திரிச் சாம்பலின் தெளிநீரை உபயோகிப்பதனாலும்

மெழுகாகிப்போம். இதனைப் பனியில் வைத்து வருவதனால் எண்ணெயாகிவிடும்.

தீரும்நோய்கள் :—மேற்பூசிவர மேற்கண்ட நோய்கள் தீரும்.

939. பாடாணப் பிரயோகம் குட்டத்துக்கு

வெள்ளைப் பாடாணம் 1 பலம் (35 கிராம்), (இது கட்டியாயிருக்க வேண்டும்). கற்சுண்ணம் 1 படி, இந்தக் கற்சுண்ணத்தை ஐந்து பங்கு செய்துகொண்டு ஒரு பங்கை இரண்டாக்கி அவ்விரண்டு பங்கில் ஒரு பங்கைக் கீழே போட்டு, மேற்படி பாடாணக் கட்டியை மேலே வைத்து அதன்மேல் நன்ருகக் குமிழியெழுந்து கொதிக்கின்ற வெந்நீரை ஊற்றி, ஆறினபின் பாடாணக் கட்டியை எடுத்துக் கொள்ளவும். இப்படியே மற்ற நான்குபாகச் சுண்ணும்பிலும் செய்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

பின்பு, ஒரு சேர் அப்பளக்காரத்தை ஒரு படி சிறுநீர் விட்டுக் கரைத்து, ஒரு பானையில் விட்டு அதன்மேல் மேற்படி பாடாணக் கட்டியை துலாந்தரமாகக் கட்டி அதில் கட்டி அமிழும்படி தொங்க விட்டு, மேற்படி நீர் சுண்டக் காய்ச்சி ஆறவிட்டு எடுத்துக்கழுவித் துடைத்து வைத்துக்கொள்ளவும். இவ்வாறு செய்யின் நல்ல தூய்மையாம்.

T. 6895

இந்தப்படி தூய்மை செய்த பாடாணக்கட்டி ஒருபங்கும், மிளகுத்தூள் பன்னிரண்டு பங்கும் சேர்த்து நன்ருக அரைத்தெடுத்துப் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும்.

அளவு :—1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :—வெண்ணெய், நெய், ஆகியவைகளாம் இவற்றில் சேர்த்து உண்டு உடனே கிச்சடிச் சாதத்தில் நெய் அதிகமாகவிட்டுப் பிசைந்து மூன்று கவளம் சாப்பிடவேண்டும்.

தீரும்நோய் :—மேற்கண்டபடி இதனை ஏழுநாள் காலை மாலை இரண்டுவேளையும், அல்லது, ஒருவேளை சாப்பிட்டால் குட்டம் ஆகியவற்றின் ரணம் ஆறி உறுப்பு குறைவது நின்று தோல் உரிந்து சுத்தமாகிவிடும். சகல குறைநோய்களும் தீரும்.

940. பாடாணப் பிரயோகம் (வேறு)

பன்னீர்விட்டு இழைத்து உலர்த்தின வெண்சந்தனம் 12 வராகன் எடை, தூய்மைசெய்த படாணம் 10 வராகன் எடை, வெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—மேற்படி இரண்டுசரக்கையும் கல்வத்திலிட்டு இரண்டுசாமநேர மரைத்துக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

தீரும்நோய்கள் :—இந்தச்சூரணம் 1 வராகன் எடை (3½ கிராம்) வெண்ணெய் ½ முதல் 1 பலம். இவ்விரண்டையும் கலந்து மேற்பூசி வருவதனுல் படர்தாமரை, பேய்ச்சொறி, வறட்டுத் தேமல், அழுக்குத்தேமல், தீயநாற்றம் ஆகியவை தீரும்.

941. கௌரிக் கட்டுச் சுண்ணம்

கௌரி 1 பலம் (35 கிராம்), இதனை மண்பாத்திரத்தில் வைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து எடுத்துக் காற்படித் துத்தியிலைச் சாற்றில் சுறுக்கிடக் கட்டும். துத்தியிலையை அரைத்த விழுது 2 பலம் (70 கிராம்) மேற்படிகட்டியை இதன் நடுவில் வைத்துக் கவசித்துச் சுக்கான்கல்லை அரைத்து இந்தக் கவசம் கொள்ளும்படி யாக மூசையும், மூடியும் செய்துலர்த்தி அதற்குள் முன் சித்தப் படுத்தின கவசத்தை வைத்து ஏழுசீலைமண் செய்து கவசத்தின் பத்துப் பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கச் சுண்ணமாயிருக்கும்.

அளவு :—¼ முதல் 1 அரிசி எடை.

துணைமருந்து :—தேன், இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர் இளகங் கள் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :—கிரந்திப்புண்கள், புண்கள், சுரநோய்கள் முறைநோய்கள் ஆகியவைகள் தீரும்.

942. கௌரி மெழுகு

கௌரித்தூள் ஒருபங்கு, நல்லபுனுகு இரண்டு பங்கு இவ் விரண்டையும் கலந்து அரைத்துப் பளிங்குக்குப்பியில் சிறு மாத்திரைகளாகச் செய்து போட்டு வைத்துக்கொண்டு அவசியமான போது இதனைக் கால் நிமிட நேரம் இரண்டு நாசித் துவாரத்திலும் நுகரச் செய்யவேண்டும். இவ்விதம் இரண்டு அல்லது மூன்று மணிக்கொருதடவை செய்ய நாட்பட்டசுரம், முறை சுரம், மேகசுரம் ஆகியவைகள் தீரும்,

வெள்ளைப் பாடாணவீறு குறி குணங்கள்

வெள்ளைப் பாடாணம் விடமித்தால் இரத்தம் முறிந்து, கொப்புளம் சிரங்கு முதலியவை காணும்; வேதனை அதிகரிக்கும்; கைகால் வலிக்கும்; விரல்களெல்லாம் குரங்கின் விரல்களைப்

போலவும், பிசாசின் விரல்களைப் போலவும் விகாரப் பட்டிருக்கும்; முகத்தில் நாளா வட்டத்தில் வீக்கங் காணும்; வாயில் எந்த பண்டத்தைப் போட்டாலும் கைப்பாயிருக்கும்; மூக்கந்தண்டு தடிப்பாயிருக்கும் ; மேலுதட்டில் புண்ணுண்டாகி மிக்க துன்பத்தைத் தரும்.

கௌரிப் பாடாணவீறு குறி குணங்கள்

கௌரி விடமித்தால் கெண்டைக்கால் சதையில் பருவைப் போன்ற கட்டிகள் எழும்பி அதிக துன்பமுண்டாகும்; உள்ளங் காலிலும் மார்பின் பள்ளத்திலும் வீக்கங் கண்டு மிகுந்த நோவுண் டாகும். நடுவயிற்றில் கனத்த கட்டிகண்டு துன்பமுண்டாகும்; உள்ளங்கைத் தோல் உரியும்; கண் சிவந்திருக்கும்; பெருநோய் குட்டம் முதலியவை உண்டாயிருக்கும்போது தடிப்பதுபோலத் உடல் தடித்துத் திமிருண்டாகும்; பல்லிடையில் இரத்தம் வெளிப் படும்; இருமல், உப்புசம், வெள்ளோக்காளம், வெதுப்பு ஆகியவை உண்டாகும்.

943. வெள்ளைப் பாடாண வீறு முறிவு மருத்துவம்

ஏலம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), முசுமுசுக்கை வேர் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), வெள்ளை சர்க்கரை 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), படிக்காரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) இந் நான்கையும் குடிநீராகக் காய்ச்சி காலை, மாலை இரண்டு வேளையும் தவறுமல் ஒரு மண்டலம் குடித்துவரக் குணமுண்டாகும்.

944. கௌரிப் பாடாண நஞ்சுமுறிவு மருத்துவம்

முன்னைவேர் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), கறியுப்பு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்) பனங்கற்கண்டு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), அக்கரகாரம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), இந் நான்கையும் குடிநீராகக் காய்ச்சிக் காலை மாலை இரண்டு வேளையும் தவறுமல் ஒரு மண்டலம் குடித்துவரக் குண முண்டாகும்.

945. பாடாண நஞ்சுமுறிவு மருந்துவம்

5 கடுக்காய், 5 கொட்டைப்பாக்கு, வேப்பன் ஈர்க்கு ஒரு பிடி, கருவையிலை ஒரு பிடி, இவற்றில் இரண்டுபடி தண்ணீர்விட்டு அரைப்படியாகச் சுண்டக் காய்ச்சி இறுத்துக் கொடுக்கப் பாடாண வேகம்முறியும்.

946. மேற்படி (வேறு)

முருங்கை ஈர்க்கோடு, மிளகு, பூண்டு, புளி இவற்றைச் சேர்த்து மிளகுநீர் செய்து நாளும் கால்படி குடித்துச் சாதத்திலும் விட்டுச் சாப்பிட்டுவரவும்; இவ்வாறு நாளும் செய்துவரச் சகல பாடாண வீக்கமும் தீரும்.

947. மேற்படி (வேறு)

அருகம்வேர், அவுரிவேர், மிதிபாகல்வேர், சிறுகீரைவேர், பூவரசம்பட்டை, மிளகு இவை ஆறும் சமன் சேர்த்துக் குடிநீர் செய்து கொடுக்க எட்டு வகைப் பாடாண வேகமுந்தீரும்.

948. மேற்படி (வேறு)

அவுரிவேர், சிறுகீரைவேர், மிளகு இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம். இவற்றைச்சிதைத்து ஒன்றரை ஆழாக்கு நீர் வார்த்து மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து இறக்கி இளஞ் சூடாயிருக்கும்போது பிசைந்து வடிகட்டி பருகச் செய்யவேண்டும். இவ்விதம் நாளுக்கு இரண்டு மூன்று வேளைகள் செய்துவர பதினெட்டு வகைப் பாடாண வேகமும் முறியும்.

949. மேற்படி (வேறு)

முட்டையின் வெள்ளைக்கருவை உள்ளுக்குக் கொடுக்கலாம்.

கடுக்காய், கறியுப்பு, அவுரிவேர் ஆகியவைகளையும் குடி நீர் செய்து பருகச்செய்யலாம்.

950. பாடாணத்தைப் பயன்படுத்தும் பொதுவிதி

1. கழிச்சலுக்குக் கொடுத்து வயிற்றிலிருக்கும் மலத்தைப் போக்கிப் பிறகு பாடாணத்தைப் பிரயோகிக்க வேண்டியது.

2. வெறும்வயிற்றில் பாடாணம் சாப்பிடலாகாது; உணவு உட்கொண்ட ஒன்றிரண்டு மணி நேரம் சென்ற பிறகு சாப்பிட வேண்டியது.

3. முதலில் பாடாணத்தைக் குறைந்த அளவாகக் கொடுக்க வேண்டியது.

4. பாடாணம் சாப்பிடுகிற நோயாளியினுடைய கண்களை நாள்தோறும் பார்வையிட்டு வரவேண்டியது. கண் சிவந்து தின வெடுத்தாலும், அல்லது கண்ணிமைகள் தடித்துக் கெட்டியாயிருந் தாலும் மருந்தை நிறுத்திவிட வேண்டும்.

5. பாடாணத்தைக்கொடுத்துக்கொண்டு வரும்போது மூத்திரம் குறைந்து சிவந்திருக்குமாகில் மருந்தை நிறுத்திவிட வேண்டியது.

6. இருமல் கண்டால் பாடாணம் கொடுக்கலாகாது.

7. கண்ணிமைகள் தடித்திருப்பது போலிருந்து அவைகளில் சூடு, தினவு ஆகியவைகள் கண்டால் இந்த மருந்து உடம்பில் பற்றினதற்கு அடையாளமாம்.

8. பாடாணத்தைக் கொடுத்துக்கொண்டு வருகிறபோது இரண்டு அல்லது மூன்று வாரத்துக்கொரு முறை மருந்தை நிறுத்திக் கழிச்சலுக்குக் கொடுப்பது உத்தமம். இப்படிச்செய்வதில் இந்த மருந்து உடம்பில் தங்காது.

9. இந்த மருந்து குமட்டலையாவது, கக்கலையாவது உண்டு பண்ணினால் அபினி பாவன திரவத்தைச் சேர்த்துக்கொடுத்தால் மேற்படி தீய குணங்கள் நீங்கும்.

10. பெரியதாய் அகன்றிருக்கிற விரணங்களுக்கு பாடாணத்தைப் போடலாகாது.

விண்ணப்பம்

இயற்கையினது திருவருளாலும் பெரியோர்களின் வாழ்த்தினாலும் நமது நண்பர்களின் உதவியினாலும் அயமுதல் பாடாணம் ஈறுக உள்ள பல உலோகங்கள், பலச் சரக்குகள் ஆகியவைகளில் பற்பலபற்பங்கள், செந்தூரங்கள், அவை சம்பந்தமான நானுவித இளகம், சூரணம் முதலிய அநேக பாகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன இந்த பாகங்கள் மிகப்பல எழுதப்பட்டிருக்கின்றன. இந்தப் பாகங்கள் மிகவும் அருமையானவைகளென இவற்றைச் செய்து அனுபவித்துவரும் மருத்துவர்கள் நேராகவும், கடிதமூலமாகவும் வேறு வகையாகவும் அடியேனைப் புகழ்ந்து கனப்படுத்திப் பெருமையாகவும் கௌரவமாகவும் ஆதரித்து வருகின்றார்கள். இக்கனவான்களின் விடாமுயற்சிகளே எமக்கு மேன்மேலும் ஊக்கத்தை உண்டாக்கி வருகிறபடியால் உலக மக்கட்கு உதவியாகவும், உயிர்களின் மீதுள்ள அன்பினாலும் அடியேனது பரம்பரையிலும், உண்மைச் சிநேகிதரின் பரம்பரையிலும் அனுபோக சித்தி பெற்றுவரும் அபூர்வ முறைகளை இங்கு எழுதுவதினால் வைத்தியர்களுக்கும் வைத்தியரல்லாதவர்களுக்கும் சுருக்கிச் சொல்லில், உலகத்தார் எல்லோருக்கும் பெரும் பயனாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. இம் முறைகளெல்லாம் அதிக மறைவாக வைக்கப்பட்டு வந்தபோதிலும் அதிக சீவகாருண்யத்துடன் இவை வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றனவென்பது மருத்துவப் பயிற்சியாளரான

வைத்தியர்களுக்கு நன்கு விளங்கும். அனுபோகமில்லாத சிலர் தங்கள் மனதில் தோற்றும் ஏதேனும் குறை குற்றங்களைச் சொல்ல லாம். அக்கறையுள்ளவர்களும் நமது நூற்களைத் தொடக்கமுதல் இறுதி வரையில் கவனித்துப் பார்த்து அதன்படி செய்வார்களாயின் அதிக மகிழ்ச்சியடைந்து நம்மை ஆதரிப்பார்களென்பது உண்மை யாகும்.

951. பஞ்சபூத செந்தூரம்

தூய்மை செய்த லிங்கம் 8 வராகன் எடை (28 கிராம்), இரச கற்பூரம் 4 வராகன் எடை (14 கிராம்), வீரம் 2 வராகன் எடை (7 கிராம்), இரச செந்தூரம் 2 வராகன் எடை (7 கிராம்), நெல்லிக்காய் கெந்தகம் 2 வராகன் எடை (7 கிராம்), தாய்ப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை :— மேற்படி சரக்குகளைத் தனித்தனியாகப் பொடித்துப் பிறகு எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்தரைத்து தாய்ப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்துக் (12 மணி) கல்வத்தோடு காயவைத்து ஈரமில்லாமற் காய்ந்த பின்பு பொடித்துப் பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— $\frac{1}{2}$ முதல் 1 குன்றிமணியெடை.

துணைமருந்து :—பனைவெல்லம், இளகங்கள், விளக்கெண் ணெய் ஆகியவைகளெல்லாம்.

தீரும்நோய்கள்:—அட்ட குன்மம், அண்ட வாயு, சூலைக் கட்டு, மேகவாயு, பெருவயிறு, பீலிகை, வாதம், வாயு, சுரம், சன்னி, தோடம் ஆகிய பலவித நோய்களும் தீரும்.

குறிப்பு:— மருத்துவர்களிடத்தில் இருக்கவேண்டிய மருந்துகளில் இதுவுமொன்று. இதனல், அநேக நோய்கள் தீருகின்றன. ஆனல், சில இளமையுள்ள உடலினர்களுக்குத் தொடர்ச்சியாக ஐந்து நாள் ஏழு நாள் உபயோகித்தால் கொஞ்சம் வாய்பிடிப்பதுண்டு. அத் தகையினர்கள் நாளுக்கு இரண்டு மூன்று தடவை தாம்பூலம் போட்டுக் கொண்டு வந்தால் வாய்பிடிக்காது; வாய் வெளுத்திருந் தாலும் வேகம் தணிந்துபோம். சிற்ருமணக்கெண்ணெய், உடலுக்கு தகுந்தபடி காற்பலத்தில் அல்லது அரைப் பலத்தில் இதனை சேர்த்து உட்கொண்டு வந்தால் வாய் பிடிக்காது. இது மருத்துவ நுட்பமுறை

களுள் ஒன்று. மருத்துவர்கள் தம் தம் யுக்தி புத்திகளினல் தகுந்த துணைமருந்துகள் கொடுத்து வெற்றி பெற்று புகழ் அடைவார்கள் என நம்புகிறேம்.

952. மேற்படி (வேறு)

தூய்மை செய்த இரசம் 1 பலம் (35 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 1 பலம் (35 கிராம்), இலிங்கம் ½ பலம் (17½ கிராம்), மனேசிலை ½ பலம் (17½ கிராம்), கருவங்கம் ½ பலம் (17½ கிராம்), வெண்காரம் ½ பலம் (17½ கிராம்), நாலாங் காய்ச்சல் வெடியுப்பு ½ பலம் (17½ கிராம்), பூ நீறு ½ பலம் (17½ கிராம்), பொற்றலைக் கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—வங்கத்தை உருக்கி இரசத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டும். இதனைக் கல்வத்திலிட்டுக் கெந்தகத்தைச் சேர்த்து அரைத்து நன்ருகக் கருத்த பின்பு, மற்ற சரக்குகளையும் தனித்தனியாகப் பொடித்து இதில் சேர்த்துப் பொற்றலைக் கையாந்த கரைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரம் (12மணி அரைத்து ஒரே வில்லையாகச் செய்து வெய்யிலில் இரண்டு மூன்று நாள் காய வைத்து அகலில் வைத்து மேலகல்மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி 6 அங்குல ஆழமும், 1 சாண்சதுரமுமான ஒரு குழி தோண்டி அந்தக் குழியில் இரண்டங்குலம் மணல்போட்டு அதன் மீது கவசத்தை வைத்துக் குழி நிறைய மணலைக்கொட்டி அதன் மீது ஐம்பது பலம் வறட்டியை ஒடித்தடுக்கி நெருப்பிட்டு எரித்து ஆறினபின் எடுத்துக் கவசத்தைப் பிரித்து மருந்தை எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பொற்றலைக் கையாந்த கரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்து முன்போல் வில்லை செய்துலர்த்தி முன்போல் கவசஞ் செய்துலர்த்தி முன்போற் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஒவ்வொரு சாமமரைத்து இன்னும் நான்கு புடமிட்டெடுக்கச் செந்தூரம் கருஞ்சிவப்பாக இருக்கும். புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—½ முதல் 1 குன்றிமணியெடை.

துணைமருந்து :—நெய், தேன், வெண்ணெய் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள்:—மேகநீர், பவுத்திரம், மேகவாயு, மேகஊறல், கன்னப்புற்று, இளைப்பு, இருமல், காசம் ஆகியவை தீரும்.

953. அயவீரச் செந்தூரம்

தூய்மை செய்த வீரம், லிங்கம், நெல்லிக்காய்க் கெந்தகம், கட்டின நவச்சாரம், அரப்பொடி இவை வகைக்குச் சமனெடை, நாயுருவிச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:— அயத்தைக் கல்வத்திலிட்டு வீரத்தைச் சேர்த் தரைக்க அயம் மாண்டு மடிந்து போகும். பிறகு மற்ற சரக்கு களையும் தனித்தனி பொடித்து இதில் சேர்த்தரைத்து எல்லாம் கலந்த பின்பு, நாயுருவிச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் (12 மணி) அரைத்து, நிழலில் வைத்துக் கொஞ்சமும் ஈரமில்லாமல் உலர்த்திப் புது ஓடு அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்து, இந்த மருந்தை ஓட்டில் கொட்டி இரும்புத் துடுப் பால் துழாவிக்கொண்டிருக்க வேண்டும். இதிலிருந்து புகையெழும் பும்; இந்தப் புகை கண்ணிற்படாமல் ஒதுங்கியிருந்து கொண்டு வறுக்க வேண்டும். இந்த மருந்து சிவந்து வருந் தருணத்தல், அது தான் பக்குவமென எரிவதை நிறுத்தி அடுப்புடன் ஐந்து நிமிட நேரம் வைத்துப் பிறகு இறக்கிக் குளிர ஆறினபின்பு எடுத்துக் கல்வத்திற்போட்டுப் பொடித்து பளிங்குக் குப்பியில் வைத்துக் கொள்ளவும்.

அளவு:— ½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து:— பனைவெல்லம், வெண்ணெய், சுக்கை அரைத்த விழுது. பஞ்ச தீபாக்கினி இளகம், வில்வாதி இளகம், பறங்கிப்பட்டை இளகம் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள்:—மேகசூலை, மேகவாய்வு, உதிரவாயு, வாயுக் கட்டு, சூலைக்கட்டு, அட்டகுன்மம், வாதம், வாயு, ஆகிய எண் வகை நோய்களும் தீரும். கப நோய்களும் தீரும்.

954. ஐவகைச் செந்தூரம்

தூய்மை செய்த இரசம், அரிதாரம், நெல்லிக்காய்க் கெந்தகம், வெள்ளைப் பாடாணம், கௌரிப்பாடாணம் இவை வகைக்கு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்) முப்பலைக் குடிநீர் செல்லத் தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும், கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்ருகக் கருத்த பின்பு தனியே எடுத்து வைத்துக்கொள்ளவும். மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித்து முன் மருந்தைச்

சேர்த்து எல்லாம் கலக்கும்படி ஒருமணி நேரம் அரைத்துப் பிறகு மேற்படி குடிநீரை சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம (12மணி) நேரமரைத்து ஒரே வில்லையாகச் செய்து நன்ருயுலர்ந்த பின்பு மேலகல் மூடி ஏழு 2 சீலேமண் செய்துலர்த்தி ஆறங்குல ஆழமும் சாண் சதுரமுமான ஒரு குழி தோண்டி இரண்டு விரல்கனம் மணலைப்பரப்பி அதன்மீது கவசத்தை வைத்துக் குழி நிறைய மணலைக் கொட்டிப் பரப்பி ஐம்பது பலம் (1750கிராம்) வறட்டித் துண்டுகளை அடுக்கிப் புடமிட்டு ஆறினபின் எடுத்துப்பொடித்து முன் குடிநீரை சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமம் நேர (3மணி) அரைத்து முன்போல் வில்லை செய்து மணல் மறைவில் முன்போல் புடமிடவும். இவ்விதம் மூன்று புடமிட்டுப்பொடித்துக் குடிநீரை விட்டு முன்போல் இரண்டு சாமமரைத்துப் பில்லை செய்துலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடி ஏழுசீலேமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஐந்து பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கச் செந்தூரமாயிருக்கும். ஆனுல், கொஞ்சம் எடை குறைந் திருக்கும். செந்தூரம் கருப்பாயிருக்கும்.

அளவு:— 1 முதல் 2 அரிசியெடை.

துணைமருந்து:—பனைவெல்லம், வெண்ணெய், சுக்கை அரைத்த விழுது, இளகங்கள் ஆகியவைகளாம்.

தீரும் நோய்கள்:— மேகசூலை, மேகவாயு, உதிரவாயு, சூலைக் கட்டு, எட்டு குன்மம், வாதம், வாயு, சுரம், சன்னி ஆகிய எல்லா நோய்களும் தீரும்.

955. பஞ்சமுக செந்தூரம்

தூய்மை செய்த வீரம், இரசகற்பூரம், இலிங்கம், நெல்லிக் காய்க் கெந்தகம், தாளகம் இவை வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்) காட்டாமணக்குப் பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—எல்லாச் சரக்குகளையும் தனித்தனி பொடித்து ஒன்ருகக் கலந்து கல்வத்திலிட்டு ஒரு சாமநேரம் (3 மணி) கை விடாமல் அரைத்து எல்லாம் கலந்து பின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரம் (12 மணி) அரைக்க வேண்டும். அரைக்கும்போது காரம் நெடியேறுமாகையால் வயிறு நிறைய தயிர்ச்சாதம் அல்லது பால்சாதம் சாப்பிட்டு அரைக்க வேண்டும். நான்கு சாமம் அரைத்த பின்பு கையினுல் இதனை உதிர்த்துத் தூள்செய்து ஈரமுலர்ந்தபின்பு சிறிய உடைக்கலாம் பளிங்குக் குப்பியில் அடைத்துக் குப்பி வாய்க்கு பளிங்கு மூடியிட்டு

ஒரு சட்டியில் நாலங்குலம் மணலைப் பரப்பி அதன் நடுவில் புட்டியை படுக்கவைத்து புட்டியைச் சுற்றிலும் நான்கு அங்குலம் மணலைப் போட்டு மேற்சட்டிமூடி ஐந்து சீலைமண்செய்துலர்த்தி நூற்றைம்பது பலம் (5250 கிராம்), வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கவும். செந்தூரம் கருப்பாயிருக்கும்.

அளவு :—1 முதல் 2 அரிசி எடை.

துணைமருந்து :—பனைவெல்லம், தேன், இளகங்கள் ஆகியவைகளாம்.

தீருப்நோய் :—சுரம், சன்னிகள், மேகம், காசம், இருமல் குன்மம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

956. மகாவீரியச் செந்தூரம்

தூய்மை செய்த இரசகற்பூரம், வீரம், நவச்சாரம், அயம் வகைக்கு 1 பலம் விளக்கெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—வீரத்தையும் அயத்தையும் சேர்த்தரைத்து அயம் மாண்டு தூளானவுடன் மற்ற சரக்குகளையும் தனித்தனிப் பொடித்து இதில் சேர்த்து நான்கு சாமநேரம் (12 மணி) கைவிடாமலரைத்து எடுத்து ஒரு புதிய அகலமான அகலில் குவியலாகக் கொட்டி அது மூழ்கும்படியாக விளக்கெண்ணெயைவிட்டு ஒரு சிறிய அடுப்பின் மீதேற்றி அகலுக்கடியில் தீபம்போல் எரித்துவந்து மேலே மருந்துபற்றி எரிந்து ஆறினவுடன் எடுத்து பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1 முதல் 2 அரிசி எடை.

துணைமருந்து :—பனைவெல்லம், இளகம், முதலியவைகளாம்.

தீரும்நோய் :—எந்த வகையிலும் ஆருத ரணங்கள், குழிப் புண், புரைப்புண், அழிரணம், கிரந்திப்புண்கள் முதலிய எல்லா வகை ரணங்களும் ஆறும்.

குறிப்பு :— இது வாய்பிடிக்கும் தன்மையுள்ளதாகையால் தகுந்தபடி மூன்று, ஐந்து, ஏழு வேளைகள் கொடுத்து நிறுத்திக் கொள்ளவேண்டும். இதனால், அந்தப்புண் ஆறிவிட்டால் உத்தமம்; அப்படி ஆருதிருந்தால் இடையில் ஒரு வாரம்விட்டு மறுமுறை

கொடுக்கவேண்டியது. இவ்விதம் மூன்று முறை கொடுத்தால் போதுமானது, இந்த மருந்தினுல் இரணம் ஆருவிட்டால் மற்ற மருந்தினுல் அந்த இரணம் ஆறுவது அதிக கடினம்.

இதனுல் வாய் பிடித்தால் கெந்தகத்தைப் பொடித்து ஒருவாய் குவிந்தகலயத்தில்போட்டு அதன்மீது வாய்பொருந்தும்படியாக ஒரு கலயத்தைக் கவிழ்த்து இரண்டு சீலை செய்து அடுப்பின் மீதேற்றி மேற் கலயம் முழுவதையும் ஈரத்துணியைப்போட்டுமூடி அடுப் பெரித்தால் மேலே பதங்கித்திருக்கும். அதை தண்ணீரில் கரைத்து பல் ஈறு முதலான இடங்களில் தடவி வருவதுடன் அதனைத் தண்ணீரில் கரைத்து வாய் கொப்பளித்து வருவதனுலும் அந்த வேகம் முறிந்துபோகும். இப்படிச் செய்துகொள்வது எல்லோருக்கும் சாத்தியமாகாது. ஆகையால் கடையில் விற்கும் கலவைக் கெந்தகப் புளிப்பை வாங்கி மேற்கண்டபடி உபயோகித்துக் கொள்வது உத்தமம். இந்தச் செந்தூரத்தை இளமையான உடலினற்கு உபயோகிக்க வேண்டியதிருந்தால் கீழ்க்கண்டபடி செய்து உபயோகிக்கவும்.

957. மகா வீரிய சாந்தச் செந்தூரம்

மேற்கண்டபடி செய்த செந்தூரம் 3 பங்கு, தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 1 பங்கு, இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு ஒரு சாம நேரமரைத்து ஒரு குகைக்குட் போட்டுக் குகை வாய்க்குச் சில்லிட்டு மூன்றுசீலை செய்துலர்த்தி ஆறங்குல ஆழமும், சாண் சதுரமுமுள்ள குழி தோண்டி அதில் இரண்டு விரற்கிடை மணலைப் பரப்பி அதன்மீது முன் சித்தப்படுத்தின குகையை வைத்துக் குழி நிறைய மணலைக்கொட்டி அதன் மீது ஐம்பது அல்லது அறுபது பலம் (2100 கிராம்) வறட்டியை ஒடித்து வைத்துத் தீயிட்டு எரிந்து குளிர ஆறினபின்பு மருந்தை எடுத்து பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:— $1\frac{1}{2}$ முதல் 3 அரிசி எடை.

துணைமருந்து:— மேற்கண்டவைகளேயாம்.

தீரும்நோய்கள்:—மேற்கண்டவைகளேயாம்.

குறிப்பு:— முரட்டு உடலினராகவும், நோய் கடினமுள்ளதாகவு மிருந்தால் முன்கண்ட முறையை உபயோகிக்கலாம். அப்படி இல்லாமல் வளமான உடலினர், மகளிர், வயது தளர்ந்தவர்கள், வலுக்குறைந்தவர்கள் ஆகிய இவர்களுக்கு மேற்படி மகாவீரிய

சாந்த செந்தூரத்தை உபயோகிப்பது உத்தமம். ஆனால், இது தாமதமாக வேலை செய்தாலும் வாய் பிடிக்கும் கெடுதியில்லாததால் மிகவும் சிறந்ததாம்.

958 பெரிய பட்டுக் கருப்பு

தூய்மை செய்த சாதிலிங்கம், இரசகற்பூரம், வீரம், அரிதாரம், மனோசிலை, நெல்லிக்காய்க் கெந்தகம், இரசம், வெள்ளைப்பாடாணம், கௌரிப் பாடாணம், இரச செந்தூரம், பூநீறு வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்) விளக்கெண்ணெய் செல்லத்தக்க அளவு

செய்முறை:—இரசத்தையும், கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்றாகக் கறுத்தபின்பு அதைத் தனியே எடுத்துக்கொள்ளவும், மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்த்து விளக்கெண்ணெய் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்துக் காலணா கனமுள்ள சிறு வில்லைகளாகச்செய்து அரக்கு நிறமுள்ள பட்டுத்துண்டை ஒவ்வொரு வில்லை மீதும் மூன்று சுற்று சுற்றி ஒரு வட்டோட்டில் கால்சேர் கொடிவேலி வேர்ப் பட்டைத் தூளைப்பரப்பி அதன்மீது வில்லைகளை ஒன்றின்மீது ஒன்று படாமல் அடுக்கி மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்திக் கொள்ளவும். முக்கால் முழ ஆழமும், முக்கால் முழ சதுரமுமான ஒரு குழி தோண்டி அதில் இரண்டங்குல மணலைப் பரப்பி முன் சித்தப்படுத்தின கவசத்தை வைத்து அதன்மீது நாலங்குல மணலைக் கொட்டிச் சமமாகப் பரப்பிவிட்டு மீதியாயுள்ள குழியில் வறட்டியை அடுக்கி நெருப்பிட்டு மறுநாள் குளிர ஆறினபின்பு எடுத்து வில்லைகளைப் பொடித்து பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—2 முதல் 4 அரிசி எடை.

துணைமருந்து :—பனைவெல்லம், தேன், இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—சுரம், மேகச் சுரம், யானைக்கால்வீக்கம், நெறிகட்டி வருகிற சுரம், வயிற்றுவலி, வலிப்பு, இசிவு, சன்னி, பிரசவித்த அறைச் சன்னி முதலிய பல நோய்கள் தீரும்.

959. சூட்சும பட்டுக்கருப்பு

இரசம் 2 பலம் (70 கிராம்) இதனைக் கல்வத்திலிட்டுச் சமனெடை பச்சை மஞ்சளைச் சேர்த்தரைத்து ஈரமுலர்ந்த பின்பு அதை ஊதுகுழாய் முதலியவைகளினால் ஊதி நீக்கிவிட

வேண்டியது. மறுபடியும் முன்போல் சமனெடை பச்சை மஞ்சள் தூளைச் சேர்த்தரைத்து ஈரமுலர்ந்த பின்பு முன்போல் ஊதித் தூளைப் போக்கிவிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவை செய்தால் இரசம் தூய்மையாகிவிடும். இவ்விதம் தூய்மை செய்த இரசம் 1 பலம் (35 கிராம்), பசும்பாலில் தூய்மை செய்த நெல்லிக் காய்க் கெந்தகம் 1 பலம் (35 கிராம்), இவ்விரண்டையும் கல்வத்தி லிட்டு நன்ருகக் கறுக்கிற வரையில் அரைத்துக் கொடிவேலி வேர்ப் பட்டைக் குடிநீரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம (12 மணி) நேரமரைத்துக் காலஞ கனமுள்ள சிறு வில்லைகளாகச் செய்து கொஞ்சமும் ஈரமில்லாமல் நன்ருயுலர்ந்த பின்பு ஒவ்வொரு வில்லைகளின் மீதும் சிவப்புப்பட்டு துண்டுகளைச் சுற்றி ஒரு ஓட்டில் பரப்பி மேலோடுமூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி ஒரு சாண் ஆழமும், ஒரு சாண் சதுரமுமான ஒரு குழி தோண்டி அதில் இரண்டங்குலம் மணலைப் பரப்பி அதன் மீது கவசத்தை வைத்து அதன்மேல் ஆறு அங்குலம் மணலைக் கொட்டிப் பரப்பி மணலின் மீது எழுபது பலம் (2450 கிராம்) வறட்டியை ஒடித்து அடுக்கி நெருப்பிட்டு ஆறினபின் எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— ½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :—பனைவெல்லம், தேன், இஞ்சி, இளகங்கள் ஆகியவை களாம்.

தீரும்நோய்கள்:— சுரம், சன்னி, வாயு சூலை, கிரந்தி, மேகவாயு முதலிய அநேக நோய்கள் தீரும்.

இது சிவசத்தி செந்தூரமாகையால் துணைமருந்துகளில் எல்லா நோய்களுக்கும் உபயோகிக்கலாம். ஒவ்வொரு மருத்துவர் கையிலும் இது அவசியம் இருக்கவேண்டியவைகளில் ஒன்று.

960. சின்னப்பட்டுக்கருப்பு

இலிங்கத்தில் பதங்கித்தெடுத்த வாலைரசம் அல்லது, மேற் சொல்லி இருக்கிறபடி பச்சை மஞ்சள்தூளில் தூய்மை செய்த இரசம் 4 பலம் (140 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 1 பலம் (35 கிராம்), விளக்கெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—இரண்டு சரக்கையும் கல்வத்திலிட்டுப் பொடித்து நன்ருகக் கலந்தபின்பு விளக்கெண்ணெயைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து வந்தால் முதலில் இரசமும் கெந்தகமும் கலக்கப்பட்டுப் பிறகு இரசம் வேறு கெந்தகம் வேருகப் பிரிந்துப்

போகும். இதனை மறுபடியும் சேர்த்தரைத்து இரண்டு வில்லைகளாகச் செய்து வில்லைகளின் மீது சிவந்த பட்டுத் துணியைச்சுற்றி ஒரு அகலில் ஒரு பலம் கொடிவேலிப். வேர்ப்பட்டைத் தூளைத் தூவி அதன்மீது இந்த வில்லைகளை வைத்து மறு அகல் மூடி ஐந்து சீலை மண் செய்து உலர்த்தி முன்போல் குழியில் மணல் மறைவில் புட மிட்டுக் குளிர ஆறினபின் எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

அளவு :—½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :—பனைவெல்லம், தேன், இளகங்கள், வெண் ணெய் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள் :—சுரம், வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, பூப்புக் காலத்திலுண்டாகும் வயிற்றுவலி, மேகம், பொத்திகடி முதலிய பல நோய்கள் தீரும்.

மருந்துணவு :—இச்சாபத்தியம் ; நெய், பால், ஆட்டுக்கறி சேர்க்கவும். மீன், கருவாடு தள்ளுபடி செய்யவும்.

குறிப்பு :—மேற்படி முறையில் இரசம் அதிகமாகவும், கெந்தகம் குறைவாகவும் இருக்கிறது ; இதில் இரசம் முழுவதும் மடிந்து போகாது. ஆனல், இதனைக் கைபாகமாக அரைத்தால் எல்லாம் மடிந்து வில்லைசெய்யவரும். ஒருதடவை செய்து அனுபவப்பட்டு விட்டால் மறுதடவை தவருமல் செய்யலாம்.

961. அஞ்சு கருப்பு

தூய்மை செய்த இரசம், நெல்லிக்காய்க் கெந்தகம், சீனக் காரம், வெண்காரம், வெள்ளைக் குங்கிலியம் இவைவகைக்குச் சமன், இஞ்சிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—இரசத்தையும், கெந்தகத்தையும் கலக்கும்படி அரைத்து நன்ருகக் கறுத்தபின்பு மற்ற சரக்குகளையும் சேர்த்துப் பொடித்து மேற்படி இஞ்சிச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரம் அரைத்து வில்லைசெய்து உலர்த்திப் பொடித்துப் புட்டி யில் வைத்துக் கொள்ளவும்.

அளவு :—2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்து :—நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள் :—வெள்ளை, நீர்க்குத்தல், எரிவு, மேகம் முதலியவை தீரும்.

962. பஞ்ச பூதப் பதங்கம்

(அ) தூய்மை செய்த சாதிலிங்கம், வீரம், இரசம், இரசகற்பூரம், இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்). (ஆ) காந்தம், துத்தம், துருசு, அரிதாரம், நெல்லிக்காய் கெந்தகம், மனோசிலை, குதிரைப்பல் பாடாணம், அக்கிராகாரம், கொடிவேலி வேர்ப்பட்டை இவை வகைக்கு ½ வராகன் எடை, கறியுப்பு 1 படி.

செய்முறை :—(அ)-விலுள்ள நான்கு சரக்குகளையும் ஒன்றாகப் பொடித்துச் சேர்த்தரைத்துத் தனியே வைத்துக் கொள்ளவும். (ஆ)-விலுள்ள சரக்குகளைத் தனித்தனி பொடித்து எல்லாவற்றையும் சேர்த்து பத்து பங்காகச் செய்து வைத்துக் கொள்ளவும். ஒரு சட்டியில் ஒரு படி உப்பைப் பொடித்துப் போட்டு அதன் நடுவில் ஐந்து குழிகள் குழித்து வைத்துக் கொள்க. ஒரு குழியில் (ஆ)-வின் ஒரு பாகத்தைப் போட்டு அதன்மீது (அ)-விலுள்ளதை ஐந்து பாகமாக்கி ஒரு பாகத்தைப் போட்டு அதன்மீது (ஆ)-விலுள்ள ஒரு பாகத்தைப் போட்டு மூடிவிடவேண்டும். இவ்விதமே (அ)-விலுள்ள நான்கு பாகங்களுக்கும் (ஆ)-விலுள்ள எட்டுப் பாகங்களையும் கீழ் மேலிட்டு வைத்து மேற்சட்டி மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பின் மீதேற்றிக் கமலாக்கினி, தீபாக்கினி, காடாக்கினி ஆகிய முத்தீயும் நான்கு சாமநேரம் எரித்துக் குளிர ஆறின பின்பு எடுக்கப் பதங்கம் ஏறி இருக்கும். இந்தப் பதங்கத்தை வழித்துக்கொண்டு சட்டியிலுள்ள முன் உப்பைப் பொடித்து முன் சட்டியிற் போட்டு முன் பதங்கத்தையும் அதன்மேல் போட்டு மேற்சட்டி மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றி முன்போல் தீபாக்கினி, கமலாக்கினி, காடாக்கினியாக முத்தீயும் நான்கு சாம நேரம் எரித்துக் குளிர ஆறின பின்பு எடுத்துப் பதங்கத்தை வழித்துக் கொள்ளவும். பதங்கமானது தூய வெள்ளையாயிருக்கும். இதனை ஒரு பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1 முதல் 2 அரிசி எடை.

துணைமருந்து :—பனைவெல்லம், வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும்நோய் :—சூலைக்கட்டு, மேகவாயு, அண்டவாயு, குன்மம், பீலிகை, வலிப்பு, வாதம் எண்பது, இருமல் (காசம்) எட்டு, கபநோய் தொண்ணூற்றாறு, புண், புரை, அரையாப்பு, கிரந்திரணம், கடிதடி, சிட்டை, ஊறல் ஆகியவை தீரும்.

மருந்துணவு :—புளி, புகை, வாயுபண்டம், பழைய சோறு முதலியவை நீக்கவும்.

குறிப்பு :—இந்த மருந்தை வாய்பிடிக்கிற மட்டும் கொடுக்க வேண்டும். வாய்பிடித்தால் நிறுத்தி விடவும். இது சற்று முரட்டுக் குணமுள்ள மருந்து. இவ்வித மருந்தும் வைத்தியர்கள் கையில் அவசியம் வேண்டியதாயிருக்கிறது. சில முரட்டு உடலினர்க்கும், சில சண்டி நோய்களுக்கும் சுகமான மருந்துகளை உபயோகப் படுத்துவதனல் அதிகப் பயனும் இல்லாமல் வைத்தியத் தொழிலுக்கு ஒரு இழிவை உண்டாக்க ஏதுவாகிறது. நாம் நம்முடைய அனுபவத்தில் சண்டி நோய்களுக்குச் சுகமான மருந்துகளை உபயோகித்து எவ்வித பயனும் அடையாமல் மேற்கண்ட மருந்துகளை உபயோகிக்கக் கடமைப்பட்டு அவ்விதமே உபயோகித்துப் பூரண சுகமுண்டாகி இருக்கிறது. எந்த மருந்தானுலும் உடல் இயல்பை நிதானித்து உபயோகப்படுத்தினுல் எவ்வித தீய குணமுமின்றி நற்குணத்தையே காணலாம். இவைகளெல்லாம் அனுபவசாலிகளான அறிவாளிகளுக்குத் தத் தம் அனுபவத்தில் நன்கு புலப்பட்டிருக்கும். ஆகையால் இதைப் பற்றி விரித்துச் சொல்லாமல் சுருக்கிச் சொன்னதே போதுமானது.

963. பஞ்ச சூத மெழுகு

தூய்மை செய்த இரசம் 2 வராகன் எடை (7 கிராம்), வீரம் 2 வராகன் எடை (7 கிராம்), இரசகற்பூரம் 2 வராகன் எடை (7 கிராம்), பச்சைக் கற்பூரம் $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), சூடன் $5\frac{1}{2}$ வராகன் எடை ($19\frac{1}{4}$ கிராம்).

செய்முறை :—இரசத்தையும், வீரத்தையும் கலக்கும்படி அரைத்து இரசம் மடிந்த பின்பு மற்ற சரக்குகளையும் சேர்த்தரைத்து மெழுகு பதத்தில் எடுத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1 முதல் 2 அரிசி எடை.

துணைமருந்து :—பனைவெல்லம், வெண்ணெய், சுக்கை அரைத்த விழுது, இளகங்கள் முதலியவைகளாகும்.

தீரும்நோய்கள் :—சன்னி, சைத்தியம், நச்சுக் கழிச்சல், நச்சுக் கழிச்சலில் (விஷபேதி) காணும் கால் கைக் குளிர்ச்சி, தேகக் குளிர்ச்சி, நச்சுக் கழிச்சலில் காணும் இசிவு, சுருக்கிச் சொல்லில் நச்சுக் கழிச்சல் சம்பந்தமான எல்லா தீய குணங்களும் நீங்கும். உடல் சில்லிட்டுப் போய்விட்டபோதிலும், நாடி அடங்கி விட்ட போதிலும் இதனை உபயோகித்தால் தேகத்தில் சூடுண்டாகி நாடிநடை உண்டாகும். இது நச்சுக் கழிச்சலுக்கு எடுத்த மருந்து. மகப்பேற்றுக்குப் பின் காணும் சன்னி, சைத்தியம் முதலியவைகளுக்கும் உபயோகிக்கலாம்.

964. பஞ்சசூத மெழுகு

தூய்மை செய்த வீரம், இரசகற்பூரம், இலிங்கம், நெல்லிக்காய்க் கெந்தகம், இரசம், இவை வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), முருங்கைப்பட்டைச் சாறு, தேன், தாய்ப்பால், இம் மூன்றையும் சம அளவாகச் சேர்த்த கலவை செல்லத்தக்க அளவு.

செய்முறை :—இரசத்தையும், கெந்தகத்தையும் கலக்கும்படி அரைத்து நன்ருகக் கறுத்தபின்பு மற்ற சரக்குகளையும் சேர்த்து அரைத்து ஒரு புதிய ஒட்டில் வைத்து சுடர் (தீபம்) போல் எரித்து முன் கலவையைச் சிறுகச் சிறுக விட்டுவந்து மெழுகு பதத்தில் இறக்கி ஆற வைத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1 முதல் 2 அரிசி எடை.

துணைமருந்து :—பனைவெல்லம், வெண்ணெய் முதலியவை களாகும்.

தீரும்நோய்கள்:—நச்சுக் கழிச்சல் (விஷ பேதி) சுரம், சன்னி ஆகியவை தீரும்.

965. கோரோசனை மெழுகு

தூய்மை செய்த இலிங்கம், இரசகற்பூரம், வீரம், பச்சைக் கற்பூரம், குங்குமப்பூ, கோரோசனை, காந்தச் செந்தூரம், அல்லது தூய்மை செய்த காந்தம், பொரித்த வெண்காரம், தாளிச பத்திரி, அக்கிராகாரம் இவற்றின் தூள் வகைக்கு 2 வராகன் எடை (7கிராம்) இலங்கப்பட்டைத் தூள் 4 வராகன் எடை (14 கிராம்), தாய்ப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—எல்லாவற்றையும் சேர்த்துப் பொடித்த தூள் களையும் சேர்த்து அரைத்து தாய்ப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து மெழுகு பதத்தில் எடுத்து பளிங்குப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு:—$\frac{1}{2}$ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து:—பனைவெல்லம், வெண்ணெய் ஆகியவை களாம். ஆனல் கீழ்க்காணும் துணைமருந்தாகிய இளகத்துடன் உபயோகித்து வந்தால் வாய்பிடிக்கிறதில்லை. நோய்களும் செம்மை யாக குணப்படுகின்றன. ஆகையால், மற்ற துணைமருந்துகளுடன் உபயோகிக்கலாமெனினும், கீழ்ச் சொல்லப்படும் துணைமருந்தே இதற்கு அனுகூலமானதென அனுபவத்தால் நிச்சயிக்கப்பட்டிருக் கிறது.

தீரும்நோய் :—பக்கவாதம், குடல்வாதம், கீல்வாதம் முக, வாதம், மூட்டுவாதம், கால்வாதம், நரித்தலைவாதம், ஓடுவாதம் முதலிய எல்லா வகை வாதங்களும், சூலை, எலும்புக் குடைச்சல் முதலிய அநேக நோய்களும் தீரும். இதன் சிறந்த குணத்தை அனுபவத்தால் நிச்சயித்துக் கொள்ளலாம்.

அனுபான இளகம்

கொம்பு, குச்சி நீக்கின சூரத்து நிலஆவாரையிலை 5 பலம் (175 கிராம்), கொத்துமல்லி 5 பலம் (175 கிராம்), காம்பு நீக்கிய ரோசாப்பூ 5 பலம் (175 கிராம்), பறங்கிச் சக்கை, சோம்பு, சீரகம், வகைக்கு 1 பலம் (35 கிராம்), மேல்தோல் சீவின சுக்கு, மிளகு அரிசித்திப்பிலி, மஞ்சட் கடுக்காய்த்தோல், நெல்லிமுள்ளி, தான்றிக் காய்த்தோல், ஏலரிசி இவற்றின் தூள்கள் வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), பனைவெல்லம் 40 பலம் (1400 கிராம்), தேன் 20 பலம் (700 கிராம்), நெய் 20 பலம் (700 கிராம்), பசுவின் பால் 2 படி.

செய்முறை :—மேற்கண்ட தூள்களை எல்லாம் ஒன்றாகக் கலந்து வைத்துக் கொள்க. வெல்லத்தை நறுக்கி அரைப்படி தண்ணீரை விட்டுக் காய்ச்சிக் கரைந்த பின்பு துணியில் வடிகட்டி திப்பியை நீக்கிவிடவேண்டும். இந்தப் பாகுடன் பாலையும், தேனையும் சேர்த்துக் காய்ச்சித் தந்து பதத்தில் மேற்படி தூள்களைக் கொட்டிக் கிளறி, நெய்யையும் விட்டு நன்றாகக் கிளறி ஆறின பின்பு பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—இரண்டு முதல் நான்கு வராகன் எடை. வேண்டு மானால் ஆறு முதல் பத்து வராகன் எடை சாப்பிடவேண்டும்.

தீரும்நோய்கள் :—மலபந்தம், மலச்சிக்கல் ஆகியவைகள் நீங்கும். பழைய மலத்தை நீக்கி வாயுக்களைக் கண்டிக்கும் மேற் சொல்லி இருக்கிற கோரோசனை மெழுகை உபயோகிக்கும் போது இதை துணைமருந்தாக உபயோகித்து வந்தால் வாய் கட்டுதல் முதலிய தீய குணங்கள் ஒன்றுமிரா. நோயைச் சீக்கிரம் குணப் படுத்தும்.

966. பச்சைக்கற்பூர மெழுகு

உயர்ந்த மலாக்கா பச்சைச் கற்பூரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), குங்குமப் பூ 2 வராகன் எடை (7 கிராம்), தூய்மை செய்த இலிங்கம் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இரசகற்பூரம் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), இரச செந்தூரம் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), தேன் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—மேற்கண்ட ஒவ்வொரு சரக்கையும் தனித்தனி பொடித்து வைத்துக்கொள்ள வேண்டியது. குங்குமப்பூவைக் கல்வத்திலிட்டுக் சிறிதளவு பால் அல்லது வெந்நீரை விட்டு வெண்ணெய் போலாகிற வரையில் அரைத்து மற்ற மருந்துகளையும் சேர்த்தரைத்து இரண்டொரு நாள் வெய்யிலில் வைத்துப் பிறகு பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :—பனைவெல்லம், சர்க்கரை, வெண்ணெய் வேப்பங்கொழுந்தை அரைத்த விழுது, சுக்கை அரைத்த விழுது ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள்:—சூதகக்கட்டு, சூதக வாயு, அக்கிரம சூதகம், சூதகச் சன்னிமுதலிய சூதக சம்பந்தமான நோய்களெல்லாம் தீரும். மகப்பேற்றுக்கு பின்காணும் அழுக்கு கட்டுப்பட்டிருத்தல், அதனலுண்டாகும் சுரம், சன்னி முதலிய பல நோய்களும் தீரும். இது, பெண்களின் நோய்களுக்கு உபயோகப்படுத்தப்படுகிறபடியால் இதற்கு மகளிர் துணைவன் என்ற மறு பெயரும் உண்டு.

மருந்துணவு :—புகை, புளி, புணர்ச்சி நீக்குக.

967. விஷ மெழுகு

தூய்மை செய்த வெள்ளைப் பாடாணம் 2 வராகன் எடை (7 கிராம்), இரசம் 2 வராகன் எடை (7 கிராம்), கெந்தகம் 2 வராகன் எடை (7 கிராம்), மனேசிலை 2 வராகன் எடை (7 கிராம்), பெருங்காயம் 2 வராகன் எடை (7 கிராம்), மேல்தோல் சீவின சுக்குத்தூள் 2 வராகன் எடை (7 கிராம்), வேப்பமுத்துப் பருப்பு 2 வராகன் எடை (7 கிராம்), நேர்வாளப் பருப்பு 14 வராகன் எடை (49 கிராம்), வெள்ளெருக்கம் பால் அல்லது சாதா எருக்கம்பால் செல்லத்தக்க அளவு, வேப்பெண்ணெய் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும், பாடாணத்தையும் தொந்தித்து அரைத்து இரசம் மடிந்த பின்பு மற்ற சரக்குகளையும் சேர்த்து அரைத்து எல்லாம் கலந்த பின்பு மேற்படி பாலைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்துப் பிறகு வேப்பெண்ணெயைச் சிறுகச்சிறுக விட்டு இரண்டு சாமம் அரைத்து மெழுகு பதத்தில் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

அளவு — ¼ முதல் ½ குன்றிமணி எடை.

துணைமருந்து :—வெற்றிலையை அரைத்த விழுது 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), சுக்கை அரைத்த விழுது 1 வராகன் எடை.

தீரும்நோய்:—நல்லபாம்பு நஞ்சு, விரியன் நஞ்சு, நட்டுவாக் காலி நஞ்சு, மண்டலி நஞ்சு, எலிக்கடி நஞ்சு, பேய் நாய்க்கடி நஞ்சு, ஓநாய், நரி ஆகியவற்றின் கடிநஞ்சு முதலிய அநேக நஞ்சுகள் தீரும்.

நஞ்சு தலைக்கேறி மூர்க்கமாயிருந்தால் இரண்டளவு கொடுக்க வும் கழிச்சலாகும். ஒரு வேளை கழிச்சல் அதிகமானால் சோற்றில் மோரைவிட்டு கரைத்து அதனைக் குடிக்கச் செய்யவும். இதனை மூன்று நாள் தொடர்ச்சியாகக் கொடுத்து வரவேண்டியது. சம யோசிதம் போல் ஒவ்வொரு வேளை காலையில் மாத்திரம் கொடுத் தால் போதுமானது. நஞ்சு கடுமையாயிருந்தால் உப்பில்லாப் பத்தி யம் வைக்கவும். நஞ்சு நாட்பட்டதாயிருந்து சில நாள் கொடுக்க வேண்டியிருந்தால் உடம்புக்குத் தகுந்தபடி குறைந்த அளவாக மருந்தைக் கொடுத்து இச்சாபத்தியமாக வைக்க வேண்டியது. உடல் வலிமை, நோய் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி செய்வதுதான் மருத்துவர்களின் யுக்திக்கு ஏற்றது. நஞ்சு தலைக்கேறி பிரக்ஞை தப்பியிருந்தால் கருப்புவிழி எந்தப்பக்கத்தில் ஒதுங்கியிருக்கிறதோ அந்தப் பக்கத்தில் உயிர் இருக்கும். அப்போது பிரம்பினால் அடித்தால் உடம்புத் தடிக்கும். இவ்விதம் ஆராய்ந்து பார்த்து உச்சியை ஒரு பேனாகத்தியால் கீறி மெழுகில் ஒரு குன்றிமணியளவு உருட்டி அதில் வைத்துத் தேய்த்தால் பிரக்ஞை வந்து விடும். விரியன் முதலியவை கடித்திருந்தால் கடித்த விடத்தைக் கீறி மெழுகை அதில் வைத்து மேலே ஊமத்தன் இலை அல்லது வெற்றிலையை வைத்துக் கட்டவும். உள்ளுக்கும் மூன்றுநாள் மருந்து கொடுத்து உப்பில்லாப் பத்தியம் வைக்கவும். தேள் கொட்டுக்கும் இம்மெழுகைக் கொட்டுவாயில் வைத்துத் தேய்த்தால் உடனே நஞ்சு தீரும்.

968. சண்முக மெழுகு

தூய்மை செய்த வீரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இரசகற் பூரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இலிங்கம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), மேல் தோல் சீவின சுக்குத்தூள் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), கிராம்புத்தூள் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), ஏலரிசித் தூள் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), தேன் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்கண்ட மூன்று சரக்குகளையும் தனித்தனி பொடித்து ஒன்றாகச் சேர்த்து மற்றச் சூரணங்களையும் அதிற்

கலந்து ஒருமணி நேரம் கைவிடாமலரைத்து எல்லாம் கலந்தபின்பு தேனைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து மெழுகு பதத்தில் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

அளவு:—1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை.

துணைமருந்து:— பனைவெல்லம், சர்க்கரை, வெண்ணெய், சுக்கை அரைத்த விழுது ஆகியவைகளாம்.

தீரும்நோய்:—சூலை, சந்துவாதம், அங்குலிவாதம், கீல்வாதம், அனைத் துறுப்பு வாதம் முதலிய பலவகை வாதநோய்கள் தீரும். சுரம், சன்னி, முதலியவைகளும் தீரும்.

969. விடாமிர்த மை

தூய்மை செய்த இரசம், அரிதாரம், கெந்தகம், நிர்விஷம், கருநாபி, நாட்டுவெண்காரம், கருஞ்சீரகம், பெருங்காயம், மனோசிலை, இந்துப்பு வகைக்கு $1\frac{1}{4}$ வராகனெடை, வாளப்பருப்பு, $12\frac{1}{2}$ வராகன் எடை ($43\frac{3}{4}$ கிராம்), உத்தாமணி சமூலச்சாறு செல்லத் தக்க அளவு, தேங்காய் ஓட்டுக்கரி, 10 வராகன் எடை (35 கிராம்), பனைவெல்லம் 10 பலம் (350 கிராம்), தேங்காய்ப்பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—இரசத்தையும் கெந்தகத்தையும் ஒன்றுபட அரைத்து நன்றுகக் கறுத்தபின்பு தனியே எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். மிச்சம் எட்டுச் சரக்கையும் தனித்தனி பொடித்துப் பிறகு முன் அரைத்து வைத்திருக்கிற பொடியையும், இந்த எட்டுச் சரக்கின் பொடியையும் ஒன்றுகச் சேர்த்து இரண்டு சாம நேரம் கைவிடாமல் அரைக்கவேண்டும். இவ்விதம் அரைப்பதால் பல சிறந்த குணங்கள் உண்டாகின்றன. பிறகு உத்தாமணிச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைக்க வேண்டியது. தேங்காயோட்டின் கரியைத் தனியே பொடித்து துணியில் சலித்த தூள் 10 வராகன் எடை (35 கிராம்), நிறுத்தெடுத்துக் கல்வத்திலிருக்கிற மருந்தில் சிறுகச்சிறுகத் தூவி அரைக்கவேண்டியது. அந்தத் தூளெல்லாம் ஆனபின்பு பனைவெல்லத்தை இடித்துத் தூளாக்கிக் கொஞ்சம் தண்ணீரை வார்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி இரண்டொரு கொதிவந்தவுடன் துணியில் வடிகட்டித் திப்பியை நீக்கிவிட்டு அடுப்பேற்றிப் பாகாய்க் காய்ச்சிக் கெட்டி பதத்தில் இறக்கி ஆற வைத்து இந்தப்பாகைக் கல்வத்திலிருக்கிற மருந்தில் சிறுகச்சிறுக வார்த்து அரைக்கவேண்டும். இந்தப் பாகெல்லாம் சென்றபின்பு தேங்காய்த் தனிப்பால் சுமார்

அரைப்படிக்குக் குறையாமல் பிழிந்தெடுத்து மேற்படி கல்வத்தி லிருக்கிற மருந்தில் சிறுகச்சிறுக வார்த்து அரைக்கவேண்டும். இந்தப் பாலெல்லாம் சென்ற பின்பு பீங்கான் சிமிழில் வைத்துப் பத்திரப்படுத்தவேண்டும்.

குறிப்பு :—இதற்கு கௌசிகர் மை என்கிற உலகறிந்த பெயர் உண்டு. சில முறைகளில் தேங்காய் ஓட்டின் கரி நான்கு வராகன் எடை என்றும், பனைவெல்லம் 1 பலம் என்றும் காணலாம். இங்கு நமது பெரியோர்களின் கைபாகப்படி அரைப்பு, தேங்காய் ஓட்டின் கரி, பனைவெல்லம் ஆகியவைகளின் எடை முதலியவை களை எழுதி இருக்கின்றோம். பத்து பலம் பனைவெல்லத்தைச் சேர்த்தால் தான் சாதாரணமாக எல்லோருக்கும் உபயோகித்து வரலாம். வெகுட்டல், குமட்டல் ஆகியவைகள் உண்டாகா. இது அநேக அனுபவ வைத்தியர்களுக்குத் தெரிந்தே இருக்கும். ஆயினும் நமது அனுபவப்படியும், நமது பரம்பரையார்களின் அனுபவப்படியும் எழுதி இருக்கின்றோம். அநேக சிறந்த மருந்து களில் இதுவும் ஒன்று. இது எல்லா நோய்களிலும் உபயோகித்துக் கைகண்டமருந்து. இதன் துணைமருந்து, தீரும்நோய் முதலியவை களெல்லாம் கௌசிகர் மை என்னும் சிறிய புத்தகத்தில் அச்சிடப் பட்டிருக்கின்றன. ஆனால், அதில் சொல்லியிருக்கிற முறைப்படி எழுதாமல் அனுபவமுறைப்படி எழுதி இருப்பதால் இதில் எவ்வித தீய குணமும் இல்லை. எவ்வித பயமுமில்லாமல் உடல் வலிமை, உடல்வளமை ஆகியவைகளுக்குத் தகுந்த அளவுப்படி உட் கொள்ளலாம்.

அளவு :—$\frac{1}{2}$ முதல் 3 குன்றிமணி எடை. கழிச்சலாக வேண்டு மானல் உடல்வலிமைக்கு தகுந்தபடி நான்கு குன்றிமணி வரையில் கொடுக்கலாம்.

துணைமருந்து :—பனைவெல்லம், வாழைப்பழம், வெண்ணெய், சுக்கை அரைத்த விழுது முதலியவைகளாம். இதன் துணை மருந்தை விபரமாகத் தெரிந்துக் கொள்ள விருப்பமுள்ளவர்கள் கௌசிகர் மை என்னும் சிறிய புத்தகத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவும். இங்கு எழுதுவதானல் இச் சிறிய நூல் மிகவிரிவெய்து மெனப் பயந்து குறிப்பாகக் காட்டி நிறுத்திஞேம்.

தீரும்நோய் :—எண்பது வகை வாதம், நாற்பது வகை பித்தம், இருபது வகை ஐயம் ஆகிய நோய்களும், பலவகை சுரங்களும், பதின் மூன்று வகை சன்னியும், எழுவகை தோடங்களும், எண் வகைக் குன்மங்களும், பதினெட்டு சூலைகளும், உதிர சம்பந்தமான

எல்லா வியாதிகளும் தீரும். நல்லபாம்பு நஞ்சு, பதினெட்டு வகை எலிக்கடி நஞ்சுகள், பேய்நாய்க்கடி, ஓநாய்க்கடி, நரிக்கடி, பூரான்கடி முதலிய எல்லா நஞ்சுகளும் தீரும். நஞ்சுகளைத் தீர்க்கும் சக்தி இதற்குஅதிகமாக இருப்பதால் இதற்கு விடாமிர்தமெனப் பெயரிடப் பட்டிருக்கிறது. மருத்துவ பயிற்சியாளர்கள் இதன் சிறந்த குணத்தைத் தெரிந்திருப்பார்களாகையால் இங்கு அதிகமாய் எழுதாது சுருக்கமாகக் காட்டியிருக்கின்றோம். அபாயகரமான நேரங்களில் இது நல்ல உதவி செய்யக் கூடியதாகையால் சிறந்த வைத்தியர்களிடத்தில் எப்போதும் கைவசம் இருக்க வேண்டியது.

மருந்துணவு :— நோய்வலிமை, உடல்வலிமை ஆகியவை களுக்குத் தகுந்தபடி ஏற்படுத்த வேண்டியது.

970. இரசமெழுகு

தூய்மை செய்த இரசம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), நெல்லிக் காய்க் கெந்தகம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்). வீரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), மனோசிலை 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இரச கற்பூரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இலிங்கம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), பொரித்த சீனாகாரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), பொரித்த துருசு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), நவச்சாரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), தாய்ப்பால் செல்லத்தக்க அளவு, முருங்கைப் பட்டைச்சாறு, தேன் இவ்விரண்டும் சமமாகக் கலந்தது செல்லத் தக்க அளவு.

செய்முறை :—இரசத்தையும், கெந்தகத்தையும் கலந்து கரைத்து நன்ருகக் கறுத்த பின்பு வீரத்தைச் சேர்த்தரைக்க வேண்டும் மற்ற சரக்குகளையும் தனித் தனியாகப் பொடித்துக் கல்வத்திலிருக்கிற மருந்துடன் சேர்த்துக் கைவிடாமல் இரண்டு மணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு இதனை எடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டு மருந்து அமிழ்ந்திருக்கும்படி தாய்ப் பாலை விட வேண்டும். விட்ட தாய்ப்பால் சுவறின பின்பு மறு படியும் முன்போல தாய்ப்பாலை விடவேண்டும். இதுவும் சுவறின வுடன் மூன்ருந் தடவையும் விட்டுச் சுவறின பின்பு எடுத்துக் கல்வத்திலிட்டு முருங்கைப் பட்டைச் சாற்றையும் தேனையும் கலந்து வைத்திருக்கிற திரவத்தைச் சிறுகச் சிறுக வார்த்து மூன்று சாம நேரமரைத்து மெழுகு பதத்தில் பீங்கான் சிமிழில் பத்திரப் படுத்தவும்.

அளவு :— $\frac{1}{2}$ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :—பனைவெல்லம், சுக்கை அரைத்த விழுது, வெண்ணெய், சர்க்கரை, இளகங்கள் ஆகியவைகளாகும்.

தீரும்நோய்கள் :— சூலை, வாயு, மேகப்புண், வயிற்றுவலி, பாரிச வாயு, முடக்குவாதம், அண்டவாதம், ஆனைக்கால் வீக்கம், ஆனைக்கால் சுரம் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு :— நோய்வலிமை, உடல்வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தபடியும் உப்புப் புளியைச் சேர்த்தும் சேர்க்காமலும் பத்தியம் வைக்கவும்.

971. நவரசமெழுகு

தூய்மை செய்த இரசம், கருவங்கம், நாபி, நிர்விஷம், லிங்கம், அரிதாரம், மனோசிலை, வெள்ளைப் பாடாணம், பொரித்த படிகாரம், தீமுருகற் பாடாணம், காந்தம், பொரித்த துத்தம், பொரித்த துருசு, இந்துப்பு, கெந்தகம், முசுறுமுட்டை, மேற்றோல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, வால்மிளகு, தோலுரித்த வெள்ளுள்ளி, கருஞ்சீரகம், பொரித்த பெருங்காயம், பொரித்த வெண்காரம் இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), நேர்வாளப் பருப்பு 2½ பலம் (87½ கிராம்), உத்தாமணிச் சாறு செல்லத்தக்க அளவு, தேங்காய்ப் பால் செல்லத்தக்க அளவு, தேங்காய் ஓட்டுக் கரித்தூள் 1 பலம் (35 கிராம்), பனைவெல்லம் 10 பலம் (350 கிராம்).

செய்முறை :—இரசத்தையும் வங்கத்தையும் கலந்து அரைத்துக் கெந்தகத்தைச் சேர்த்து அரைத்துத் தனியே எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும் தூள் செய்யவேண்டிய சரக்குகளைத் தூள் செய்து மேற் சொல்லிய எடை நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். இலிங்கம் முதலியவைகளைத் தனித்தனி பொடித்துத் தனித்தனி எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு எல்லாவற்றையும் ஒன்றாகக் கல்வத்திற் போட்டு இரண்டு சாம நேரம் கைவிடாமல் அரைத்து விட்டு விட வேண்டும். மறுநாள் உத்தாமணிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைத்து விட்டுவிடவேண்டும். ஈரம் உலர்ந்த பிறகு மறுநாட் காலையிலும் முன்போலவே உத்தாமணிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைக்க வேண்டும். ஈரம் உலர உலர மறுபடியும் இரண்டாம் நாள் காலையில் இரண்டு சாம நேரம் அரைத்து நிழலில் காற்றாட வைத்து ஈரமுலர்ந்த பின்பு தேங்காய் ஓட்டின் கரியைச் சேர்த்துத் தேங்காய்ப் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் தொடர்ச்சியாக அரைக்க வேண்டியது. பனைவெல்லத்தை நறுக்கிக் கொஞ்சம் தண்ணீரில் போட்டுக் காய்ச்சி வடிகட்டித் திப்பி நீக்கி மறுபடியும்

காய்ச்சிக் கெட்டிப் பாகு பதத்தில் இறக்கி ஆறின பின்பு இதனைச் சிறுகச் சிறுக விட்டு மேற்படி மருந்தை அரைக்க வேண்டும். பாகெல்லாம் சென்ற பின்பு மெழுகு பதத்தில் எடுத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப் படுத்தவும்.

குறிப்பு :—இந்த முறையில் சிலர் பனைவெல்லம் முதலியவைகளைக் குறைத்துச் செய்வதுண்டு. ஆனால், அனுபவத்தில் மருந்துகளின் சம னெடை பனைவெல்லத்தைச் சேர்க்க வேண்டியது மருத்துவ நூல் முடிவாகும். இப்படிச் சேர்த்துச் செய்வதனால் அநேக நன்மைகளுக்குக் காரணமாக இருப்பதையும் அனுபவத்தால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இதனை சிறுவர் முதல் முதியவர் வரையில் எல்லோருக்கும், இளமைமிகு உடலார், பெண் மணிகள் ஆகியவர்களுக்கும் உபயோகிக்கலாம்.

அளவு :—1 முதல் 4 குன்றிமணி எடை. இன்னும் உடல் வலிமை, நோய்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடியும் அளவுதனைக் கொஞ்சம் அதிகப்படுத்தியும்.கொடுக்கலாம் இதன் அளவுதனை பழக்கத்தில் அவரவர்கள் தாமே தெரிந்துக் கொள்ளக் கூடும்.

துணைமருந்தும், தீரும் நோயும் :—வெந்நீரில் காலை, மாலை இரண்டு வேளையும் மூன்று நாள் துணை மருந்துகளில் கலந்துண்ண சன்னி பதின்மூன்றும் தீரும்.

இஞ்சிச்சாறு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் கலந்து மேற்படி மருந்தை சேர்த்து உட்கொள்ள வாதசுரம் தீரும்.

இஞ்சிச்சுரசம் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்) தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் கலந்து அளவுப்படி சேர்த்து உட்கொள்ள பித்தசுரம் தீரும்.

வறுத்துத் தூள்செய்த அரிசித் திப்பிலித் தூள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் கலந்து அளவுப்படி சேர்த்து உட்கொள்ள கபசுரம் தீரும்.

கழுதைப்பால் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து அளவுப்படி சேர்த்து உட்கொள்ள பயித்திய சன்னி தீரும்.

குமட்டிக்காய் உப்பு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), சிற்றுமணக் கெண்ணெய் 2 வராகன் எடை (7 கிராம்), 3 தேன் வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இம் மூன்றையும் சேர்த்தரைத்து இதில் மேற்படி மருந்தைச் சேர்த்து உட்கொள்ள பாண்டு, சோகை, மஞ்சள் நோய், பெருவயிறு ஆகியவை தீரும்.

குறிப்பு :—குமட்டிக்காய் உப்பினல் சிலருக்கு வயிற்றுப் பிடுங்கல். வயிற்றுவலி ஆகியவை உண்டாகும். அத்தகையினர் களுக்கு விளக்கெண்ணெயைக் கொஞ்சம் அதிகப்படுத்திக் கொடுத்தால் அவ்வித தீய குணம் நீங்கிப்போகும். நோய்வலிமை, உடல்வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி சமயோசிதம்போல் மேற்படிஉப்பை அதிகப்படுத்தியும் குறைத்தும் கொள்ளலாம்.

கற்பூரவெற்றிலைச் சாறு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), தேன் 3 வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து அளவுப்படி மேற்படி மருந்தைச் சேர்த்து உட்கொள்ள சுரக்கட்டி, ஆமக்கட்டி, குன்மக்கட்டி, சூதகக்கட்டி ஆகியவைகள் தீரும்.

குறிப்பு :—உடம்பின் மீது உண்டாகும் கட்டிகளுக்கு மேற் கண்ட துணைமருந்தில் குழைத்துக் கட்டியின் மேல்பூச அதைப் பழுக்கச் செய்து உடைக்கும்.

சிறுநீர் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்) தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் கலந்து மருந்துடன் சேர்த்து உண்ண தேள்நஞ்சு, பாம்புநஞ்சு, எலிநஞ்சு, நாய்நஞ்சு, சலமண்டலி நஞ்சு, நரி நஞ்சு, முதலிய எல்லா நஞ்சுகளும் தீரும்.

குறிப்பு :—நஞ்சானது தலைக்கேறி உணர்வில்லாதிருக்கும் நிலையில் இதனைக் கடுகளவு எடுத்து எலும்மிச்சம் பழச்சாற்றில் கலந்து கண்ணில் கலிக்கமிட, உணர்வுண்டாகும். பிறகு கண்ணில் எரிவந்த மிருந்தால், கற்றுழைச்சாறு, சீரகம் இவ்விரண்டையும் சேர்த்து வெண்ணெயிற் கலந்து ஒரு துணியில் பொட்டணமாக கட்டிக்கொண்டு கண்ணில் ஒற்றிவர அந்த எரிவந்தம் தீரும். இன்னும் இழைத்த சந்தனத்தையும் சுடுசாதத்தையும் கலந்து கொஞ்சம் வெண்ணெயில் குழைத்து முன்போல் துணியில் முடிந்து ஒற்றடமிட அந்த எரிவந்தம் தீரும்.

எலுமிச்சம்பழச் சாற்றில் இதனைக் கலந்து மேலே பூசிவர வண்டு கடி, படர்தாமரை முதலியவைகள் தீரும்.

நீர்முள்ளி உப்பு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) சிற்றுமணக்கு எண்ணெய் 2 வராகன் எடை (7 கிராம்), தேன் 2 வராகன் எடை (7 கிராம்), இம் மூன்றையும் சேர்த்தரைத்து இதில் மேற்படி மருந்தைச் சேர்த்து உட்கொள்ள பாண்டு, சோகை, மஞ்சள்நோய், பெருவயிறு, கல்லடைப்பு, சதைஅடைப்பு ஆகியநோய்கள் தீரும்.

குறிப்பு :— நீர்முள்ளி உப்பினுல் சிலருக்கு வயிற்றுவலி உண்டாகலாம். அத்தகையவர்களுக்குப் பழச்சாறு 1 பங்கு, தேன் 2 பங்கு, தண்ணீர் 4 பங்கும் சேர்த்துக் கொடுத்தால் அவ்வித தீயகுணம் நீங்கிப்போகும். நோய்வலிமை, உடல்வலிமை, ஆகியவைகளுக்குத் தகுந்தபடி சமயோசிதம்போல் மேற்படி உப்பை அதிகப்படுத்தியும் குறைத்தும் உட்கொள்ளலாம்.

“குன்மச்குடோரி” சமூலச்சாறு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து அளவுப்படி மேற்படி மருந்தைச்சேர்த்து உட்கொள்ள சுரக்கட்டி, ஆமக்கட்டி, குன்மக்கட்டி, சூதகக்கட்டி, சூதகவலி ஆகியவைகள் குணமாகும்.

குறிப்பு :— உடம்பின் மீதுண்டாகும் கட்டிகளுக்கு மேற் கூறப்பெற்ற துணைமருந்தில் குழைத்து மேலேபூச, அதைப் பழுக்கச் செய்து உடைப்பதுடன் வீக்கங்களையும் வாட வைக்கும்.

ஈறுத கிடேரியின் நீர் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மருந்துடன் சேர்த்து உண்ண தேள் நஞ்சு, பாம்புநஞ்சு, எலிநஞ்சு, நாய் நஞ்சு, நீர்மண்டலிநஞ்சு, நரிநஞ்சு, முதலிய எல்லா நஞ்சுகளும் தீரும்.

குறிப்பு : – நஞ்சானது தலைக்கேறி உணர் வில்லாதிருக்கும் நிலையில் இதனைக் கடுகளவு எடுத்து மிளகைச் சேர்த்தரைத்து பழச்சாற்றில் இழைத்து கண்ணில் கலிக்கமிட்டால் உணர்வுண்டாகும். பிறகு கண்ணில் எரிவந்தம் இருந்தால், கற்றாழைச்சாறு, சீரகம், அவித்த கோழிமுட்டையின் வெண்கரு இம் மூன்றையும் சேர்த்து வெண்ணெயில் கலந்து ஒரு துணியில் பொட்டலமாகக் கட்டிக் கொண்டு கண்ணில் ஒற்றிவர எரிவந்தம் தீரும். சுடு சாதத்தில் கொஞ்சம் வெண்ணெயைக் கலந்து துணியில் முடிந்து ஒற்றடமிட எரிவந்தம் தீரும்.

சூதகம் நின்று மூன்றும்நாள் தலைமுழுக்குச்செய்து நான்காம் நாள்முதல் நான்கு நாள் வரையில் ஒவ்வொரு காலையிலும் 3 பலம் (105 கிராம்), வெள்ளாட்டுப்பால் 1 பலம் (35 கிராம்), தேன்

இவ்விரண்டையும் கலந்து மேற்படி மருந்தை அளவுப்படி உட் கொண்டுவர கருப்பையிலுள்ள மாசுகள் நீங்கி கருத்தரிக்க ஏதுவாகும்.

பால்கோவா 3 வராகன் எடையில் (10½ கிராம்), மருந்தை அளவுப்படி கலந்துட்கொண்டு அதன்மீது காய்ச்சிக் கற்கண்டிட்ட பசுவின் பாலைச்செரித்தலுக்குத் தகுந்தபடி பருகச் செய்து வர தாது வலிமை உண்டாகும்.

பசுவின் வெண்ணெய் 5 வராகன் எடை (17½ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற் படி மருந்தை அளவுப்படி உட்கொண்டுவர ஒன்பது வகை மூல நோயும் தீரும்.

தேன் 3 வராகன் எடை (10½ கிராம்), இதில் மேற்படி மருந்தை அளவுப்படி உட்கொள்ள கை கால் குடைச்சல், பிடிப்பு முதலியவை தீரும்.

பசுவின் நெய் 3 வராகன் எடை (10½ கிராம்), தேன் 3 வரா கன் எடை (10½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்படி மருந்தை அளவுப்படி உட்கொள்ள இளைத்த உடல் பருக்கும்.

காய்ச்சி நுரைநீக்கி தூய்மைசெய்த தேன் 5 முதல் 7 வராகன் எடை (17½ முதல் 24½ கிராம்), இதில் மேற்படி மருந்தை அளவுப்படி கலந்து உட்கொண்டுவர பெருத்த உடல் இளைக்கும்.

ஆனைநெருஞ்சிச் செடியை கொஞ்சம் நீராகார நீரில் போட்டுக் கலக்கினால் வழுவழுப்பான நீராகிவிடும். அந்த நீர் 10 வராகன் எடை (35 கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்), இவ் விரண்டையும் கலந்து மேற்படி மருந்தை அளவுப்படி உட்கொள்ள மேகம், காங்கை, உட்சூடு, எலும்புச்சூடு, ஆகியவை தீரும்.

கொடிவேலி வேர்ப்பட்டைச்சாறு 1 வராகன்எடை (3½ கிராம்), தேன் 3 வராகன் எடை (10½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்படி மருந்தை அளவுப்படி உட்கொள்ள கடிநஞ்சு தீரும்.

எலுமிச்சம்பழச்சாறு 1 வராகன் எடை (3½ கிராம்), விளக் கெண்ணெய் 3 வராகன் எடை (10½ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்படி மருந்தில் கொஞ்சம் எடுத்துக் கரைத்து இரணங் களின் மீது பூசிவர அந்த ரணங்கள் ஆறிப்போகும்.

தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), மேற்படி மருந்து ஒரு குன்றிமணி எடை. இவ்விரண்டையும் குழப்பிப் பல்வலியுள்ள இடத்தில் கைவிரலால் தொட்டுத் தடவி வைக்க எச்சில் ஊறிக் கொண்டே இருக்கும். அதனைத் துப்பிக் கொண்டே இருந்து கால் அல்லது அரைமணி நேரம் சென்ற பின்பு வெந்நீரால் வாயைக் கொப்பளித்து தூய்மை செய்து கொள்ளவும். இவ்விதம் இரண்டு மூன்று தினங்கள் செய்தால் பல்வலி, ஈறுவலி முதலிய நோய்கள் தீரும்.

இதனைக் கொஞ்சமெடுத்து தூய நீரில் கரைத்து மேற்பூசிவர முழங்கால் வலி, இடுப்புவலி முதலியவை தீரும்.

மேற்படி மருந்தைக் காகிதத்தில் தடவிப் புகை பிடிக்கச் சூலை தீரும்.

எலுமிச்சம்பழச்சாறு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), வெள் ளறுகுச் சாறு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), நல்லெண்ணெய் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இம் மூன்றையும் கலந்து மேற்படி மருந்தை அளவுப்படி உட்கொண்டுவர வெட்டை, அரையாப்பு முதலியவை தீரும்.

குப்பைமேனியிலை ஒரு பிடி, மிளகு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), இவ் விரண்டையும் சட்டியில் போட்டுக் கறுக்கி அரைப்படி தண்ணீர் வார்த்து மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்து வடிகட்டி இறக்கின குடிநீரில் மேற்படி மருந்தை அளவுப்படி சேர்த்து உட் கொண்டுவர விதைவாதம், அண்டவாயு, விரைவீக்கம் ஆகியவை கள் தீரும். விதைவீக்கம் அதிகமாக இருந்தால் கழற்சி இலையையும் கழுதைலத்தியையும் வேகவைத்து ஒற்றடமிட்டு வருவதினால் அதிக குணமுண்டாகும். தண்ணீரில் குழைத்துத் தடவ ஆணி விழுந்த புண் தீரும்.

பறங்கிப்பட்டைத் தூள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), வெள்ளறுகு இலைத்தூள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), கொடிவேலி வேர்ப்பட்டைத் தூள் $\frac{1}{2}$ வராகன் எடை, சிற்றாமணக்கெண்ணெய் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இவையெல்லாவற்றையும் கலந்து மேற்கண்ட மருந்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள கருமேகம் தீரும்.

பூவரசம்பட்டை 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), சீரகம் 3 வரா கன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் சிதைத்துக் காற்படி நீரில் போட்டுக் காய்ச்சி மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்

திறக்கி வடிகட்டின குடிநீரில் மூன்று வராகன் எடை தேனை விட்டுக் கலந்து மேற்படி மருந்தைச் சேர்த்து உட்கொள்ள வெண் மேகம் தீரும்.

கலியாண முருங்கை வேர்ப்பட்டைத் தூள் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இவ் விரண்டையும் கலந்து மேற்படி மருந்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள கருங்குட்டம் தீரும்.

மாவிலிங்கப் பட்டைச்சாறு, கழற்சிப்பருப்புத் தூள், கோழி முட்டைக்கரு, நெய் ஆகியவைகளைச் சட்டியில் போட்டு இளகம் போல் கிளறி அதில் சிறிது எடுத்து மேற்படி மருந்தை அளவுப்படி கலந்து உட்கொள்ள அண்டவாதம், விதைவாதம், குடல் வாதம் தீரும்.

பிரமதண்டுச் சாறு 5 வராகன் எடை, ($17\frac{1}{2}$ கிராம்) பசுவின் பால் $\frac{1}{2}$ ஆழாக்கு, தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இவற்றை கலந்து மேற்படி மருந்தை சேர்த்து உட்கொள்ள பிரமேகம், இரத்தமேகம் முதலியவைகள் தீரும்.

வேப்பம்பட்டை, பூவரசம்பட்டை, ஆலம்பட்டை, இவைகள் வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), சேர்த்திடித்துக் கால்படி தண்ணீர் விட்டுக் காய்ச்சி மூன்றிலொரு பாகம் சுண்டின பின்பு இறக்கி வடிகட்டி அதில் மேற்படி மருந்தை அளவுப்படி சேர்த்து உட் கொள்ள பீனிசம், கண்டமாலை, பவுத்திரம், கரப்பான்கட்டு, சூலை ஆகியவை தீரும். மோது கட்டியிருந்தால் மேற்படி மருந்தை மேலே பூசவும்.

நல்வேளைச்சாறு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்படி மருந்தை அளவுப்படி கலந்து உட்கொள்ள தீராத கபாலசூலை ஒற்றைத் தலைவலி, குடைச்சல் முதலியவை தீரும்.

முள்ளங்கிச்சாறு 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்), தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்படி மருந்தை அளவுப்படி கலந்து உட்கொண்டு வர நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு முதலியவை தீரும்.

ஆவாரை வேர்ப்பட்டை, தேற்றான்கொட்டை, தென்னங் குறும்பை, வெள்ளைக் குன்றிமணி வேர்ப்பட்டை, காட்டாத்திப் பூ இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் வீதம் இவைகளைச் சிதைத்துக் கால்படி தண்ணீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகக் காய்ச்சி இறக்கி வடிகட்டி அதில் தேவையான அளவு வெண்ணெயும் கற்கண்டும்

போட்டு மேற்படி மருந்தை அளவுப்படி கலந்து உட்கொள்ள நீரிழிவு, மதுமேகம் முதலியவை தீரும். இதனால் சூடு அதிகப் பட்டால் சீரகக் குடிநீரில் வெண்ணெய் போட்டுக் கொடுக்கவும்.

நிலப்பனைக்கிழங்கு $\frac{1}{2}$ பலம் (17$\frac{1}{2}$ கிராம்), சங்கங்குப்பிப் பட்டை $\frac{1}{2}$ பலம் (17$\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் சிதைத்துக் கால்படி தண்ணீர் விட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்திறக்கி வடிகட்டி மூன்று வராகன் எடை (10$\frac{1}{2}$ கிராம்) தேனைச் சேர்த்து அதில் மேற்படி மருந்தை அளவுப்படி கலந்து உட்கொள்ள யானைத்தடிப்பு தீரும்.

வெந்தயம், ஏலரிசி, லவங்கம் இவை வகைக்கு 3 வராகன் எடை (10$\frac{1}{2}$ கிராம்), இவற்றைச் சிதைத்துக் கால்படி தண்ணீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகக் காய்ச்சி மூன்று வராகன் எடை (10$\frac{1}{2}$ கிராம்) தேனைக் கலந்து அதில் மேற்படி மருந்தை அளவுப் படி கலந்து உட்கொள்ள குருதி எருவாய்முளை, குருதிக்கழிச்சல் முதலியவை தீரும். வெண்ணெய், தயிர் முதலியவற்றிலும் கலந்து கொடுக்கலாம்.

முருங்கைப்பட்டைச்சாறு 3 வராகன் எடை (10$\frac{1}{2}$கிராம்), தேன் 3 வராகன் எடை (10$\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற் கண்ட மருந்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள குன்மம், திமிர்நோய் முதலியவைகள் தீரும்.

இண்டு சமூலம், மேல் தோல் சீவின சுக்கு, நெற்பொரி, சீரகம் இவை வகைக்கு 2$\frac{1}{2}$ வராகன் எடை (8$\frac{3}{4}$ கிராம்), இவற்றைச் சிதைத்துக் கால்படி தண்ணீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டக் காய்ச்சி இறக்கி வடிகட்டி அதில் கொஞ்சம் நெய் விட்டு மேற்படி மருந்தை அளவுப்படி கலந்து உட்கொள்ள வெள்ளை, வெட்டை முதலிய நோய்கள் தீரும்.

வெண்ணெய் 3 வராகன் எடை (10$\frac{1}{2}$ கிராம்), தேன் 3 வராகன் எடை (10$\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்படி மருந்தை சேர்த்து உட்கொண்டு மேற்படி மருந்தை வெண்ணெய் பூவரசம் பட்டைச் சாம்பல் ஆகியவைகளுடன் கலந்து மேற்பூசி, பத்தி ராட்ச இலையாவது சுரையிலையாவது மேல் வைத்துக் கட்டிவரத் தொடைவாழை, பக்கப்பிளவை, இராசபிளவை முதலியவை தீரும்.

எலுமிச்சம்பழச்சாறு 1 வராகன் எடை (3$\frac{1}{2}$ கிராம்), தேன் 2 வராகன் எடை (7 கிராம்) இவ்விரண்டையும் கலந்து மேற்படி மருந்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள குளிர்சுரம், சன்னி முதலியவை தீரும்.

வில்வப்பட்டை 1 பலம் ($3\frac{1}{2}$ கிராம்), இதனைச் சிதைத்துக் கால்படி தண்ணீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்திறக்கி வடிகட்டி அதில் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்) தேனைக்கலந்து மேற்படி மருந்தை அளவுப்படி சேர்த்து உட்கொண்டுவர வெடிமேகம் தீரும்.

சுக்கு $\frac{1}{2}$ பலம், வசம்பைச் சுட்டெரித்த சாம்பல், ஓமச்சாம்பல் பூநாகபற்பம், வெற்றிலைக்கொடிச் சாம்பல் ஆகிய இவைகள் வகைக்கு $\frac{1}{4}$ வராகன் எடை மேற்சுக்கைச் சிதைத்து ஒன்றரை ஆழாக்கு தண்ணீரில் போட்டு அரையாழாக்காகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி இறக்கி அதில் மேற்படி சாம்பல்களையும் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்) தேனையும் விட்டுக் கலந்து அக்கலவையில் மேற்படி மருந்தை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள நச்சுபேதி முதலிய கழிச்சல் வகைகள் தீரும்.

மருந்துணவு:—இச்சாபத்தியம்.

972. பஞ்சசூத மாத்திரை

தூய்மை செய்த வீரம், பூரம், இலிங்கம், இரசசெந்தூரம், இரசம் இவை வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) வெற்றிலைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் வீரத்தையும் தொந்தித்தரைத்து இரசம் மடிந்த பின்பு மற்ற மூன்று சரக்கையும் தனித்தனி சேர்த்துப் பொடித்து வெற்றிலைச்சாற்றை சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாம நேரமரைத்துக் கசகசா அளவு மாத்திரைகளாகச் செய்து நிழலில் உலர்த்தி பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்தவும்.

துணைமருந்து:— பனைவெல்லம், சர்க்கரை, சுக்கையரைத்த விழுது ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள்:—சுரம், சன்னி, சைத்தியம் ஆகியவை தீரும்.

973. பஞ்சசூத மாத்திரை (வேறு)

நல்லெண்ணெயில் துலாந்திரங் கட்டி எரித்தெடுத்துப் பிறகு எருமைச்சாணியில் ஊறவைத்துக் கழுவி உலர்த்தி தூய்மைசெய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), பசுவின் கோமியத்தில் இருநூறு நாழிகை ஊற வைத்துலர்த்தி கருநாபி 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), உப்பிலிக்கொடிச் சாற்றில் அரைத்துப் பிழிந்த இரசம் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), எருமைச்சாணியில்

ஊறவைத்தெடுத்து முளைபோக்கிப் பசுவின் பாலில் வேகவைத்து உலர்த்திய வாளம் 24 வராகன் எடை (84 கிராம்), ஒருபடி கல் சுண்ணத்தைக் கீழுமேலுமிட்டு நடுவே கட்டியை வைத்து வெந்நீரைப் பொங்கக் காய்ச்சி அதன்மேல் விட்டு நீற்றி எடுத்துக் கழுவி உலர்த்திய பொன்னரிதாரம் $1\frac{1}{2}$ வராகன் எடை (5$\frac{1}{4}$ கிராம்) முந்திரியுப்பு 1 துலாம் எருமைச்சாணியில் பிசறிக் கழுவியுலர்த்திய நாட்டு வெண்காரம் 3 வராகன் எடை (10$\frac{1}{2}$ கிராம்), கருநாபியைப்போல் நெரிவிடம் அல்லது வெண்ணபி 3 வராகன் எடை நல்ல பெருங்காயம் 3 வராகன் எடை திறமான கஸ்தூரி $1\frac{1}{2}$ வராகன் எடை, தேங்காய் ஓடு சுட்ட கரித்தூள் 5 வராகன் எடை, இளநீர் $\frac{1}{4}$ படி, உத்தாமணிச்சாறு $\frac{1}{4}$ படி.

செய்முறை :- இரசத்தையும் கெந்தகத்தையும் கலக்கும்படி அரைத்து நன்ருகக் கறுத்த பின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்துச் சேர்த்து இரண்டு சாம நேரம் கைவிடாமல் அரைத்துப் பிறகு உத்தாமணிச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து அரைத்துப் பயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.

அளவு :— 1 முதல் 2 மாத்திரை.

துணை மருந்து :—பனைவெல்லம், தேன், வெண்ணெய், சுக்கை அரைத்த விழுது முதலியவைகளாம்.

தீரும்நோய் :—சன்னி, சயித்தியம், குளிர்மை, வாதம, கபநோய், வயிற்று நோய், குன்மவலி, பாரிசவாயு, பக்கவாதம், முகவாதம், வாய்க்கோணல், அனைத்துக்கடி நஞ்சுகள், குதிரை நோய், வாயு நோய்கள் சகலமும் தீரும்.

974. சுரக்குடோரி

தூய்மை செய்த பாடாணம், லிங்கம், இரசம், அரிதாரம், பொரித்த சீனக்காரம், தவாச்சாரம், சூடன் இவை வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை, தூய்மை செய்த நேர்வாளப்பருப்பு $1\frac{1}{4}$ வராகன் எடை, கொம்புப்பாகலிலைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—இரசத்தையும், பாடாணத்தையும் கலக்கும்படி அரைத்து மற்ற சரக்குகளையும் தனித்தனியாகப் பொடித்துச் சேர்த்து ஒரு சாம நேரம் நன்ருக கலக்கும் படி அரைத்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்துச் சிறு பயறளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்திப் பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— $\frac{1}{2}$ முதல் 1 மாத்திரை.

அளவும், தீரும் நோய்களும் :—இஞ்சிச் சாற்றில் கலந்துக் கொடுக்க எல்லாவகை சன்னிகளும், சுரங்களும் தீரும். தாய்ப் பாலில் கலந்துக் கொடுக்க ஏழுவகை குற்றங்களும் தீரும்.

975. சுரக்குடோரி (வேறு)

தூய்மை செய்த பாடாணம், லிங்கம், மனோசிலை, கருநாபி, பொரித்த படிக்காரம், இவை வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை, எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :– மேற்கண்ட சரக்குகளைத் தனித்தனி பொடித்துப் பிறகு எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து ஒருசாம நேரம் கைவிடாமல் அரைத்துப் பிறகு எலுமிச்சம்பழச்சாற்றை சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்துப் பயறளவு மாத்திரை கள் செய்து நிழலிலுலர்த்திப் பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—$\frac{1}{2}$ முதல் 1 மாத்திரை.

துணைமருந்து :—தேன், இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர், பனை வெல்லம் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :—எல்லாவகை சுரங்கள், சன்னி, தோடங்கள், வாயு, சூலை ஆகியவை தீரும்.

976. சண்டமாருதக் குழம்பு

தூய்மை செய்த இரசகற்பூரம், இலிங்கம், இரசம், அதிமதுரம், கோட்டம், சாதிக்காய், சாதிப்பத்திரி இவை வகைக்கு 2 வராகன் எடை, ஐம்பது பருமனுள்ள எலுமிச்சம் பழம் பிழிந்த சாறு.

செய்முறை :– மேற்படி சரக்குகளையெல்லாம் தனித்தனியே பொடித்துக் கல்வத்திலிட்டு ஒன்ருகச் சேர்த்து ஒரு சாம நேரம் அரைத்து ஒரு அகலப் பீங்கானில் போட்டு எலுமிச்சம்பழச் சாற்றை அதில் விட்டு வெய்யிலில் வைத்துச் சுண்டினபின்பு எடுத்து வேறு பீங்கானில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—$\frac{1}{2}$ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :—பனைவெல்லம், சர்க்கரை, இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :– சன்னி, சயித்தியம், தோடம், நச்சுக் கழிச்சல், நச்சுக் கழிச்சலில் உண்டாகும் கைகால் குளிர்ச்சி, நச்சுக் கழிச்சலில் உண்டாகும் தீக்குணங்கள் ஆகியவை தீரும்.

தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம், நாட்டுவெண்காரம், இரசம், மிளகு, மேல்தோல் சீவின சுக்கு, திப்பிலி, சீரகம், கருஞ் சீரகம், தேசாவரம், செவ்வியம், ஓமம் இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்).

செய்முறை :—இரசத்தையும் கெந்தகத்தையும் கலந்து அரைத்து மற்ற சரக்குகளையும் தனித்தனித் தூள் செய்தும் பொடித்தும் சேர்த்து எல்லாம் கலக்கும்படி இரண்டு சாம நேரம் அரைத்து புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—¼ முதல் ¾ வராகன் எடை.

துணைமருந்து :—தேன், சர்க்கரை, நெய்

தீரும்நோய்கள் :—செரியாமைக் கழிச்சல். நச்சுக் கழிச்சல், தொடர் கழிச்சல், பெருங் கழிச்சல், வாயு, கபம், சூலை, சுரம், சன்னி முதலிய நோய்கள் தீரும்.

977. புசண்டர் ராமபாண மாத்திரை

(அ) தூய்மை செய்த அரிதாரம் 1 வராகன் எடை (3½ கிராம்) (இதனைத் தூள்செய்து கொள்ளவும்). கொள்ளுடன் சேர்த்து வேக வைத்து, கொள்ளு வெந்த பதத்தில் எடுத்து ஈரத்தை உலர்த்திக் கொள்ளவும். தூய்மை செய்த காந்தம் 1 வராகன் எடை (3½ கிராம்), (இதனையும் தனியே தூள் செய்து கொள்க). இரசம் 1 வராகன் எடை (3½ கிராம்). கெந்தகம் 1 வராகன் எடை (3½ கிராம்), (இவ்விரண்டையும் கலந்து நன்ருகக் கறுக்கிற வரையில் அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.) இந்துப்பு, பொரித்ததுருசு, பால் துத்தம் இவற்றைத் தனித்தனியே பொடித்த தூள் வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்).

(ஆ) மேல் தோல் போக்கின எள்ளு, நாற்பதுநாள் பசும் பாலில் ஊற வைத்தெடுத்துக் கழுவி உலர்த்தி இடித்த எட்டிக் கொட்டைத் தூள், சாணிப் பாலில் மூக்கு வெட்டிப் போட்டுக் காய்ச்சி எடுத்து உலர்த்தி இடித்த சேராங் கொட்டைத் தூள், கொடிவேலி வேர்ப்பட்டைத் தூள், மஞ்சள் தூள், ஓமத் தூள், மாசிக்காய்த் தூள், சாதிக்காய்த் தூள், வசம்புத் தூள், தோலுரித்த வெள்ளைப் பூண்டு, கொள்ளுமா கோட்டத்தூள், கார்போகரிசித் தூள் இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்).

தக்கோலம் 2½ பலம் (87½ கிராம்), அக்கிராகாரம் 2½ பலம் (87½ கிராம்), இவ்விரண்டையும் சிதைத்து ஒருபடி தண்ணீரில் போட்டு நான்கில் ஒரு பாகமாகக் காய்ச்சி சுண்டவைத்து இறக்கி வடிகட்டித் திப்பி நீக்கி வைத்துக் கொள்ளவும்.

(ஈ) கோழிமுட்டை வெள்ளையம்புலி செல்லத்தக்க அளவு.

செய்முறை :—(அ) விலுள்ள தூள்களையும், (ஆ) விலுள்ள தூள்களையும், எள்ளையும், பூண்டையும் ஒன்ருகக் கலந்து கல்லுரலில் இட்டு இருப்புக் கடப்பாரையால் இரண்டு சாமநேரம் கைவிடாமல் இடித்து நிறுத்திவிட வேண்டும். மறுநாள் (இ) யிலுள்ள குடிநீரை சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாம நேரம் இடித்து நிறுத்திவிட வேண்டும், மூன்ரும் நாள் (ஆ) வில் சொல்லியிருக்கிற கோழி முட்டை வெள்ளையம்புலியைச் சிறுகச்சிறுக விட்டு நான்கு சாம நேரம் இடித்து நான்கு குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச்செய்து நிழலிலுர்த்தி பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்த வேண்டும்.

குறிப்பு :—இந்த மருந்தைக் கல்வத்தில் அரைக்கலாகாது. அரைத்தாலும் சிறப்பானக் குணத்தைக் கொடுக்கிறதில்லை. இதனை உரலில் இடித்தே மசித்துத் தீர்க்க வேண்டும். எத்தனை நாள் மசிக்கிருேமோ அத்தனை சிறப்பானக் குணத்தைத் தரும். இடிக்கும் போது குடிநீர் போதாவிடில் மீதியிருக்கிற திப்பியில் தண்ணீரை விட்டுக் காய்ச்சிக் கொள்ளவேண்டியது.

அளவு :—½ முதல் 1 மாத்திரை.

துணைமருந்து :—தேன், நெய், வெண்ணெய், சர்க்கரை ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :—அல்குல் புற்று, லிங்கப்புற்று, கண்டமாலை, அண்டப்புற்று, புண், புரை, சூலை, வாயு, இடிப்புற்று, ஈரல்புற்று, குழிப்புற்று, வெண்குட்டம், முழங்கால்வாதம், சூதகவாயு முதலியவைபோம்.

மருத்துணவு :—மோருஞ் சோறும் சாப்பிட்டு வரவேண்டியது. உடம்புக்கு ஒத்துக் கொள்ளாவிட்டாலும் மோருஞ் சோறும் ஒரு வேளையாவது சாப்பிட்டுவரவேண்டும். மருந்தை நாற்பது நாள் வரை சாப்பிட வேண்டும். பெண்களும் சாப்பிடலாம். மூன்று மாதம் வரையில் புணர்ச்சி கூடாது. வேறு பத்தியமில்லை.

978. மேகசஞ்சீவி மாத்திரை

தூய்மை செய்த வீரம், இரசகற்பூரம், இரசசெந்தூரம், இலிங்கம். இவை வகைக்கு 2½ வராகன் எடை (8¾ கிராம்), மஞ்சள் கடுக்காய் தோல் 10 வராகன் எடை, (35 கிராம்), எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—மேற்கண்ட நான்கு சரக்குகளையும் தனித்தனிப் பொடித்து ஒன்ருகச் சேர்த்து மூன்றுமணி நேரம் கைவிடாமல் அரைத்து எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து ½ குன்றிமணி எடை மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:— ½ முதல் 1 மாத்திரை.

துணைமருந்து:—சர்க்கரை, வெண்ணெய், சுக்கரைத்த விழுது, இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:— பிரமேகம், சீழ்மேகம், தந்திமேகம், கசிவு மேகம், நீர்ப்பை ரணம், நீர்ப்பை அழலே, ஆண்குறி அழலே, ஆண்குறி ரணம் கிரந்திப்புண் ஆகியவைகள் தீரும்.

மருந்துணவு:— சமயோசிதம்போல் உப்பு, புளி ஆகியவை சுளைச் சேர்த்தும் சேர்க்காமலும் பத்தியம் வைக்கவேண்டியது. புணர்ச்சி நீக்குதல் அவசியம்.

குறிப்பு:—இதனுல் பெரும்பாலோர்க்கு வாய் பிடிக்கிறதேயில்லை ஆனல், சிலருக்குச் சில சமயங்களில் கொஞ்சம் வாய் பிடிக்கிற தாகத் தெரிகிறது. அப்படி வாய் பிடித்தால் கெந்தகப் புளிப்பைக் கொஞ்சம் தண்ணீரில் போட்டு வாய் கொப்பளித்து வருவதனுல் இந்த வேகம் தணிந்துபோகும். மருந்து சாப்பிடும்போது தினம் இரண்டொரு தடவை தாம்பூலம் தரித்துக்கொண்டு வந்தாலும் வாய் பிடிக்காது. உடல் இயல்புக்குத் தகுந்தபடி எத்தனை நாள் வேண்டுமோ அத்தனை நாள் மேற்கண்ட வித மாக உபயோகித்து வரலாம்.

979. சுவாசகரசக் குடோரி

தூய்மை செய்த இரசம் 2 பலம் (70 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 2 பலம் (70கிராம்), அரிதாரம் 1 பலம் (35 கிராம்) வறுத்திடித்த அரிசித் திப்பிலித்தூள் 1 பலம் (35கிராம்), வறுத் திடித்த கருஞ்சீரகத்தூள் 1 பலம் (35கிராம்), பொரித்த சீனைக் காரம் 1 பலம் (35 கிராம்).

செய்முறை:— இரசத்தையும், கெந்தகத்தையும் கலந்தரைத்து நன்ருய்க் கறுத்தபின்பு எடுத்துக்கொள்ளவேண்டும். அரிதாரத்தைத் தனியே பொடித்து துணியில் சலித்து எடுத்துக்கொள்ளவேண்டும். மற்ற சரக்குகளையும் தனித்தனியிடித்துத் தூள்களை துணியில் சலித்து மேற்கண்ட நிறைப்படி நிறுத்தெடுத்துக்கொள்ளவேண்டும். பிறகு எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்துக் கல்வத்திலிட்டு

நான்கு சாம நேரம் அரைத்துப் பளிங்குக் குப்பியில் பத்திரப் படுத்தவும். கசகசா குடிநீரை அல்லது கடுக்காய்க் குடிநீரை விட்டு நான்கு சாம நேரமரைத்து இரண்டு குன்றிமணியெடை யுள்ள மாத்திரைகளாகச் செய்து வைத்துக் கொள்ளவும்.

குறிப்பு:— இங்குச் சொல்லி இருக்கிற அரிதாரத்துக்குப் பதிலாக முறைப்படி கட்டின அரிதாரத்தை அல்லது முறைப்படி செய்த அரிதார பற்பத்தைச் சேர்த்துச் செய்தால் சிறந்த குணத்தைத் தரும். பற்பமானல் மேற்கண்ட எடையில் அரைவாசியைத் தான் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அளவு:—தூள்களானல் 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணியெடை வரையில் கொடுக்கலாம். மாத்திரையானல் 1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணி எடை வரையில் உபயோகிக்கலாம்.

துணைமருந்து :— நெய், தேன், வெண்ணெய் ஆகியவைகளாகும்.

தீரும்நோய் :—இரைப்பிருமல், மந்தாரகாசம், இரைப்பு, ஈளை, இருமல், நாட்பட்ட இருமல் முதலிய கப சம்பந்தமான நோய்கள் எல்லாம் தீரும். இந்தத் தூள்களைத் தண்ணீரில் கரைத்துக் காகிதத்தின் மீது இலேசாகத் தடவிச் சுருட்டி புகை பிடிப்பதனுலும் குணமுண்டாகும்.

மருந் துணவு :—நோய்வலிமை, உடல்வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தது போல் புளியைக் குறைவாகச் சேர்த்தும் அறவே சேர்க்காமலும் பத்தியம் வைக்கவேண்டியது. புணர்ச்சி நீக்குதல் அவசியமென்பது எல்லோருக்கும் தெரிந்ததாகும்.

980. சிவநாம ரசம்

தூய்மை செய்த இரசம், கெந்தகம், மனேசிலை, வெண்காரம், கருநாபி இவ்வைந்தும் வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்) மிளகுத்தூள் $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்).

செய்முறை :— மேற்கண்ட சரக்குகளில் இரசத்தையும் கெந்தகத்தையும் கலந்து அரைத்து நன்ருகக் கறுத்த பின்பு மற்ற மூன்று சரக்குகளையும் தனித்தனி பொடித்து துணியிற் சலித்து நிறுத்தெடுத்து முன் மருந்திற் சேர்த்து இரண்டு மணி நேரமரைத்து பிறகு மிளகுத் தூள்களைச் சேர்த்து நான்குசாம நேரமரைத்துக் குப்பியில் பத்திரப்படுத்தவேண்டும்.

குறிப்பு:—சிவநாம இரசமென்னும் உயர்ந்த முறையில் அக்கிரா காரம், திப்பிலி, அரத்தை முதலிய சரக்குகளைச் சேர்த்துச் செய்வதுமுண்டு. ஆனால் அவற்றைச் சேர்க்காமலே மேற்கண்ட முறைப்படி செய்து அதிக மேலான குணத்தைத் தருவதாக அனுபவத்தால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. நமது பரம்பரையாரும் நாமும் இவ்விதமே செய்து அனுபவித்து வருகிறோம். ஒவ்வொரு மருத்துவர் கையிலும் இருக்க வேண்டியவைகளில் முதன்மையான மருந்து. இதனை எல்லா நோய்களிலும் தகுந்த துணைமருந்துகளிலும் உபயோகிக்கலாம். இதனை ஏழுநாள் அரைக்க வேண்டுமென்னும் அவசியமில்லை. எல்லாச் சரக்குகளையும் தனித்தனி பொடித்து துணியில் சலித்து கொண்டு மேற்கண்ட கணக்கின்படி அரைத்தால் போதுமானது. ஆனால், சக்தியுள்ளவர்கள் இதன் செய்யுளில் சொல்லியிருக்கிறபடி ஏழுநாள் அரைத்துச் சித்தப்படுத்தினால் பொன்மலர் நாற்றமுடைத்து என்பது போல் சிறப்பான குணமுண்டாகுமென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. நமது முன்னோர்கள் ஏற்படுத்தியிருக்கும் கணக்கின்படி மருந்துகளை அரைத்து முடிப்பதினால் ஆங்காங்குச் சொல்லி இருக்கிற நோய்கள் பறந்து போமென்பதில் சந்தேகமில்லை. சோம்பலினாலும் விழிப்பின்மையினாலும் அரைப்புத் திட்டத்தை நாம் கவனியாதபடியால் மருந்துகள் பூரணமாய் முடியாமற் போக ஏதுவாகிறது. அப்படி முடிந்தாலும் பூரணமான குணத்தைக் காண்பிக்காமல் அரைகுறையாகப் போவதற்கு ஏதுவாகிறது. ஆங்கிலேய மருத்துவர்களுள் சிலர் மருந்துகளைச் சேர்த்து அதிக நேரம் அரைப்பதினால் ஒவ்வொரு மருத்தின் அணு அம்சங்கள் ஒன்றோடொன்று கலப்பதனால் பலவித அற்புத குணங்கள் உண்டாகின்றன. என இப்போது நிச்சயித்து வரினும் நமது முன்னோர்கள் அநேகம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நிச்சயித்திருக்கிறார்களென்பது செவ்வனே விளங்கும்.

அளவு:—1 முதல் $1\frac{1}{2}$ குன்றிமணியெடை. நசியம் செய்கிறதானால் $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றிமணியெடை.

துணைமருந்து:—தேன், நெய், சுக்குக் குடிநீர், சீரகக் குடிநீர், வெற்றிலை, வெற்றிலைச்சாறு, இஞ்சிச்சாறு, வாழைப்பழம் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—எண்பது வகை வாதங்கள், நாற்பது வகைப் பித்தங்கள், இருபது வகைக் கபநோய்கள், இரைப்பிருமல், மந்தார காசம், குட்டம், குறைநோய், குன்மம், சூலை, சன்னி, மூலநோய், சயம், மகோதரம், அறுபத்தேழு பித்தநோய்கள் ஆகியவைகளும், குமரகண்டன் வலி, காக்கைவலி முதலிய வலிப்பு நோய்

களும் தீரும். இன்னும் கபம் முதலிய அநேக நோய்களும் தீரும். இது மருத்துவ வல்லுநர்கள் அநேகருக்குத் தெரிந்த மருந்தே. ஆயினும் இதனை அலட்சியமாகக் கவனியாமல் இருப்பவர்களும் அநேகருண்டு. நமது மருந்துகளில் நமக்கே நம்பிக்கையில்லாமற் போவதால் நமது மருந்துகளும் நம்மை மோசப்படுத்துகின்றன. ஆகையால் அந்தந்த மருந்தின் குணத்தை நிச்சயித்தறிந்து பூரண நம்பிக்கையுடன் உபயோகித்தால் சித்தர் அருளால் நிச்சயமாகக் குணம் செய்வதில் சந்தேகமேயில்லை.

981. குருசஞ்சீவி மெழுகு

தூய்மை செய்த லிங்கம், வீரம், இரசகற்பூரம், இரசசெந்தூரம், காந்தம், சூடம், சாம்பிராணி, வெள்ளைப் பாடாணம், பொரித்த துருசு, பால் துத்தம், மிர்தார்சிங்கி, நெல்லிக்காய்க் கெந்தகம், அரிதாரம், இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), வாளம், 1 முதல் 3 வராகன் எடை, தேன் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—எல்லாச் சரக்குகளையும் தனித்தனியே பொடித்து ஒன்றாகக் கலந்து இரண்டு சாம நேரம் கைவிடாமலரைத்து எடுத்து இரண்டு பாகமாக்கித் தனித்தனியே வைத்துக் கொள்ள வேண்டும், பிறகு கல்வத்தில் ஒரு வராகன் எடை வாளத்தைப் போட்டு பொடித்துத் தேனைச் சிறுகச்சிறுக வார்த்து வெண்ணெய் போலரைத்து முன் இரண்டு பாகமாக்கி வைத்திருக்கிற மருந்தில் ஒரு பாகத்தைக் கல்வத்திலிருக்கிற மருந்தில் சிறுகச்சிறுகத் தூவி தேனையும் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து மெழுகு பதத்தில் வழித்துப் பீங்கான் சிமிழில் பத்திரபபடுத்தவும். இதன்மேல் எண் ஒன்று எனக் குறிப்பிட்டு வைக்க வேண்டியது. பின்பு மூன்று வராகன் எடை வாளத்தைக் கல்வத்தலிட்டுப் பொடித்துத் தேனைச் சிறுகச்சிறுக வார்த்து மெழுகு போலாகிற வரையில் அரைத்து முன் எடுத்து வைத்திருக்கிற மறுபாதி மருந்தைச் சிறுகச்சிறுகத் தூவித் தேனைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து மெழுகு பதத்தில் பீங்கான் சிமிழில் வழித்து வைத்து இதன்மீது எண் இரண்டெனக்குறித்து வைக்க வேண்டியது.

குறிப்பு:—மலம் போகாமல் இருக்க வேண்டியபோது முதல் எண்ணையும், மலத்தை வெளிப்படுத்த வேண்டியபோது எண் இரண்டையும் உபயோகிக்க வேண்டியது.

அளவு :—¼ முதல் ½ குன்றி எடை.

துணைமருந்து :—பனைவெல்லம், சுக்கு, வெண்ணெய், இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய் :- சுரம், சன்னி, மேகநோய்கள், கிரந்திநோய்கள் புண்கள், குழிப்புண், சிலைப்புண், அழிரணம், கண்டமாலை, பவுத்திரம், சூலை புற்றுநோய்கள் முதலிய எல்லா நோய்களிலும் துணைமருந்து விசேஷங்களில் உபயோகிக்கலாம். பெரும்பான்மை யான கடினநோய்களில் இதனை உபயோகித்துக் குணங்கண்டிருப் பதால் இதற்குச் சஞ்சீவி மெழுகெனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

மருத்துணவு :—இதற்கு சிறப்புடைய பத்தியம் ஒன்றுமில்லை. ஆயினும் உடல்வலிமை, நோய்வலிமை, ஆகியவைகளுக்குத் தகுந்தபடி உப்பு, புளி, புணர்ச்சி, கரப்பான் பதார்த்தம் ஆகியவை களை நீக்கிப் பத்தியம் வைக்கவேண்டியது.

982. நவலோக மெழுகு

தூய்மை செய்த இரசம், லிங்கம், வீரம், இரசகற்பூரம், இரச செந்தூரம் வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), கெந்தகம், பொரித்த துருசு, நவச்சாரம், பொரித்த வெண்காரம் இவை வகைக்கு ½ வராகன் எடை (1¾ கிராம்) முருங்கைப்பட்டைச் சாறு 21 பலம் (735 கிராம்).

செய்முறை:—இரசத்தையும், கெந்தகத்தையும், வீரத்தையும் கலந்தரைத்து இரசம் மடிந்த பின்பு மற்ற சரக்குகளையும் தனித் தனியே பொடித்துக் கல்வத்திலிருக்கிற மருந்துடன் சேர்த்து மூன்று மணி நேரம் கைவிடாமலரைத்து ஒரு சிறிய குண்டுச்சட்டியில் மேற்படி பொடியைப் போட்டு மேற்படி முருங்கைப்பட்டைச் சாற்றையும் விட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து வரவும். அடுப்பிலிருக்கிற மருந்தை இரும்புச்சலாகையினால் கிண்டிக் கொண்டேயிருக்க வேண்டியது. சாறெல்லாம் சுண்டி மெழுகு பத மாகும் சமயத்தில் கொஞ்சம் சிற்றாமணக்கெண்ணெயை விட்டுக் கிளறிக் கொடுத்து ஆறினபின்பு எடுத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—¼ முதல் ½ குன்றிமணி எடை.

துணைமருந்து :—பனைவெல்லம், சுக்கையரைத்த விழுது, சர்க்கரை ஆகியவைகளாகும்.

தீரும்நோய்கள் :—சுரம், சன்னி, மேகநோய், சூலைநோய், கிரந்திநோய், புண்கள் முதலிய அநேக நோய்கள் தீரும்.

மருத்துணவு —இச்சாபத்தியம்.

983. பேய்ச்சொறி சிகிச்சை

தூய்மை செய்த இரசம், மிர்தார்சிங்கி, சூடன், இரசகற்பூரம், இலிங்கம், ஈயவெள்ளை, நெல்லிக்காய்க்கெந்தகம், இவை வகைக்கு சம எடை, துளசிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இரசத்தையும் கெந்தகத்தையும் கலந்தரைத்து நன்ருகக் கறுத்தபின்பு மற்றசரக்குகளையும் தனித்தனியே சேர்த்துப் பொடித்து மூன்று மணி நேரம் கைவிடாமலரைத்து எல்லாம் சேர்த்துப் பின்பு துளசிச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்துச் சுண்டைக்காய் அளவு, கழற்சிக் காய் அளவு மாத்திரை செய்து நிழலிலுலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

தீரும்நோய்:—இதனைத் துளசிச்சாற்றில், அல்லது ஆமணக்கு இலைச் சாற்றில் இழைத்து மேற்பூசிவரப்பேய்ச்சொறி, நாய்ச்சொறி, கசிவுச்சொறி, வறட்சொறி, படர்தாமரை, வண்டுகடி, எச்சிற் றழும்பு, பீத்தேமல் ஆகியவைகள் தீரும். நோய் அதிகத்தடிப்பாக வும், நாட்பட்டதாகவுமிருந்தால் எலுமிச்சம்பழச்சாற்றில் இழைத்துப் போடவேண்டும்.

984. சாதிலிங்கப்புகை

தூய்மை செய்த சாதிலிங்கம் 2 வராகன் எடை, இரசகற்பூரம், 1 வராகன் எடை ($3\frac{1}{2}$கிராம்), சீனக்காரம் $\frac{1}{4}$ வராகன் எடை.

செய்முறை:—மேற்கண்டவற்றைப் பொடிசெய்து மெழுகுத் துணியில் பரப்பித்திரி செய்து வைத்துக்கொள்ள வேண்டும். இதனைக் கீழ்க்காணும் விதம் புகை பிடித்தால் கிரந்திப்புண் அரையாப்பு, பிளவை, தீராத ரணங்கள் ஆகியவை தீரும். இன்னும் அநேக நோய்களும் தீரும்.

மருந்துணவு:—பச்சைத்தண்ணீர் வாய் கொப்பளிக்கக்கொடுக்க வும். நல்லெண்ணெய், கடுகு, தேங்காயெண்ணெய், கேழ்வரகு இவை நாற்பத்தைந்து நாள் வரை ஆகாது. நோயின் வலிவிற்குத் தகுந்தபடி ஐந்து வேளை, ஏழுவேளை, ஒன்பதுவேளை புகைபிடிக்க வேண்டும். அல்லது வாய் பிடிக்கிற வரையில் புகை பிடிக்கலாம்.

புகைபிடிக்கும் விதம்:—டர்கிஸ்பாத் என்னும் பெட்டிக்குள் ஒரு பாத்திரத்தில் நெருப்பை வைத்து மேற்படி திரியைச் சிறு துண்டு களாகக் கத்தரித்துக் கொஞ்சம் கொஞ்சமாகப் போட்டுப் புகை பிடித்து வருவது உயர்வான வகை. இந்தப் பெட்டிக்குள் திரியைக் கொளுத்தி வைத்தும் புகை பிடிக்கலாம். இப்படிக் கூடாத சமயத்தில் மூங்கில் குச்சியினுல், ஒரு மனிதன் நாற்காலியில்

உட்கார்ந்திருக்கும்போது அவன் கழுத்துவரை பிடிக்கும்படி ஒரு கூண்டுசெய்து நோயாளியை ஒரு நாற்காலியில் உட்காரவைத்துக் கூட்டின் நடுவிலுள்ள துவாரத்தின் வழியாகக் கழுத்தில் மாட்டிக் கூட்டின்மீது துப்பட்டி அல்லது இரட்டுத் துணியால் மூடிக் கூட்டுக்குள் முன்போல் திரியைக் கொளுத்தி வைத்துப் புகைபிடிக்க வேண்டும். இப்படியும் செய்ய முடியாவிடில் நோயாளியை நாற்காலியின்மீது உட்காரவைத்துக் கழுத்திலிருந்து பூமி மட்டம் வரையில் சந்தில்லாமல் துப்பட்டியால் அல்லது உரத்த துணியால் மூடித் திரியைக் கொளுத்திவைத்துப் புகைபிடிக்க வேண்டும். புகையானது நோயாளியின் கண்டத்துக்குக் கீழ்ப்பட வேண்டியதே தவிர முகத்தில் எந்தப்பாகத்திலும் படாமல் கவனமாய்ச் செய்ய வேண்டியது.

985. சாதிலிங்கப் புகை (வேறு)

தூய்மை செய்த சாதிலிங்கம் 2 வராகன் எடை, இரசகற்பூரம் 1 வராகன் எடை, வீரம் $\frac{1}{8}$ வராகன் எடை.

இவற்றை முன்போல் செய்து புகையிட முன் கூறப்பட்ட நோய்கள் தீரும்.

986. மேற்படி புகை (வேறு)

தூய்மை செய்த சாதிலிங்கம் 1 வராகன் எடை, இரசகற்பூரம் 1 வராகன் எடை, துருசு $\frac{1}{8}$ வராகன் எடை, துத்தம் $\frac{1}{4}$ வராகன் எடை காந்தம் $\frac{1}{4}$ வராகன் எடை.

இவற்றை மேற்கண்டபடி செய்து மேற்கண்டபடி புகைபிடிக்க மேற்கண்ட நோய்கள் தீரும்.

987. இரசவங்கப் புகை.

தூய்மை செய்த இரசம் 1 பலம் (35 கிராம்) காரீயம் 1 பலம் (35 கிராம்), வெள்ளைப்பாடாணப்பதங்கம் 1 வராகன் எடை, அல்லது மடல் துத்தம் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்). நெல்லிக்காய்க் கெந்தகம் $\frac{3}{4}$ பலம் ($26\frac{1}{4}$ கிராம்), ஜாதிலிங்கம் $\frac{3}{4}$ பலம் ($26\frac{1}{4}$ கிராம்). எருக்கம் பால் செல்லத்தக்க அளவு.

செய்முறை :— இரசத்தையும் வங்கத்தையும் தொந்தித்து மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்துச் சேர்த்து இரண்டு மணிநேரம் கைவிடாமலரைத்துப் பிறகு எருக்கம் பாலைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாம நேரமரைத்து சுண்டக்காய் அளவு மாத்திரைகள் செய்து உலர்த்திவைத்துக்கொள்ளவும். புளியம் புறணியை நெருப்

6

பாக்கி அதில் மேற்படி மாத்திரையைப்போட்டு மேற்கண்ட வாறுஅந்திசந்தி மூன்று நாள் வாய்பிடிக்கிறவரையில் புகை பிடிக்க புண்கள், கிரந்திகள், மேகப்புண்கள், அழிரணம், குழிரணம் முதலியஅநேக ரணங்கள், பிளவைகள், கண்டமாலை, புற்றுகள் முதலியவைகள் தீரும்.

988. பார்வைப்புகை

தூய்மை செய்த இரசம் 1 வராகன் எடை (3½ கிராம்), சாதிலிங்கம் 1 வாரகன் எடை (3½ கிராம்), காரீயம் 1 வராகன் எடை (3½ கிராம்) எருக்கன் கட்டைக்கரி 2 வராகன் எடை (7 கிராம்).

செய்முறை :—இரசத்தையும், கருவங்கத்தையும் தொந்தித்து மற்ற சரக்குகளைத் தனித்தனியே பொடித்துச் சேர்த்து ஒருசாம நேர மரைத்து நன்ருகக் கலந்த பின்பு வெள்ளைத் துணியில் தூவித் திரி செய்து கொண்டு வேப்பெண்ணெய்யில் அல்லது நெய்யில் தோய்த்து அகலிலிட்டு விளக்கேற்றித் திரைப் போட்டுக் கொண்டு விளக்கைப் பார்க்க வேண்டும். இவ்வாறு மூன்று நாட்கள் ஆறு வேளை செய்ய மேற்கண்ட நோய்கள் தீரும்.

989. கிரந்திப்புகை

தூய்மை செய்த இலிங்கம் 1 வராகன் எடை (3½ கிராம்), இரசம் 1 வராகன் எடை (3½கிராம்) நீரடிமுத்துப்பருப்பு 1 வராகன் எடை (3½ கிராம்)வெட்பாலையரிசி 1 வராகன் எடை கருஞ்சீரகம் 1 வராகன் எடை வலம்புரிக்காய், கஸ்தூரிமஞ்சள் இவை வகைக்கு 1 வராகன் எடை கீழ்க்காய் நெல்லிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்துச் சேர்த்துக் கைவிடாமல் ஒரு சாமநேரமரைத்து நன்ருக கலந்தபின்பு கீழ்க்காய் நெல்லிச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாமநேரமரைத்துச் சுண்டைக்காய் அளவுள்ள மாத்திரைகள் செய்து வைத்துக் கொள்ளவும். இதைப் புளியம்புறணி நெருப்பில் போட்டு மேற் கண்டபடி புகை பிடிக்க எல்லாவகைக் கிரந்திநோய்களும் தீரும். புகைபிடிக்கும்போது பச்சைத் தண்ணீரில் குளித்து வர வேண்டும்.

வானமா மெழுகு

இதனைப் பலர் பலவிதமாகச் செய்கின்றனர்; சிலர் 14 சரக் கென்றே சாதிக்கின்ருர்கள். சிலர்–15 சரக்கெனச் சொல்கின்ருர்கள்; அவரவர்கள் தத்தம் அனுபவப்படி செய்து அனுபவித்து வருவதால்

அவரவர்கள் அனுபவப்படியும் விருப்பப்படியும் செய்துகொள்ளட்டும் நமக்கு அதில் எவ்வித ஐயமும் இல்லே. இதனை நமது பரம்பரையார் இரு வகையாகச் செய்து அனுபவித்து வருகின்ருர்கள். அதில் ஒருவகை சுலபமானது, மற்ருெருவகை அதிக கடினமானது. கடினத்திற்கு தகுந்த கூலியென்பது போல் இந்த முறையானது சொன்னது, சொன்னதுபோல் நோய்களைக் கண்டித்து குண மடையத்துணை செய்கிறது. அதிகப் பிரயோசனத்தை விரும்புவோர்கள் கடினத்திற்கு பால்மாருமல் செய்து முடித்து உலகத்தாருக்கு உபயோகப்படும்படி செய்வார்களென நம்புகின்ரோம். அவ்விரண்டு முறைகளையும் இங்கு எழுதுகின்ரோம்.

990. இலகுவானமா மெழுகு

தூய்மை செய்த இரசம், இரசசெந்தூரம், நெல்லிக்காய்க் கெந்தகம், வீரம் கௌரிப்பாடாணம், வெள்ளைப்பாடாணம், மிருதார் சிங்கி, இரசகற்பூரம், பூநீறு, சாதிலிங்கம், அபின், காந்தம், சூடன், சாம்பிராணி, அரிதாரம், அராவின தங்க அரப்பொடி வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), கோழிமுட்டை மஞ்சட்கருத்தயிலம் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து நன்ருகக் கறுத்த பின்பு தனியே எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். தங்கத்தைத் தவிர மற்ற சரக்குகளைத் தனித்தனி பொடித்து முன் அரைத்து வைத்திருக்கிற இரச கெந்தித் தூளையும் மற்ற தூட்களையும் ஒன்ருகச் சேர்த்து வைத்துக்கொள்ளவும், தங்கத் தூளை நன்னிக்கல் கல்வத்திலிட்டு ஷை அண்டத்தைலத்தைச் சிறுகச்சிறுக வார்த்து ஒரு சாமநேரமரைத்துப் பிறகு ஷை தூளைச் சிறுகச் சிறுகத் தூவி மேற்படி தைலத்தையும் சிறுகச் சிறுகவிட்டு அரைத்துத் தூளெல்லாம் சென்ற பின்பு மேற்படி தைலத்தையே சிறுகச் சிறுகவிட்டு நான்கு சாமநேரமரைக்க வேண்டும். இதற்கு எவ்வளவுக் கெவ்வளவு அரைப்பேறுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு குணத்தைத் தரும். வழித்துப் பீங்கான் சிமிழில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—$\frac{1}{2}$ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து:—பனைவெல்லம், சர்க்கரை, சுக்கை அரைத்த விழுது, இளகவகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள்:—கபவாதசன்னி, சுரம், எட்டுவகைக்காசம், எட்டுவகைக் குட்டம், விதைவாதம், சூலேரணங்கள், ஏழுவகை தோடம், எட்டுவகைக் குன்மம், ஐந்துவகை வலிப்பு, மாரடைப்பு

சூதகவாயு, மகோதரம், கல்லடைப்பு, குலைவலி, கிரந்தி, புரைகள் கண்டமாலை, நீரிழிவு, நீர்க்குத்தல், கபம், சயம், காசம், வயிற்றுப் போக்கு, பவுத்திரம் இவை தீரும்.

மருத்துணவு :— நல்லெண்ணெய், கடுகு, மஞ்சள், பழயது ஆகா. இந்தப்படி மேற்படி மருந்தை 3 நாள் 5 நாள் கொடுக்கவும். நோய்வலிமைக்குத் தகுந்தபடி இரண்டு மூன்று தடவையாகக் கொடுக்கவேண்டும்.

விண்ணப்பம் :—அனுபவசாலிகளான அநேகம் அறிவாளிகள், மேற்கண்ட சரக்குகளைத் தத்தம் அனுபவப்படி தூய்மை செய்தே உபயோகித்து வருகின்றார்கள். சிலர் இந்த வானமாமெழுகின் பாட்டின் கருத்தை அறிந்து கொள்ளாமல் 'தூய்மையாவதில்லை' என்பதற்குச் தூய்மையல்லையென அர்த்தம் செய்து தூய்மையில்லாமற் செய்து நற்குணத்திற்குப் பதிலாகத் தீயகுணமுண்டாகி மோசம் போகின்றார்கள். ஆகையால், அந்தச் செய்யுட்களை இங்கெழுதி நமது பெரியோர்கள் நமக்குத் தெரிவித்திருக்கிற அனுபவப்படி முறையை இங்கு எழுதுகின்றோம். அதனைக் கவனித்துச் செய்பவர்களுக்கு அநேக நற்குணங்களுண்டாக ஏதுவாகும். அது பின்வருகிற விதமாகும்.

நாதகுரு தைலம்

யரைநாதம் பலம்பூதஞ் சுவையா தீதப்
　　பாங்கான வெடியுப்பு வினையே சேரு
கிரகசாரங் கழஞ்சு செவியே வாங்கு
　　கிருபையுள்ள மால்தேவி கழஞ்சு மூன்று
திரசாதி சூரனுமவ் வெடையே நட்சத்
　　திரங்கழஞ்சு நவநீதந் திக்கு மாகும்
உரமான சரக்கதனை நவநீ தத்தோ
　　டுண்மையாய்க் கல்வமதில் மைபோ லாட்டே

உண்மையா யரைத்தபின்பு கலசத் திட்டு
　　உத்தமனே குழித்தைலம் வாங்கிக் கொள்ளு
கண்ணியாம் நாதகுரு தைல மாச்சு
　　கருவான தைலமிது கிடையா தப்பா
பண்ணுகிற மருந்துவகைக் கெல்லா மாகும்
　　பண்பாக இதிற்கொஞ்ச மிட்டுப் பார்த்தால்
மண்ணில்வருங் குருமுப்பு இதற்கொவ் வாது
　　மாநிலத்தோர் பிழைப்பதற்காய் விளம்பி னேனே

செய்முறை :—கெந்தகம் 5 பலம் (175 கிராம்), வெடியுப்பு 2 பலம் (70 கிராம்), நவச்சாரம் 2 கழஞ்சு ($8\frac{3}{4}$ கிராம்), அரிதாரம் 3 கழஞ்சு $13\frac{1}{8}$ (கிராம்), வீரம் 3 கழஞ்சு ($13\frac{1}{8}$ கிராம்), பூரம் 1 கழஞ்சு ($4\frac{3}{8}$ கிராம்), பசுவின் வெண்ணெய் 8 பலம் (280 கிராம்).

மேற் கூறப்பெற்ற மருந்துகளில் ஒன்று முதல் ஏழு வரையில் உள்ளவைகளை முறைப்படி தூய்மை செய்துகொண்டு ஒன்றன் பின் ஒன்ருக குழியம்மியிலிட்டு நன்கு நெகிழ 6 சாம நேரம் அரைத்துப் பிறகு வெண்ணெயைச் சேர்த்து 6 நாட்கள் அரைத்து குழித் தைலம் வாங்கவேண்டும். இத் தைலமே நாதகுரு தைலம்.

இத் தைலம் 'யாகோபு என்னும் இராம தேவர்' அவர்கள் எழுதிய 'வைத்திய கல்லாடம்' என்னும் நூலில் உள்ளது.

191. மகாவாணமா மெழுகு

விந்து விந்துசெந் தூரநா தமுடன்
வீர மொடுசிவ காமியும்
வெள்ளை சிங்கிநட் சத்தி ரம்புகர்
வீறு மாண்குறி யெட்டுபின்
தொந்த மானமுரு கன்புரா ணமொடு
தூப தீபமரி சமனெடை
சுத்தி யாவதிலை பாருபா ருபரி
சுத்த மானகலு வத்திலே
சிந்தை கொண்டு பதினுறு மொன்றுபடச்
சேர்த்த ரைத்துவிடு தூளதாய்ச்
சீக்கி ரத்திலிடு நாதமா மதனைச்
சேரு நாதகுரு தைலமே
முந்தி விட்டொரு சாமம் நாலுமரை
முற்றுமே மெழுகு ளுந்ததாய்
மோச மின்றிபனை வெல்லந் தன்னிலிடு
முறிவு பத்தியமு மில்லையே

இல்லை யில்லைகப வாத சன்னிசுர
மெட்டு காசமொடு குட்டமும்
ஏறு கின்றவிதை வாத சூலைரணம்
ஈளை தோடமட்ட குன்மமுஞ்
சொல்லு கின்றவலி மாரடைப் பிணேடு
சூதகத் தொடும கோதரஞ்
சோகை மஞ்சட்கா மாலை சத்திப்பு
தொல்லைப் போக்கொடு பவுத்திரங்

கல்ல டைப்புதலை வலிகி ரந்திவரு
கண்டமாலை சலதா ரையிற்
காணும் நீரிழிவு குத்தலான முகில்
காச ரோகமுத லானதும்
எல்லை விட்டெழு கடல்க டந்துபிணி
என்ன பாடுபடு மறிகிலோம்
இந்த வான்மெழுகு எந்த நாளுமுயி
ரென்ன லாகுமிது திண்ணமே.

இப்பாட்டில்கண்ட சரக்குகளின் விபரமாவது :—

1. விந்து = இரசம், 2. விந்து செந்தூரம் = இரசசெந்தூரம். 3. நாதம் = நெல்லிக்காய்க் கெந்தகம், 4. வீரம் = சவ்வீரம், 5. சிவகாமி = கௌரி, 6. வெள்ளை = வெள்ளைப் பாடாணம், 7. சிங்கி = மிருதார சிங்கி, 8. நட்சத்திரம் = பூரம், 9. புகர் = வெள்ளி, 10 வீறு = தங்கம், 11. ஆண் குறி = லிங்கம், 12. எட்டுபின் (அ + பின்) அதாவது அபின், 13. முருகன் புராணம் = காந்தம், 14 தூபம் = சாம்பிராணி, 15. தீபம் = சூடன், 16. அரிதாரம் = தாளகம்.

இதன் மூலமாக 1 முதல் 16 சரக்குகளின் விபரத்தையும் தெரிந்து கொள்ளலாம். இனி, இவற்றை தூய்மை செய்யும் முறைகளையும் தெரிந்து கொள்ளவேண்டும். இவற்றுள் வீரம், கௌரிப்பாடாணம், வெள்ளைப் பாடாணம், பூரம், தாளகம் ஆகிய இவ்வைந்து சரக்குகளும் கொடிய நஞ்சின் குணமுள்ளவைகளாகையால் இவற்றை அவசியம் தூய்மை செய்ய வேண்டும், ஆனால், செய்யுளில், 'சுத்தியாவதில்லை பாரு பாரு' என்றிருப்பதை முன்னிட்டு அநேகர் இவ்வாக்கியத்தின் உட்கருத்தை யறியாது சுத்தியாவது இல்லையென்று அருத்தம்பண்ணிக்கொண்டு இவற்றைத் தூய்மை இல்லாமல் செய்து வருகின்றார்கள். இவ்விதம் செய்து வருவது சாத்திரம், உக்தி, புத்தி, அனுபவம் முதலியவைகளுக்குச் சிறிதும் பொருந்தாது. இதன் நுட்பம் அனுபவசாலிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளாதவரையில் விளங்காது. இம் முறையின் நுட்பத்தைப் பெரியோர்களிடம் கேட்டு அடியேன் தெரிந்து கொண்டிருக்கிறேன். ஆதலால், அதன் படியே இம் முறையின் விபரத்தைக் கீழே எழுதுகிறேன். இன்னும் இவ் விஷயத்தில் இதைக் காட்டினும் அதிக விபரம் தெரிந்தவர்கள் தெரிவித்தால் அவ் விபரத்தையும் அடுத்த பதிப்பில் அச்சிட்டு அவர்களுக்கும் நன்றி செலுத்தி வருவேன்.

நான் கேட்டுக் கொண்டபடி மேற்படி பாட்டிலுள்ள, 'சுத்தியாவதில்லை பாரு பாரு' என்ற வாக்கியத் தொடருக்கு அருத்தமாவது : (தூய்மையாவது மேற்படி சரக்குகள் தூய்மையாகப் பொருந்துவது;

இலை ஓர் மூலிகையாம்; பாரு பாரு—அதனைத் தேடு தேடு.) என்பதாம். இந்த அருத்தத்தின்படி தூய்மைக்கு ஓர் இலையுண்டு; அதனைத் தேடியறிந்து தூய்மை செய்துகொள்ளவேண்டு மென்பதாக ஏற்படுகிறது. இனி அந்த இலையாவது யாதென்றால் ஒரு வகைக் கீரையாம். இலையென்பது, இலைக்கறியாதலாலும் இலைக்கறி கீரையெனப் பொருள்படுதலாலும் இதனைக் கீரையென்றே தீர்மானிக்க வேண்டும். அவ் வகைக் கீரைகள் பலபேதங்களாயிருப்பதால், அவற்றுள் இதற்குரியது யாதென்றால், எல்லா சரக்குகளுக்கும் சேர்த்து, 'சுத்தியாவதுஇலை' என்று ஒன்றையே குறிப்பிட்டுச் சொல்லியிருப்பதால்; அப்படியே எல்லாவற்றையும் கட்டக்கூடிய கீரையேயாம். அவ்வாறுமேற்கண்ட எல்லாச் சரக்குகளையும் தூய்மை செய்வதுடன் நெருப்பிற்கு ஓடுஞ் சரக்குகளை நெருப்பிற்கோடாமல் கட்டக் கூடியது முள்ளிக்கீரையே. இது இலகுவாகக் கிடைக்கக் கூடியதாயிருந்தும் இதனைக் செய்யுட்காரர் ஏன் மறைத்து வைத்தாரென்றால்; ஆசான்கள் மூலம் முயற்சி மேற்கொண்டு பட்டுந்தெரிந்து கொள்ளவும், இதற்கு ஒரு நல்ல மதிப்பு உண்டாவதற்குமேயாம். இதனை வெளிப்படையாக முள்ளிக்கீரையென்று சொல்லியிருந்தால் ஒவ்வொருவரும் முள்ளிக்கிரைதானே என்று மிகவும் எளிதாகமதிப்பாராதலால் இதற்குள்ள ஒரு மதிப்பான தத்துவம் கெட்டுவிடும். நமது பெரியோர்கள் இப்படி ஒவ்வொரு இலகுவான பொருளுக்கும் பெருமை ஏற்படுவதற்காக அருமையாக பாராட்டுவது வழக்கம். இனி மேற்படி முள்ளிக்கீரையால் மேற்கண்ட சரக்குகளைத் தூய்மை செய்யும் மார்க்கத்தைக் கூறலாம்.

முள்ளிக்கீரை சமூலத்தை வெய்யிலில் நன்றாக உலர்த்திப் பெரிய சட்டியில் அமுக்கி அடுப்பில் வைத்து எரித்துச் சட்டியிலும் நெருப்பிட்டு நன்றாய் வெளுத்துப் பற்பமாகிறவரையில் எரித்து ஆறினபின் மேற்படி பற்பம் ஒரு பங்கு, தூய நீர் இரண்டு பங்கு இவ்விரண்டையும் கலந்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு மணிக்கொரு தடவை நன்றாகக் கலக்கிவர வேண்டும். இவ்விதம் மூன்று நாட்கள் செய்து நாலாம் நாள் சுத்தமாய் தெளிந்த தெளிவைக் காய்ச்சி எட்டிலொரு பாகமாகச் சுண்டவைத்துப் பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்தவேண்டும். இதற்குக் குரு நீரென்று பெயர். எரிக்கும்போது தீயை மெதுவாயெரிப்பதுடன் மரக்கொம்பால் துழாவி வரவேண்டும்.

வீரத்தூய்மை :—செல்லத்தக்க அளவு வீரத்தைக் கல்வத்திலிட்டு முன் குருநீரைக் கொஞ்சமாய் விட்டு 5 நிமிடம் அரைத்து வில்லை செய்து சிறுமண் குடுவையில் கரி நெருப்பிட்டு அதன் மீது ஓட்டை வைத்துக் கைதாங்கும்படியான சூடு கண்டவுடன் மேற்

படி வில்லையை வைத்து உருகுஞ் சமயத்தில் குறடாலெடுத்துச் சற்று ஆறவிட்டு முன்போலவே செயநீராலரைத்து வில்லைசெய்து மறுபடியும் முன்போலவே ஓட்டில் வைத்து உருகுஞ் சமயத்தி லெடுத்து ஆறவைக்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி 20 தடவைகள் செய்யின் சீக்கிரம் உருகுந் தன்மை நின்றுபோம். இன்னும் பத்து தடவைகள் அதிகம் செய்யின் அறவே உருகாது இவ்விதம் செய்து உருகும் குணம் நின்று விட்டபின் முன்போலவே யரைத்து மேலோட்டை எடுத்துவிட்டு வில்லையைக் குறட்டில் பிடித்துக் கொண்டு நெருப்பில் அப்பளத்தைப் போல் திருப்பித் திருப்பி வாட்ட வேண்டும். புகையெழும்புகிறதாயிருந்தால் வில்லையைக் கீழே வைத்து ஆறினபின் வாட்டவேண்டும். ஈரம் இல்லாது நன்ருகக் காய்ந்தபின் முன்போலவே குருநீர் விட்டரைத்துப் வில்லை செய்து வாட்டவேண்டும். இவ்விதம் வாட்டி வரும்போது நெருப்பின் மீதுள்ள வில்லையானது செங் கல்லைப் போல சிவந்த வண்ணமாக வரும். அதுவே பதமென் றறிந்து வில்லையை எடுத்து ஒரு ஓட்டில் வைத்து அதனை ஒரு பீங்கான் கோப்பையால் மூடிக் காற்றில்லாதவிடத்தில் வைத்து மறுநாள் எடுத்துக் கல்வத்திற் பொடித்துப் பத்திரப்படுத்தவும். இதுவே வீரத்தின் சுத்தி, வீரக்கட்டு, செயவீரம் என்று சொல்லப் படும். இது நெருப்பிற்புகையாது. இதனைத் தனியாகவும் அநேகம் நோய்களுக்கு உபயோகிக்கலாம். வாய்வேகாது. இது முதன் முதல் வெண்மையாயிருக்கும். பிறகு சிறு சிவப்பாகும்; அதன் பிறகு கடுஞ்சிவப்பாகும்; அதன் பின்பு சிறுகருப்பாகும்; முடிவில் பச்சை வண்ணமுள்ளதாகும். நெருப்பிலிருக்கும் போது செங்கல்லைப் போலச் சிவந்திருக்கினும் மறுநாள் அரைக்கும்போது பச்சை வண்ணமுள்ளதாகவே இருக்கும். வாயிலிட்டால் ஒரு சிறிதும் தீக்குணமேயிராது. முடிவாய்ச் சொல்லில் வீரத்துக்குள்ள தீக்குணங்களெல்லாம் நீங்கி அநேகம் நற்குணங்களுண்டாய் விடு மாகையாலும் இதன் சிறந்த குணங்களை அனுபவசாலிகள் தெரிந்து இதனைத் தனியாகவே உபயோகித்தால் வெற்றியடைவார்களாகை யாலும் இதைப்பற்றி இங்கு விரிவாகயெழுதுவது அவசியம்.

இப்படியே கவுரிப் பாடாணம், வெள்ளைப் பாடாணம், மிருதாரு சிங்கி, இரசகற்பூரம், அரிதாரம் இந்த ஐந்து சரக்குகளையும் தூய்மை செய்து கொள்ளவேண்டும்.

வாலை இரசத் தூய்மை :— ஒரு புது மண்சட்டியில் ஒரு படி உப்பை வறுத்துப் பொடித்துப் போட்டு அதனடுவிற் பள்ளம் செய்து அப் பள்ளத்தில் ஐந்து பலம் வாலை ரசத்தை விட்டு மேற் சட்டி மூடி வலுவாக ஏழு சீலைமண் செய்து அடுப்பின் மீது வைத்து

முன் ஒரு சாமம் மெதுவாயெரித்துப் பிறகு மூன்று சாமம் காடாக்கினியாக எரித்துக் குளிர ஆறினபின் விழிப்புடன் எடுக்கவேண்டும். சில பாகம் பதங்கித்தும், சனித்தும் சில பாகம் பதங்கிக்காமல் வைத்த ரசமாகவுமிருக்கும். இம் மூவகையையும் ஒன்ருகச் சேர்த்து முன்போலவே சட்டியில் உப்பை வறுத்திடித்துப் போட்டழுத்தி நடுவில் பள்ளம் செய்து அதில் வைத்து முன் போலவே மேற்சட்டி மூடி வலுவாக ஏழு சீலைமண் செய்துலர்த்தி முன்போலவே நான்கு சாமம் எரித்துக் குளிர ஆறின பின் எடுக்கப் பெரும்பாகம் பதங்கித்து சனிக்காமலிருக்கும்; சிறுபாகம் சனித்தும் சனிக்காமலுமிருக்கும். இவையெல்லாவற்றையும் முன்போலவே ஒன்ருகக் கலந்து முன்போலவே உப்பில் வைத்தெரித்துக் குளிர ஆறினபின் எடுக்க மேலே பதங்கிக்காமல் எல்லாம் கீழேயே பிரகாசத்துடன் சிறு கம்பிகளைப் போலும் தூளாகவுமிருக்கும் இரசத்தைப் பதங்கிக்கும் முறை நமது இரசவாத சிந்தாமணியில் அநேகம் சொல்லப்பட்டிருப்பதால் அவைகளிலொரு முறையாகவும் செய்து கொள்ளலாம். பின் அப் பதங்கத்தை முன் முள்ளியுப்பு செயநீர் விட்டரைத்து வீரத்தைச் செய்தது போலச் செய்து கொள்ள வேண்டும். இதுவே இரசத் தூய்மையும், கட்டுமாகும். இரசத்தை நெருப்பிற் கோடாமல் கட்ட இதுவே வெகு சுலப மான மார்க்கமென்பது அனுபவசாலிகளான பெரியோர்களின் சித்தாந்தம்.

கெந்தகத் தூய்மை:— ஐந்து பலம் நெல்லிக்காய்க் கெந்தகத்தை கல்வத்திலிட்டுப் பொடித்து முன் செயநீரை விட்டு இரண்டு மூன்று மணி நேரமரைத்து நிழலில் வைத்து ஈரமுலர்த்திக் கொள்ள வேண்டும். ஒரு வாயகன்ற சட்டியில் முக்காற்படி பசுவின்பாலை விட்டுச் சட்டி வாய்க்குக் கெட்டியான மெல்லிய துணியால் வேடு கட்டி அதன் மேல் சித்தப்படுத்தி வைத்திருக்கிற கெந்தகத்தைப் பரப்பி வைத்து அதன் மேல் சாணக்கியால் மூடிச் சட்டியின் வாயானது மறையும்படியாகப் பூமியிற் புதைத்துச் சாணக்கியின் உதடுகளைச் சுற்றிலும் மண்ணைத் தள்ளி அணைத்துச் சாணக்கியின் மேல் 5 முதல் 6 வறட்டியால் புடமிடவேண்டும். இந்தச் சூடு சாணக்கியிற்ருக்கி அதனல் கெந்தகம் உருகித் துணி வழியாகப் பாலிலிறங்கி நிற்கும். அதையெடுத்து ஈரமில்லாமல் துணியால் துடைத்து முன் போலவே முன் செயநீரை விட்டு முன் போல் அரைத்து முன்போலவே புடமிடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் செய்யின் கெந்தகமானது பவழம் போல சிவந்ததாகும். இங்கு இது போதுமானதாம். இதனையே மடக்கி மடக்கி நூறு தடவைகள் செய்யின் முழுக் கட்டாகி நெருப்பிற் கோடாது. இது வைத்தியம், வாதம் என்னும் இரு வகைக்குமாம்.

இதனைத் தனியாகவே பல நோய்களுக்கு உபயோகிக்கலாம். இதன் சிறப்பை மருத்துவ வல்லுநர்கள் தாமே தெரிந்து கொள்வார்கள்.

இரச செந்தூர தூய்மை:—இரச செந்தூரத்தை மேற்படி செய நீரை விட்டரைத்துப் வில்லை செய்து புதிய ஓட்டில் வைத்துக் கரி நெருப்பில் ரொட்டியைப் போல திருப்பித் திருப்பி வாட்டி எடுக்க வேண்டும். ஈரமில்லாமல் நன்ருய் வறண்டபின் முன்போலவே முன் செயநீரை விட்டரைத்து வில்லைசெய்து முன்போலவே வாட்டி யெடுக்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் செய்யின் தூய்மையாம். இதனை அனுபவசாலிகள் தனியாகவே உபயோகிப்பார்களாகையால் இதைப் பற்றி இங்கு அதிகம் எழுது வதற்கில்லை.

காந்தத்தையும் இந்தப்படியே தூய்மை செய்துகொள்ள வேண்டும்.

தங்கத் தூய்மை:— தங்கத்தைத் தகடடித்துப் பூங் காவியில் காடியை விட்டரைத்துக் கவசித்துக் கரிநெருப்பில் பழுக்கக் காய்ச்சி எடுத்து ஆறினபின்பு மேற் கவசத்தை நீக்கிவிட்டு முன் போலவே பூங்காவியை அரைத்துப் பூசிக் காய்ச்சி எடுக்க வேண் டும். இவ்விதமாக ஏழு தடவை மடக்கி மடக்கிக் காய்ச்சி எடுக்கத் தங்கமானது தூய்மையாகும். இதனை மெல்லிய அரத்தால் அராவித் தூளாக்கிக்கொள்ள வேண்டும்.

பூநீறு தூய்மை:— பூநீற்றை முறைப்படி தீட்சை செய்து கொண்டால் உத்தமம். அப்படிச் செய்ய இயலாதவர்கள் பூநீற்றைக் கடல் நீரில் கரைத்துத் தெளிவெடுத்துக் காய்ச்சிக்கொள்ளவும். இவ்விதம் ஏழு தடவைகள் மடக்கி மடக்கிக் காய்ச்சிக் கொண்டால் பூநீறு தூய்மையாகும்.

சாம்பிராணித் தூய்மை:— சாம்பிராணிப் பூவெடுத்துக்கொள்ள வேண்டும். ஆனல், நாம் முயற்சியோடு செய்வதைப் பார்க்கிலும் சீமையிற் செய்யப்பட்டு இங்கு விற்கப்படும் சாம்பிராணிப் பூவை ஆங்கில மருந்துக்கடையில் வாங்கிச் சேர்த்துக்கொள்வதே உசிதம்.

கற்பூரத் தூய்மை:-தீப கற்பூரம் என்னும் சூடனை நாம் தூய்மை செய்வதைப் பார்க்கிலும் சீமையிற் தூய்மைசெய்யப்பட்டு வந்து பளிங்கைப் போன்ற வில்லைகளாக ஆங்கில மருந்துக் கடைகளில் விற்கப்படுவதை வாங்கிச் சேர்த்துக் கொள்வது உத்தமம்.

அபின் தூய்மை:—அபினைத் தண்ணீரிற் கரைத்து மெல்லிய துணியில் வடிகட்டி, நீர் இயந்திரத்தில் காய்ச்சி நீர் சுண்டின பக்குவத்திலெடுத்துக் கொள்வதே இதன் தூய்மையாம்.

அண்டத் தைலம்:—கருங்கோழி முட்டையிலாவது அது அகப்படாவிட்டால் சாதாரண கோழி முட்டையிலாவது நூறு முட்டைகளை வெந்நீரிற் போட்டு அரை மணி நேரம் வேகவைத்துப் பிறகெடுத்துத் தோலைப் போக்கி மஞ்சள் கருக்களை மாத்திரம் எடுத்துக் கொள்ளவேண்டும். ஒரு இரும்பு வாணலை அடுப்பில் வைத்துச் சூடு கண்டவுடன் மேற்படி மஞ்சட் கருக்களை அதில் போட்டு ஒரு இரும்பு அகப்பையால் துழாவி வரவேண்டும். இவ்விதம் செய்து வருகையில் கருக்கள் கருகித் தீய்ந்த பதமாயிருக்கும் போது தூய்மை செய்த $2\frac{1}{2}$ பலம் பூநீற்றைத் தெளித்து முன் அகப்பையால் கை விடாமல் கிண்டி வரவேண்டும். இப்படிச்செய்து வரும்போது கருக்களெல்லாம் தீய்ந்து கருகித் தைலம் வெளிப்பட ஆரம்பமாகும். இச் சமயத்தில் தீயை மெதுவாக எரித்து வாணலைக் கொஞ்சம் சாய்த்து வைத்து எரித்து வந்தால் தைலமெல்லாம் ஒரு பக்கமாக வடிந்து சேர்ந்து நிற்கும். அதனை மெல்லிய துணியில் வடிகட்டி பளிங்குப்புட்டியில் பத்திரப்படுத்த வேண்டும். இந்தத் தைலமானது தனியாகவே அநேக நோய்களுக்கு உபயோகப்படுவதன்றி வாதம் வைத்தியமென்னும் இருவகை முறைகளுக்கும் உபயோகமாகிறது. இவ்விதம் செய்யாமல் தனியாகச் செய்யப்படும் தைலமானது இதைப்போன்ற சிறந்த குணமுடையதாகாது.

செய்முறை : இதுவரையில் இம் முறையிலுள்ள தூய்மைக் கிரமங்களையும், கட்டுவகைகளையும் சொன்னோம். இனி, இதன் செய்முறை விபரத்தைப் பற்றிச் சொல்வோம் :

கவனிப்பு : இம் முறையோ மிக்க அருமையான தென்பதும், இதனால் அளவிறந்த பிரயோசனமுண்டாகும் மென்பதும் வைத்தியத்தொழிலில் அனுபவமுள்ளவர்களுக்கு நன்கு விளங்கும். இது செய்வதற்கு மிகவும் கடினமுள்ளதாயினும் கஷ்டப்பட்டாவது செய்து முடித்துக் கொண்டால் தக்க பிரயோசனமுண்டாகும். வைத்திய புத்தகங்களில் ஒரு பக்கம் பார்ப்பதற்குள்ளாகவே சோம்பிப் புத்தகங்களைக் கீழே வைத்து உயர்ந்த முறைகளைக் கண்டால், இது செய்வதற்கு மிகவும் உழைக்க வேண்டும். இதனைச் செய்ய யாரால் முடியும்? முறைகளெல்லாம் கண்ணால் பார்த்தவுடனே முடியக் கூடியவைகளாயிருக்க வேண்டும்; செலவோ பைசாவுக்குள் அடங்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப் போர்க்கு இத்தகைய முறைகளைச் செய்வது மிகவும் துன்பமாகவே முடியும். இன்னும் இத்தகையினர்க்கு அவ்வகை இலகுவான முறைகளை

எழுதினாலும் அதைப் பார்க்கும்போதும் கஷ்டமென்றே தெரியும். ஆதலால், இவர்களுக்கு இருவகையாலும் பிரயோசனமில்லை. எதையும் செய்து முடிக்கக் கூடியவர்களுக்கு கடினமான முறைகளும் இலகுவாக முடியும். எதையும் செய்து முடிப்பதற்கு மனோதைரியமே பிரதான காரணம்! 'மனமுண்டானால் வழியுண்டாகும்' என்னும் உண்மையை அறிந்தவரே இத்தகைய முறைகளைச் செய்து முடிக்க வல்லவராவர். அப்படி முடித்தோரே இந்த ஒரு மருந்தைக் கொண்டே எல்லா நோய்களுக்கும் இலகுவாக வைத்தியம் செய்வதற் குரியவராவார்.

செய்முறை : முன் தூய்மை செய்து வைத்திருக்கின்ற சரக்குகள் ஒவ்வொன்றையும் சமநிறையாக நிறுத்தெடுத்து ஒவ்வொன்றையும் தனித்தனியே தூள் செய்து கொள்ள வேண்டும். முன்னர் தங்கத்தைக் கல்வத்திலிட்டுச் சற்று நேரம் அரைத்துப் பிறகு இரசத்தைச் சேர்த்தரைக்க வேண்டும். அதன் பின்பு தாளகம், வீரம், வெள்ளை, கவுரி, மனோசிலை, பூரம், லிங்கம், காந்தம், சாம்பிராணி, சூடன், அபின், இரசசெந்தூரம், வெள்ளி ஆகியவைகளை முறையே ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்த்துச் சற்று நேரம் அரைக்க வேண்டும். இவ்விதம் எல்லாச் சரக்குகளையும் ஒன்றாகக் கலந்தரைத்துக் கொள்ள வேண்டும். எல்லாம் ஒன்றாக கலந்தபின் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற† நதகுருத்தைலத்தைச் (பக்கம் 84-ல் கண்டபடி) சிறுகச்சிறுக விட்டுக் கைவிடாமல் நான்கு சாமமரைதது மெழுகு பதமான தருணத்தில் பீங்கான் குப்பியில் அல்லது தந்த குப்பியில் வைத்துமுடி நன்றாகப் பந்தனம் செய்து 2 நாள் தானியப்புடன் வைத்தெடுத்துத் தத்தம் சக்திக்கேற்ற விதமாகவும் அன்னதானம் முதலியவைகளைச் செய்து சுப முகூர்த்தத்தில் மருந்தை ஆரம்பிக்க வேண்டும். இம்முறையே சாலச் சிறந்தது. மேற்படி செய்யுளில் குறிப்பதும் இத்தைலமேயாகும்.

அளவு :— ஒரு உளுந்து அளவு. அதாவது ஒரு உளுந்து நிறையுள்ள மாத்திரைகளாகச் செய்வது வியாதியின் பலத்திற்குத் தகுந்த விதமாகவும் நோயாளிகளின் உடல் வலிமைக்குத் தகுந்த விதமாகவும், ஒன்று அல்லது இரண்டு மாத்திரைகள் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகளிலில் கொடுக்க வேண்டும். சமயோசிதமாகக் காலையில் ஒருவேளை மாத்திரம் அல்லது காலை மாலையென்னும் இரண்டுவேளையும் கொடுக்கலாம்.

துணைமருந்து : இன்றியமையாத பொதுத் துணைமருந்து பனைவெல்லம் சிறப்பாக உற்ற நோய்க்கேற்ற துணைமருந்துகளையும் உபயோகிக்க மிக்க நலம்.

---

† அண்டத்தைலத்தால் அரைக்கும்படி திரு. பா. மு. அப்துல்லா சாகிபு அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அந்த முறை பக்க எண். 91-ல் காண்க.

மருத்துணவு :—இதற்கு ஒருவகை பத்தியமும் இல்லையெனச் செய்யுளிற் சொல்லப்படினும், அந்தந்த நோயை உண்டாக்கும் காரணங்களையும், உணவுப் பண்டங்களையும் கட்டாயம் நீக்க வேண்டும். புணர்ச்சியையும் தள்ளிவைக்க வேண்டியது மிகவும் அவசியம். இனி, அவரவர்கள் விருப்பம் போலும் சமயத்திற்குத் தகுந்த விதமாகவும் மருத்துணவும் வைக்க வேண்டியது மருத்துவரின் கடமையாம்.

இம் மருந்தால் தீரும் நோய்களாவன :—வாதசுரம், கபசுரம், வாதசிலேட்சுமசுரம் முதலிய சுரங்களும்,

வாதசன்னி. கபசன்னி, சந்திகசன்னி, புக்னநேத்திரசன்னி, சிம்மகசன்னி, பிரதாபசன்னி, அந்தகசன்னி, சீதாங்கசன்னி, கர்நிகச்சன்னி, அபநியாசசன்னி முதலிய சன்னிபாதங்களும்,

வாதகாசம், கபகாசம். இரத்தகாசம், சயகாசம், வாத இரைப்பிருமல், கப இரைப்பிருமல், வாத கபகாசம், வாதகப இரைப்பிருமல் ஆகிய காசநோய்களும்,

விசர்ச்சிகா குட்டம், விபாதிகா குட்டம், ருசிய ஜிம்மிக குட்டம், சரும குட்டம், ஏக குட்டம், கிடிப குட்டம், சிதம குட்டம், அலச குட்டம் முதலிய குட்டநோய்களும்,

மகா குட்டரோகங்களாக அவுதும் பரம், மண்டலம், புண்டரிகம், கபாலம், காகசம் ஆகியவைகளும்.

அண்டவாயு, அண்டவீக்கம் அண்டம் வீங்கியுண்டாம் சுரம், முதலிய அண்ட சம்பந்தமான வாத நோய்களும்,

வாதசூலை, கபசூலை, வாதகப சூலை, ஆம சூலை, சர்க்கரா சூலை, குன்மசூலை, மேகசூலை, முறிசூலை, நிதம்பசூலை. கருப்பசூலை, முதலிய சூலை நோய்களும்,

வாத துட்ட விரணம், கபதுட்ட விரணம், வாதகப துட்ட விரணம் முதலிய விரண நோய்களும், வாத பகந்தர விரணம், கப பகந்தர விரணம், வாதகப பகந்தர விரணம் முதலிய பகந்தர விரண நோய்களும்,

சங்கம தோடம், விஷம தோடம், விடமசீததோடம், பீத ஜிம்மகதோடம், இரக்தசிம்மகதோடம், கிட்டிணசிம்மக தோடம், அபத்திய தோடம் முதலியதோடங்களும்,

வாதகுன்மம், கபகுன்மம், வாதகப குன்மம், வலி குன்மம், ருதுகுன்மம், கட்டிகுன்மம் முதலிய குன்ம நோய்களும்,

மார்புவலி, மாரடைப்பு, மார்க்குத்து, வாதமார்பு நோய், சிலேத்து மார்பு நோய், நுண்புழு மார்பு நோய் முதலிய மார்பைச் சேர்ந்த நோய்களும்,

சூதகக்கட்டு, சூதகசன்னி, சூதக மூர்ச்சை முதலிய சூதகக் கெடுதியாலுண்டாகும் நோய்களும்,

வாதப்பெரு வயிறு, சிலேத்துமப் பெருவயிறு, பீலிகப்பெரு வயிறு, பகுர்த்தப் பெரு வயிறு, பந்தப் பெருவயிறு, நீர்ப்பெருவயிறு முதலிய பெருவயிறுகளும்,

வாதசோபை, சிலேத்ம சோபை, வாதசிலேத்ம சோபை, நச்சுன சோபை முதலிய சோபை நோய்களும்,

வாத காமாலை, கப காமாலை, வாதகப காமாலை, கும்ப காமாலை, குன்ம காமாலை, மஞ்சட் காமாலை, முதலிய காமாலை நோய்களும்,

வாத கக்கல் நோய், கப கக்கல் நோய், வாத கப கக்கல் நோய். புழு கக்கல் நோய் முதலிய கக்கல் நோய்களும்,

தொடர் கழிச்சல் நோய் (கிராணி). பெருங்கழிச்சல் (அதிசாரம்) நோய் முதலிய பல மலப்போக்கு நோய்களும்,

நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு முதலிய நீர்க்கட்டு நோய்களும்,

ஈரல்வலி, ஈரல்குத்து, ஈரல்வீக்கம் முதலிய பல கிரந்தி நோய் களும்,

அரிகிரந்தி, கள்ளிப்பூக் கிரந்தி, நுணுக்காய்க் கிரந்தி, அடு கிரந்தி, படுகிரந்தி முதலிய பல கிரந்தி நோய்களும்,

கழுத்தைச் சுற்றிலும் உண்டாகும் (கண்டமாலை) கட்டிகள், அக்குளில் உண்டாகும் கட்டிகள், தொடைக் கவுட்டிகளிலுண்டாகும் கட்டிகள் மூதலிய கட்டி நோய்களும்,

நீர் சுழிச்சல், மிகுமூத்திர நோய், சொட்டு மூத்திரம், நீரிழிவு முதலிய நோய்களும்,

கண்ணில் உண்டாகும் காசநோயும்,

இன்னும் இங்குச் சொல்லப்படாத அநேக நோய்களும், நல்ல பாம்பு, நாய் முதலிய பல வகைக் கடி நஞ்சுகளும் தீரும்.

இவ்வரிய மருந்தால் எண்வகை மகா நோய்களான வாதநோய் கல்லடைப்பு நோய், குட்டநோய், மேகநோய், மகோதர நோய், பகந்தரநோய், தொடர் கழிச்சல் நோய் முதலிய அநேக நோய்கள் தீருகின்றபடியாலும், எந்த நேரத்திலும், எந்த சமயத்திலும், உபயோகமாகின்றபடியாலும் இது உத்தம பண்டிதர்களுக்கு உயிருக்குச் சமானமானதாம். என்கிறது மேற்படி பாடல்.

992. குடல்வாத மருத்துவம்

தூய்மை செய்த இரசம், காந்தம், வெண்காரம், நெல்லிக்காய்க் கெந்தகம், பால்துத்தம் இவை வகைக்கு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை : கெந்தகத்தையும், இரசத்தையும் கலக்கும்படி அரைத்து நன்ருகக் கறுத்த பின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்துச் சேர்த்து ஒரு மணி நேரம் கைவிடாமலரைத்து எலுமிச்சம் பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம நேர மரைத்துச் சிறு வில்லைகளாகச் செய்து உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

பலகறை $2\frac{1}{2}$பலம், எலுமிச்சம் பழச்சாறு 10 பலம் பலகறையை ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு மேற்படி எலுமிச்சம்பழச் சாற்றை விட்டு வெய்யிலில் வைத்து வந்தால் பலகறை கரைந்து வரும். தினம் தினம் கரைந்த பலகறையைத் தனியே எடுத்து வைத்துக்கொள்ளவும். எல்லாப் பலகறையும் அறவே கரைந்த பின்பு எல்லாவற்றையும் ஒன்ருகச்சேர்த்து மேற்படி எலுமிச்சம் பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து அரைத்து வெண்ணெய் போலான பின்பு ஒரு மூசையும் மூடியும் செய்து வெய்யிலில் காயவைத்து நன்ருகக் காய்ந்த பின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற வில்லைகளை இந்த மூசையிற் போட்டு அதன் மூடியால் மூடி ஏழு சீலைமண் செய்து செம்மையாக உலரவைத்துக் கவசத்தின் ஆறு பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கவசத்தைப் பிரித்து மூசை, மேல்மூடி ஆகியவைகளுடன் எடுத்துப் பொடித்துப் பத்திரப் படுத்தவும்.

அளவு:—1 முதல் 2 குன்றி எடை.

துணைமருந்து:— தேன், பனைவெல்லம், இளக வகைகள் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :—குடல்வாதம், பெருவயிறு, பொருமல், குன்மம், பலவகை வாயு ஆகியவை தீரும்.

993. நீர்க்கட்டு மருத்துவம்

வெண்காரம், வெடியுப்பு, சீனக்காரம், இந்துப்பு இவை வகைக்கு 1 பலம் (35கிராம்), கற்பூர சிலாசத்து 3 பலம்(105 கிராம்).

செய்முறை:—எல்லாவற்றையும் தனித்தனி பொடித்து ஒன்ருகச் சேர்த்து இரண்டுசாம நேரம் கைவிடாமலரைத்து ஒரு அகலில் வைத்து மேலகல் மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஆறு பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்துப் பொடித்து பளிங்குக்குப்பியில் பத்திரப்படுத்தவும்.

அளவு:—2 முதல் 5 குன்றியெடை.

துணைமருந்தும், தீரும் நோய்களும்:—சீரகத்தூள், அதிமதுரத் தூள் கற்கண்டுத்தூள் இவை வகைக்கு 1 வராகன் எடை நெய் 3 வராகன் எடை இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப் படி சேர்த்து உட்கொள்ள நீரருகல், சொட்டு மூத்திரம், நீர்க்கடுப்பு, நீரெரிச்சல் ஆகியவை தீரும்.

கல்கண்டைப் பொடித்த தூள் ½ வராகன் எடை அல்லது பச்சைக் கற்பூரத்தைப் பொடித்த தூள் 2 வராகன் எடை, நெய் 3 வராகன் எடை, இவற்றைக் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி சேர்த்துண்ண, நீர்க்கட்டு, சொட்டு மூத்திரம், சதை யடைப்பு ஆகியவைகள் தீரும்.

இன்னும் இளநீர், முள்ளங்கிக் கிழங்குச் சாறு, வெள்ளரி விதையை அரைத்துப் பிழிந்தபால் ஆகியவைகளில் சமயோசிதம் போல் கலந்து கெடுக்க மேற்கண்ட நோய்கள் தீரும். இன்னும் இதனை நீர்ப்பை, நீர்த்தாரை ஆகியவைகளின் நோய்களில் சமயோசிதம் போல் தகுந்த துணைமருந்துகளில் உபயோகிக்கலாம்.

994. கள்ளி பற்பம்

சதுரக் கள்ளிப்பால் 1 ஆழாக்கு, புளியிலைச்சாறு ½ ஆழாக்கு, ஆவாரையிலைச்சாறு ½ ஆழாக்கு.

செய்முறை :—இவற்றை ஒரு கலயத்தில் போட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலைசெய்து உலர்த்திச் சிறுதீயாக எரித்துக் கலயத்தின் அடிவெளுத்த பிறகு தீயை நிறுத்தி ஆறினபின் எடுக்கப் பற்பமா யிருக்கும். அல்லது கவசத்தின் ஐந்து பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்க பற்பமாயிருக்கும். இதனை பளிங்குக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

இந்த பற்பத்தில் ஒரு வராகன் எடையை ஒரு ஆழாக்கு சிற்ரு மணக் கெண்ணெயில் கலக்கி குப்பியில் வைத்துக் கொள்ள வேண்டும்.

அளவு : இந்த எண்ணெய் சிறுவர்களுக்குக் கால் முதல் ஒரு வராகனெடைவரையில் தாய்ப்பாலில் கலந்து கொடுக்கலாம். பெரியவர்களுக்கு இந்த எண்ணெயில் ஒரு வராகனெடை முதல் இரண்டரை வராகனெடை வரையில் இளநீர், சோம்புத் தீநீர் ஆகியவைகளில் கலந்து கொடுக்கலாம். பற்பத்தைத் தனியாக உபயோகிக்கலாகாது. கழிச்சல் அதிகமாகும். ஆகையால், சிற்றாமணக்கெண்ணெயிற் கலந்து உபயோகிப்பதால் எவ்வித தீக்குணமும் உண்டாகாது. இது சற்றுக் கடினமான மருந்தாயினும் முரட்டு நோய்களை கண்டிப்பதில் மிகவும் சிறந்தது.

தீரும்நோய் :—வயிற்றிலுள்ள நாக்குப்பூச்சி, தட்டைப்பூச்சி, நுண்புழு ஆகிய எல்லாவகை நுண்புழுக்களும் நாசமாகி வெளிப்பட்டுப்போம். நுண்புழு சம்பந்த மாயுண்டாகும் குன்மநோய், வயிற்றுநோய் ஆகியவைகளும் தீரும். இரைப்பை சம்பந்தமான பற்பல நோய்கள் தீரும். வாயுக்கள், குடல் முறுக்குநோய் ஆகியவைகளும் தீரும். இதனை உடல்இயல்பு, நோய்வலிமை ஆகியவைகளைத் தெரிந்து தக்க சமயத்தில் உபயோகித்தால் நல்ல பலனைத் தரும்.

995. நீலாஞ்சன யோகம்

தூய்மை செய்த இரசம் 1 பலம் (35 கிராம்), தூய்மை செய்த கெந்தகம் 1 பலம் (35 கிராம்), நீலாஞ்சனம் 2 பலம் (70 கிராம்). இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில் விட்டு இது அமிழ்ந்திருக்கும்படியாக எலுமிச்சம்பழச் சாற்றை அல்லது புளிப்பு மாதுளம்பழச் சாற்றை விட்டு வெய்யிலில் வைக்க வேண்டும். இந்தச்சாறு சுவறிவிட்டால் மறுபடியும் முன்போல் முன்சாற்றை விடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவை சுவறச்சுவற விட்டு எடுக்க நீலாஞ்சனம் தூய்மையாகும். இவ்விதம் தூய்மை செய்து, மேற்படி முறையிற் சேர்த்துக் கொண்டால் கக்கல் முதலிய தீக்குணம் ஒன்றுமிராது.

செய்முறை :—இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்குகக் கறுத்தபின்பு மேற்கண்டபடி தூய்மை செய்த நீலாஞ்சனத்தைப் பொடித்துச் சேர்த்து நான்குசாம நேரம் அரைத்து எடுத்து குப்பியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—4 முதல் 8 குன்றிமணி எடை.

துணைமருந்து :—தேன், நெய், வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள் :—குட்ட நோய்கள், புரை ஓடுகிற ரணங்கள், அழிரணம், குழிரணம், ஆருத புண்கள் ஆகியவை தீரும்.

மருத்துணவு :—நெய், பால், ஆட்டிறைச்சி, புளி, மீன், புகையிலை கூடா.

குறிப்பு :—இந்த மருந்தை உபயோகித்து வரும்போது சிலருக்கு கக்கலாகும். பயப்படாமல் உபயோகித்து வரவும். மேற் கண்டபடி தூய்மை செய்து உபயோகித்தால் பெரும்பான்மையும் கக்கலாகாது.

996. ஜலமஞ்சரி

காந்தம், அரப்பொடி, வெண்காரம், கல்நார், கல்மதம், கெந்தகம், வளையலுப்பு, இந்துப்பு, பால் துத்தம் எவட்சாரம், சங்கு, சிலாசத்து, சாத்திரபேதி, நவச்சாரம், சீனக்காரம், கிட்டம் இவை வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை ; நாலாங்காய்ச்சல் வெடியுப்பு 2 பலம் (70 கிராம்).

செய்முறை :—அயத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து அரைத்துத் தனியே எடுத்து வைத்துக் கொள்ளவேண்டும். மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித்து இதனுடன் சேர்த்து ஒரு மணி நேரம் அரைத்துப் பிறகு வெடியுப்பைப் பொடித்துச் சேர்த்து அரைத்துப் புது ஒட்டில் வைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து இளகிவரும் பதத்தில் இறக்கி சூட்டுடன் கல்வத்தில் வழித்துப் போட்டு ஆறின பின்பு பொடித்துப் பளிங்குக்குப்பியில் எடுத்து வைக்கவும்.

அளவு :— $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ வராகன் எடை.

துணைமருந்து :—இளநீர், முள்ளங்கிச் சாறு, சோம்புத் தீநீர், காசினித் தீநீர் ஆகியவைகளாம்.

தீரும்நோய் :—நீர்க்கட்டு, நீரருகல், நீரெரிச்சல், சதை யடைப்பு, கல்லடைப்பு முதலிய நீர்ப்பை, நீர்த்தாரை ஆகியவை களின் நோய் தீரும். இதனை அனுபவப்படி உபயோகிக்கவும்.

997. பால் பற்பம்

இரண்டுபடி பாலைக் காய்ச்சி அரைவாசி சுண்டின பின்பு குளிர ஆற வைத்தால் மேலே ஏடு படிந்திருக்கும். அதனை எடுத்துவிட்டு மீதியான பாலை வடிகட்டி அடுப்பேற்றிப் பருமனான துத்திவேர்க் கட்டையினால் துழாவி வந்தால் பாலானது பற்பமாகிவிடும்.

அளவு :—$2\frac{1}{2}$ முதல் 5 வராகன் எடை.

துணைமருந்து :—நெய், தேன், வெண்ணெய் முதலியவை களாம்.

தீரும்நோய்கள்:—உடற் சூடு, என்புச்சூடு, ஆகியவை தணிந்து உடல் குளிர்ச்சியுண்டாகும். பால் ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு இவ்விதம் செய்து உபயோகிக்கலாம்.

998. நீலகண்டபாலை

(கரிசல் முறை)

துருசு, கௌரி, இரச கற்பூரம், சூடன், பச்சைக் கற்பூரம், துத்தம், நாகம், வங்கம், வெடியுப்பு, படிக்காரம், வெள்ளைப் பாடாணம், மனோசிலை, பூநீறு, அரிதாரம், இரசம் இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்). இவைகளையெல்லாம் தூய்மை செய்து கொள்ளவும். கால்படி தாய்ப்பாலில் சுருக்குக்கொடுத்த ஒரே கட்டியான உலாந்தா லிங்கம் 4 பலம் (140 கிராம்)

செய்முறை :—வங்கம், நாகம், ஆகிய இரண்டையும் உருக்கி இரசத்துடன் தொந்தித்துக் கெந்தகத்தையும் சேர்த்தரைத்து மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித்துச் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து ஒரு மூசை செய்து நிழலிலுலர்த்திச் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும். மண்ணை அரைத்துச் செய்த அடி கனத்த இரண்டு பானை வாங்கி இரண்டும் வாய்பொருந்தும்படியாகத் தேய்த்துச் சந்தில்லாமல் சரிப்படுத்தி மேற் பானைக்குச் சித்திரமூல இலைச் சாற்றைப் பொட்டில்லாமல் தடவிக் காயவைக்க வேண்டும். மறு படியும் முன்போல் பொட்டில்லாமல் பூசவேண்டும். இவ்விதம் உலர, உலர ஏழு தடவைகள் மடக்கி, மடக்கிப்பூசி உலரவைத்துச் சித்தப் படுத்திக் கொள்ளவேண்டும். $\frac{3}{4}$ படி கறியுப்பையும், $\frac{3}{4}$ படி செங்கல்லை யும் சேர்த்திடித்துக் கீழ்ப்பானையில் பரப்பிப் பாதிவரை அழுத்தி அதன் மேல் சித்திரமூல வேர்த்தூள் 2 பலம் (70 கிராம்) போட்டு அதன் மேல் குகையை வைத்து மேற்படி குகையில் முன் லிங்கத்தை நொறுக்கி வைத்துக் குகை நிறையத் தைவேளைச் சாற்றை விட்டு மேலும் முன்போல சித்திரமூலத் தூளிட்டு அதன்மேல் முன் உப்புப் பொடியிட்டு மேல்பானை மூடிப் புற்றுமண் அரைத்து ஏழுசீலை செய்து உலர்த்தி வட்டடுப்பில் வைத்துக் காடாக்கினியாக எட்டுச் சாமம் எரித்து ஆறவிட்டு எடுத்துப் பார்க்க மேல் பானையில் பதங்கம் ஏறியிருக்கும். மேற்படி பதங்கத்தையெடுத்து புட்டியில் அடைத்து வைக்கவும்.

அளவு :—$\frac{1}{2}$ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :—சாணிப்பாலில் தூய்மை செய்த சேராங் கொட்டை, பறங்கிப்பட்டை, பிரப்பங்கிழங்கு இம் மூன்றும் வகைக்கு 1 பலம் (35 கிராம்) இவற்றைத் தூள் செய்து பசுவின் நெய்யை விட்டுக் குழம்புப் பதமாக அரைத்து வைத்துக் கொள்ளவும். இந்தக் குழம்பு 1 வராகன் எடை (3½ கிராம்), பச்சரிசிமாவு 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் 1 வராகன் எடை (3½ கிராம்), இம் மூன்றையும் கலந்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்து உண்ணவேண்டும். கீழ்க்காணும் துணைமருந்து சூரணத்திலும் கொடுக்கலாம். இவ்விதம ஏழுநாள் அல்லது ஒன்பதுநாள் நோயின் வலுவறிந்து கொடுக்கவும்.

தீரும்நோய்கள் :—பதினெட்டுவகைச் சூலைகள், மேகவாயுகள், நெருப்புச்சுட்ட புண்ணைப்போல் காணும் மேக நோய்கள், கைகால் உடல் ஆகியவைகளிற்காணும் திமிர்கள், இரணங்கள், தடிப்புகள், சொறிகள், வெள்ளைப்படர்ந்த மேகம், கறுப்புப்படர்ந்த மேகம், கிரந்தி வகைகள், பதினெட்டு குட்டங்கள், பத்துவகை வெடி மேகங்கள் ஆகியவை தீரும்.

மருந்துணவு :—புளி, உப்பு நீக்கி வெந்நீரன்னம், பசுவினெய், மோர், பால், அன்னப்பால் சேர்க்கவும்.

நீலகண்டபாலை

துணைமருந்து சூரணம்

இலேசான பறங்கிச்சக்கை 10 பலம் (350கிராம்). இதனை மெல்லி தாகச்சீவி ஒரு புதுச்சட்டியிலிட்டு இஞ்சிச்சாறு, கற்பூர வள்ளிச்சாறு கரந்தைச்சாறு, குப்பைமேனிச்சாறு, நல்லவேளைச்சாறு ஆகிய இவ்ற்றில் ஒவ்வொன்றிலும் அரைப்படிவீதம் தனித்தனியே விட்டு உலர்த்தவேண்டும். அதாவது, அரைப்படி இஞ்சிச்சாற்றை முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் பறங்கிச்சக்கைச் சீவலில் விட்டு நன்றாக சேர்த்து வெய்யிலில் வைத்து அந்தச் சாறெல்லாம் சுவறிச் சீவல் நன்றாக உலர்ந்த பின்பு அரைப்படி கற்பூரவள்ளிச் சாற்றை விட்டு முன்போற் கலந்து முன்போல் ஊறவைத்து உலர்த்த வேண்டும். இவ்விதமாக முறையே ஒன்றன்பின் ஒன்றாகச் சாறுகளை எல்லாம் விட்டு உலர்த்திக் கொள்ள வேண்டும். இதுவே பறங்கிச் சக்கைப் பக்குவம் ஆகும்.

மிளகு 10 பலம் (350 கிராம்), இதனை ஒரு புதுச்சட்டியிலிட்டு அதில் சிறுபிள்ளை மூத்திரம், பசுவின் மூத்திரம், கையாந்த கரைச் சாறு, வெள்ளாட்டு மூத்திரம் ஆகிய நான்கையும் ஒவ்வொன்றும் அரைப்படி வீதம் தனித்தனியே முறையேவிட்டு ஒன்று சுவறின பின்பு மற்றொன்றை விட்டுச் சுவறச்செய்து சித்தப்படுத்திக்

கொள்ள வேண்டும். இவ்விதம் மேற்கண்ட நான்கு திரவங்களையும் முறையே தனித்தனியே சுவறச் செய்த மிளகிற்குப் பக்குவப் படுத்தின மிளகு என்று பெயர்.

முன் பக்குவப்படுத்தின பறங்கிச்சக்கையையும் முன் பக்குவப் படுத்திய மிளகையும் தனித்தனியே பொடித்து ஒன்ருகச் சேர்த்து ஒருமணி நேரமரைத்துத் தனியே வைத்துக் கொள்ளவும்.

கொடிவேலி வேர்ப்பட்டை, உலர்த்தின சங்கங்காய், உலர்த் தின சங்கங்குப்பிப் பட்டை, வீழிவேர்ப் பட்டை இவைகளின் சூரணம் வகைக்கு 5 பலம் (175 கிராம்).

அதிமதுரம், கண்டத்திப்பிலி, அக்கிராகாரம், சடாமாஞ்சில் சிற்றரத்தை, சன்னலவங்கப்பட்டை, சாதிக்காய், சாதிப்பத்திரி, லவங்கம், ஓமம், வால்மிளகு, செவ்வியம், நற்சீரகம், பெருஞ்சீரகம், அரிசித்திப்பிலி வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்). இவை எல்லாவற் றையும் இடித்துத் துணியில் வடிகட்டி முன் சித்தப்படுத்தி வைத் திருக்கிற கொடிவேலி வேர்ப்பட்டை முதலியவற்றின் சூரணங்கள், மிளகுத்தூள் பறங்கிச்சக்கைத்தூள் ஆகியவற்றையும் சேர்த்து ஒரு சாமநேரமரைத்து எல்லாம் ஒன்ருகக் கலந்து பின்பு துணியில் வடி கட்டி புதுக்கலசத்தில் வைத்துக் கொள்ளவும்.

அளவு: இந்தச் சூரணம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) நெய் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி நீலகண்டபாலை பற்பத்தை அளவுப்படி கலந்துட்கொண்டு வரவும்.

தீரும்நோய்கள்: மேற் சொல்லிய நோய்கள் தீருவதுடன் குன்மம், வாயுக்குத்து, வாதத்தாலேற்படும் கை கால் பிடிப்பு, முடக்குவாதம் முதலிய எண்பதுவாத நோய், கிரந்தி, புண், கரப் பான், வண்டுகடி, சில்விஷம், நீராமை, லிங்கப்புற்று, லிங்கசூலை, அல்குல் புற்று, மகோதரம், பீனிசங்கள், எட்டுவகைக் காசங்கள், சகல நச்சுநீர் ஆகியவை தீரும்.

மருத்துணவு:— உப்பு வேண்டியிருந்தால் பதங்கமெரித்த உப்புக் கூட்டலாம்.

999. மகா ரசப் பதங்கம்

தூய்மைசெய்த அரிதாரம், துருசு, வெள்ளைப்பாடாணம், தொட்டிப்பாடாணம், இரசகற்பூரம், மிர்தார்சிங்கி, சவ்வீரம், கௌரிப்பாடாணம், கெந்தி இவை வகைக்கு 1 வராகன் எடை; இரசம் 6 வராகன் எடை (21 கிராம்) சங்கத் திராவகம் செல்லத்தக்க அளவு.

செய்முறை :— சரக்குகளையெல்லாம் தனித்தனியே பொடித்து ஒன்ருகச் சேர்த்து வைத்துக்கொள்ளவும். இரசத்தைக் கல்வத்திலிட்டு முன் கலந்து வைத்திருக்கும் தூளில் கொஞ்சம் எடுத்துப் போட்டு அரைக்க வேண்டியது. தூளெல்லாம் சென்று இரசமும் மடிந்துபோனபிறகு மேற்படி திராவகத்தைச் சிறுகச்சிறுக வார்த்துப் பன்னிரண்டு சாமநேரமரைத்து வில்லைசெய்து நான்கைந்து நாள் வரையில் உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இதை ஒரு செம்புக் கிண்ணிமூடி இவற்றின்மேல் வெள்ளைக்கல், உளுந்து, வேப்பம் பிசின், இலவம்பிசின் இவற்றை முட்டை வெண்கரு விட்டரைத்துக் கவசித் துலர்த்தி அதன்மேல் மூன்று சீலைமண் செய்துலர்த்தி ஒரு அகலச்சட்டியில் மணலிட்டு அதனடுவே கவசத்தை வைத்து மேற் சட்டி மூடிச் சீலைமண் செய்து 3 சாம மெரித்து ஆற விட்டெடுக்கப் பதங்கமாம்.

அளவு :— 1 முதல் 2 அரிசி எடை.

துணைமருந்து :— அந்தந்த நோய்களுக்குத் தகுந்ததுபோலும் சமயோசிதம்போலவும் துணைமருந்து ஏற்படுத்தவும்.

தீரும்நோய்கள்:—எல்லாவகைக் கிரந்திநோய்கள், மேகநோய், சூலைகள் முதலிய அநேக நோய்கள் தீரும். இந்த மருந்தில் கிரந்தி நோய் போகாவிட்டால், 'சாபத்திஞல் வந்த நோய் என அறிந்து தான தருமம் செய்தும், பெரியோர்களுக்குத் தொண்டு செய்தும், ஏழைகளுக்கு உதவி செய்தும் சாப நிவர்த்தி செய்து மறுபடியும் இந்த மருந்தை உபயோகித்தால் தீர்ந்துபோகும்.

1000. அக்கினிகுமார செந்தூரம்

தூய்மை செய்த இரசம் 2 பலம் (70 கிராம்), இலிங்கம் 1 பலம் (35 கிராம்), இலவங்கச் சூரணம் 2 பலம் (70 கிராம்) இரும்பு லாடத்தை அராவின அரப்பொடி 1 பலம் (35 கிராம்), பித்தளை அரப் பொடி 1 பலம் (35 கிராம்), செம்பு அரப்பொடி 1 பலம் (35 கிராம்), துத்தநாக அரப்பொடி 1 பலம் (35 கிராம்), வெண்காரம் 3 பலம் (105 கிராம்), சவுக்காரம் 4 பலம் (140 கிராம்), கையாந்தகரைச் சாறு, வெண்ணொச்சியிலைச்சாறு, கழற்சியிலைச்சாறு இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை : உலோக அரப்பொடிகளைக் கல்வத்திலிட்டு ஒன்ருகச் சேர்த்தரைத்துப் பிறகு இரசத்தைச் சேர்த்தரைத்துப் பிறகு இலிங்கத்தைச் சேர்த்தரைத்துப் பிறகு மற்ற தூள்களைச் சேர்த்து இரண்டு சாமநேரமரைத்து எல்லாம் கலந்தபின்பு மேற்படி சாறுகளில் தனித்தனியே சிறுகச் சிறுக வார்த்து ஒவ்வொரு சாம

நேரமரைத்துப் பிறகு ஒரே வில்லையாகச் செய்து உலர்த்தி இலுப்பை இலையைச் சிறுநீர் விட்டரைத்து வில்லையின்மீது அரையங்குல கனம் கவசம் செய்துலர்த்தி தாழிச்சட்டியில் ஒரு படி உப்பைக் கொட்டி அதன்நடுவில் மேற்படி கவசத்தைவைத்து அதன் மீது இரண்டு படி உப்பைக் கொட்டி மேற்சட்டிமூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றித் தீபாக்கினியாக எட்டு மணி நேரம் எரித்துக் குளிர ஆறினபின்பு எடுத்துக் கவசத்தைப் பிரித்து வில்லையைப் பொடித்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— ½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும்நோயும் :—தேனில் அளவுப்படி இதை 3 நாள் கொடுக்க, சுரம், சளி, சதையடைப்பன், உஷ்ணபித்தம், கழிச்சல், தாகம், உழலை, நீர்ச்சுருக்கு, உள்ளுருக்கி, எலும்புருக்கி, கையெரிவு, அட்டகுன்மம், பிரமியம் இவை தீரும்:

சர்க்கரையில் அளவுப்படி சேர்த்து ஏழு நாள் கொடுக்க அரையாப்பு, சூலை, மேகம், மேகரணம் ஆகியவை தீரும்.

இஞ்சிச்சாற்றில் கலந்துக் கொடுக்க பாண்டு, காமாலை தீரும்.

மருத்துணவு :— உப்பு, புளி ஆகா. தலைக்குத் தண்ணீர் வார்த்த பிறகு சேர்க்கவும்.

1001. குப்பிவைப்புச் செந்தூரம்

தூய்மை செய்த இரசம், கெந்தகம், நவாச்சாரம், வெள்ளீயம் இவை வகைக்கு 6 வராகன் எடை (21 கிராம்).

செய்முறை :—வெள்ளீயத்தையும் இரசத்தையும் தொந்தித்து மற்ற இரண்டு சரக்கையும் சேர்த்து இரண்டு சாமநேர மரைத்து ஏழு சீலை செய்துலர்த்தின சோடா தண்ணீர் புட்டியில் போட்டு, ஒரு சட்டியடியில் மேற்படி புட்டியின்அடி நாலங்குலம் இறங்கும்படி துளைத்து அதில் புட்டி, சட்டியின்கீழ் நாலங்குலம் தெரியும்படி வைத்துச் சந்துபந்தனம் செய்து புட்டியின் கழுத்து வரை மணல் கொட்டி வட்டடுப்பில் வைத்து நான்கு சாமம் எரிக்கவும். எரிக்கும் போது வாய்திறந்து வைத்தெரிக்க வேண்டும். பின்பு ஆறவிட்டெடுத்து உடைத்துப்பார்க்க அதில் செந்தூரம், நான்குவித வண்ணமாயிருக்கும். அவற்றுள் மஞ்சள் வண்ணத்தைத் தள்ளி மற்ற மூன்று வண்ணச் செந்தூரங்களையும் ஒன்றாகச் சேர்த்துப் பொடித்து வைத்துக் கொண்டு உபயோகிக்கலாம்; தனித் தனியாகவும் பொடித்து வைத்துக் கொண்டு உபயோகிக்கலாம். எல்லாவற்றையும் சேர்த்துப் பொடித்தால் மயில்கழுத்து வண்ணத்தைப்போல பளபளப்பாயிருக்கும். இதனைச் சிலர் தங்கச் செந்தூரமென விற்பதுமுண்டு.

அளவு :— ½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :—தேன், நெய், வெண்ணெய், இஞ்சிச்சாறு முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—மேற்கண்ட துணைமருந்துகளில் அளவுப்படி மூன்று நாள் ஆறுவேளை கொடுக்கச் சுவாசகாசம், இரைப்பு, இருமல் ஆகியவை தீரும். அடியில் கருப்பாயிருப்பதை வயிற்று வலி, வாயுவுகளுக்குக் கொடுக்கலாம். கழுத்தில் மஞ்சள் வண்ண மாக இருப்பதைப் புத்தகமெழுதும் இங்கியாக உபயோகிக்கலாம்.

மருந்துணவு :—புளி, புகை, புணர்ச்சி தவிர்க்கவும்.

1002. காளகண்ட மேகநாராயண செந்தூரம்

மேற்படி செந்தூரத்திற்குத் திராவகம் :—கறியுப்பு, வெடியுப்பு, சீனம், காந்தம், நெல்லிக்காய்க் கெந்தகம், வெண்காரம், கடல் நுரை இவை வகைக்கு 8 பலம் (280 கிராம்), இவையெல்லாவற்றை யும் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பட்டைச் சாராயம் 20 பலம் (700 கிராம்), சிறுகச் சிறுகவிட்டு அரைத்து உலர்த்திப் பொடித்து மண்தோண்டியிலிட்டு அத் தோண்டியின் கழுத்தை எடுத்துவிட்டு அதன் மேல் வாலையென்னும் எந்திரத்தைக் கவிழ்த்துப் புகை வெளியே போகாதபடி துணியைச் சுற்றி அத் தோண்டியை அடுப்பின் மீது வைத்து வாலையில் தண்ணீரை ஊற்றி வைக்க வேண்டியது. எந்திரத்தினுடைய கீழ்க்குழாயின் கீழ் ஒரு பாத்திரத்தை வைக்கவும். அடுப்பில் தீயையிட்டு ஆரம்பத்தில் மெதுவாக எரித்துப் பிறகு முறைப்படி தீயை அதிகப்படுத்திக் காடாக்கினியாக ஏரிக்கவேண்டும். எந்திரத்தின் மீதுள்ள தண்ணீர் சூடு கண்டவுடன் மேற்குழாயைத் திறக்க அது வடிந்து போகும். பிறகு குளிர்ந்த தண்ணீரை அதில் விடவேண்டும். இவ்விதம் தண்ணீர் சூடுகண்டவுடன் அதை நீக்கிவிட்டு வேறு குளிர்ந்த தண்ணீரை விட்டு மாற்றிக் கொண்டிருக்க வேண்டும். இப்படிச் செய்யத் திராவகமிறங்கும். முதலில் இறங்கும் திராவகம் கார மில்லாமலிருக்குமாகையால் அதையெடுத்துத் தனியே வைத்துக் கொள்ளவும். பிறகு இறங்கும் திராவகம் காரமாயிருக்கும். அதனைத் தனியே ஒரு புட்டியில் பத்திரப்படுத்தவும். இதனை மேற்படி செந் தூரம் செய்ய உபயோகிக்கவும். காரமில்லாத திராவகத்தைக் குன்மநோய், அசீரணநோய் மந்தாக்கினிநோய் ஆகியவைகளுக்கு உடல் வலிவு வயது முதலியவற்றிற்குத் தகுந்தபடி இரண்டு துளி முதல் நான்கு துளிகள் வரையில் தண்ணீர், சோம்புத் தீநீர் முதலிய துணை மருந்துகளில் கொடுக்கலாம்.

செந்தூரமுறை :—தூய்மை செய்த இரசம் 3 பலம் (105 கிராம்), உலாந்தாலிங்கம் $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), பொன்னரிதாரம் 1 பலம் (35 கிராம்), கெந்தகம் $1\frac{1}{4}$ பலம் ($43\frac{3}{4}$ கிராம்), மனோசிலை $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்) மேற் கூறிய திராவகம் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—முதலில் இரசத்தையும், கெந்தகத்தையும் தொந்தித்து அரைத்துப் பின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித்துச் சேர்த்து மேற்படிதிராவகத்தைச் சிறுகச்சிறுக வார்த்து மூன்றுநாள், நாளொன்றுக்கு நான்குசாமம் வீதம் பன்னிரண்டு சாமம் அரைத்து உலர்த்திப்பொடித்து ஏழு சீலைமண் செய்துலர்த்தி காசிக் குப்பியில் அரைவாசி இருக்கும்படியாகப் போட்டு வாய்க்கு மாக்க லிட்டுச் செந்தூரச் சட்டியில் நான்கு விரற்கடை மணல் போட்டு அதன் மேல் வைத்துக் குப்பியின் கழுத்தளவு மணல் கொட்டி அடுப்பின் மீதேற்றித் தீபாக்கினி 1 சாமம் கமலாக்கினி 2 சாமம் காடாக்கினி 4 சாமம் ஆக ஏழு சாமமும் ஒருசாதி விறகால் எரிக்க வேண்டும். இதனை எரிக்கும்போது ஒரு இரும்பு சலாகையால் சற்று நேரம் துழாவிக் கொண்டு வரவேண்டும். சலாகையிறங்காமல் கெட்டியாயிருந்தால் அதுவே பதம், குளிர ஆறின பின்பு இறக்கிப் புட்டியைத் தண்ணீரில் நனைத்து உடைத்துச் செந்தூரத்தை எடுத்து நீரைவிட்டுச் சுத்தமாக அலம்பி எடுத்து ஈரத்தை உலர்த்திக் கல்வத்திற் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவேண்டும். இதன் வேகத்தைத் தணித்துக்கொள்ள வேண்டுமானால் ஒரு படி சீந்திற் கொடிக் குடிநீரில் துலாந்திரமாகத் தொங்கவிட்டு எரித்துக் குடிநீர் சுண்டின பின்பு அலம்பித் தூய்மை செய்து முன்போல் பொடித்துக் கொள்ளவும். வீறடங்கி சாந்தமாக வேலைசெய்யும்.

அளவு :—$\frac{1}{2}$ முதல் 1 குன்றி எடை.

துணைமருந்து :—தேன், நெய், வெண்ணெய், வில்வாதி இளகம், பஞ்ச தீபாக்கினி இளகம், பறங்கிச் சக்கைத் தூள், சீரகத் தூள், சுக்கு இளகம் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள்:—வாதசம்பந்த நோய்கள், பித்தசம்பந்த நோய் கள், கப சம்மந்த நோய்கள், நரம்பைப் பற்றிய நோய்கள் முதலிய எல்லா நோய்களுக்கும் தகுந்த துணைமருந்துகளில் கொடுக்ககுண முண்டாம். சுவாசகாசம், ஈளை, கபக்கட்டு, குரற்கம்மல் ஆகிய இந்த நோய்களுக்குத் தாளிசப்பத்திரிச் சூரணம், தாளிசப்பத்திரி வடகம், ஆடாதோடை நெய், ஆகியவைகளில் கொடுத்துக் குணம் காணப் பட்டிருக்கிறது வயிற்று நோய், அசீரணம், குன்மம் ஆகியவை எலுமிச்சம் பழ இளகத்தில் சேர்த்துக் கொடுத்துக் குணம் காணப் பட்டிருக்கிறது. கீல்வாயு, கணுக்கால் வாயு, சந்துவாயு முதலியவை களுக்கு கொடிவேலி வேர்ப்பட்டைச் சூரணத்தில் சேர்த்துக்

கொடுத்துக் குணம் காணப்பட்டிருக்கிறது. இப்படியே சமயோசிதம் போல் தகுந்த துணைமருந்துகளில் எல்லா நோய்களுக்கும் கொடுக்கலாம்.

1003. காளகண்ட மேகநாராண செந்தூரம் (வேறு)

தூய்மை செய்த இரசம், கெந்தகம், அரிதாரம், லிங்கம், மனோ சிலை, சீனக்காரம் இவை வகைக்குப் 1 பலம் (35 கிராம்) நாகப்பழச் சாறு, குப்பைமேனிச்சாறு, செம்பரத்தம் பூச்சாறு, இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—கெந்தகத்தையும் இரசத்தையும் தொந்தித் தரைத்து நன்ருகக் கறுத்த பின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனி பொடித்துச் சேர்த்து இரண்டு மணிநேரம் கைவிடாமலரைத்து எல்லாம் கலந்த பின்பு முன் சாற்றைத் தனித்தனியே சிறுகச்சிறுக விட்டு மும்மூன்று சாமம் அரைத்துக் காசுபோல் சிறு வில்லை களாகச் செய்துலர்த்திச் சட்டியில் பரப்பிக்குகை போல் செப்புக் கிண்ணத்தால் மூடிச் சந்துபந்தனம் செய்து குகையைச் சுற்றிலும் நான்கங்குல மணல் போட்டு மூன்று சாமம் எரிக்கச்செந்தூரமாகும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய் முதலியவைகளெல்லாம் மேற்கண்ட வைகளேயாம்.

1004. மேற்படி செந்தூரம் (புடம்)

தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம், லிங்கம், அரிதாரம். அப்பிரேக நவநீதம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) ஆவாரையிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—முன் மூன்று சரக்கையும் தனித்தனியே பொடித்து அப்பிரேக நவநீதத்தையும் சேர்த்து ஒரு சாமநேரம் அரைத்து நன்ருகக் கலந்த பின்பு ஆவாரையிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்து ஒரே வில்லையாகச் செய்து உலர்த்தி அகலிலிட்டு மேலகல்மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் இருபதுபங்கு வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்கச் செந்தூரமாகியிருக்கும் தீயானது குறைவாயிருந்தால் செந்தூரம் கருப்பாயிருக்கும். ஆனுல். அதை முன்சாற்ருல் இரண்டு சாமநேரம் அரைத்து முன் போல் வில்லை செய்து முன்போல் புடமிடச் சிவந்து செந்தூரமாகிவிடும்.

அளவு :—½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :—ஆவாரை விதைச் சூரணம். ஆவாரங் கொழுந்துத் தூள், ஆவாரம் பட்டைத் தூள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—இருபத்தொருவகை நீரிழிவு தீரும். பிரமேகம், விந்து ஒழுக்கு ஆகியவைகளும் தீரும்.

1005. திரிபுராதி செந்தூரம்

தூய்மை செய்த வீரம், வெள்ளைப் பாடாணம், கௌரிப் பாடாணம், அரிதாரம், மனோசிலை, வெடியுப்பு, நெல்லிக்காய்க் கெந்தகம், நவச்சாரம், சவுக்காரம் இவை வகைக்கு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இலிங்கம் 1 பலம் (35 கிராம்), வளையலுப்பு $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்), கறியுப்பு 1 ஆழாக்கு நெல்லிக்காய்க் கெந்தகம் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—முன் ஒன்பது சரக்கையும் தனித் தனியே பொடித்து ஒன்ருகச் சேர்த்து ஒரு மணி நேரமரைத்துப் பிறகு தண்ணீரைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுமணி நேரமரைத்து ஒரு குகை செய்துலர்த்தி மேற்படி இலிங்கத்தைப் பொடித்து அதிற்போட்டு வாய் பொருந்தும்படியான இரண்டு சட்டி சித்தப் படுத்திக் கீழ்ச் சட்டியில் வளையலுப்பைப் பொடித்து இரண்டு பாகமாகச் செய்து ஒரு பாகத்தைப் போட்டு அதன் மீது முன் சித்தப்படுத்தின குகையை வைத்து மறுபாதி வளையலுப்புத் தூளினல் குகையை மூடி அதன்மீது கறியுப்பைக் கொட்டி மறு சட்டியால் மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றித் தீபாக்கினியாக நான்கு சாமநேரம் எரித்து ஆறவிட்டெடுக்கப் பதங்கமேறியிருக்கும். அப் பதங்கத்தைச் சுரண்டி எடுத்து அதற்குச் சம எடை கெந்தகத்தைச் சேர்த்து ஒரு சாமநேரம் அரைத்து ஏழு சீலைமண் செய்துலர்த்தின காசிக்குப்பியில் போட்டு வாய்க்கு மாக்கல் காரக்குப் போட்டு அதற்கும் சீலைமண் செய்து உலர்த்தி ஒரு குண்டு சட்டியில் நாலங்குலம் மணலைப்பரப்பி அதன் மீது முன் சித்தப்படுத்தின குப்பியை வைத்துக் குப்பி மறையும் படியாக மணலைக் கொட்டி மேற்சட்டி மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றித் தீபாக்கினி 4 சாமம் கமலாக்கினி 6 சாமம், காடாக்கினி 6 சாமம் ஆக 16 சாமம் ஒரு சாதி விறகால் எரித்து ஆறின் பின்பு எடுத்துக் குப்பியை உடைத்துச் செந்தூரத் தைப் பத்திரப் படுத்தவும்.

அளவு :—1 முதல் 2 அரிசி எடை.

துணைமருந்து :—பனைவெல்லம், தேன், சுக்கரைத்த விழுது, இளக வகைகள் முதலியவைள்.

தீரும்நோய்கள் .- மேகவாயு, சூலைக்கட்டு, வாதம், அக்கினி மந்தம், இருமல், சுவாசகாசம் ஆகியவை தீரும். தாதுவலிவு உண்டாகும்.

மருந்துணவு :—இச்சாபத்தியம். புளி, புகை ஆகாது; நெய், பால் கறி கூட்டவும்.

1006. பூரணச் சந்திரோதய செந்தூரம்

தங்கரேக்கு 1 பலம் (35 கிராம்), வாலைரசம் 8 பலம் (280 கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் 16 பலம் (560 கிராம்), செம்பரத்தம் பூச்சாறு, குமரிச்சாறு ஆகியவை செல்லத்தக்க அளவு.

செய்முறை :—கெந்தகத்தையும் இரசத்தையும் தொந்தித் தரைத்து நன்ருகக் கறுத்த பின்பு தங்கரேக்கைச் சிறுகச் சிறுகச் சேர்த்து ஒரு சாமநேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு மேற்படி பூச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து 3 நாளும், குமரிச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு 7 நாளும் அரைத்து உலர்த்திப் பொடித்து செங்காசல குப்பிக்கு ஏழு சீலைமண் செய்துலர்த்தி அதில் மேற்படி மருந்தை அரைவாசி அடைத்து வாய்க்கு மாக்கல் அடைத்து ஒரு பெரிய குண்டு சட்டியில் ஆற்று மணலை பாதிவரையிலும் போட்டு நடுவே மேற்படி குப்பியை வைத்து அதன் கழுத்து வரையில் மணல் கொட்டி மேற்சட்டி மூடி நான்கு சீலைமண் செய்து வட்ட டுப்பில் வைத்து தீபாக்கினி 2 சாமம், கமலாக்கினி 2 சாமம், காடாக்கினி 20 சாமம், ஒரு சாதி விறகால் எரிக்கவும். இந்தப்படி மாற்றி மாற்றி இராப்பகல் மூன்றுநாள் கைவிடாமல் எரிக்கவும். இவ்வாறு எரிக்கும்போது தாம்பூரச் சலாகையால் மேற் சட்டியைத் திறந்து வாயிலடைத்திருக்கும் மாக்கல்லைக் குறட்டால் பிடித்துக் குப்பிக்குச் சேதமில்லாமல் திறந்து மருந்தைக் கிண்டிக் கொடுத்து பழைய படி மாக்கல்லை அடைத்து எரிக்கவும். இந்தப்படி அடிக்கடி திறந்து தாம்பூரச் சலாகையால் கிண்டிக் கொடுத்து வரவேண்டும். இப்படிக் கிண்டிக் கொடுத்து வரும்போது மருந்துள்ள குகையுள் சலாகையிறங்காது இதுவே செந்தூரப் பதமாம் இந்தப் பக்குவம் பார்த்துத் தீயை நிறுத்தி ஆறவிட்டுக் குப்பியை உடைத்துப் பார்க்கச் செந்தூரமாய் இருக்கும் எடுத்துப் பத்திரப் படுத்தவும்.

அளவு :—$\frac{1}{2}$ முதல் 1 அரிசி எடை.

துணைமருந்து :—தேன, நெய், இளக வகைகள் முதலியவை களாம்.

தீரும்நோய்கள் :—உடலிலுள்ள எல்லா நோய்களும் நீங்கி இரத்த சுத்தியுண்டாகித் தளர்ந்த நரம்புகள் உரத்துப் பலத்து முறுக்கேறி உடல் திடம்; ஊக்கம், மனோற்சாகம், உடல் வனப்பு,

முகவனப்பு, நீண்ட வாழ்வு, குழந்தை உற்பத்தி முதலியவைகளும் ஆண் தன்மையும் உண்டாகும். இதன் பெருமை பலவுள. இதனை அனுபவிக்கும் அறிவாளிகளுக்கு அது தெரிந்தேயிருக்கும். சயம் முதலிய கடின நோய்களுக்குப் பல வேறு வகை மருந்துகளைத் தேடுவதிலும் இந்த ஒரு மருந்தே போதுமானது. ஆனால், இதனைச் செய்து முடிக்கக் கொஞ்சம் பணச் செலவும் உழைப்பும் வேண்டியது. அதற்குப் பால்மாறுமல் செய்து முடித்தால் அநேகம் நல்ல குணங்களை அடையலாம்.

குறிப்பு :—பூரணச்சந்திரோதய முறையைப் பலர் பலவகையாகச் செய்கின்றார்கள். அம் முறைகளிலெல்லாம் இது மிகவும் சிறந்தது. முக்கியமான மூன்று சரக்குகளினுல் செய்யப்படுகிறது. மற்ற முறைகளுக்கும் இதற்குமுள்ள வித்தியாசத்தை அனுபவசாலிகளான அறிவாளிகள் தத்தம் அனுபவத்தில் கண்டுகொள்வார்கள்.

1007. மகா சுயமக்கினி செந்தூரம்

தூய்மை செய்த அரப்பொடி 32 வராகன் எடை, ஊசிக்காந்தம் 16 வராகன் எடை, கெந்தகம் 8 வராகன் எடை, மனோசிலை 4 வராகன் எடை, இரசம் 2 வராகன் எடை, நாபி 1 வராகன் எடை, எலுமிச்சம்பழச்சாறு, சோற்றுக் கற்ருழைச்சாறு, கையாந்தகரைச் சாறு, கோழியவரைச்சாறு, வெள்ளிண்டுச்சாறு, வெற்றிலைச்சாறு, மருதம்பட்டைச்சாறு, நரிநாகப்பட்டைச்சாறு, கொம்புப்பாகல் சமூலச்சாறு, சுக்குக் குடிநீர் ஆகிய இவை வகைக்குச் செல்லத் தக்க அளவு, புளிப்பு மாதுளம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—எல்லாச் சரக்குகளையும் தனித்தனியே பொடித்துச் சேர்த்து இரண்டு மணி நேரம் அரைத்து எல்லாம் கலந்த பின்பு மேற்படி சாறுவகைகளில் சிறுகச் சிறுக விட்டுத் தனித்தனியே ஒவ்வொரு சாமம் அரைத்துப் பிறகு புளிப்பு மாதுளம் பழச்சாற்றை விட்டு நான்குசாம நேரமரைத்து ஒரே வில்லையாகச் செய்துலர்த்தி நரிநாவல் பட்டைத்தூளை ஒரு சட்டியிற் போட்டு அதன்மீது வில்லையை வைத்து அதன் மீதும் நரிநாவல் பட்டைத் தூளைப் போட்டுமூடி மேற்சட்டி மூடி ஏழு சீலமண் செய்துலர்த்தி அடுப்பேற்றிக் காடாக்கினியாக மூன்று சாமம் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு கவசத்தைப் பிரித்து வில்லையை எடுத்துப் பொடித்துச் சோற்றுக் கற்ருழைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டரைத்து வில்லை செய்துலர்த்தி முழப் புடமிட வேண்டும். இவ்விதம் சோற்றுக் கற்ருழைச் சாற்றில் அரைத்தரைத்து மடக்கி மடக்கி ஏழு புடமிட வேண்டும். பிறகு எடுத்துப் பொடித்துச் செந்தூரத்தைப் பத்திரப்படுத்தவும்.

அளவு :—$\frac{1}{2}$ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து : தேன், நெய், வெண்ணெய், கையாந்த கரையையும் மிளகையும் சேர்த்தரைத்த விழுது, சுக்கையனரைத்த விழுது முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—இரத்தக் குறைவு நோய்களெல்லாம் தீரும். பாண்டுநோய், சோகை, மகோதரம், சூதகபாண்டு முதலிய நோய்களும் தீரும். இன்னும் மந்தாக்கினி, ஈரல் சம்பந்த நோய், காமாலை முதலியவை தீரும்.

1008. சுயமக்கினி செந்தூரம் (வேறு)

தூய்மைசெய்த இரசம் 1 வராகன் எடை, நெல்லிக்காய்க் கெந்தகம் 2 வராகன் எடை. அய அரப்பொடி 4 வராகன் எடை, சோற்றுக் கற்றாழைப்பால் அல்லது சோற்றுக் கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு, எருக்கம்பால் 1 பலம்.

செய்முறை :— கெந்தகத்தையும் இரசத்தையும் தொந்தித் தரைத்துப் பிறகு அயப்பொடியைச் சேர்த்து ஒரு மணி நேரமரைத்து மேற்படி பாலை அல்லது சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரமரைத்து உருட்டி ஒரு சிறு கலயத்திற் போட்டு மேற்படி பாலை விட்டு வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து பதினைந்து நாள் வைத்திருந்து பதினாறும்நாள் எடுத்து வெய்யிலில் வைத்து உலர்த்திக் கல்வத்திற் பொடித்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— $\frac{1}{2}$ முதல் குன்றிமணி எடை.

துணைமருந்தும் தீரும்நோயும் :— மேல்தோல் சீவின சுக்கு, மிளகு. அரிசித்திப்பிலி இம் மூன்றையும் சமனெடையாக நிறுத் தெடுத்து இளவறுப்பாக வறுத்து இடித்த தூள்கள் 1 வராகன்எடை, தேன் 1 வராகன் எடை. இவ்விரண்டையும் கலந்து மேற்படி செந் தூரத்தைப் அளவுப்படி சேர்த்துட்கொள்ளவும். இவ்விதம் காலை மாலை இரண்டுவேளையும் உபயோகிக்கவும். இப்படிச்செய்யின் குன்ம நோய், அக்கினிமந்தநோய் ஆகியவைகள் தீரும்.

இஞ்சிச்சாறு 1 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தைப் அளவுப்படி சேர்த்துப் பத்துநாள் உட்கொள்ள அறுபத்துநான்கு வகை சுரங் களும் தீரும்.

மருத்துணவு —: பித்தசுரத்திற்குப் புளிகூட்டவும், சீதசுரத் திற்குப் புளியை நீக்கவும்.

1009. சுயமக்கினி (வேறு)

தூய்மைசெய்த இரசம், கருநாபி, மனேசிலை, நெல்லிக்காய்க் கெந்தகம், இலிங்கம், தாளகம், துத்தம், மிளகுச்சூரணம் இவை வகைக்கு 1 வராகன் எடை, அயஅரப்பொடி 8 வராகன் எடை, முள்ளங்கிச்சாறு, சோற்றுக்கற்றாழைச்சாறு இவை செல்லத்தக்க அளவு.

செய்முறை :— இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்றாகக் கறுத்தபின்பு மற்றசரக்குகளையும் தனித்தனியே பொடித்தும், அயத்தூளையும் அதனுடன் சேர்த்தும் ஒருமணி நேர மரைத்து முள்ளங்கிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாமநேர மரைத்துப் பிறகு சோற்றுக்கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாம நேரமரைத்து வில்லை தட்டி வெய்யிலிலுலர்த்தி நன்றாயுலர்ந்த பின்பு பொடித்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு : $\frac{1}{2}$ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து:—இஞ்சிச்சாறு, தேன், நெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—சுரம், சன்னி, அக்கினிமந்தம், பாண்டு, சோகை, காமாலை ஆகியவைகள் தீரும்.

1010. சுயமக்கினி (வேறு)

தூய்மை செய்த இரசம் 4 வராகன் எடை, நெல்லிக்காய்க் கெந்தகம் 10 வராகன் எடை, நாபி 4 வராகன் எடை, மனேசிலை 4 வராகன் எடை, அயஅரப்பொடி 1 பலம், காந்தம் 1 பலம், கிட்டம் 1 பலம், சோற்றுக்கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை : இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து மற்ற சரக்குகளையும் பொடித்துச் சேர்த்து அயத்தையும் சேர்த்து இரண்டுமணி நேரமரைத்து எல்லாம் கலந்தபின்பு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து எட்டுச்சாம நேரமரைத்துப் புளியங் கொட்டை அளவு வில்லைகள் செய்து வெண்கலக்கிண்ணியில் வைத்துக் கடுவெய்யிலில் வைக்கப் புகைந்து செந்தூரமாகிவிடும். அதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்துத் துணியில் வடிகட்டி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு : 2 முதல் 3 குன்றிமணி எடை.

துணைமருந்தும், தீரும்நோயும் : மேற்கண்டவைகளேயாம். பிரசவ அறையிற்காணும் சுரங்களும் தீரும்.

1011. சுயமக்கினி (வேறு)

தூய்மை செய்த அயஅரப்பொடி, காந்தம், கிட்டம், சங்கு, கடல் நுரை, நெல்லிக்காய்க் கெந்தகம், கல்நார், வெண்காரம், நவச்சாரம் இவை வகைக்கு 1 பலம் (35கிராம்) சோற்றுக்கற்றாழைச் சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—எல்லாச் சரக்குகளையும் தனித்தனியே பொடித்து அயத்துடன் சேர்த்துக் கல்வத்திலிட்டு ஒரு மணிநேரம் அரைத்து எல்லாம் கலந்த பின்பு சோற்றுக்கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்து வெங்கலக்கிண்ணியில் வைத்துச் சூரியபுடம் வைக்கப் புகைந்து செந்தூரமாகும் இதனைப் பொடித்து துணியில் வடிகட்டி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1 முதல் 2 குன்றிமணி எடை.

துணைமருந்து :—தேன், நெய், இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர், சோம்புக் குடிநீர் ஆகியவைகளாம்.

தீரும்நோய்கள் :—அக்கினிமந்தம், பலவகை வாயுக்கள் பலவகைப் பாண்டு, சோகை முதலிய நோய்கள் தீரும்.

மருந்துணவு :—புணர்ச்சி தவிர மற்றவை ஆகும்.

குறிப்பு :—இதற்கு முன்னும் சுயமக்கினி முறைகள் எழுதப் பட்டிருக்கின்றன. மேற்சொன்ன பாகங்களும் நமது அரிய நண்பர்களில் ஒருவருக்குப் பலதடவை அனுபோகப்பட்டவைகளான படியால் அவைகளை மக்களின் நன்மையைக் கருதயும் உபகாரமாகவும், சீவகாருண்யமாகவும் இங்கு எழுத நேர்ந்தன. நமக்குக் கிடைக்கும் அரியமுறைகளைக் கரவடமின்றி எழுதிவருகின்றோம். இம் முறைகளின் அருமை தெரிந்த அறிவாளிகள் மேற்கண்ட மூல கர்த்தர்களுக்கு நன்றியறிதலாயிருக்கும்படி மிகவும் கேட்டுக்கொள்கிறோம்.

1012. கௌரி சிந்தாமணி ரசசெந்தூரம்

தூய்மை செய்த இரசசெந்தூரம், அரப்பொடி இவை வகைக்கு 12 பலம் (420 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 9 பலம் (315கிராம்) வெண்காரம் 8 பலம் (280 கிராம்), காந்தம் 7 பலம் (245 கிராம்), மனோசிலை 6 பலம் (210 கிராம்), இரசம் 5 பலம் (175 கிராம்), இந்துப்பு 4 பலம் (140 கிராம்), குமரிச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—மேற்படி சரக்குகளைத் தனித்தனியே பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துக் கல்வத்திலிட்டு மூன்றுமணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு சோற்றுக் கற்றாழைச்

சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரம் அரைத்து ஒரே வில்லையாகச் செய்து கனீலென சப்தம் கேட்கும்படி உலர்த்தி ஒரு சட்டியில் வைத்து அதன்மீது ஒன்றேகால்படி சோற்றுக் கற்றாழை சாற்றை விட்டு மேற்சட்டி மூடி ஐந்து சீலைமண் செய்து ஈரமுலர்ந்த பின்பு அடுப்பேற்றிக் காடாக்கினியாக நான்கு நாள் எரித்து ஒரு நாள் ஆறவிட்டு எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :—மேற்றோல் சீவின சுக்கு, மிளகு. அரிசித் திப்பிலி ஆகிய மூன்றையும் இடித்து துணியில் வடிகட்டிய சூரணம் 1 வராகன் எடை. தேன் 1 வராகன் எடை, நெய் 1 வராகன் எடை இம் மூன்றையும் கலந்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி கலந்து உட்கொள்ளவேண்டும்.

இன்னும் இஞ்சிச்சாறு 1 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை, நெய் 1 வராகன் எடை, இம் மூன்றையும் சேர்த்து மேற்படி செந்தூரத்தை கலந்தும் உட்கொள்ளலாம்.

தீரும்நோய்கள் :—குன்மம் 8, வாதம் 80, பித்தம் 40, ஐயம் 20 ஈழை, இருமல் 6, எலிக்கடி, இரைப்பு, சுவாசகாசம், திகைப்பு, மூக்கடைப்பு, காமாலை, சோகை, பாண்டு. விடபாகம், நீர்க்காமாலை வறட்காமாலை, கிரந்தி, அதிவேர்வை நோய், கோபம், கரப்பான், கடுப்பு ஆகியவை தீரும்.

1013. இலகு சுயமக்கினி செந்தூரம்

தூய்மை செய்த மனோசிலை 2 வராகன் எடை, இரசம் 4 வராகன் எடை, கெந்தகம் 8 வராகன் எடை, காந்தம் 16 வராகன் எடை, அயஅரப்பொடி 32 வராகன் எடை, குமரிச்சாறு செல்லத் தக்க அளவு.

செய்முறை:—எல்லாச் சரக்குகளையும் தனித்தனியே பொடித்து ஒன்றாகச் சேர்த்துக் கல்வத்திலிட்டு ஒரு மணி நேரம் கைவிடாம லரைத்து எல்லாம் கலந்த பின்பு சோற்றுக் கற்றாழைச் சாற்றை சிறுகச்சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்துச் செப்புத் தாலத் தில் வைத்துக் கடும் வெய்யிலில் வைக்க ஈரம் உலர உலரப் புகை யெழும்பும். ஈரமுலர்ந்த பின்பு பொடித்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—½ முதல் 1 குன்றிமணி எடை.

துணைமருந்து :—தேன், நெய், வெண்ணெய் முதலியனவை களாம்.

தீரும்நோய்கள்:—செரியாமைநோய், அக்கினிமந்தம், குன்மம், பாண்டு, சோகை, காமாலை முதலிய பல நோய்கள் தீரும்.

1014. பஞ்சபாண ரசம்

தூய்மை செய்த இரசம் நெல்லிக்காய்க் கெந்தகம், நாபித்தூள், பசும்பாலில் தூய்மைசெய்த ஊமத்தம்விதைத்தூள் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), நல்லெண்ணெய், ஆட்டு சிறுநீர், குதிரையின் சிறுநீர், பசுவின் சிறுநீர், கழுதையின் சிறுநீர், இவை வகைக்கு 1 படி.

செய்முறை :—இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித் தரைத்து நன்ருகக் கருத்த பின்பு மற்ற இரண்டு வகைத்தூளையும் சேர்த்து இரண்டுமணிநேரமரைத்து எல்லாம்கலந்த பின்பு மெல்லிய துணியில் வைத்துக் கொஞ்சம் தளரக்கட்டி மேற்படி நல்லெண் ணெய், ஒரு பாத்திரத்தில் விட்டு மேற்படி முடிச்சைக் கிழிக்கட்டித் தொங்கவிட வேண்டும். முடிச்சானது அடிப்பானையில் படாமல் பானை அடிக்கும், முடிச்சிற்கும் இடையில் ஒரு விரல் இடைவெளி யிருக்கவேண்டும். அடுப்பின் மீதேற்றிச் சிறு தீயாக எரித்து எண்ணெய்யெல்லாம் சுண்டின பின்பு முடிச்சை எடுத்து சிறுநீர் வகை ஒவ்வொன்றிலும் முன்போல் கிழிக்கட்டித் தொங்க விட்டுத் தனித்தனி சுண்டவைத்து எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்து நல்லெண்ணெய் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரமரைத்துக் கடுகு அளவு மாத்திரைகள் செய்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 1 முதல் 2 மாத்திரை.

துணைமருந்தும் தீரும்நோய்களும் :—அளவுப்படி வெற்றிலையில் வைத்துக் கொடுத்துக் கடுகளவுத் தலையிலும் கால்பெருவிரலிலும் தடவ எல்லா வாதமும் தீரும்; வயிற்று நோய்களெல்லாந் தீரும்.

எருமைப்பாலில் மேற்படி மருந்தை அளவுப்படி கொடுக்கப் பாண்டுவகை எல்லாம் தீரும்.

எலுமிச்சம்பழச்சாறு, பால் சர்க்கரை ஆகிய இவற்றிலொன்றில் மேற்படி மருந்தை அளவுப்படி சேர்த்துக் கொடுக்க வலிமைப் பெருக்கம் உண்டாகும்.

1015. பூபதி மாத்திரை

(அ) தூய்மை செய்த மனேசிலை, தாளகம், இரசம், நெல்லிக் காய்க் கெந்தகம், வெண்காரம் இவை வகைக்கு 2½ பலம் (87½ கிராம்), செருப்படைச்சாறு செல்லத்தக்க அளவு.

(ஆ) தூய்மை செய்த நாபித்தூள் 4 வராகன் எடை (14 கிராம்) மிளகுத்தூள் 8 வராகன் எடை (28 கிராம்), இஞ்சிச்சாறு செல்லத் தக்க அளவு.

செய்முறை :– (அ) விலுள்ள சரக்குகளில் இரசத்தையும் கெந்தகத்தையும் கலந்தரைத்து நன்ருகக் கருத்த பின்பு மற்ற மூன்று சரக்குகளையும் இதில் சேர்த்து இரண்டுமணிநேரம் அரைத்து எல்லாம் கலந்த பின்பு மேற்படி செருப்படைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாம நேரமரைத்து உலர்த்திப் பொடித்து ஏழு சீலைமண் செய்த காசிக்குப்பியி லடைத்து வாய்க்கு மாக்கல் மூடி யிட்டு அதற்கும் ஏழுசீலை செய்துலர்த்திச் செந்தூரச் சட்டியில் நான்குவிரற்கிடை மணலிட்டு அதன்மீது குப்பியைவைத்துக் குப்பி மறையும்படியாக மணலைக் கொட்டி மேற்சட்டி மூடிச் சீலை செய்து அடுப்பேற்றித் தீபாக்கினி ஒரு சாமம், கமலாக்கினி ஒரு சாமம், காடாக்கினி இரண்டு சாமம் ஆக நான்கு சாமமும் எரித்து ஒரு நாள் ஆறவிட்டுக் குளிர ஆறின பின்பு புட்டியிலிருக்கின்ற மருந்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதில் எட்டரைப் பலம் (297½ கிராம்), மருந்தை எடுத்துக் கல்வத்திலிட்டு (ஆ) விலுள்ளத் தூள்களையும் சேர்த்து ஒரு மணி நேரமரைத்து எல்லாங் கலந்துபின்பு இஞ்சிச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரமரைத்துக் குன்றிமணியளவு மாத்திரை கள் செய்து நிழலில் உலர்த்திப் பத்திரப்படுத்தவும்.

அளவு :— ½ முதல் 1 மாத்திரை.

துணைமருந்து :— இஞ்சிச்சாறு, இஞ்சிச்சுரசம், சிற்றரத்தைக் குடிநீர், அதிமதுரக்குடிநீர், நீர்முள்ளிக்குடிநீர் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— நீராமம், வல்லைக்கட்டி, கவுசை, வயிற்று வலி, சுரம், சன்னி, தோடம், விக்கல் எல்லாம் தீரும்.

1016. அமிர்த சஞ்சீவிக் குளிகை

தூய்மைசெய்த நெரிவிஷம், நாபி, அரிதாரம், இரசம், நெல்லிக்காய்க்கெந்தகம், வெண்காரம், மேல்தோல்சீவின சுக்குத் தூள், மிளகுத்தூள், அரிசித்திப்பிலித் தூள், தான்றிக்காய் த்தோல்

தூள் இவை வகைக்கு 1½ வராகன் எடை, தூய்மைசெய்த வாளம் 6½ வராகன் எடை, கையாந்தகரைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை:—மேற்படி சரக்குகளைத் தனித்தனியே தூள்செய்து நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். இரசத்தையும் கெந்தகத்தையும் தொந்தித்தரைத்து எடுத்துக்கொள்ளவும். வாளத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி சரக்குகளையெல்லாம் ஒன்றாகக் கலந்து சிறுகச்சிறுக எல்லாவற்றையும் போட்டு இரண்டு மணிநேரம் அரைத்து எல்லாம் கலந்தபின்பு கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்குசாம நேரமரைத்துக் குன்றிமணியளவு மாத்திரைகள் செய்து நிழலில் உலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— ½ முதல் 1 மாத்திரை.

துணைமருந்தும் தீரும்நோய்களும் :—சாதிக்காய்க் குடிநீரில் அளவுப்படி மேற்படி மாத்திரையை சேர்த்துக் கொடுக்க ஒன்பது வகை மூலமும் தீரும்.

சிறுநீரில் சேர்த்துக்கொடுக்கப் பலவகை வாயுதீரும்.

எலுமிச்சம்பழச் சாற்றில் சேர்த்துக் கொடுக்கப் பரப்புவிடம் தீரும்.

முருங்கைப் பட்டைச்சாற்றில் சேர்த்துக்கொடுக்கச் சூலைக்கட்டு தீரும்.

மருதம்பட்டைச்சாற்றில் சேர்த்துக் கொடுக்கப்பிரமியம் தீரும்.

நெல்லிமுள்ளிக் குடிநீரில் சேர்த்துக் கொடுக்கக் குளிர் சுரம் தீரும்.

வெந்நீரில் சேர்த்துக் கொடுக்க மலக்கட்டு தீரும்.

சிற்றாமணக்கெண்ணெயில் சேர்த்துக் கொடுக்கப் பேதியாகும்.

வெள்ளாட்டுப் பாலில் சேர்த்துக் கொடுக்கச் சயங்கள் தீரும்.

1017. குப்பிவைப்புச் செந்தூரம்

வாலைரசம் 4 பலம் (140 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 3 பலம் (105 கிராம்), மனோசிலை 1 பலம் (35 கிராம்).

செய்முறை :—இம் மூன்றையும் கலந்து ஒருசாம நேரமரைத்து ஏழு சீலைமண் செய்துலர்த்தின :காசிக் குப்பியில் அல்லது ஏழு சீலை மண் செய்துலர்த்தின சோடா புட்டியில் அரைப்பங்கு போட்டு

வாய்க்குப் பலப்பக்கல் மூடியிட்டு அதற்கும் ஏழு சீலைமண் செய்து உலர்த்தி ஒரு மண்பானையில் நான்கு விரல் பருமன் மணலிட்டு அதன்மீது முன் சித்தப்படுத்தினக் குப்பியை வைத்துக் கழுத்து வரையில் மணல்போட்டு மேற்சட்டி மூடி உளுந்துமாவால் ஒன்பது சீலை செய்துலர்த்திச் செந்தூர அடுப்பில் வைத்து எட்டு சாமம் ஓரின விறகால் தீபாக்கினி ஒரு சாமம் கமலாக்கினி ஒரு சாமம், காடாக்கினி ஆறு சாமம் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறினபின் எடுத்துக் குப்பியைத் தண்ணீரில் நனைத்து உடைத்தெடுக்கச் செந்தூரமாக இருக்கும். அப்படி இல்லாமல் கறுத்திருந்தால் இதனைப் பொடித்து முன்போல் குப்பியில் போட்டு முன்போல் எரித்தெடுக்கச் செந்தூரமாகும். இதனைப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— ½ முதல் 1 குன்றிமணியெடை.

துணைமருந்து : தேன், நெய், அந்தந்த நோய்களுக்குத் தகுந்த இளகங்கள் முதலியவகளாம்.

தீரும்நோய்கள் :—எண்பது வகை வாதநோய்கள், நாற்பது வகை பித்தநோய்கள், இருபத்தொரு வகைக் கபநோய்கள் ஆகியவைகளுக்கு அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்து களிலிடவும்.

மருத்துணவு :—பழையது, செம்மறியாட்டிறைச்சி, மீன், கருவாடு, பாகற்காய், அகத்திக்கீரை ஆகியவைகளை நீக்கி வைக்கவும். புணர்ச்சிக் கூடவே கூடாது. இன்னும் அந்தந்த நோய்கட்குத் தகுந்தபடியும், உடலியல்பிற்கு ஏற்காதவைகளையும் நீக்க வேண்டியது.

1018. பஞ்சாக்கினி செந்தூரம்

அரப்பொடி 1 பலம் (35 கிராம்), ஊசிக்காந்தம் 1 பலம் (35 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 1 பலம் (35 கிராம்), சங்குச் சுண்ணம்பு 1 பலம் (35 கிராம்), நவச்சாரம் 1 பலம் (35 கிராம்).

செய்முறை :—மேற்கண்ட ஐந்தையும் கல்வத்திலிட்டரைக்கச் செயநீராகிவிடும். இந்தச் செயநீரைத் தனியே புட்டியில் எடுத்து வைத்துக் கொள்ளவும். மேற்படித் திப்பியை மேற்படிக் கல்வத்தி லிட்டு மேற்படிச் செயநீரைச் சிறுகச் சிறுக விட்டு அரைக்க வேண்டியது. அந்தச் செயநீரெல்லாஞ் சென்ற பின்பு அந்த மருந்தையெல்லாம் ஒரு புது மண்கலயத்திற் போட்டு வாய்க்கு அகலிட்டு ஐந்து சீலைமண் செய்து நெல்லிற்குள் அல்லது கேழ்

வரகுக்குள் வைத்து நாற்பது நாள் சென்ற பின்பு எடுக்க நீல வருணமான செந்தூரமாகியிருக்கும். இதனை எடுத்து மறுபடியும் கல்வத்திற் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1 முதல் 2 குன்றிமணியெடை. உடல் வன்மைக்குத் தகுந்தபடி குறைத்தும் கூட்டியும் உபயோகிக்கலாம்.

துணைமருந்து :—தேன், நெய், வெண்ணெய், இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—எல்லாவகை அக்கினி மந்தநோய்கள், சூதகவாயு, மூலக்கிராணி, மூலக்கடுப்பு, மூலவாயு, பெரும்பாடு, பித்தவெட்டை, பாண்டு, காமாலை, சோகை, கௌசை, வயிற்று வலி, மார்புவலி, வெகுமூத்திர நோய் ஆகிய நோய்கள் தீரும்.

மருத்துணவு :—புளி, புகை, பெண், கரப்பான் பொருட்கள், இன்னும் அந்தந்த நோய்களுக்கு ஆகாதப் பொருட்கள் ஆகியவை களையும் நீக்கவும்.

1019. இலகு சந்திரோதய செந்தூரம்

தூய்மை செய்த தங்கரேக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), இரசம் 8 வராகன் எடை (28 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 16 வராகன் எடை (56 கிராம்), செம்பரத்தம் பூச்சாறு, சோற்றுக் கற்றாழை வேர் சாறு இவை வகைக்குச் செல்லதக்க அளவு.

செய்முறை :—இரசத்துடன் தங்கத்தைக் கலந்தரைத்துப் பின்பு அதனுடன் கெந்தகத்தைச் சேர்த்து ஒரு சாமநேரம் அரைத்துப் பிறகு செம்பரத்தம் பூச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்து ஈரமுலர்ந்த பின்பு சோற்றுக் கற்றாழை வேர்ச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டு சாமநேரம் அரைத்து உலர்த்திப் பொடித்து ஏழு சீலைமண் செய்துலர்த்தின காசிக் குப்பியில் போட்டு அதன் வாய்க்குப் பலப்பக்கல் மூடியிட்டு அதற்கும் ஏழு சீலைமண் செய்துலர்த்தி செந்தூரப் பாத்திரத்தில் நான்கு விரற்கிடை மணலிட்டு அதன்மீது முன் சித்தப்படுத்தின குப்பியை வைத்துக் குப்பி மறையும்படி மணலைக் கொட்டி மேற் சட்டி மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திச் செந்தூர அடுப்பின்மீது வைத்துத் தீபாக்கினி ஒரு சாமம், கமலாக்கினி ஒரு சாமம் காடாக்கினி இருபத்திரண்டு சாமம் எரித்து ஒரு நாள் ஆறவிட்டு மறுநாள் எடுத்துக் குப்பியைத் தண்ணீரில் நனைத்துக் கார்க்கைத் திறந்து செந்தூரத்தை எடுத்துக் கொள்ளவும். செந்தூரம் கட்டியாயிருந்தால் புட்டியை உடைத்து விழிப்புடன் எடுத்துக் கல்வத்திற் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—$\frac{1}{2}$ முதல் 1 குன்றிமணியெடை.

துணைமருந்து :—வாதுமைப் பருப்பையும், கற்கண்டையும் சமனாக அரைத்த விழுது, வெண்ணெய், நெய், தேன், நண்டுப் பற்பம், பவளப்பற்பம், ஆவாரை சமூலத் தூள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— நீரிழிவு, சயரோகம் முதலிய பல நோய்கள் தீரும்.

குறிப்பு :—இதற்குமுன் 'பூரணச்சந்திரோதயம்' என்னும் ஒரு பாகம் சொல்லப்பட்டிருக்கிறது. அப் பாகப்படி செய்து கொள்ள இயலாதவர்கள் இதன்படி செய்து கொள்ளலாம்.

1020. இரணபைரவி செந்தூரம்

மிருதார்சிங்கி $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), சீமைப் பால்துத்தம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), இரசகற்பூரம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), சாதிலிங்கம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), மயில்துத்தம் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$கிராம்), காய்ச்சுக்கட்டி $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), வெட்டைப்பாக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), மாசிக்காய் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), கடுக்காய்த்தோல் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்) தான்றிக்காய்த்தோல் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்).

செய்முறை :— மேற்கண்ட சரக்குகளில் பொடிக்க வேண்டியவைகளைப் பொடித்தும் தூள் செய்ய வேண்டியவைகளைச் தூள் செய்தும் மேற்கண்ட எடைப்படி நிறுத்தெடுத்து ஒனருகச் சேத்துக் கல்வத்திலிட்டு, இரண்டு சாம நேரமரைத்துக் கோபி வருண பதத்தில் எடுத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

தீரும்நோய்கள் :—எந்த ரணமாயினும் அதன்மேலே நல்லெண்ணெயைத் தடவி இந்தச் செந்தூரத்தைத் தூவி மெதுவாயமுத்தி விடவும் இவ்விதம் மூன்று அல்லது நான்குவேளை செய்யின் எவ்விதரணமும் ஆறும்.

நெருப்பினாலுண்டான புண்; வெந்நீர்பட்டுத் தோலுரிந்த புண் ஆகியவற்றிற்கு வெண்ணெய்ச் சீலை மேலே போட்டு எடுத்துவிட்டு மேற்படி செந்தூரத்தைத் தூவி அழுத்தினால் பக்குக் கட்டிப் புண் ஆறிவிடும். இதனை உள்ளுக்கு உபயோகிக்கலாகாது.

1021. உப்புக் குரு

பருங்கட்டிகளான கறியுப்பு, நாலாங்காய்ச்சல் வெடியுப்பு, சீனக்காரம், இந்துப்பு, வளையலுப்பு, பாறையுப்பு, மூங்கிலுப்பு,

நவச்சாரம், பாகப்படுத்தின பூநீறு அல்லது சலவைச்சோடா, (Washingsoda) ஆகிய இவை வகைக்கு 8 பலம் (280 கிராம்), கடல் நீர் அல்லது உவர்ப்பான கிணற்று நீர் $3\frac{1}{2}$ படி.

செய்முறை :— மேற்படி உப்புகளைத் தனித்தனியே பொடித்து ஒரு மண்பாண்டத்திற் போட்டு மேற்படி நீரை விட்டு நன்ருகக் கலக்கி மூடிவைக்க வேண்டும். நாள்தோறும் மூன்று அல்லது நான்கு முறைகள் கலக்கியும் வரவேண்டும். இவ்விதம் மூன்று நாள் வைத்து நாலாம் நாள் தெளிவை இறுத்துக் காய்ச்சி உப்பாக்கி அதை அளந்து அதற்கு இரண்டுபங்கு நீரைவிட்டுக் கரைத்து முன் போல் நாள்தோறும் மூன்று தடவை கலக்கி மூன்று நாள் வைத்து நான்காம் நாள் தெளிவிறுத்துக் காய்ச்ச வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கிப் பத்து முறைக் காய்ச்சி உப்பாக்கிப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

மேற்படி உப்பு 1 பலம் (35 கிராம்) வீரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இரசகற்பூரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), சூடன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) இவையெல்லாவற்றையும் கல்வத்தி லிட்டு உமிநீரால் இரண்டு சாமநேரமரைத்து ஒரே வில்லையாகச் செய்து உலர்த்தி அகலில் வைத்து மேலகல்மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் மூன்று பங்கு எடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கல்மூடியுள்ள புட்டியில் பத்திரப் படுத்தவும்.

தீரும்நோய்கள் :—கட்ட வேண்டிய சரக்குகளின்மீது மேற்படி குருஉப்பில் கொஞ்சமெடுத்து உமிநீரில் குழைத்து மேற்படி சரக்கின் மீது தடவி உலர்த்தி அகலில் வைத்து மேலகல் மூடிச் சீலைமண் செய்து இலகு புடமிட வேண்டும். இவ்விதம் இரண்டு மூன்று புட மிட்டால் அந்தச் சரக்கு கட்டுப்பட்டுப் போகும்.

எந்த இளகமாயினும் சரியே, எந்தத் தைலமாயினும் சரியே, அவைகளில் இதனைக் கொஞ்சம் பொடித்துப் போட்டு நன்ருகக் கலந்து உபயோகித்தால் மிகச் சிறந்த குணத்தைத்தரும்.

செந்தூரம், பற்பம் ஆகியவைகளிலும் கொஞ்சம் மேற்படி குரு வுப்பைச் சேர்த்துச் செய்வதினுல் மிகச் சிறந்த குணத்தைத் தரு மென்பதில் சந்தேகமில்லை.

1022. பாலரசப் பதங்கம்

இதற்கு வாலைரசம் எடுக்கும் விதம் :—மிக்க பளபளப்புள்ளதும் தொட்டால் உதிரக்கூடியதுமான இலிங்கம் 1 பலம் (35 கிராம்), கொடிவேலி வேர்ப்பட்டையை அரைக் காய்ச்சலாகக் காய

வைத்து நசுக்கு பதத்தில் தூள் செய்த தூள் $1\frac{1}{4}$ பலம் ($43\frac{1}{2}$ கிராம்), ஆகிய இரண்டையும் சேகரித்து வைத்துக்கொண்டு; நாற்பது படி கொள்ளும்படியான இரண்டு பெரிய மண்பானைகள் சேகரித்து அவற்றை வாய் பொருந்தும்படி தேய்த்துச் சித்தப்படுத்தி அதன் மேல் அவ்விரண்டு பானைக்குள்ளும் முள் முருங்கையிலைச் சாற்றை யாவது, கொடிவேலியிலைச் சாற்றையாவது ஊமத்தை யிலைச் சாற்றையாவது மூன்று முறை பூசிக் காயவைத்து எடுத்துக் கொள்ள வேண்டும். பின்பு ஒரு பானையில் கொடிவேலி வேர்ப் பட்டைத் தூளில் பாதியைப் பரவலாகத்தூவி அதன் மேல் இலிங்கத்தைப் பொடிசெய்துத் தூவி, அதன் மேல் மற்ற பாதிக் கொடிவேலி வேர்ப்பட்டைத் தூளைத்தூவி மற்றொரு பானையால் மேல்மூடிப் புற்றுமண்ணரைத்து அதனுல் ஏழுசீலைமண் செய்து உலர்த்தி வாலையடுப்பில் வைத்து. பூவரசு, கருவேல் காசா இந்த மூன்றில் ஓரின விறகால் நான்கு சாமமெரித்துப் பிறகு பானையை மெதுவாக இறக்கி தூய்மையான விடத்தில் படுக்கையாக வைத்து விடவேண்டும். மறுநாட்காலையில் மேற்படி பானையைப் பிரித்து உள்ளே படிந்திருப்பதைப் புருசினுலாவது பழைய துணியினுலாவது சுத்தமாகத் துடைத்தெடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டுக் கையினுல் மத்திக்க இரசமாகிவிடும் இந்த இரசத்தை ஒரு இரட்டுத்துணியில் வைத்துப் பிழிந்து கல்மூடியுள்ளப் புட்டியில் பத்திரப்படுத்தவும். இவ்விதம் செய்தெடுப்பதே வாலைரசமாம். இதற்கிடையில் விற்கும் இரசத்தைக் காட்டிலும் தோட மற்ற தாயிருக்கும். இவ்விதமாக நன்னுரி வேரிலும் செய்து கொள்ள லாம்.

செய்முறை :—அடிகனத்தவைகளும், இரண்டு வீசை கொள்ளும் படியானவைகளுமான 2 சட்டி இவற்றை வாய் பொருந் தும் படியாகத் தேய்த்து இரண்டு வாயையும் சேர்த்தால் சந்தில்லா திருக்கும்படி சித்தப் படுத்தி மேலே சொல்லியிருக்கிறபடி மேற் சட்டிக்கு முள் முருங்கையிலைச் சாறு, கொடிவேலியிலைச் சாறு, ஊமத்தையிலைச்சாறு ஆகிய மூன்றில் ஒன்றை மூன்று முறை பூசிக் காயவைத்துக் கொள்ள வேண்டியது.

இலிங்கம், நாபித் தூள், கெந்தகத் தூள், மிளகுத் தூள், இரசம் அரிசித்திப்பிலித் தூள், நேர்வாளப்பருப்புத் தூள், வசம்புத் தூள் ஆகிய இவை வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை ($4^7/_8$ கிராம்), இவற்றுள் இரசத்தையும் கெந்தகத்தையும் கலந்தரைத்து நன்ருகக் கருத்த பின்பு மற்ற சரக்குகளையும் ஒவ்வொன்ருகச்சேர்த்து ஒரு மணிநேரம் அரைத்து எல்லாம் கலந்த பின்பு ஊமத்தை இலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரமரைத்து இதனுல் ஒரு மூசையும்

மேல் மூடியும் செய்து மேல்மூடியின்மீது ஐந்தாறு சிறு துவாரங்கள் செய்து இரண்டையும் வெய்யிலிலுலர்த்திச் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பின்பு முன் சித்தப்படுத்தினச் சட்டிகளில் கீழ்ச் சட்டியில் ஒரு வீசை உப்பையும் ஒரு வீசை செங்கல் மாவையும் சேர்த்திடித்து அத் தூளைப் போட்டமுத்தி அதனடுவில், ஒரு குழிசெய்து கொள்ளவும். பிறகு முன் சித்தப்படுத்தினக் குகையில் ஒன்றரைப் பலம் முன் எடுத்த வாலரசத்தை விட்டு மேல் மூடியால் மூடி மேற்படி குழியில் சரியாக வைத்து மேற் சட்டியை மூடி ஏழு சீலை மண் செய்துலர்த்தி வட்டடுப்பின் மீது வைத்து ஓரின விறகால் தீபாக்கினி ஒரு சாமம், கமலாக்கினி ஒரு சாமம், காடாக்கினி பதினன்கு சாமமாக எரித்து மெதுவாயிறக்கி ஒருக்கணித்துச் சாய்த்து வைக்கவேண்டியது. அப்படி வைக்காவிட்டால் மேற் சட்டியிலிருக்கிற பதங்கம் கீழ்ச் சட்டியில் உதிர்ந்து உப்பில்விழுந்து விடும். மேற்கண்டபடி ஒரு நாள் வைத்துக் குளிர ஆறவிட்டு மெதுவாய்ச் சீலையைக் கத்தியால் அறுத்தெடுத்து மேற்சட்டிக் குள்ளிருக்கும் பதங்கத்தைத் தூய்மையான புருஷினல் துடைத் தெடுத்து வெளுப்பானதை ஒரு புட்டியிலும், சிறிது கருஞ்சாய மானதை வேருெரு புட்டியிலும் பத்திரப்படுத்த வேண்டியது. இவற்றுள் வெண்மையானதை மெல்லிய உடலினர்க்கும் மங்க லானதை முரட்டு உடலினர்க்கும் உபயோகிக்க வேண்டியது.

அளவு :—1 முதல் 4 அரிசி எடை.

துணைமருந்து :—பனைவெல்லம், சுக்கரைத்த விழுது, பறங்கிப் பட்டை இளகம், பஞ்சதீபாக்கினி இளகம் முதலியவைகளாம். ஏழுநாள் அந்தி சந்தி இரண்டு வேளையும் சாப்பிட வேண்டியது.

தீரும்நோய்கள் :—வெண்குட்டம், படர்தாமரை, மகோதரம், பாரிசவாயு, குடல்வாதம், கருங்குட்டம், மேகரணம், சூலை, குன்மம் ஆகியவை தீரும்.

மருத்துணவு :—உடல் வலிமை, நோய் வலிமை ஆகியவை களுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவேண்டியது.

1023. மேற்படி வேறு

முன் முறையிற் சொன்னபடியே இரண்டு சட்டிகளை வாய் பொருந்தும்படி தேய்த்து மேற்சட்டிக்குக் குப்பைமேனிச்சாறு தடவிக் காயவைத்துக் கொள்ள வேண்டும்.

கறியுப்பு 1 பலம் (35 கிராம்), கொடிவேலிவேர் 1 பலம் (35 கிராம்), இவ்விரண்டையும் அரைத்து முன்முறையிற் சொல்லிய படியே குகையும் மூடியும் செய்து உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும்.

பின்பு முந்தின சட்டிகளில் அடிச்சட்டியில் முப்பது பலம் (1050 கிராம்) உப்பை இடித்துக் கொட்டி யழுத்தி அதனடுவில் ஒரு குழி செய்து அக்குழியில் மேற்படி குகையை வைத்து அக்குகையில் ஒரு பலம் (35 கிராம்) வாலைரசத்தை விட்டு மேல் மூடியால்மூடி அதன் மேல் பத்து பலம் (350 கிராம்) உப்பைக் கோபுரம் போல் கொட்டி மேல்சட்டிமூடி ஏழு சீலைமண் செய்து வாலையடுப்பிலேற்றி ஓரின விறகால் ஐந்து சாமம் எரித்து மெதுவாகத் தூக்கி முன் முறையிற் சொல்லியபடியே தூய்மையான விடத்தில் ஒருக்கணித்துச் சாய்த்து வைக்க வேண்டும். நான்குசாமநேரம் ஆற விட்டுப் பின்பு சட்டி அசையாமல் சீலையைப் பிரித்து உள்ளிருக்கும். பதங்கத்தைப் புருசு அல்லது பன்றி முடியால் சுறண்டி யெடுத்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு, துணைமருந்து, தீரும்நோய்கள் :—முதலியவைகளெல் லாம் மேற்கண்டவைகளேயாம்,

1024. குருப் பதங்கம்

தூய்மை செய்த வீரம், இரசகற்பூரம், இலிங்கம். நவச்சாரம், பூநீறு இவை வகை 1 க்கு 1 பலம் (35 கிராம்). இரண்டு குண்டுச் சட்டி வாங்கி வாய்பொருந்த தேய்த்து மேற்சட்டிக்குப் பசுவின் பாலை உலர உலரப்பூச வேண்டும் இவ்விதம் மூன்று தடவைகள் பூசியுலர்த்திக் கொள்ளவேண்டும். கறியுப்பு 30 பலம் (1050 கிராம்)

செய்முறை :—முன் ஐந்து சரக்குகளையும் தனித்தனியே பொடித்து ஒன்ருகக் கலந்து ஒருசாம நேரமரைத்து எல்லாம் கலந்த பின்புகீழ்ச்சட்டியில் பரவலாகத்தூவி அதன்மீது மேற்படி உப்பைக் கொட்டி மேற்சட்டிமூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி வட்டடுப் பின் மீதிலேற்றித் தீபாக்கினி ஒருசாமம், கமலாக்கினி ஒருசாமம், காடாக்கினி ஆறுசாமம் ஆக எட்டுச்சாமமும் எரித்து ஆறவிட்டுக் குளிர்ந்த பின்பு சட்டியைப் பிரித்துப் பதங்கத்தை புருசால் தூடைத்து எடுத்துப் புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

மேற்படி பதங்கம் 1 பலம் (35 கிராம்), வெள்ளிக் காடிக்காரம் 1 வராகன் எடை, இவ்விரண்டையும் கல்வத்தில் சேர்த்து ஒருசாம நேரமரைத்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு : $\frac{1}{2}$ முதல் 1 அரிசியெடை

துணைமருந்து :—பனைவெல்லம், சுக்கையரைத்தவிழுது, இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும் நோய்கள் :—எல்லாவித வாயுகள், தலையைப் பற்றின நோய்கள், சூதகவாயு, மேகவாயு, பல வகைப்புண்கள் கண்டமாலை கன்னக்கிரந்தி, கன்னப்புற்று, சூலைநோய்கள், பட்சவாதம் ஆகிய பல நோய்கள் தீரும்.

சிலேட்டுமம் இழுத்துக் கொண்டிருக்கும்போது இதில் இரண்டு மூன்று அரிசியெடை தேன் அல்லது முலைப்பாலில் கலந்து கொடுக்க அந்தக்கபம் கரைந்து வெளிப்பட்டு எழுந்துபோகச்சக்தியுண்டாகும்.

மருத்துணவு : வியாதி அதிக வலிமையாகவும், நாட்பட்ட தாகவுமிருந்தால் உப்பு, புளி ஆகியவற்றை நீக்கிக்கடின பத்தியம் வைக்க வேண்டியது. நோய்கள் இலேசானதாகவும் மென்மை யுடனதாகவுமிருந்தால் பத்தியமில்லாமலே கொடுக்கலாம். புளிக் குப் பதிலாக அவசியமானால் எலுமிச்சம்பழச் சாற்றைச் சேர்த்துக் கொள்ளலாம். கரப்பான் பொருட்கள் கசப்பான பொருட்கள் ஆகியவைகளையும் நீக்க வேண்டியது. இந்த மருந்தை மூன்றுநாள் ஆறுவேளை நோய்வன்மைக்குத் தகுந்தபடி கொடுக்க வேண்டியது.

1025. இலிங்கப் பதங்கம்

(அ) தூய்மைசெய்த தாளகம், மனோசிலை இவை வகைக்கு $\frac{1}{4}$பலம் ($8\frac{3}{4}$ கிராம்).

(ஆ) தூய்மைசெய்த நாகம், கருவங்கம், வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்).

(இ) தூய்மைசெய்த வீரம், இரசகற்பூரம், நெல்லிக்காய்க் கெந்தகம், சீமை ஆலர்த்திக்கற்பூரம், மயில்துத்தம், பால்துத்தம், வெள்ளைப்பாடணம், சீனக்காரம், வெடியுப்பு, பூநீறு இவை வகைக்கு $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்)

(ஈ) தூய்மைசெய்த இலிங்கம் 4 பலம் (40 கிராம்).

(உ) கறியுப்பு 11 பலம் (385 கிராம்), செங்கல்பொடி 11 பலம் (385 கிராம்), சித்திரமூல வேர்ப்பட்டைத்தூள் 2 பலம் (70 கிராம்).

இரண்டு குண்டுசட்டிவாங்கி வாய்பொருந்தத் தேய்த்து மேற் சட்டிக்குச் சித்திரமூல இலைச்சாற்றைப் பூசியுலர்த்திக் கொள்ளவும். மறுபடியும் மேற்படி சாற்றை முன்போற் பூசியுலர்த்தவும், இவ்விதம் மூன்றுதடவையும் பூசி உலர்த்திக் கொள்ளவேண்டும்.

செய்முறை :— (அ) விலுள்ள நாகத்தையும் வங்கத்தையும் உருக்கித் தொந்தித்துக் கொள்ளவும். (அ) விலுள்ள தாளகத்தையும் மனோசிலையையும் பொடித்து ஒருமணிநேரம் சேர்த்தரைத்து அத்தூளை மேற்படி தொந்தித்ததை உருக்கிக்கொண்டு அதில் சிறுகச்சிறுகக் கிராசங் கொடுத்துவர அந்த நாகவங்க தொந்தம் வெட்டையாகும் இந்த வெட்டையைக் கல்வத்திலிட்டுப் பொடித்து (இ) யிலுள்ள சரக்குகளையுந் தனித்தனியே பொடித்துச் சேர்த்து இரண்டுமணி நேரமரைத்து எல்லாம் நன்றாகக் கலந்த பின்பு (ஈ) யிலுள்ள இலிங்கத்தையும்சேர்த்து இரண்டுமணிநேரம் அரைத்து எல்லாம் நன்றாகக்கலந்த பின்பு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து மூன்று சாமநேரமரைத்துத் தூதுவளங்காய்ப் பிரமாணம் உருண்டைசெய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும் பின்பு முன்சித்தப்படுத்தின சட்டிகளில் அடிச்சட்டியில் (உ) விலுள்ள கறியுப்பையும் செங்கல் பொடியையும் இடித்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தைப்போட்டுப் பரப்பி அழுத்தி அதன்மேல் மேற்படி (உ) விலுள்ள சித்திரமூலவேர்ப் பட்டைத்தூளில் அரைப் பங்கைத்தூவி அதன்மீது மேற்படி உருண்டைகளைப் பரப்பி அதன் மீது மீதயாயுள்ள அரைபங்கு சித்திர மூலவேர்ப்பட்டைத் தூளைத் தூவி அதன்மீது மறுபங்கு உப்பு, செங்கல் பொடிக் கலவையைத் தூவி மேற்சட்டிமூடி ஏழுசீலை செய்துலர்த்தி வட்டடுப்பிலேற்றித் தீபாக்கினி ஒரு சாமம், கமலாக்கினி ஒரு சாமம், காடாக்கினி பதினான்குசாமம், ஆகப் பதினாறுசாமம் எரித்து ஆறவிட்டுக் குளிர்ந்தபின்பு எடுத்துக்கவசத்தைப்பிரித்துப் புருசால் உள்ளிருக்கும் பதங்கத்தைச்சுறண்டி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 2 அரிசி எடை.

துணைமருந்து:—பனைவெல்லம், தேன், தாய்ப்பால், திராட்சைப் பழத்தை அரைத்த விழுது, பாலேடு, வெண்ணெய், இளக வகைகள் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— எண்பது வகை வாதங்கள், நாற்பது வகை பித்தங்கள், தொண்ணூற்று வகைச் சிலேட்டும நோய்கள், தலையிற் காணும் கிரந்தி வகைகள், கன்னப்புற்று, நாசிப்புற்று, செவிப்புற்று, கண்டமாலை, பிளவைகள், மார்புச்சிலந்தி, குன்ம நோய்கள், யோனிப்புற்று, இலிங்கப்புற்று, அரையாப்பு, பவுத்திரங்கள், தொடைவாழை, குதிகால்புண், கெண்டைச் சதைப்புண்கள், மேகநோய்கள், சூலைநோய்கள் முதலிய எல்லா நோய்களும் தீரும். ஆனால், அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகளுடன் கொடுக்கவேண்டும். நோய்வன்மை, உடல்வன்மை ஆகியவை

களுக்குத் தகுந்ததுபோல் மூன்றுவேளை, ஐந்துவேளை, ஏழு வேளை உபயோகிக்க வேண்டியது. நோய் வன்மையானதாகவும், நாட்பட்டதாகவுமிருந்தால் இடையில் ஒரு வாரம் பத்துநாள் விட்டு மறுபடியும் முன்போல் உபயோகிக்க வேண்டும்.

மருத்துணவு :—குறைந்த நோய்கட்குத் இச்சா பத்தியமாக உபயோகிக்கலாம். நோய் நாட்பட்டதாகவும் வன்மையானதாகவுமிருந்தால் புளி புகை ஆகியவைகளைத் தள்ளிப் பத்தியம் வைக்கலாம், இது அதிக வேகமான மருந்தாகையால், நெய், பால், இறைச்சி முதலியவைகளை அதிகமாக உபயோகித்து வரவேண்டும். இது இன்னும் அனுபவமாகிய மருந்தாகையால் அதிக விழிப்புடனும் அறிவுடனும் உபயோகித்தால் வன்மையானப் பல நோய்களைக் கண்டித்து நீக்கி வெற்றியடையலாம்.

1026. இலகு இரசப் பதங்கம்

(அ) மயில்துத்தம், பால்துத்தம், தாளகம், வெள்ளைப் பாடாணம், மனோசிலை, நெல்லிக்காய்க் கெந்தகம், வீரம், நவச்சாரம், சௌரிப்பாடாணம், சாதிலிங்கம் இவை வகைக்கு ½ பலம் (17½ கிராம்), ஊமத்தையிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

(ஆ) கறியுப்பு 30 பலம் (1050 கிராம்).

(இ) தூய்மை செய்த இரசம் 1 பலம் (35 கிராம்).

(ஈ) இரண்டு குண்டு சட்டிகளை வாய்ப் பொருந்தும்படியாகத் தேய்த்து மேற் சட்டிக்கு ஊமத்தையிலைச்சாற்றைச் சுவறச் சுவறப் பூசிக் காயவைத்துச் சித்தப்படுத்திக் கொள்ளவும்.

செய்முறை :—(அ) விலுள்ள சரக்குகளைத் தனித்தனியே பொடித்துப் பிறகு ஒன்ருகச் சேர்த்து ஒரு மணி நேரமரைத்து எல்லாம் நன்ருகக் கலந்த பின்பு ஊமத்தையிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்து ஒரு மூசையும் மூடியும் செய்து நிழலிலுலர்த்திக் கொள்ளவும். பின்பு (ஆ) விலுள்ள உப்பை (ஈ) யிலுள்ள சட்டிகளில் கீழ்ச் சட்டியிற் கொட்டிப் பரப்பி நடுவில் ஒரு குழிசெய்து அதில் முன் சித்தப்படுத்தின மூசையை வைத்து (இ) யிலுள்ள இரசத்தை அதில்விட்டு முன் சித்தப்படுத்தின மூடியால் மூடிவிடவேண்டும். இந்த மூசையின் வாயானது உப்பின் மட்டத்திற்குச் சமமாயிருக்க வேண்டும். பிறகு மேற் சட்டியை மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி வட்டடுப்பிலேற்றித் தீபாக்கினி ஒரு சாமம், கமலாக்கினி ஒரு

சாமம், காடாக்கினி ஆறு சாமம் ஆக எட்டு சாமம் எரித்து இளஞ் சூடாயிருக்கும்போதே மேற்சட்டி கீழ்ப்படிந்திருக்கும்படி சாய்த்து வைத்துவிட வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால் பதங்கம் எல்லாம் உதிர்ந்து உப்பில் கலந்துவிடும். அதைப் பிரித்தெடுப்பது கடினமாயிருக்கும். இவ்வாறு வைத்துக் குளிர ஆறினபின்பு சீலை மண்ணைப் பிரித்தெடுத்துப் பதங்கத்தைப் புருசால் துடைத்தெடுத்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— ½ முதல் 1 அரிசியெடை.

துணைமருந்து :— பனைவெல்லம், வெண்ணெய், பாலேடு. திராட்சைப்பழத்தை அரைத்த விழுது, சுக்கையரைத்த விழுது முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— எண்பதுவகை வாதங்கள், எட்டு வகைக் குன்ம நோய்கள், அறுபத்து நான்குவகை சுரங்கள், பதின்மூன்று வகை சன்னிகள், சூலைகள், கிரந்திப்புண்கள், பலவகைப் புணகள் முதலிய குறை நோய்கள் தீரும்.

மருத்துணவு : நோய்வன்மை, உடல்வன்மை, உடல் இயல்பு முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்த வேண்டியது. நல்லெண்ணய், கடுகு, எள் சேர்ந்த பதார்த்தங்களை நீக்க வேண்டியது.

1027. சுரப் பதங்கம்

(அ) வெள்ளையாயிருக்கின்ற பால்சாம்பிராணி 5 பலம் (175 கிராம்) தூம்மை செய்த வெள்ளைப் பாடாணம் 1 வராகன் எடை (3½ கிராம்), தூய்மை செய்த வீரம் ¼ வராகன் எடை.

(ஆ) இரண்டு குண்டு சட்டியை வாய்ப் பொருந்தும் படியாகத் தேய்த்து மேற்சட்டிக்குக் கையாந்தகரைச் சாற்றைப் பூசி உலர்த்த வேண்டும். அது நன்ருயுலர்ந்த பின்பு மறுபடியும் முன்போல் மேற்படி சாற்றைப்பூசி யுலர்த்தவேண்டும். மூன்ரும் முறையும் இவ்விதமே பூசியுலர்த்திக் கொள்ள வேண்டும்.

செய்முறை :—(அ) விலுள்ள மூன்று சரக்குகளையுந் தனித்தனியே பொடித்துப் பிறகு ஒன்ருகச் சேர்த்து ஒருசாம நேரமரைத்து அஞ்சனம் போலான பின்பு (ஆ) விலுள்ள சட்டிகளில் கீழ்ச்சட்டியில் போட்டுப் பரப்பிக் கூடுமாளுல் நண்டுவளை நீரைக் கொஞ்சம் தெளித்து மேற்சட்டிமூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றித் தென்னை ஓலையால் இரண்டு சாமநேரம்எரித்து ஆறினபின் எடுக்க மேற்சட்டியில் பதங்கம் ஏறியிருக்கும். இதனைச் சுரண்டியெடுத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—1 முதல் 1½ அரிசியெடை.

துணைமருந்து :—பனைவெல்லம், பாலேடு, வெண்ணெய் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—எல்லாவகை சுரங்களும் தீரும். உணவு நன்றாக ஏற்றுக்கொள்ளும். ஆகையால் நன்றாகச் சாப்பிடவேண்டும் பத்தியம் ஒன்றுமில்லை. இதனை ஒன்று அல்லது இரண்டு வேளை உபயோகித்தால் போதும். வாது சொல்லி நோய்களை வெல்லலாம்.

1028. சுத்த பூரப் பதங்கம்

இரசகற்பூரம் 1½ பலம் (42½ கிராம்), சீனக்காரம் 5 பலம் (175 கிராம்).

செய்முறை :—பூரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து நீர் விட்டு இரண்டுமணி நேரமரைத்துக் கல்வம் நிறைய நீரைவிட்டுக் கலக்கி இரண்டுமணிநேரந் தெளிய வைத்து அந்தத் தெளிவை யிறுத்து நீக்கிவிட வேண்டும். மறுபடியும் அதில் நீரைவிட்டுச் சற்று நேரம் அரைத்து முன்போல் கல்வம்நிறைய நீரைவிட்டுக்கலக்கி ஒரு மணி நேரம் வைத்துத்தெளிவையிறுத்து விடவேண்டும். இவ்விதம் மடக்கிமடக்கிப் பத்துத்தடவைகள் செய்து வெய்யிலில் வைத்து நன்றாக ஈரமில்லாமல் உலர்த்தி யெடுத்துக்கொள்ளவும். இப்படிச் செய்யக்கூடாத காலங்களில் ஆங்கில மருந்துக் கடைகளில் விற்கும் 'கெலோமெல்' என்னும் பூரபற்பத்தை வாங்கி உபயோகித்துக் கொள்ளலாம்.

பின்பு சீனத்தைப் பொடித்து 15 பலம் (525 கிராம்) விட்டுக் கரைத்துத் தெளிவையிறுத்துக்காய்ச்சி உபயோகித்துக்கொள்ளவும்.

முன்சித்தப்படுத்தின பூரம் 1 பலம் (35 கிராம்) இப்போது சித்தப்படுத்தின சீனக்காரம் 2 பலம் (70 கிராம்), இவ்விரண்டையும் கல்வத்தில் சேர்த்து இரண்டுமணி நேரம் அரைத்து இரண்டு சிறு சட்டிகளை வாய்ப் பொருந்தத் தேய்த்து அவற்றுள் ஒருசட்டியில் வைத்துமறுசட்டியால் மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றி நான்குசாமநேரம் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறின பின்புக் கவசத்தைப் பிரித்து மேற்சட்டியிலுள்ள பதங்கத்தைக் சுறண்டியெடுத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 1 முதல் 2 அரிசி எடை.

துணைமருந்து :— பனைவெல்லம், பாலேடு, வெண்ணெய், திராட்சைப்பழத்தை அரைத்தவிழுது முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :— இருபத்தொரு நோய்கள், சூலைகள், கிரந்திகள், புண்கள், வெட்டை, பிரமேகங்கள் முதலியவைகள் தீரும்.

மருந்துணவு :— சமயோசிதம்போல் நோயின்வலிமை, உடல் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.

1020 நவதாம்பிர பற்பம்

(அ) தாம்பிர அரப்பொடி 2 பலம் (70 கிராம்) நவச்சாரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) தாளகம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) நெல்லிக்காய்க்கெந்தகம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இவற்றைக் கல்வத்திலிட்டு உமிநீரால் நான்கு சாமநேரமரைத்து வில்லை தட்டி வில்லை காய்ந்தபிறகு ஓட்டிலிட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கொல்லுலையில் வைத்தூதி ஓடு சிவந்தபதத்தில் எடுத்து ஆறவிட்டுச் சீலையைப் பிரித்து வில்லையைப்பொடித்து வைத்துக்கொள்ளவும், இதுவே இங்கு வேண்டிய தாம்பிரத் தூய்மையாகும்.

(ஆ) தூய்மைசெய்த வீரம், தாளகம், இலிங்கம், இரசசெந்தூரம் வெள்ளைப்பாடாணம்; இரசகற்பூரம், இரசம், நெல்லிக்காய்க் கெந்தகம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்).

செய்முறை :— (ஆ) விலுள்ள கெந்தகத்தையும் இரசத்தையும் கலந்தரைத்து நன்ருகக் கருத்த பின்பு மற்ற சரக்குகளையும் தனித் தனியே பொடித்து இதில் சேர்த்தும் (அ) வில் சொல்லியபடி சித்தப்படுத்திய தாம்பிரத்தைச் சேர்த்தும் ஒரு மணி நேரம் கைவிடாமலரைத்து எல்லாம் நன்ருகக் கலந்த பின்பு *எலுமிச்சம் பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து நான்கு சாமமரைத்து இன்று வில்லை செய்து உலர்த்திச் சித்தப்படுத்திக் கொள்ளவும். ஒவ்வொன்றும் நான்கு படி கொள்ளும்படியானவைகளும், கெட்டியானவைகளுமான இரண்டு சட்டிகளைத் தயாரித்து சந்தில்லாமல் வாய்ப் பொருந்தும் படியாகத் தேய்த்துச் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் மேல் கறியுப்பு $\frac{3}{4}$ படி, செங்கல் பொடி $\frac{1}{4}$ படி இவ்விரண்டையும் உரலில் சேர்த்திடித்து ஒரு சட்டியில் சமபாகமாக அழுத்தி அதன்மீது முன் சித்தப்படுத்தின மூன்று வில்லைகளையும் ஒன்ருேடொன்று படாமல் உள்ளே கொஞ்சம் குழித்து அழுத்தி

* எலும்மிச்சம்பழச்சாற்றிற்குப் பதிலாகக் கடையில் விற்கும் கெந்தக திராவகத்தைவிட்டு அரைப்பது சிலர் அனுபவம், சுயமான கடலைப் புளிப்பை விட்டு அரைப்பது வேறுசிலர் அனுபவம். அவர்களுக்கு விருப்பமானபடி எந்தச் சமயத்தில் எது கிடைக்கிறதோ அதைவிட்டு அரைத்துக்கொள்ளலாம். சற்றேறக் குறைய எல்லாம் ஒரு குணத்தையே தருகிறது. அதிக வித்தியாசமில்லை.

வைத்து மேற் சட்டியை மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி வட்டடுப்பில் வைத்து தீபாக்கினி ஒரு சாமம், கமலாக்கினி ஒரு சாமம், காடாக்கினி ஏழு சாமம் ஆக ஒன்பது சாமம் எரித்து ஆற விட்டுக் குளிர்ந்த பின்பு சீலைமண்ணைப் பிரித்து மேற்சட்டியில் இருக்கும் பதங்கத்தைச் சுறண்டி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— ½ முதல் 1 அரிசி எடை.

துணைமருந்தும் தீரும்நோயும் :—இஞ்சியில் தேனைவிட்டு அரைத்து அதில் சேர்த்துக் கொடுக்கச் சுரம் தீரும்.

சுக்குச் சூரணத்திற் கொடுக்க வாயுவகைகள் தீரும்.

கொடிவேலிப்பட்டைச் சூரணத்தில் சேர்த்துக் கொடுக்க வயிற்றுவலி, குன்மம் ஆகியவை தீரும்.

சுக்கு, மிளகு, திப்பிலி இம் மூன்றையும் சமமாக நிறுத்தெடுத்த சூரணம் 1 வராகன் எடை, தேன் 1 வராகன் எடை, நெய் 1 வராகன் எடை இம் மூன்றையும் சேர்த்து இதில் அளவுப்படி கலந்து கொடுக்க ஈழை, காசம், இருமல் ஆகியவை தீரும்.

இன்னும் தகுந்த துணைமருந்துகளில் கொடுக்க அநேக நோய்கள் தீரும்.

மருத்துணவு :—பால், நெய், இறைச்சி முதலியவைகளை அதிகமாகச் சேர்க்கவேண்டியது. கடுகு, உளுந்து பறங்கிக்காய், பூசணிக்காய், பாகற்காய், தேங்காய், அகத்திக்கீரை இவை ஆகா.

சில உடலினர்க்கு இதனால் வாந்தியாகுமாகையால் மூன்று நாளைக்கதிகம் கொடுக்கலாகாது.

குறிப்பு : மேற்கண்ட எலுமிச்சம்பழச் சாற்றிற்குப் பதிலாக கெந்தகத் திராவகத்தை அல்லது கெந்தகப் புளிப்பை விட்டு அரைத்துப் பதங்கித்தால் எல்லா உடலினர்களுக்கும் பொருந்தும். ஒருவருக்கும் வாந்தியாகிறதில்லை. பயமில்லாமல் உபயோகிக்கலாம்.

1030. குருமுறைப்பதங்கம்

(அ) தூய்மை செய்த வீரம் 1 பலம் (35 கிராம்), இரசகற்பூரம் 1 பலம் (35 கிராம்), இரசம் 1 பலம் (35 கிராம்). கௌரிப்பாடாணம் 1 பலம் (35 கிராம்), மொந்தன் வாழைப்பழச் சதை 1 பலம் (35 கிராம்).

(ஆ) ஐந்து வராகன் எடை வெள்ளியைச்சமமான தகடடித்து ஒரு சிறிய கிண்ணம் செய்து கொள்ளவும்.

செய்முறை : இரசத்தையும், வீரத்தையும் கலந்து அரைத்து இரசம் மடிந்த பின்பு மற்றசரக்குகளையும் தனித்தனியே பொடித்துச் சேர்த்து ஒருமணி நேரமரைத்து எல்லாம் கலந்த பின்பு வாழைப் பழத்தைச் சேர்த்தரைத்து நன்ருக மசிந்த பின்பு ஒரு சிறு வில்லை யாகச் செய்து சித்தப்படுத்திக் கொள்ளவும். வாயகன்ற இரண்டு சட்டிவாங்கிச் சந்தில்லாமல் பொருந்தும்படியாகத் தேய்த்து மேற் சட்டிக்குக் கொடிவேலியிலைச் சாற்றைச் சுவறச்சுவறப் பூசி உலர்த் திக் கொள்ளவும். முன்சித்தப்படுத்தின வில்லையைக் கீழ்ச்சட்டியில் வைத்து அதன்மீது (ஆ) விலுள்ள வெள்ளிக் கிண்ணத்தைக் கவிழ்த்து வைத்து மேற்சட்டிமூடி ஏழுசீலை மண் செய்துலர்த்தி வட்டடுப்பின்மீதேற்றி ஒருமணி நேரம் தீபாக்கினியாகவும், ஒருமணி நேரம் கமலாக்கினியாகவும், ஏழுமணி நேரம் காடாக்கினியாகவும் ஆக மூன்று சாமமும் எரித்து எரிப்பை நிறுத்திக் குளிர ஆறின பின்பு சீலைமண்ணைப் பிரித்து மேற்சட்டியிலிருக்கிற பதங்கத்தைச் சுறண்டியெடுத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

மேற்படி வெள்ளிக் கிண்ணத்தையெடுத்து உருக்கி அதில் மேற்படி பதங்கத்தைக் கொடுக்க அவரவர்கள் அதிர்ஷ்டம் போல் காணலாம்.

அளவு : ½ முதல் 1 அரிசி எடை.

துணைமருந்து : பனைவெல்லம், வெண்ணெய், பாலேடு திராட்சைப்பழத்தை யரைத்த விழுது, இளகவகைகள் முதலியவை களாம்.

தீரும்நோய்கள் : கிரந்திவகைகள், சூலைவகைகள், பட்ச வாதம், கைகால்முடக்கு, சந்துவாதம், நரம்புவாதம், கணுக்கால் வாதம், குன்மநோய் முதலிய அநேக நோய்கள் தீரும். இன்னும் அந்தந்த நோய்களுக்குத் தகுந்தது போல் இளகம், சூரணம் முதலி யவைகளில் சேர்த்துக் கொடுக்க அநேக நோய்கள் தீரும்.

குறிப்பு : மேற்படி பதங்கங்கள் 1 முதல் 16 வயது உடைய உடலினர்க்கு வாய் பிடிப்பதுமுண்டு; அத்தகையினர்களுக்கு அந்தந்த முறைகளில் சொல்லப்பட்டிருக்கிற கடைச் சரக்குகளை அல்லது சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி ஆகியவைகளைச் சமபாகமாக எடுத்துச் தூள்செய்து அந்தச் சூரணம் நூறு பங்கிற்கு ஒரு பங்கு மேற்படி பதங்கத்தைக் கலந்து வெருகடிஅளவு அந்தந்த துணைமருந்துகளில் சேர்த்துக் கொடுத்து வந்தால் அந்தந்த நோய்கள் தீர்ந்து போவ

துடன் எவ்வித துர்க்குணமும் உண்டாகாது. அந்தந்த நோய்களும் தீர்ந்து போகும். இந்த விஷயங்களெல்லாம் அனுபவசாலிகளுக்குத் தெரிந்தேயிருக்கும். ஆயினும் ஞாபகச் சின்னமாக இங்கு எழுதி யிருக்கின்றோம்.

1031. சிரோமணி பூபதிக்குளிகை

தூய்மை செய்த லிங்கம் 2 பலம் (70 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 1 பலம் (35 கிராம்), சுண்ணும்பு நீக்கின இஞ்சிச் சாறு 5 பலம் (175 கிராம்), கீழ்ச் சொல்லியிருக்கிறபடி சித்தப்படுத்தின சந்தனக் குடிநீர் செல்லத்தக்க அளவு.

செய்முறை:—இலிங்கத்தையும் கெந்தகத்தையும் தனித்தனியேப் பொடித்துச் சேர்த்து அரைமணி நேரம் அரைத்து நன்ருக சேர்ந்த பின்பு இஞ்சிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமநேரம் அரைத்துக் கொள்ளவும். ஒரு இரும்புக் கரண்டியை வெள்ளியைப் போல் துலக்கி அதில் முன் மருந்தை வழித்துப் போட்டு மிஞ்சி யிருக்கிற எலுமிச்சம் பழச்சாற்றையும் அதில் விட்டுக் கரிநெருப்பின் மீது வைத்து இரும்புச் சலாகையால் துழாவிப் புகையாமல் ஈரம் சுண்டின பதத்தில் கல்வத்திற் போட்டுச் சந்தனக் குடிநீரில் மூன்று சாமநேரம் அரைத்துக் குன்றிமணியளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி அவரவர்கள் வழிபடு கடவுளைத் துதித்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—½ முதல் 1 மாத்திரை.

துணைமருந்து :—தேன், இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர், இஞ்சிச் சுரசம் முதலியவைகளாம்.

தீரும்நோய்கள் :—சன்னிகள், சுரங்கள், குளிர் சுரங்கள், மாரடைப்பு, மூர்ச்சை, வாயுநோய், வயிற்றுவலி ஆகியவைகள் தீரும்.

குறிப்பு :—மேற்ருேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி இவை வகைக்குச் சமனெடை. இவற்றை யிடித்து துணியில் வடிகட்டிய சூரணம் 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் 1வராகன் எடை (3½ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி மாத்திரை யை கலந்துண்ணலாம். இன்னும் சமயோசிதம்போல் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகளிலிட அந்தந்த நோய்கள் தீரும்.

சந்தனக் கஷாயம்

சந்தனத்தூள் 3 பலம் (105 கிராம்), இலவங்கம் 1 பலம் (35 கிராம்) சண்பகப்பூ ¾ பலம் (26¼ கிராம்), இவைகளையிடித்து முக்காற்படி நீரில் போட்டு எட்டிலொரு பாகமாகச் சுண்டவைத் திறக்கி வடிகட்டி எடுத்துக்கொள்ளவும். இதுவே மேற்படி முறையிற் சொல்லப்பட்டிருக்கிற சந்தனக் குடிநீர் இந்தக் குடிநீர் போதா விட்டால் முன்சக்கையில் கொஞ்சம் நீரைவிட்டு மறுபடியும் காய்ச்சி உபயோகித்துக் கொள்ளலாம்.

1032. பாண்டுவீக்க மாத்திரை

தூய்மை செய்த வீரம் 1 வராகன் எடை (3½ கிராம்), பொரித்த சீனவெண்காரம் 6 வராகன் எடை (21 கிராம்), தாய்ப்பால் செல்லத் தக்க அளவு.

அளவு :— ½ முதல் 1 மாத்திரை.

துணைமருந்து :— பனைவேர், தென்னைவேர், நீர்முள்ளிவேர், சுரைக்கொடி: நெருஞ்சிசமூலம் இவை வகைக்கு 5 பலம், கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த்தோல், நெல்லிமுள்ளி இவை வகை 1க்கு 20 பலம், இரும்புக்சிட்டம் 5 பலம், இவைகளை யெல்லாம் இடித்து ஒருபானையிற்போட்டு எட்டுப்படி நீர்வார்த்து இரண்டுபடியாகச் சுண்டவைத்து அரை அல்லது ஒரு ஆழாக்கு குடிநீரில் மேற்படி மாத்திரையை சோத்துக் கொடுக்கவேண்டும்.

தீரும் நோய்கள் :— எல்லாவகைப் பாண்டுநோய்களும் தீரும்.

மருத்துணவு :—பால்சோறு சாப்பிடவேண்டியது. வேறொன்று மாகாது. பாலுடன் கற்கண்டு சேர்த்துக்கொள்ளலாம்.

1033. சுபக்குடோரி

தூய்மைசெய்த அரிதாரம் 1 பலம் (35 கிராம்) இரசம் ½ பலம் (17½ கிராம்) வீரம் ¼ பலம் (8¾ கிராம்), இலிங்கம் ¼ பலம் (8¾ கிராம்) சோற்றுக்கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு.

செய்முறை :— இரசத்தையும், வீரத்தையும் தொந்தித் தரைத்து மற்றசரக்குகளையும் தனித்தனியே பொடித்துச் சேர்த்து ஒரு மணிநேரமரைத்து எல்லாம் நன்றாக சேர்ந்த பின்பு சோற்றுக் கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டு சாமநேரம் அரைத்துக் குன்றிமணி அளவுள்ள மாத்திரை செய்து நிழலில் உலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :— 1 முதல் 2 மாத்திரை.

துணைமருந்து :— சிற்றரத்தை, அரிசித்திப்பிலி, மேற்றோல் சீவின சுக்கு இவை வகைக்கு 1 வராகன் எடை (3½கிராம்), இவற்றைச் சிதைத்து ஒரு ஆழாக்கு நீரை விட்டு மூன்றி லொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டி அதில் ஒரு வராகன் எடை தேனைவிட்டு மேற்படி மாத்திரையை அதில் இழைத்துப் பருகச்செய்யவேண்டும், இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் பானம்செய்யவும்.

தீரும்நோய்கள் :— கபக்கட்டு, கோழைக்கட்டு, இருமல்: சுவாச காசம் முதலிய கப சம்பந்தமான எல்லாநோய்களும் தீரும்.

மருந்துணவு :— நோய்வலிவு, உடல்வலிவு, ஆகியவை களுக்குத் தகுந்தபடி பத்தியமேற்படுத்தவும்.

1034. சரபராச மாத்திரை

(அ) தூய்மை செய்த வீரம், கௌரிப் பாடாணம், குதிரைப் பல் பாடாணம், அயத்தொட்டிப் பாடாணம், செப்புத் தொட்டிப் பாடாணம், வெள்ளைப் பாடாணம், எலிப் பாடாணம், தீமுருகல் பாடாணம், கார்முகில் பாடாணம், மூங்கிற்பாடாணம், வெண்ணாபி, கருநாபி, நெரிவிடம், நெல்லிக்காய்க் கெந்தகம், லிங்கம், தாளகம், காசிக்காந்தம், தாம்பிர அரப்பொடி, அயஅரப்பொடி, மனோசிலை, மிர்தார்சிங்கி, சூடன், இரசகற்பூரம், பால்துத்தம், மயில்துத்தம், நவச்சாரம், அன்னபேதி, இரசம், வாளம், எட்டிக்கொட்டை, மூக்குவெட்டிய சேராங்கொட்டை, வெண்காரம், படிக்காரம், கல்லுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, கறியுப்பு, வெடியுப்பு, எவட் சாரம், சத்திச்சாரம், சவுக்காரம், பூநீறு இவை வகைக்கு 1¼ வராகன் எடை.

(ஆ) மேற்றோல் சீவின சுக்கு, அரிசித் திப்பிலி, மிளகு, மஞ்சட் கடுக்காய்த் தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, அபின், பெருங்காயம், வால்மிளகு, சிற்றரத்தை, ஏலரிசி, கருஞ் சீரகம், கார்போகரிசி, அக்கிராகாரம் கோஷ்டம், குங்குமப்பூ, மகரப் பூ, அதிமதுரம், இலவங்கம், சாதிக்காய், சாதிப்பத்திரி, வெட்டி வேர், விலாமிச்சம்வேர், சந்தனம், தேவதாரம், அகில், சிறுநாகப்பூ திராட்சைப்பழம், குரோசாணி ஓமம், தாளிசப் பத்திரி, அதிவிடயம், கல்நார், வசம்பு, மஞ்சிட்டி, வெட்பாலை அரிசி, கோரைக்கிழங்கு, அவுரிவிதை, நத்தைச்சூரி விதை, வாலுளுவை, வாகைவிதை, கொல்லன் கோவைவித்து, சீந்தில்வித்து, கஸ்தூரி, கோரோசனை,

சமுத்திராப்பழம், சிறுதேக்கு, செவியம், கடற்பாசி, கடல்நுரை, கல்மதம், கடலழிஞ்சி, மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள், சாத்திரபேதி, வாய்விளக்கம், வலம்புரிக்காய், நற்சீரகம், பேரீச்சம்பழம், கார்த்திகைக்கிழங்கு, நன்னாரிவேர், கொடிவேலி வேர்ப்பட்டை, ஈசுர மூலிவேர்ப்பட்டை ஆகியவை வகைக்கு $1\frac{1}{4}$ வராகன் எடை.

(இ) பருத்தியிலைச்சாறு, தகரையிலைச்சாறு, சதகுப்பையிலைச் சாறு, குப்பைமேனிச்சாறு, கீழ்காய் நெல்லிச்சாறு, மிளகுக்குடிநீர், இஞ்சிச்சாறு, மலாக்காய் சந்தனக் குடிநீர், சீரகக்குடிநீர் ஆகிய இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

செய்முறை :—(அ) விலுள்ள சரக்குகளில் முதலில் இரசததை யும் கெந்தகத்தையும் கலந்தரைத்துப் பின்பு மற்ற சரக்குகளையும் தனித்தனியே பொடித்து அதனுடன் சேர்த்துக் கலந்து வைத்துக் கொள்ளவும். பின்பு (ஆ) விலுள்ளவைகளில் இடிக்கவேண்டியவை களை இடித்துப் பொடித்தும் அரைக்க வேண்டியவைகளை அரைத்து சேர்த்தும் ஒன்ருக சேர்த்து வைத்துக் கொள்ளவும், அதன் மேல் மேற்கண்ட இரண்டு வகைகளையும் ஒன்ருகக் கலந்து ஒரு சாமநேர மரைத்து எல்லாம் சேர்ந்த பின்பு (இ) யிலுள்ள ஒவ்வொரு வகைச் சாற்றையும் சிறுகச் சிறுக வார்த்து ஒவ்வொன்றுக்கும் ஐந்து ஐந்து நாள் கைவிடாமலரைக்கவேண்டும். இவ்விதம் எல்லாவகைச் சாற்றிலும் ஐந்து ஐந்து நாள் அரைத்து முடிந்த பின்பு சிறு பயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

அளவு :—$\frac{1}{2}$ முதல் 1 மாத்திரை.

குறிப்பு:—இதை பெரியநோய்களியெல்லாம் உபயோகிக்கலாம். மரண நிலையுள்ளவர்களுக்குக் கொடுத்தால் ஒரு முகூர்த்தம் வரையில் அந்த துன்பம் நீங்கி நன்ருகப் பேசக்கூடும். இந்தப் பாகத்தைச் செய்துமுடிக்க இடம் பொருள் ஏவல்வேண்டும். இதனை உபயோகிக்க அனுபவமும்வேண்டும் இதனைச்செய்யவும் இதனை உபயோகிக்கவும் புதுமருத்தவர்களிளுல் முடியாது. இதன் துணை மருந்து, இதனுல் தீரும் நோய்கள் ஆகியவைகளை அளவிட்டு எழுதுதல் முடியாது. ஆயினும், இதைப் பார்வையிடும் நமதுநண்பர் களுக்கு உபயோகமாகும்படி அவற்றுள் நமக்குப்பழக்கமானச் சில வற்றை இங்கெழுதுகின்ருேம்.

துணைமருந்தும் தீரும்நோய்களும் :—இஞ்சிச்சாறு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இவ் விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்

துட்கொள்ள அறுபத்துநான்குவகைச் சுரங்களும் தீரும். இன்னும் வாயுவுகள், சூலைகள், கைகால்பிடிப்பு, கைகால்முடக்கு ஆகியவைகளும் தீரும்.

இதில் மூன்றுமாத்திரைகளைப் பொடித்துப் புளியம் புறணி நெருப்பில்போட்டுப் புகைத்துப் புகை வெளியில் போகாதபடி துப்பட்டியால் போர்த்திக்கொள்ளவேண்டும். ஆனால், இந்தப் புகையானது கண் மூக்கு வாய் ஆகியவைகளிற் செல்லாமல் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும், இவ்விதம் மூன்று அல்லது ஐந்துவேலைகள் செய்யின் கருமநோய்கள், சூலைகள், வாயுக்கள், முடக்குநோய்கள் உளைச்சல், கடுப்பு, வலிகள், வீக்கங்கள், சன்னிகள், குற்றங்கள், ஆகியவைகள் தீரும். இன்னும் சுரங்களுக்கும் மேற்கண்டபடி புகை பிடிக்கலாம். அப்படிச் செய்வதனுலும் சுரங்கள் தீரும்.

பறங்கிப்பட்டைத்தூள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையுங்கலந்து மேற்படி மாத்திரையை சேர்த்துண்ண மேகவகைகளெல்லாம் தீரும்.

பொன் முசுட்டைச்சாறு 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையுங்கலந்து மேற்படி மாத்திரையை சேர்த்துண்ண மதுமேகம், நீர்பேதி, வெகு மூத்திரநோய் முதலிய நீரைப்பற்றின எல்லாநோய்களுந் தீர்ந்து உடல்வளமை, உடல்வன்மை ஆகியவைகளுண்டாகும்.

தாழம்பூச்சாறு 1 வராகன் எடை($3\frac{1}{2}$ கிராம்), தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இவ் விரண்டையுங் கலந்து மேற்படி மாத்திரையை சேர்த்துண்ண எல்லாவகைப் பிரமேக நோய்களும் தீரும்.

நத்தைச்சூரிவேர்ப்பட்டை $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), இதனைச் சிதைத்து ஒரு ஆழாக்கு நீரைவிட்டு மூன்றிலொருபாகமாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி இதில் $1\frac{1}{2}$ வராகன் எடைத் தேனையும் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துண்ணச் சதையடைப்பு, நீர்த்தாரையிலுண்டாகும் துர்மாமிசங்கள், கல்லடைப்பு, ஆகியவைகள் தீரும்.

பருத்திக்காயை இடித்துப் பிழிந்தசாறு $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இவ்விரண்டையுங் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படிச் சேர்த்துண்ண இரத்தமேகம், சீழ்மேகம், தந்துமேகம் ஆகியவை தீரும்.

குப்பைமேனிச்சாறு 4 வராகன் எடை (14 கிராம்), தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), நெய் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), இம் மூன்றையுங் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படிச் சேர்த்துண்ண எல்லாவகைக் காச நோய்களும் தீரும்.

தூதுவளம் பழத்தை உலர்த்தி யிடித்த தூள் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), நெய் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) இவ் விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துண்ண எல்லா வகை நோய்களுந் தீரும்.

கையாந்தகரைச்சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), இவ்விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துண்ண, எல்லாவகைப் பீனிச நோய்களுந் தீரும்.

விழுதிச்சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்) தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), நெய் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), இம் மூன்றையுங் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படிச் சேர்த் துண்ண சோகைக், காமாலை, பாண்டு, மகோதரம். கவுசை நீராம்பல் முதலிய நோய்கள் தீரும்.

நல்லவேளை சமூலச்சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), நெய் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்) இம் மூன்றையுங் கலந்து மேற்படி மாத்திரையை சேர்த்துண்ண, கவுசைக்கட்டி, நீராம்பல் கட்டி, மகோதரக்கட்டி ஆகியவைகள் தீரும்.

நாகமல்லியிலைச் சாற்றில் கொஞ்சம் தாய்ப்பாலைச் சேர்த்து மேற்படி மாத்திரையை அதிற்கரைத்து இரண்டு நாசித் துவாரங் களில் இரண்டொரு துளிநசியஞ் செய்ய, பலவகை நஞ்சுகள், பூதபைசாச சேட்டைகள், பைத்திய நோய்கள், உன்மத்த நோய் கள் ஆகிய எல்லாம் தீரும்.

பறங்கிப்பட்டை 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம் , இதனைச் சிதைத்து ஒரு ஆழாக்கு நீரிற் போட்டு மூன்றிலொரு பாகமாகக் காய்ச்சி வடிகட்டி அதில் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), தேனையுங் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துண்ண, பிளவை, மார் ஆணி, நெற்றி ஆணி முதலிய ஆணி வகைகள், கண்டமாலை, மூலநோய்கள், பவுத்திரங்கள் ஆகியவை தீரும்.

மேனிச் சாறு ஒரு பங்கு, தாய்ப்பால் ஒரு பங்கு இவ் இரண்டையுங் கலந்து மேற்படி மாத்திரையை இழைத்து மூக்கில் நசியஞ் செய்ய மூக்குநோய், தலைநோய் ஆகியவைகள் தீரும்.

கருங்காலியிலைச் சாறு 1½ வராகன் எடை (5¼ கிராம்), தேன் 1½ வராகன் எடை (5¼ கிராம்), இவ்விரண்டையுங் கலந்து மேற்படி மாத்திரையை சேர்த்துண்ண, செங்கழலை, கருங்கழலை, கற்கழலை, நொங்குக்கழலை, முதலிய பல வகைக் கழலை நோய்கள் தீரும்.

வெண்ணொச்சிச்சாறு 1½ வராகன் எடை (5¼ கிராம்), தேன் 1½ வராகன் எடை (5¼ கிராம்). இவ்விரண்டையுங் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துண்ண அரையாப்பு, கக்குள், ஆப்பு, நாசியாப்பு, செவியாப்பு முதலிய பலவகை நோய்கள் தீரும்.

முசுமுசுக்கை யிலைச்சாறு 1½ வராகன் எடை (5¼ கிராம்), தேன் 1½ வராகன் எடை (5¼ கிராம்). இவ்விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துண்ண பித்தமூர்ச்சை, காக்கை மூர்ச்சை முதலிய பல வகை மூர்ச்சை நோய்கள் தீரும்.

திப்பிலியை வறுத்திடித்தத் தூள் 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் 1 வராகன் எடை (3½ கிராம்), இவ்விரண்டையுங் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துண்ணக் கபக்கட்டு, கோழைக்கட்டு, கப சம்பந்தமான நோய்கள் ஆகியவைகள் தீரும்.

சித்திரமூல வேர்ப்பட்டை 1¼ வராகன் எடை இதனைச் சிதைத்து ஒரு ஆழாக்கு நீரில்போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்துக் காய்ச்சி வடிகட்டி அதில் 1 வராகன் எடை (3½ கிராம்), தேனையுங் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துண்ண அட்டகுன்மம், பீலிகை ஆகியவைகள் தீரும்.

எட்டி வேர்ப்பட்டை ¼ வராகன் எடை, சுக்கு ½ வராகன் எடை (1¾ கிராம்), இவ்விரண்டையுங் கலந்து ஒரு ஆழாக்கு நீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்துக் காய்ச்சி வடிகட்டி ஒரு வராகனெடைத் தேனையுங் கலந்து மேற்படி மாத்திரையை சேர்த்துண்ண குட்டநோய்கள், குறைநோய்கள் ஆகியவை தீரும்.

முற்றின பூவரசம்பட்டைச்சாறு 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் 1 வராகன் எடை (3½ கிராம்), இவ்விரண்டையுங் கலந்த மேற்படி மாத்திரையை சேர்த்துண்ண எல்லாவகைக் கரப்பான் நோய்களும் தீரும்.

சிறுதேக்கு 2 வராகன் எடை (7 கிராம்), இதனைச் சிதைத்த நீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டி அதில் 1 வராகன் எடைத் தேனையுஞ் சேர்த்து மேற்படி மாத்திரை சேர்த்துண்ண எல்லாவகை விக்கல்களும் தீரும்.

நல்லெண்ணெய் 5 பலம் (175 கிராம்), இதில் ஐந்து மாத்திரைகளைப் பொடித்துப் போட்டு இளஞ் சூடாகக் காய்ச்சி வடிகட்டி இதில் 1 பலம் (35 கிராம்), எண்ணெயை எடுத்துச் சிரசில் தேய்த்துச் சிகைக்காயிட்டு இளவெந்நீரால் குளியல் செய்யப் பல வகைக் கண் நோய்கள் தீரும்.

துளசிச்சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), இவ்விரண்டையுங் கலந்து மேற்படி மாத்திரையை சேர்த்துண்ண உண்ணாவீலுண்டாகும் சிங்கி, உண்ணாக்கு ரணங்கள், உண்ணாவில் குழிவிழுந்த ரணங்கள் ஆகியவை தீரும்.

அரசிலை 3 வராகன் எடை, ($10\frac{1}{2}$ கிராம்), இதனைச் சிறுக அரிந்து ஒரு ஆழாக்கு நீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டி 1வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்) தேனையுங் கலந்து மேற்படி மாத்திரையைச் சேர்த்துண்ண எல்லாவகைத் தாக நோய்களும் தீரும்.

விட்ணுகிரந்திவேர் $2\frac{1}{2}$ வராகன் எடை ($8\frac{3}{4}$ கிராம்), இதனை நையச் சிதைத்து ஒரு ஆழாக்கு நீரிற் போட்டு நான்கிலொரு பாகமாகக் காய்ச்சி வடிகட்டி ஒரு வராகன் எடைத் தேனையுங் கலந்து மேற்படி மாத்திரையை சேர்த்துண்ண உளைமாந்தை, ஈளை ஆகியவைகள் தீரும்.

அசுவகெந்திக்கிழங்குச் சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை, தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரையைப் அளவுப்படி சேர்த்துண்ண ஆனந்த வாயு முதலிய பல வாயுகள் தீரும்.

குதிரைக்குளம்புச்சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப் படி கலந்துண்ண பாதசக்கர நோய் தீரும்.

கழற்சிஇலைச் சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துண்ணப் பதினெட்டு வகைக் கண்நோய்களும் தீரும்.

கெந்த தாளிஇலைச் சாறு $1\frac{1}{2}$ வராகன்எடை, தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரையை அளவும் படி சேர்த்துண்ண தெற்கித்திக்கணை முதலிய கணைநோய்கள் தீரும்.

ஒரு ஆழாக்கு பசுவின் பாலில் ஒருபலம் கழிப்பிரண்டையைப் போட்டுக் காய்ச்சி நன்ருக வெந்துபோன பதத்தில் இறக்கிக் கழிப் பிரண்டையை நீக்கிவிட்டு மேற்படி மாத்திரையை அளவுப்படி

சேர்த்து உட்கொள்ளவேண்டும். இவ்விதம் சிலதினங்கள் செய்யின் உடல்வளமை, உடல்வலிவு, ஆண்மை முதலிய வகைகளுண்டாகும் சந்தானத்திற் கேதுவாகும். நரம்புகள் முறுக்கேறிப் பலப்படும். இதனல் உடலிலுள்ள நோய்களெல்லாம் தீர்ந்து அநேக நன்மைகளுண்டாகும்.

குறிப்பு :— இந்த மருந்தை நூலின்படி செய்து முடித்து நூலின்படி உபயோகித்து வந்தால் மனிதர்களை இன்னல் படுத்தும் பலவித நோய்கள் தீரும். வேறெந்த மருந்துக்கும் வசப்படாததாயினும் இந்த மருந்திற்கு வசப்பட்டுப்போம். இதில் எல்லாவகை விஷமுள்ள சரக்குகளும் சேர்ந்திருப்பதால் உடல் நிலைமைகளை நிச்சயித்து உபயோகிக்க வேண்டியது அவசியமாகையால் ஆரம்பத்தில் மிகவும் குறைந்த அளவாக உபயோகித்து நாள் தோறும் அதிகப்படுத்தி வர வேண்டும். கிரமப்படி எந்த விஷச் சரக்கையும் எந்த உடலினர்களுக்கும் ஏற்றுக் கொள்ளச் செய்யலாம். இவ்வித தந்திரமான மருத்துவங்கள் எல்லாம் அனுபவசாலிகளுக்குத் தெரிந்திருக்கும். மருந்துகளை உபயோகிக்க அனுபவம் அவசியம் ஆயினும் இந்த மருந்தில் அனுபவமில்லாதவர்கள் மயங்க நேரிடும். ஆகையால் ஆரம்பத்தில் சிலநாள் அனுபவசாலிகள் மூலம் உபயோகித்துத் தங்களுக்கும் அனுபவப்பட்ட பின்பு பயந்து மலைக்காமல் உபயோகிக்கலாம். இந்த மருந்தைச் செய்து முடிப்பதில் இதனைக் கைவிடாமல் இரவும் பகலும் அரைக்க வேண்டுமென்பது சிலர் அபிப்பிராயம். இடையில் விட்டு விட்டும் கணக்கின்படி அரைத்தால் போதுமான தென்பது வேறு சிலர் அபிப்பிராயம். இவ்விரு தரத்தாரும் செய்த மாத்திரைகளில் விசேடமான வித்தியாசம் ஒன்றும் காணப்படவில்லை. பெரும்பான்மையும் குணமும் ஒத்தேயிருக்கிறது. ஆகையால் அவரவர்கள் சமயப்படி செய்துகொள்ளலாம்.

1035 சஞ்சீவி மாத்திரை

தூய்மைசெய்த இரசம், நெல்லிக்காய்க்கெந்தகம், வெண்ணாபி, கருநாபி, இலவங்கம், அபின், மயில்துத்தம், பால்துத்தம், மேற்ருேல் சீவினசுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, இந்துப்பு, மனோசிலை, கோஷ்டம், வசம்பு, குரோசாணி ஓமம், சாதிலிங்கம், தான்றிக்காய்த் தோல், வெண்காரம், சீமைச் சவுக்காரம், பச்சைக்கற்பூரம், சந்தனம், கௌரிப்பாடாணம், வெள்ளைப்பாடாணம். தொட்டிப் பாடானம், தாளகம், பீதரோகணி, அக்கிராகாரம், கடுகுரோகணி, சாதிக்காய், அன்னபேதி, பெருங்காயம், நேர்வாளப்பருப்பு, சித்திர

மூலிவேர்ப்பட்டை, இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), கையாந்தகரைச்சாறு, வெண்ணொச்சியிலைச்சாறு இவை வகைக்கு செல்லத்தக்க அளவு.

செய்முறை :—மேற்கண்ட சரக்குகளில் தூய்மை செய்ய வேண்டியவைகளைத் தூய்மை செய்தும், தூள் செய்யவேண்டியவைகளைத் தூள் செய்தும் எல்லாவற்றையும் ஒன்ருகக் கலந்து கல்வத்திலிட்டு இரண்டு மணி நேரம் நன்ருயரைத்து எல்லாம் சேர்ந்த பின்பு கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமமும் வெண்ணொச்சியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமும் அரைத்துச் சிறு பயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்திப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

அளவு :—½ முதல் 1 மாத்திரை.

துணைமருந்தும் தீரும்நோயும் :—துத்தியிலைச் சாறு 1½ வராகன் எடை, தேன் 1 வராகன் எடை, இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி மாத்திரையை அளவுப்படி கலந்து நாற்பது நாள் உட்கொள்ள இளைத்த உடல் பருக்கும்.

ஆவாரையிலைச்சாறு 1½ வராகன் எடை, தேன் 1½ வராகன் எடை, இவ்விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையும் மூன்று மண்டலம் உட்கொண்டு வர நீர்ப்பை சம்பந்தமான நோய்கள், குண்டிக்காய் நோய்சள், பிரமேக வகைகள், இன்னும் இவை சம்பந்தமான உடலிலுள்ள நோய்கள் ஆகியவைகள் நீங்கி உடல் வலிவு, மனே வலிவு, உடல்வன்மை, முதலியவைகளுண்டாகும்.

தேன் 1½ வராகன் எடை, தண்ணீர் 1¼ வராகன் எடை, இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துட்கொள்ளவேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையுமாக இரணடு மண்டலம் உபயோகித்து வந்தால் அதிகமாக பெருத்திருக்கிற உடல் இறுகி வலிமைப் பட்டுச் சிறுக்கும்.

இஞ்சிச்சாறு 1½ வராகன் எடை, தேன் 1½ வராகன் எடை, இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையுமாக மூன்று நாள் முதல் ஏழு நாள் வரை சமயோசிதம் போல உபயோகிக்க அறுபத்து நான்கு வகைச் சுரங்களும் தீரும்.

வெண்துளசிச்சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை, தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப் படி சேர்த்து உட்கொள்ளவும். இவ்விதம் காலே மாலே இரண்டு வேளையுமாக மூன்றுநாள் முதல் ஏழுநாள் வரை சமயோசிதம் போல் உபயோகிக்க எல்லாவகை குளிர்சுரங்கள், பதின்மூன்று சன்னிவகைகள் ஆகியவை தீரும்.

நற்சீரகம் $1\frac{1}{2}$ வராகன் எடை, இதனைச் சிதைத்து ஒரு ஆழாக்கு நீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டக்காய்ச்சி இறக்கி வடி கட்டி அதில் $1\frac{1}{2}$ வராகன் எடை தேனைக் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள வேண்டும் இவ் விதம் காலே, மாலே இரண்டு வேளையுமாக மூன்றுநாள் முதல் ஏழுநாள் வரை சமயோசிதம் போல உபயோகித்து வர எல்லா வகைத் தாபசுரங்களும் தீரும்.

பசுவின் மோர் 2 பலம், தேன் 2 வராகன்எடை இவ்விரண்டை யும் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலே மாலே இரண்டு வேளையுமாக மூன்று நாள் முதல் ஏழுநாள் வரை உபயோகித்துவரின் எல்லாவகைச் சத்திசுரங்களும் தீரும்.

சீமை திராட்சைக் காடி அல்லது நாட்டுக் காடி $1\frac{1}{2}$ வராகன் எடை, தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை இவ் விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துட்கொள்ள வேண்டும் இவ்விதம் காலே, மாலே இரண்டு வேளையும் மூன்றுநாள் முதல் ஏழு நாள் வரை உபயோகித்துவரின் எல்லாவகைப் பித்த நோய்களும் தீரும்.

வேலே வேர், சோற்றுக்கற்றுழை வேர், கோழியாவரை வேர் இவைவகைக்கு $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), இவற்றை நையச் சிதைத்து ஒரு ஆழாக்கு நீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டக்காயச்சி வடிகட்டி ஒரு வராகன் எடை தேனைச் சேர்த்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்து காலே, மாலே இரண்டு வேளையும் மூன்றுநாள் முதல் ஏழுநாள் வரை உபயோகிக்க நாலாம் முறை சுரம் தீரும்

மேற்றேல் சீவின சுக்கு, மிளகு. அரிசித்திப்பிலி, தான்றிக் காய்த்தோல் இவைவகைக்கு $\frac{1}{2}$ வராகன் எடை, பசுவின் கோமயம் 1 ஆழாக்கு, மேற்படி சரக்குகளேச் சிதைத்துக் கோமயத்திற் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டக் காய்ச்சியிறக்கி வடிகட்டி அதில் தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை, கலந்து மேற்படி மாத்திரையை

அளவுப்படி சேர்த்துட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை, மாலை இரண்டு வேளையுமாக மூன்றுநாள் முதல் எழுநாள்வரை சமயோசிதமாக உபயோகிக்க விடப்பாண்டு, பித்தப்பாண்டு, வீக்கம், காமாலை, சோகை ஆகியவை தீரும்.

தலைச்சுருளி இலைச் சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை, தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துட்கொள்ள வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையுமாக ஒரு மண்டலம் செய்துவரின் பில்லி, சூனியம் முதலியவை தீருய.

சிறுவழுதலை வேரில் இரண்டொரு மாத்திரைகளை வைத்து வெள்ளி அல்லது பொன் தாயத்திற்குள் அடக்கம் செய்து புஜத்தில் அல்லது இடுப்பில் கட்டிவைத்திருந்தால் பில்லி, சூனியம் ஆகியவை தீரும்.

இஞ்சிச் சுரசம் $1\frac{1}{2}$ வராகன் எடை, தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை, இவ்விரண்டையும் சேர்த்து மேற்படி மாத்திரையை அளவுப்படி கலந்துட்கொண்டுவரச் சகல உளைமாந்தைகளும் தீரும்.

தாய்ப்பாலில் இதனைக் கரைத்து நாசித் துவாரத்தில் இரண்டொரு துளிவிட நாசியில் நீர்வடிதல், நீர்ப்பாய்ச்சல் ஆகியவை தீரும்.

கையாந்த கரைச்சாறு 1 ஆழாக்கு, பசுவின்பால் 1 ஆழாக்கு, எண்ணெய் 1 ஆழாக்கு, மேற்படி மாத்திரை $\frac{1}{2}$ வராகன் எடை, முன் மூன்று திரவங்களையும் ஒன்றுகக் கலந்து மாத்திரைகளைப் பொடித்து அதிற் போட்டுக் காய்ச்சி மெழுகு பதத்தில் இறக்கி வடிகட்டி புட்டியில் பத்திரப்படுத்தவும். ஒரு துளி இந்தத் தைலத்தைக் கண்ணில் விடவேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் செய்துவரின் விரண சுக்கிரன், காசநோய்கள் (அதாவது கண்ணில் நீரிறங்குதல்) வெள்ளெழுத்து ஆகியவைகள் தீரும்.

எலுமிச்சம் பழச்சாறு 1 ஆழாக்கு, பசும்பால் 1 ஆழாக்கு, எண்ணெய் 1 ஆழாக்கு மேற்படி மாத்திரை $\frac{1}{4}$ வராகன் எடை, முன் மூன்று திரவங்களையும் ஒன்றுகக் கலந்து காய்ச்சிக் கடுகு திரள் பதத்தில் இறக்கி வடிகட்டி புட்டியில் பத்திரப்படுத்தவும். இதில் ஒரு துளியைக் கண்ணில் விட்டுவர வேண்டும். இவ்விதம் காலை மாலை இரண்டு வேளையும் செய்துவரின், கண்தோடம் கண் குருடு ஆகியவை தீரும்.

குறிப்பு :—மேற்படி இரு முறைகளையும் தைலமாகத் தேய்த்து தலைமுழுகி வருவதனாலும் அந்தந்த முறைகளில் சொல்லிய குணங்களுண்டாகும்.

கரு ஊமத்தைச் சாறு $\frac{1}{2}$ ஆழாக்கு நல்லெண்ணெய் $\frac{1}{2}$ ஆழாக்கு மேற்படி மாத்திரைகள் நான்கு குன்றிமணி எடை, மேற்படி இரண்டு திரவங்களையும் ஒன்ருகக் கலந்து மேற்படி மாத்திரையை தூள் செய்து அதிற் போட்டுக் காய்ச்சிக் கடுகு திரள் பதத்தில் இறக்கி வடிகட்டி புட்டியில் வைத்துக் கொள்ளவேண்டும். இந்தத் தைலத்தை ஒவ்வொரு துளியாக இரண்டு கண்களிலும் விட்டுவர முயல்வலி தீரும்.

இந்த மாத்திரை 1 பங்கு இதனை அஞ்சனம் போல் தூள் செய்து எட்டுப் பங்கு வெண்ணெயில் கலந்துப் பஞ்சிலூட்டி இரணங்களில் வைத்துக் கட்டிவிட வேண்டும். இவ்விதம் பிரதி தினமும் இரண்டு மூன்று தடவைகள் செய்துவரின் குழிப்புண், புரைப்புண், சிலந்திப்புண், அழிப்புண் ஆகியவைகள் தீரும்.

வெண்ணொச்சியிலைச் சாறு $1\frac{1}{2}$ வராகன் எடை, தேன் $1\frac{1}{2}$ வராகன் எடை இவ்விரண்டையும் கலந்து மேற்படி மாத்திரையை அளவுப்படி சேர்த்துட்கொண்டுவர சுவாசம் மேல் மூச்சு பெரு மூச்சு மூச்சடைப்பு தங்குமூச்சு ஆகிய நோய்கள் தீரும்.

இன்னும் தகுந்த மருந்துகளிலிட அனேகநோய்கள் தீரும்.

அனுபோக வைத்திய நவநீதம் ஏழாம் பாகம்

முற்றுப் பெற்றது.